வெளியீடு 7-10-1983] [Issued 7-10-1983

S.No. 141/55/B
2684

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## அதிகாரப்பூர்வ வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 9, 1983—தொகுதி XLIV எண் 1

Wednesday, 9th March 1983—Volume XLIV No. 1

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

விலை ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 Paise

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLIV No: 1 and 2

March 9th and 10

1983

D
V211,31 N83
N83·44·142
135991

ⅅ
V211,31'N83
N83-44-1 4231
135991
சென்னை 600 008.
S. M. 14/8/85

உள்ளடக்கம்.

9—3—1983.

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. .. | i—vi |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்றப் பெயர்) பட்டியல் (தொகுதிகள் உட்பட) .. .. | viii—xvi |
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—44 |
| **2. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் திரு. பாபு கோவிந்தராஜன் தண்டிக்கப்பெற்றுள்ளது குறித்து .. .. | 45 |
| **3. ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| காலராவினால் மரணம் .. .. .. | 45—56 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| பவானிசாகரிலிருந்து தண்ணீர் விடப்படுவது முன்னதாகவே நிறுத்தப்பட்டதால் பயிர்கள் பாதிப்பு. | 56—58 |
| **5. அறிக்கை அளித்தல்—** | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு .. .. | 58 |
| (ஆ) உரிமைக் குழு .. .. .. | 58 |

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத்துறை அமைச்சர்) — வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் [கூட்டுறவு—சட்ட அமைச்சர்] —சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச்சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு, ப. குழந்தைவேலு (உள்ளாட்சித்துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச் ர்) — தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இடவசதிக்கட்டுப்பாடு.

12, மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) —மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர் பாசனத்துறை அமைச்சர்) —வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள், வஃப்,

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்கு வரத்துத்துறை அமைச்சர்)— அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)— பெருந்தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்,

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர்மற்றும் பொதுபணித்துறை அமைச்சர்)-கதர், மது அனுமதிச்சிட்டுவழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு பொதுப்பணித் துறை மற்றும் பொதுப் பணித் துறை அலுவலகள் சம்பந்தமாக



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள்—அச்சுத் துறை, அரசுஅச்சகம், அச்சு காகிதக்கட்டுபாடு, மலைவாழ்பழங்குடியினர், பிணைத்தொழிலாளர், வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)— மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அநாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

Thiru S. SUNDAR LAL KURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1, Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN, (Minister for Electricity, Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY, (Minister for Rural Industries) — Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)— Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM. (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agrtculture), Agriculture,—Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN, (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P, KULANDAIVELU, (Minister for Local Administration), Municipal Administration Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health) Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation) Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport) — Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Mintster for Industries)—Large Scale Indus r es, Mines and Minerals and Textilese.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi) Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor perm ts, Passports Public Works Department and Establishment matter relating to Public Works Department.

17. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi-Dravidar Welfare, Stationery, and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)— Social welfare including Women and Children Welfare, Animal Husbandary, Beggars Home, Orphanages, Indian Overseas, Refugees and Evacuees and Correctional Adminitstration.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத்தலைவர் :

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத்தலைவர்:

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

** மாற்றுத்தலைவர்கள் பட்டியல்

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி. தா. இராசம்பாள்
5. திரு. கு. ரமணி.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு கி.மு. அழகர்சாமி, பி.ஏ, பி.எல்.

துணைச் செயலாளர்கள்.

திரு. த, இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன். பி. எஸ். சி. (குழு அலுவலர்.)
திரு. வி. சீதாராமன், பி. காம்., பி.ஜி.எல். (சார்புச் செயலாளர்)
திரு. பெ.பள்ளிக்கொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல். (சார்புச் செயலாளர்.)
திரு. செ.சு. ஜானகிராமன், பி.ஏ, பி.எல். (சார்புச் செயாலாளர்)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம். (சார்புச்செயலாளர்.)
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (சார்புச் செயலாளர்.)
திரு. கே. தியாகராஜன், பி.ஏ. பி. எல். (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.)
திரு. சீ. பாலசுப்ரமணியன் (தலைமை நிருபர்). (விவாதப் பதிப்பாளர்.)
திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல். எல். பி.

---

*21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
** 27—1—1983 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்.

| | பக்கங்கள். |
|---|---|
| 6. 1983–84 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. | 59—126 |
| திரு. கோ. விஸ்வநாதன் | 59—76 |
| திரு. த. வேணுகோபால் | 76—83 |
| திரு. என். விஜயபாலன் | 83—89 |
| திரு. இல. பலராமன் | 89—97 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன் | 97—104 |
| திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் | 104—112 |
| திரு. எம்.ஆர். கோவேந்தன் | 112—117 |
| திரு. தி.கா. நல்லப்பன் | 117—120 |
| திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் | 120—126 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 127—128 |


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

2684

திரு சுந்தர்லால் குரானா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்:

1 மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) —பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) —நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன்வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்) —மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுபாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்). கிராம குடிசை சிறுதொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் [வருவாய்த்துறை அமைச்சர்)— வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு இராம. வீரப்பன் [செய்தி அறநிலை துறை அமைச்சர்] — செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக்கழகம், திரைப் படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, வனங்கள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் [கல்வி அமைச்சர்]— தொழில் நுட்பக்கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி.

**தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற) பெயர்ப் பட்டியல்.**

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன் திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ.) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 12. அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு. க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. அறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்–2 |
| 20. ஆறுமுகம், திரு. ந. | அரியலூர் |
| 21. ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 24 இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25 இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி |
| 26 இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ.) |
| 86 | கோவேந்தன், திரு. எம்.ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு.கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம், திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு.வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு.ஏ. | சோழவந்தான் |
| 95 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம் |
| 97 | சாகுல் ஹமீது திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவகாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோண்ம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ |
| 104 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு.ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு.ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு.நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு. கே. | |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 118 | சுப்பிரமணியன், திரு.மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. அ. | கோபிசெட்டிப்பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம. | திருவாரூர் (செ.வ.) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி-2 |
| 132 | டாக்டர். திரு. சௌரிராஜன், கே. | தி. நகர் |
| 133 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 134 | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 135 | தங்கவேல்ராஜ், திரு. பி.எம். | கிருஷ்ணராயபுரம் செ.வ. |
| 136 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 137 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ. வ.) |
| 138 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 139 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 140 | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 141 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாச்சலம் |
| 142 | திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ. வ.) |
| 146 | திருவேங்கடம், திரு.பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகரம் |
| 148 | [illegible] | [illegible] |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 27 இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 28 இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 29 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 30 இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 31 இராமச்சந்திரன், திரு. எம்.ஜி. | மதுரை (மேற்கு) |
| 32 இராமச்சந்திரன், திரு கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33 இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 34 இராமச்சந்திரன், திரு. செஞ்சி. ந. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 36 இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 37 இராமசுப்பிரமணியன் திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38 இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ.) |
| 39 இராமலிங்கம், டாக்டர். கே.பி. | இராசிபுரம் |
| 40 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 41 இராஜசேகரன், திரு. வே. | இராதாகிருஷ்ணநகர் |
| 42 இராஜாராம்நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43 இராஜேந்திரன், திரு. எஸ்.எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44 இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.) |
| 45 ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம். திரு.பி. | அம்பாசமுத்திரம் |
| 46 உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 47 உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 48 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செவ) |
| 49 உமாநாத், திரு. ரா. | நாகை |
| 50 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51 சணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52 கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 53 க..சன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 54 கந்தசாமி, திரு. கா.வே. | கிணத்துக்கடவு |
| 55 கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 56 கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 57 கருணாநிதி, டாக்டர் மு. | அண்ணா நகர் |
| 58 கருப்பசாமிப்பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை |
| 59 கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 60 கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |
| 61 கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 62 கலித்தீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 63 கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ. வ.) |
| 64 கலையரசன், திரு. நன்னிலம். அ. | நன்னிலம் (செ. வ.) |
| 65 கார்ளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 66 கிட்டப்பா, திரு. எஸ். | மாயவரம் |
| 67 கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 69 கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டி மடம் |
| 70 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி | நெல்லிக்குப்பம் |
| 71 கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்—1 |
| 72 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் |
| 73 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 74 குப்புசாமி, திரு. கே. | ஒட்டன் சத்திரம் |
| 75 குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி, (செ.வ.) |
| 76 குமரி அனந்தன், திரு. | திருவெற்றியூர் |
| 77 குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ.) |
| 78 குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 79 குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80 குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை. |
| 81 அமிர்தராஜ் திரு. (வெற்றிடம்) | திருச்செந்தூர் |
| 82 கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 149 | துரைமுருகன், திரு. | ராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ், திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், திரு. ஆர். | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து, திரு.கே.பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிசாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன் திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 171 | பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு.ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. பி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன் திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 178 | பாலசுப்பிரமணியன், வேடசந்தூர் திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பொ[illegible] |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி.டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு.து. | சைதாப்பேட்டை சென். |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ.) |
| 186 | பெயசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ.) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ வ.) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி. ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர்.(செ.வ.) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ.) |
| 202 | முத்தையா, திரு, இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 206 | மொக்கையன், திரு.பி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 207 | யசோதா, திருமதி. டி. | ஸ்ரீபெரும்புத்தூர்(செ.வ. |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 212 | ராஜகுமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிறி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி, செல்வி. வி. | வீரபாண்டி |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம் | அரக்கோணம் (செ. |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீராணம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சிபுரம் |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம் | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டாரம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜர்த்ரட்சன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நான்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. ரா. | தேணி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன (உறுப்பினர்) |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

1 மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்—அமைச்சர்
2 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்
4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்
5 திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1983 மார்ச் 9.

மாசி 25, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.''

மனதில் பற்றுக்களைத் துறக்காமல், துறந்தாரைப் போல் வஞ்சனை செய்து வாழ்கின்றவர் உள்ளனர். இவர்களைப் போன்ற இரக்கமற்றவர் வேறு எவரும் உலகில் இருக்க இயலாது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

உலக வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் தொகை.

*வினா எண். 325—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு உலக வங்கியிடம் இருந்து வாங்கும் கடன் தொகையில் தமிழக அரசின் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், பெரியார்—வைகை பாசனத் திட்டம், ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு தேவையென கோரப்பட்டு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) : அவைமுன் விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

*128-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1983 மார்ச் 9

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு உலக வங்கியிடம் இருந்து வாங்கும் கடன் தொகையில் எந்தெந்தத் திட்டங்களை முதன்மையாகக் கொண்டு ஒதுக்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் சத்துணவுத் திட்டத்திற்கு உலக வங்கியிலிருந்து வாங்கும் கடனில் எவ்வளவு சதவீதம் மத்திய சர்க்கார் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம், நிலை 1-க்கு ரூ. 21.60 கோடியும், சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம், நிலை 2-க்கு ரூ. 35.28 கோடியும், பெரியாறு வைகை பாசனத் திட்டத்திற்கு ரூ. 20.70 கோடியும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கு ரூ. 27 கோடியும், வேளாண்மை வளாச்சிப்பணியை சீரமைப்பதும் வலுப்படுத்துவதும், பயிற்சியளித்தல் பார்வையிடல் ஏற்பாடு செய்வதற்காக ரூ. 25.20 கோடியும் ஆகும்.

ஆக தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் என்ற அடிப்படையில் சத்துணவு குறைந்த வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 3 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கும், கருவுற்ற மகளிர்க்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும், சத்துக்குறைவை சரிசெய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கு, உலக வங்கியிடம் 27 கோடி ரூபாய் கேட்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் மாநில அரசு, மைய அரசுக்கு எழுதி, மத்திய அரசின் மூலமாகத்தான், உலக வங்கியிடம் கடன் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே, மத்திய அரசுக்கு, இப்படிப்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் மூலமாகவும், உலக வங்கியின் மூலமாகவும், தமிழக குழந்தைகளுடைய சத்துணவுக் குறைவை நீக்குவதற்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்கு அதிக உதவி செய்யவேண்டும் என்றும், அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும், எழுதியிருக்கிறோம். வேறு பல நிறுவனங்களுக்கு கேர் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆக, மத்திய அரசின் மூலமாகத்தான் உலக வங்கி, மற்ற நிறுவனங்களிடமிருந்து உதவி பெற வேண்டிய நிலை இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் 'மத்திய அரசு உலக வங்கியிடமிருந்து பெறப்படுகின்ற நிதி உதவியில் 30 சதவீதத்தை அதனுடைய வரவு செலவுத் திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொண்டு மீதமுள்ள 70 சதவீதத்தை அதன் கூடுதல் நிதி உதவியுடன் ஒரு பகுதியாக தமிழக அரசிற்கு அளிக்கிறது,' என்று கோடிட்டுக்



1983 மார்ச் 9]

காட்டியிருக்கிறார்கள். முழுமையாகத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா? இன்னும் அதிக அளவில் நிதி உதவி கிடைக்க மைய அரசுக்கு மாநில அரசு, சுடிதப் போக்குவரத்தைத் தொடர்ந்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி ஆய்ந்து அறிந்ததற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட அளவு நிதியை ஒதுக்குகிறபோது, அதிலே 30 சதவீதத்தை மத்திய அரசு வைத்துக் கொள்கிறது. மீதியுள்ள 70 சதவீதத்தில் ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவை மானியமாகவும், மிகுதியைக் கடனாகவும் அளிக்கிறது. மத்திய அரசு தருகிற அந்தக் கடனை 40 ஆண்டுக் காலத்தில் சௌகரியமான தவணைகளில் திருப்பித் தரவேண்டும் என்று நியதி. பெரும்பாலும் உலக வங்கியிடமிருந்து பெறுகின்ற கடன்களுக்கு வட்டியில்லை. வட்டியில்லாத அந்தக் கடனை மத்திய அரசு வாங்கி நமக்குத் தருகிறபோது 6 சதவீதம் வட்டிக்குத்தான் அந்தக் கடனை நமக்குத் தருகிறார்கள். 1980 ஆம் ஆண்டிலே நடைபெற்ற ஆகஸ்ட் 30, 31 ஆம் நாட்களிலே நடைபெற்ற நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டங்களிலே, மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், பாரதப் பிரதமர் அவர்களிடத்திலேயும், இது குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டது. நம்முடைய மாநிலத்தின் சார்பாக நம்முடைய முதல்வர் அவர்கள்கூட கலந்துக் கொண்டார்கள். அதில்,

The Government of India passes on the assistance given by the World Bank for various projects in the States at a higher rate of interest with higher proportion of loan component. This places undue burden on the States which take up suitable projects for World Bank assistance from which credit is available at a much cheaper rate of interest. The Government of Tamil Nadu would urge that the assistance received from the World Bank may be passed on to the States fully and in the same terms as offered by the aid giving agency, என்று நாம் வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறோம். இதைப் பல தடவை நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். உலக வங்கி எந்தெந்தக் காரியங்களுக்கு நிதியுதவி செய்கிறதோ அதன் முழுவசதி வாய்ப்புக்களையும், சலுகைகளையும் அந்தந்த மாநிலங்களுக்கே தரவேண்டும் என்று பல மாநிலங்கள் வற்புறுத்துகின்றன. தமிழக அரசும் வற்புறுத்திக்கொண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். (ஆ) தூத்துக்குடியில் உள்ள மத்திய கடல் உயிரின ஆராய்ச்சி நிலையமும், ( Central Marine Fisheries Research Instiut ) மாநில மீன் துறை ஆராய்ச்சி நிலையமும் 1973 ஆம் ஆண்டில் கூட்டாக நடத்திய ஆராய்ச்சியின் விளைவாக முத்துச் சிப்பிகளை இனவிருத்தி செய்து, பண்ணைகளில் வளர்த்து முதிர்ந்த முத்துக்களை உற்பத்தி செய்வதில் வெற்றியடைந்துள்ளன. இந்த ஆராய்ச்சியின் பலனை அடிப்படையாக வைத்து வணிக ரீதியில் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்யும் முன்னோடித் திட்டம் ஒன்றை மாநில மீன்துறை செயல்படுத்தி வருகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முத்து பற்றிய இந்தத் திட்டம் வெற்றி பெற்றதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கின்றதா ? அப்படியானால் அதுபற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முறையிலே ஏற்கனவே ஜப்பான் நாட்டுப் பகுதியிலே முத்து எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்த முறையினைப் பின்பற்றி இங்கேயும் செய்யலாமா என்று பார்க்கிறபோது தனிப் பண்ணை வளர்த்து, அதிலே செயற்கை முத்துக்களை எளிதாகவும், சிறப்பாகவும் உற்பத்தி செய்யலாம் என்று ஆராய்ச்சியின் மூலம் காணப்பட்டது.

(முற்பகல் 9—10.)

ஆக இந்தத் திட்டத்தை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும் தூத்[illegible] Southern Petro Chemical Industries Corporation ஸ்பிக் நிறுவனத்தோடு ஒரு ஒப்பந்தமாகத்தான் ஒரு திட்டத்தையும் 40 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் 50 சதவீதமும், ஸ்பிக் நிறுவனம் 50 சதவீதமும் போடுவது என்றும் முடிவு எடுத்துள்ளது. முதலில் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் 5 லட்சமும், ஸ்பிக் நிறுவனம் 5 லட்சமும் போடுவது என்றும் பிறகு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 10 லட்சமும், ஸ்பிக் நிறுவனம் 10 லட்சமும் போட்டு இந்தத் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் கடற்கரை ஓரங்களிலும் தூத்துக்குடி அருகிலேயும் இந்த ஆராய்ச்சி பண்ணை நடத்தப்பட்டு செயற்கை முறையில் முத்துக்களை உருவாக்குகின்ற முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



1983 மார்ச் 9]

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முறையில் முத்து உற்பத்தித் துறையில் தூத்துக்குடியிலுள்ள மீன் வளர்ச்சித் துறையினர் ஆராய்ச்சிச் செய்து வெற்றி கண்டும்கூட வணிகத் துறையில் அதைக் கொண்டு வருவதற்கு அதற்கு இன்றியமையாத நியூகிளியஸ் என்ற மூலப் பொருள் வெளிநாட்டிலிருந்து வரவேண்டியிருக்கிறது. அது வருவதற்கு தடை இருப்பதன் காரணமாக அந்தப் பணி தடைப் பட்டிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அது உண்மை எனில் அந்த மூலப்பொருளான நியூகிளியஸை கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி 1973-74-ல் ஓரளவுக்கு வெற்றி பெற்றாலும்கூட காலதாமதம் ஆவதற்கு ஒரு காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது இருக்கக் கூடும். ஆனால் அப்படிப்பட்ட இடைஞ்சல் இல்லாத அளவுக்கு முயற்சிகள் செய்வதற்கு மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும். மத்திய அரசின் உதவியின் மூலமாக செய்ய வேண்டிய ஒரு நிலை ஏற்படும். ஆனால் இதற்கு மத்திய அரசு குறுக்கே நிற்காது என்று நாம் நம்புகிறோம். இதற்கு முழுப் பொறுப்பும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், ஸ்பிக் நிறுவனமும் தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்ல. இந்த திட்டம் ஒரு அருமையான, தனிப்பட்ட சிறப்புக்கொண்ட திட்டமாக இருப்பதால் மத்திய அரசின் உதவி இதற்குக் கிடைக்கும் என்று நாம் நம்பலாம்.

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முறையில் முத்துக்களை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை வைத்து இருக்கிற இந்த நேரத்தில் இயற்கையாக கிடைக்கும் முத்துச்சிப்பிகளை எடுப்பதற்கான பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர் பொருந்திய முகமூடி கொடுத்து அதை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இப்போது இல்லை. தனிக் கேள்விபோட்டால் அதுபற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைள்பற்றிக் கூறலாம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள பெரிய ஏரிகளை நவீனமய மாக்குவதற்காக உலக வங்கியின் நிதி கோரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அதைப்போலவே கல்வித் துறையில் பள்ளிக் கூடக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் உலக வங்கியின் நிதியுதவி கோரப்பட்டதா ? அப்படியானால் எவ்வளவு தொகை கோரப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. இப்போது நாம் பெற்றிருப்பது சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை ஒன்று, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை இரண்டு, பெரியாறு—வைகைப் பாசனத் திட்டம், ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கத்திட்டம், பயிற்சியளித்தல் பார்வையிடல் ஏற்பாடு ஆகியவற்றுக்குத்தான். இவற்றிற்குரிய பதில்தான் அளிக்கப் பட்டிருக்கின்றதே தவிர மற்றைய விவரங்களை இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித்திட்டம் நிலை ஒன்றுக்கும், சென்னை நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் நிலை இரண்டுக்கும் 56 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கின் றது என்று சொல்லப்பட்டிருக்கின்றதே, அந்த வளர்ச்சித் திட் டங்கள் என்னென்ன என்பதை அவைக்கு விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் மக்களுக்கு குடியிருப்பு, வேலைவாய்ப்பு, குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல்; போக்குவரத்து வசதி ஆகிய வசதிகளை மேம்படுத்தி, குறிப் பாக இவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு குறைந்த செல வில் தீர்வு காண்பதும், குறிப்பாக நகர்ப்புற ஏழைகளின் தேவை களுக்கேற்பத் திட்டப் பணிகளில் முதலீடு செய்வதும் முதல் நிலைத் திட்டத்தில் முக்கிய நோக்கமாகும்.

31—3—1982 முடிய இத்திட்டத்திற்கு 44 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. 21 கோடியே 54 இலட்சம் ரூபாய் உலக வங்கியின் நிதியுதவி கோரி பட்டியல் அனுப்பப் பட்டுள்ளது. இந்திய அரசின் கூடுதல் நிதியிலிருந்து 11 கோடியே 3 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்கு வழங்கி இருக்கின்றது.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலக வங்கியிலிருந்து நம்முடைய நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய கடன் காரணமாக நம்முடைய அரசியல் சுதந் திரத்திற்கும் நம்முடைய பொருளாதார நிலைக்கும் ஒரு பிடிக்குப்



பிடி போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்று சொல்லப்படு கின்றதே, இது பற்றி முதலமைச்சருடைய நாட்டிலே நடை பெற்ற விவாதத்திலே ஏதாவது கருத்துக்கள் வந்தனவா ? இல்லாவிட்டால் இனிமேலாவது நாம் இதிலே கவனம் செலுத்தி இப்படிப்பட்ட நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்குரிய முயற்சி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் மூலம் கிடைக் கின்ற இந்த நிதி developing countries and under developed countries என்ற வகையில் இருக்கின்ற உலகத்திலுள்ள பற் றாக்குறை நாடுகளை ஊக்குவிப்பதற்காகவும், உதவி செய்வதற் காகவும்தான் பயன்படுத்தப்படுகின்றது. அதற்காகத்தான் இந்த நிதி அளிக்கப்படுகின்றது. மத்திய அரசுக்கு உலக வங்கி ஒப்புக் கொண்ட அடிப்படையில் நிதி தரப்படுகின்றபோது பெரும்பாலும் வட்டியில்லாக் கடனாகத்தான் தரப்படுகின்றது. சில ஐட்டங் களில் வட்டிக்குக் கொடுக்கப்படுகின்றது என்றால் அதுவும் 1 பெர்சன்ட், $1\frac{1}{2}$ பெர்சன்ட் வட்டி என்ற அளவுக்குத்தான் கொடுக் கப்படுகின்றது. எனவே அதனால் நம்மை அடிமைப்படுத்திவிடு கின்ற நிலைமை ஏற்படாது. ஆனால் வேறு பல கடன்களை வேறு பல முறைகளில் வாங்கினால் அடிமைப்படுத்துகின்ற நிலைமை ஏற்படும், பொருளாதாரத்தை முடக்குகின்ற நிலைமை ஏற்படும் என்று சொல்லலாம். ஆனால் உலக வங்கியின் மூலம் கிடைக் கின்ற கடன் நமக்கு உதவியாகப் பயன்படுகின்றதே தவிர நம்மை அடிமைப்படுத்துகின்ற நிலைமையை ஏற்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தூத்துக்குடியிலுள்ள மீன் ஆராய்ச்சி நிலையம்.

*வினா எண்—326—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளம் முத்துச் சிப்பிகளை பெரிய அளவில் வளர்க்கும் முயற்சியில் தூத்துக்குடி மீன் ஆராய்ச்சி நிலையம் வெற்றி பெற்றிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன ?

## திருவிடைமருதூர் வட்டம், சாத்தனூர் கிராமத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட உபரி நிலம்

*வினா எண். 327.—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம் 53, சாத்தனூர் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது எவ்வளவு?

(ஆ) மேற்படி நிலங்கள் சட்டத்திற்கு புறம்பாக விற்பனை செய்யப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம் 53 சாத்தனூர் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 19.97 ஏக்கர்கள் நிலம் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது.

(ஆ) மற்றும் (இ) : மேற்படி நிலத்தில் 0.51 ஏக்கர் நிலம் 7.7.81-ல் ஒப்படை செய்யப்பட்டுவிட்டது. பாக்கி 19.46 ஏக்கர் நிலங்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது அதன் உரிமையாளர் காலமாகிவிட்டார். அவர் மனைவி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 53 சாத்தனூர் கிராமத்தில் உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ள உபரி நிலங்கள் கொடுக்க வட்ட ஆட்சியர் அவர்களால் அந்த கிராமத்தில் உள்ள நிலம் அற்ற ஏழை அரிசன மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கு பிறகு அந்த உபரி நிலங்களான 19 ஏக்கரை மற்றவர்களுக்கு நிலம் அற்ற ஏழை அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு விற்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. அப்படி ஏதுவும் அரசுக்கு புகார் வந்துள்ளதா? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19.46 ஏக்கர் நிலங்கள் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு இப்போது தான் அரசுக்கு சாதகமாக வந்துள்ளது. அதுபற்றி இப்போது





நடவடிக்கை எடுக்கப் படுகிறது. ஆதி திராவிடர்கள் அல்லாதவர்களுக்கு நிலம் கொடுத்ததாக புகார்கள் வரவில்லை. அப்படி புகார் இருந்தால் அதை அரசு கவனிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தஞ்சை மாவட்டத்தில் நில உச்ச வரம்பின் கீழ் நிலம் பெற்ற விவசாயிகள் தாங்கள் அந்த நிலத்திற்காக கட்ட வேண்டிய தவணைத் தொகையை இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக கட்ட முடியவில்லை என்றும் ஆகவே தவணையை ஒரு ஆண்டுக்கு நீட்டிக்கவேண்டும் என்றும் தஞ்சை மாவட்டத்தில் அந்த நிலம் பெற்றவர்கள் அனைவரும் அமைச்சர் அவர்களுக்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களுக்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் என்ன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருவிடைமருதூரைப் பற்றியது.

•திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த உச்சவரம்பிலே வருகின்ற நிலம் சம்பந்தமாக பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டதற்குப் பிறகு அவ்வாறு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அதை ரத்து செய்வதற்கு அரசு ஆணைபிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற பதிவுச் சட்டத்தின்படி நிலங்களை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் விற்கலம். வாங்குகிறபோதும் வாங்குகிறவர்கள் வாங்கிவிட்டால் அது செல்லுமா செல்லாதா என்று அவர்கள் கவலைப்படவேண்டும். ஒன்றை விற்றுவிட்டால் அது உரிமையாகிவிடாது. உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலத்தை வீதியிலே போகிறவர்கள் விற்றாலும் சரி அல்லது முன்னாலே அதற்குச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் விற்றாலும் சரி அது செல்லாது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதிலே எத்தனை பேர்களுக்கு அந்த உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் நிலங்கள் கொடுக்கப்பட்டது? அவர்களில் முன்னுரிமையாக முன்னாள் இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா? ஆனால் அதிதிராவிடர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களில் முன்னால் பயிர் செய்து கொண்டிருந்தவர்கள் ஆக்கிரமிப்புசெய்து கொண்டு, கொடுக்காமல் தடுக்கக்கூடிய நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, முன்னுரிமை என்கின்ற முறையில் அந்த நிலத்தைக் கொடுக்கிறபோது அதற்கு வரைமுறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்னுரிமை என்கிற போது அந்த நிலத்தை அதற்கு முன்னாலே குத்தகைக்கு வைத்து இருந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு ஆதிதிராவிடர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு முன்னாள் இராணுவத்தினர் வருகிறார்கள் அந்த வரிசைப்படி—இந்த சட்டம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே 1961 ஆம் ஆண்டிலே நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது—கொடுக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நிலங்கள் அந்த முறைப்படித்தான் கொடுக்கப்படவேண்டுமென்று வரையறைகளை வைத்திருக்கிறார்கள். அதைத்தான் இந்த அரசு பின்பற்றுகிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். ஆதிதிராவிடர்களுக்கு இதுவரையிலும் 37 ஆயிரம் ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மலை சாதியினருக்கு 18 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு 63 ஆயிரம் ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 1 லட்சத்து 1,035 ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஒரு நிலத்தை வாங்குகிறபோது வாங்குகிறவர் தான் கவனமாக வாங்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட மிச்ச நிலத்தை பணக்காரர்கள்தான் வைத்திருக்கிறார்கள். கோவையிலே ஏழை எளிய மக்கள் மத்தியில் மலிவு விலையில் தருகிறேன் என்று சொல்லி..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவிடைமருதூர் பற்றிய கேள்வி இது.

## மதுராந்தகம் வட்டம் கொடூர் கிராமத்திலுள்ள கோயில் புறம்போக்கில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு

*வினா எண். 328.—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கொடூர் கிராமத்தில் ச. எண். 196/14 கோயில் புறம்போக்கில் மிராசுதார்கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமணங்களை அப்புறப்படுத்த மதுராந்தகம் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட விரோத ஆக்கிரமிப்பில் பல மிராசுதார்கள் அந்த கோயில் புறம்போக்கிலே ஆக்கிரமிப்பைச் செய்து வேறு பொதுக் காரியங்களுக்கு அந்த இடங்கள் பயன்படாத முறையிலே செய்து இருக்கிறார்கள். அதற்குச் சில வருவாய்த் துறை அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் அதற்காக ரெவின்யூ போர்டு தடை உத்திரவு போடப்போவதாக அறிகிறேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.20.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் புறம்போக்கு என்று சொல்வதாலே கோவில்காரர்கள் உரிமைக்கு வந்துவிடப் போகிறார்கள். கோவில்களுக்கு அருகாமையில் இருப்பதால் கோவில் புறம்போக்கு என்று வந்துவிட்டது. புறம்போக்கு என்று சொன்னாலே, அது கோவில் புறம்போக்காக இருந்தாலும் சரி செட்டியார் புறம்போக்காக இருந்தாலும் சரி அவை அரசிற்கு சொந்தமானவை. ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பு என்ற வார்த்தையே ஊரிலுள்ள பெரியவர்கள், ஆதிக்கம் பெற்றவர்கள், அதிகாரம் பெற்றவர்கள் மூலமாகத்தான் வந்திருக்கும் என்று கருதுகிறேன். அவைகளில் அரசு தக்க நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புதாரர்களை வெளியே அனுப்பும்.

## 1978-1981 முடிய விசைத்தறிக்கு அனுமதிகோரி வந்துள்ள விண்ணப்பங்கள்

*வினா எண் 329—திரு. இல. பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 முதல் 1981 முடிய எத்தனை கைத்தறி நெசவாளர் சங்கங்கள் விசைத் தறிக்கு அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொண்டுள்ளன?

(ஆ) தனிப்பட்ட நெசவாளர் எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளனர்?

(இ) எத்தனை நபர், சங்கங்களுக்கு விசைத்தறிகள் வழங்கப்பட்டன?

[1983 மார்ச் 9

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ), மற்றும்
(இ); 1978 முதல் 1981 முடிய தனி நபர்களுக்கோ அல்லது நெச
வாளர் சங்கங்களுக்கோ விசைத்தறிகளை நிறுவுவதற்கான புதிய
உரிமங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் அனுமதியில்லாமல்
இயங்கி வந்த விசைத்தறிகளுக்கு உரிமம் வழங்கி அவைகளை
முறைப்படுத்தும் பொருட்டு மத்திய அரசு 1978 முதல் 1981
வரையிலான ஆண்டுகளில் அறிவித்த கொள்கை முடிவின்படி
தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 31—12—1981 முடிய 57,866
அனுமதி பெறாமல், தனிப்பட்ட நபர்கள் மற்றும் தனியார்
துறை நிறுவனத்தாரால் நிறுவப்பட்ட விசைத்தறிகளுக்கு
முறைப்படுத்தும் அங்கீகாரம் வழங்கப்பட்டது. கைத்தறி
நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அனுமதி பெறாமல் விசைத்
தறிகளை நிறுவவில்லையாதலால் அவைகளுக்கு முறைப்படுத்தும்
அங்கீகாரம் வழங்கத் தேவை ஏற்படவில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 57,000 விசைத்தறிகள் அனுமதி பெறாமல் இயங்கி
வந்தன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்
கள். இதில் அனுமதி பெற்ற விசைத்தறிகள் எவ்வளவு? விசைத்
தறிக்கும், கைநெசவிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
விசைத்தறிகளை உபயோகப்படுத்துவதால் நெசவாளர்களுக்கு
கூடுதலாக என்ன லாபம் கிடைக்கிறது என்பதை அமைச்சர்
அவர்கள் அறிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் 28,043 விசைத்
தறிகள் உரிமங்களுடன் இயங்கி வந்தன. 57,866 விசைத்
தறிகள் அனுமதி பெறாமல் இயங்கி வந்தன. அவைகளை
இப்போது அங்கீகரித்து இருக்கிறார்கள். 31-12-1981 இல்மொத்த
விசைத்தறிகள் 85,909. விசைத்தறி சாதாரண தறியை விட
நவீனமானது என்ற காரணத்தால் உற்பத்தி சற்று
அதிகமாக் செய்யமுடியும். அதன் காரணமாக நெசவாளர்
களுக்கு கூலியும் அதிகமாக கிடைக்கும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்கலே, விசைத் தறிகள் தமிழ் நாட்டில் ஒரு பகுதியில் மட்டும்
அனுமதிக்கப்படுகின்றன என்றும், வட ஆற்காடு மாவட்டப்
பகுதியில் அனுமதிக்கப்படுவதில்லை என்பது என்னுடைய
மாவட்ட நெசவாளர்களிடையே குறையாக இருப்பதை அரசு
அறியுமா ? அதைப் போக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,



1983 மார்ச் 9]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களை, விசைத்தறி என்றும் கைத்தறி
என்றும் பார்க்கிறபோது கைத்தறிக்கு போட்டியாக விசைத்தறி
இருப்பதாகக் கருதி விசைத் தறிகளை பல்லாண்டு காலமாக
ஊக்கப்படுத்தாமல் தடுக்கிற வகையில் ஏதோ ஒரு போக்கு
இருந்து வந்திருக்கிறது. அதனால் விசைத்தறிகளுக்கு உரிமம்
வழங்காமல் இருந்து, மத்திய அரசு இப்போது விசைத்தறி
களுக்கு உரிமம் வழங்கவேண்டுமென்று கருதுகிற நிலையில்
நாம் அதற்கு உரிமம் வழங்கி இருக்கிறோம். இப்போது மற்ற
மாநிலங்களில் விசைத்தறிகள் அதிகமாக வருகிற காரணத்தால்
உரிமங்கள் நாமும் வழங்க வேண்டுமென்ற முடிவிற்கு வந்து
இப்போது அதை முறைப்படுத்துகிற சூழ்நிலையில் சிந்தித்துக்
கொண்டு வருகிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நமது கைத்தறித் தொழில் அநேகமாக இப்போது 5½
இலட்சம் தறிகள் என்ற அளவிற்கு கீழே விழுந்து விட்டது.
நாம் கைத்தறித் தொழிலின் சீரும், சிறப்பும் பற்றி பிரமாதமாகப்
பேசி அதற்கு பணமும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கட்டா
யம் விசைத்தறிக்கு அனுமதி கொடுத்துத்தான் ஆகவேண்டு
மென்ற முறையில் மத்திய சர்க்கார் நிர்ப்பந்தம் செய்வதாகத்
தெரியவில்லை. நூல் அதிகமாக செலவாக வேண்டுமென்றும்
விசைத் தறிகளை வைக்க வேண்டுமென்றும் பெரிய முதலாளிகள்,
தூண்டுகிறார்கள். ஆகவே தமிழ்நாட்டில் இருக்கிற கைத்தறித்
காரர்களைக் காப்பாற்றுவதற்கு, இப்போது இருக்கிற கைத்தறி
களில் ஒரு தறி கூட அழிந்து போகாமல், அந்த விசைத் தறிகள்
வருவதைத் தடுப்பதற்கு, அரசு உரிமம் கொடுக்காமல் தொடர்ந்து
ஒரு கொள்கையை கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
கைத்தறித் தொழிலைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அது
அந்தத் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்தில்தான் இருக்க
முடியுமே தவிர வேறு வழியில் இல்லை. கைத்தறி நெசவாளி
விசைத்தறி நெசவாளியாக மாறுவதினால் கைத்தறி நெசவாளி
பாதிக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட ஒரு கொள்கையைப் பின்
பற்றுவதின் மூலம்தான் ஒரு சரியான முன்னேற்றத்தை நம் மா
நிலத்தில் ஏற்படுத்த முடியுமே தவிர கைத்தறியைக் காப்பாற்ற
வேண்டும் விசைத்தறியே கூடாது என்று நாம் வெறும் மேல்
போக்காகப் பேசிக் கொண்டிருப்போமானால் வேறு மாநிலங்
களில் எல்லாம் விசைத் தறிகள் வரவும் வேறு பல போட்டிகளால்
நம்முடைய கைத்தறித் தொழிலாளிகள் தான் கடைசியில் பாதிக்
கப்படுவார்கள். ஆகவே விசைத்தறி வந்தால் அது கைத்தறி
நெசவாளிகளுக்காகத்தான் வரவேண்டும். கைத்தறி நெசவாளி
கள் விசைத்தறி நெசவாளிகளாக மாற வேண்டும் என்ற அந்த
அடிப்படையில் கொள்கை பின்பற்றப்படுவதுதான் சரியாக வரும்.
அதை தமிழக அரசு பின்பற்றும்.

[1983 மார்ச் 9

திரு. இரா. தாமரைக்கனி : விசைத்தறிகளில் நெய்த துணி களில் கைத்தறியில் நெய்த துணி என்று போலி லேபல் குத்தி விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா ? இதைத் தடுப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ? கைத்தறி நெசவாளர் சங்கங்கள் விசைத்தறிக்கு அனுமதி கோருவதை நிறுத்திவைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கைத்தறித் துணி களோடு விசைத் தறித் துணிகள் கலந்து விற்பதின் மூலம் நாம் கைத்தறித் துணிக்குக் காட்டுகிற ஆதரவை விசைத்தறித் துணி கள் பெற்று அதனால் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படு கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மைதான். அத்தகைய நிலைமைகள் என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது இப்போது கைத்தறித் துணிகளோடு விசைத் தறித் துணிகளை கலந்து விற்கிற நிலைமைகளை மாற்றியமைப்பதற்கான நட வடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கைத்தறி நெசவாளிகளை விசைத்தறி நெசவாளிகளாக மாற்றுவது என்ற அந்தத் திட்டத்தை நாம் ஓரளவிற்குச் செயல்படுத்த விரும்புகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த விசைத்தறி அனுமதி பெற விண்ணப்பித்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறதா ? அதற்கு ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது மத்திய அரசின் வரம்பிற்கு உட்பட்ட அதிகாரம். அதற்கு என்று கமிஷனர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. தி. கா. நல்லப்பன் : ஏற்கனவே கூட்டுறவு முறையில் தொழில் இயல் முறையில் கைத்தறித் தொழிலாளர்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அப்படி தொழில் இயல் முறையில் நடத்திக் கொண்டிருக்கும் அந்தத் தொழிலாளர்கள் பாலிஸ்டர் போன்ற உயர் ரகங்களை நெய்ய விசைத்தறிக்கு அனுமதி கோரி னால் அரசு அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசைத் தறிக்கு நாம் அனுமதிப்பது என்பது மத்திய அரசு எந்தளவிற்கு அனுமதி தருகிறதோ அதை வைத்துத்தான் அனுமதிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் எடுத்திருக்கிற கொள்கை முடிவு தனிப்பட்டவர் களுக்குத் தருவதற்குப் பதிலாக கைத்தறி நெசவாளர் சங்கங் களுக்குத்தான் இப்படிப்பட்ட விசைத்தறி உரிமங்கள் வழங்குவது என்ற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்திருக்கிறது.



1983 மார்ச் 9]

திரு. ஏ. எம். சேதுராமன் : விசைத்தறி அமைப்பதற்காக தனி நெசவாளர்கள் அல்லது கூட்டுறவு முறையில் சங்கங்கள் மூலமாகவோ அவர்கள் விண்ணப்பங்கள் செய்கிற போது அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து—கூலி ஆட்களாக பெரிய முதலா ளிகளுக்கு அடிமைகளாக இருக்கிற தொழிலாளர்களுக்கு— கடனாகவோ அல்லது மானியம் என்ற முறையிலோ வழங்க அரசு முன்வருமா? ஒரு விசைத்தறி அமைப்பதற்காகும் செலவு எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசைத் தறிகள் வைத்து சங்கம் அமைத்து அந்த தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு மூலதனக் கடன் தருவது என்ற முறையில் அரசாங்கம் உதவி செய்ய விரும்புகிறது. அந்த அடிப்படையில் சில சங்கங்களை ஆரம்பிப்பதற்கும் அரசாங்கம் முன்வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முழுமை யான திட்டங்களை நாளடைவில் நான் அறிவிக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : இதற்கு முன்னால் கைத்தறி நெசவாளர்களுக்கு வேஷ்டி, புடவைக்கு மட்டும் தனிச் சலுகை காட்டி விசைத்தறிக்குக் கொடுக்காமல் இருக்கும் ஒரு முறை இருந்து வந்தது. அந்த முறை இப்போது அனுஷ்டிக்கப்படு கிறதா ? அப்படி அனுஷ்டிக்கப்படாமல் போனால் விசைத்தறிகள் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு நாம் உதவி செய்கிறோம் என்ற பெயரால் மாஸ்டர் வீவர்ஸ், முதலாளிகளாக இருக்கிற வர்கள் அதைப் பயன்படுத்தி இந்தத் தொழிலை நசுக்கி விடு வார்கள் என்ற ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் செய்ய வேறு ஏதாவது யோசனை அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : விசைத்தறி என்பது தனிப்பட்ட முதலாளிகள் கையில் பெருமளவு இருந்து அவர்கள் தான் இன்றைக்கு நிறைய சம்பாதிக்கிற ஒரு சூழ்நிலை இருப் பதை பல்வேறு இடங்களில் பார்த்து வருகிறோம். ஆனால் நமது நோக்கம் கைத்தறி நெசவாளர்களாக இருக்கிறவர்கள் அதிலிருந்து விடுபட்டு விசைத்தறி நெசவாளர்களாக வருகிற போது நமது பிரச்னை ஓரளவிற்கு தீர்க்கப்படுகிறது என்ற நிலை யில் அதை ஊக்குவிக்க விரும்பித்தான் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் அமைத்து விசைத்தறி நெசவில் ஈடுபட விரும்புகிற போது அதற்கு உதவி செய்ய அரசு முன்வருகிறது.

[1983 மார்ச் 9

(முற்பகல் 9-30)

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம் நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும் பகுதியினருக்கு வேலை வாய்ப்புத் தரும் நல்லதொரு தொழில் கைத்தறித் தொழில் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாம் அதற்கு ஈடுகொடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள், அதை தான் ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, தமிழ் நாட்டிலுள்ள 7 இலட்சம் நெசவாளர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே, விசைத்தறி லைசென்சுகளை கைத்தறி நெசவாளர் களுக்கே கொடுப்பதென்று மாநில அரசு ஏதாவது ஆலோசித்து இருக்கிறதா ? அப்படி இல்லாவிட்டால், இனிமேலாவது அப்படிக் கொடுக்க முடிவு எடுக்க அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே இதைப்பற்றி ஆழ்ந்து, சிந்தித்து அரசு எடுத்த முடிவை நான் மன்றத்திலே அறிவித்தேன். இதனால் கைத்தறி நெசவாளர்களுடைய சங்கங்களுக்கு இந்த உரிமையை வழங்குவது என்று முடிவெடுத்திருக்கிறோம். அந்தச் சங்கங் களுக்கு உதவி செய்து ஊக்குவிப்பது என்று அரசு முடிவெடுத்து இருக்கிறது.

### தமிழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிப்பணம்.

*வினா எண். 330—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் எத்தனை மாணவர் களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

| ஆண்டு. | உதவிப் பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 1979–80 .. .. .. | 16,130 |
| 1980–81 .. .. .. | 18,424 |



1983 மார்ச் 9]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழில் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்பதையும், இதன்மூலம் மாணவர் ஒருவர் எவ்வளவு ரூபாய் பலனடைகிறார்கள் என்பதையும் அறிய விழை கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வருடத்திற்கு ரூ. 180 தரப்படுகின்றது என்ற விவரம் தரப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே, எந்த அடிப்படையிலே தரப்பட்டதோ, அந்த அடிப்படையில் தரப்பட்டு வருகிறது. அதே தொகையைத் தொடர்ந்து தருகிறோம்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும்பொருட்டும், மற்றவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் பொருட்டும், அவர்களுக்கு பணிகள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா? இல்லையெனில், இனிமேலாவது முன்னுரிமை அளிக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பணி, வேலை வாய்ப்பு என்று வருகின்ற போது, நாம் மார்க்குக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தைத்தர முன் வந்தால், அப்போது தாய்மொழியில் படித்து, அதிக மார்க்கைப் பெற்று, அந்த இடத்தைப் பெறும் சக்தி படைத்தவர்களாக இருப்பார்கள். அந்த அடிப்படையில், இவர்கள் அந்த வேலை வாய்ப்பைப் பெறுவது நியாயமாக இருக்கும். இப்படி ஒரு நிலைமை வளர்கிறபோது, தாய்மொழி மூலம் கல்வி பயிலும் நிலைமை இயற்கையாக வளர்ச்சி பெறும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு இரண்டு ஆண்டுகளில் சுமார் 34,000 பேர்களுக்கு உதவி செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தியப் பண்பாடு என்ற கல்வியில் எம். ஏ. முடித்து பல ஆண்டுகளாக அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்களே, அவர்களும் அமைச்சர் அவர்களைச் சந்தித்து பலமுறை தங்கள் நிலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற் படுத்துவதற்கு ஏதாவது அரசு உத்தரவிட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியப் பண்பாடு மட்டுமல்ல, சையன்ஸ் படித்தவர்கள் நிறைய பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார் கள். ஆகவே, தனித்தனியாக குறிப்பிட்ட படிப்பிற்கு வேலை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு, இந்தத் திட்டத்தைப் போடவில்லை. மற்ற பட்டதாரிகள் எப்படி பணியில் சேரு கிறார்களோ, அவ்வாறு இவர்களும் சேரவேண்டும். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர் பணியை நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். ஆசிரியர்கள் பணிபெற, அந்தப் பட்டத்தைப் படிக்க மாணவர்கள் முன்வரவேண்டும். நாங்கள் 4, 5 பள்ளிக் கூடங்களில் இந்த இந்தியப் பண்பாட்டுப் பாடத்தைக் கொண்டு வந்தபோது, மாணவர்கள் அதிலே சேரவில்லை. மாணவர்கள் சேருவதை நாம் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழில் பட்டப் படிப்பு படிக்க 1979–80-ல் 16,000-க்கு அதிகமாகவும், 1980–81ல் 18,000க்கு அதிகமாகவும் பயிற்சி பெற்றதாகச் சொன்னார் கள். அதிலே அதிக கவனம் செலுத்திய மாணவர்கள் எத்தனை பேர்கள், மாணவிகள் எத்தனை பேர்கள், என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் புள்ளிவிவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. அப்படி ஆண்கள் எவ்வளவு, பெண்கள் எவ்வளவு என்று வித்தியாசம் பார்த்து, இந்தப் பிரச்னையை அணுகவேண்டிய ஒரு நிலைமை எங்களுக்கு ஏற்படவில்லை.

## தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம்.

*வினா எண். 331—திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சட்டக்கல்வியின் தரம் குறைந்து வருவதாக தமிழ்நாடு வக்கீல்கள் சங்கத் தலைவரும், இந்திய வக்கீல்கள் சங்க உதவித் தலைவரும் கூறியிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சட்டக் கல்வியின் தரம் குறையக் காரணமென்ன?

(இ) அதைத் தடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : சட்டக் கல்வியின்தரமே குறைந்துவிட்ட தாக கூறுவதற்கில்லை. காலியாக இருந்த சட்டக்கல்லூரி ஆசிரியர் கள் பதவிகளைப் பூர்த்தி செய்வதில் சில அலுவலக மற்றும் சட்ட ரீதியான சிக்கல்களினால் தாமதம் ஏற்பட்டது என்பதும், அதனால் பாடங்கள் நடத்துவதில் சில சங்கடங் கள் ஏற்பட்டன என்பதும் உண்மையே. ஆனால் தற்போது, காலியாயிருந்த ஆசிரியர்கள் பணியிடங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு சட்டக் கல்லூரிகள் ஒழுங்காக இயங்கி வருகின்றன. தமிழ்நாடு வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் அண்மையில் பத்திரிக்கைகளில் சட்டக்கல்லூரிகள் திறம்பட செயல்பட்டு வருவதாகப் பாராட்டியுள்ளார் என சட்டக் கல்லூரி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, சட்டக் கல்வி யினுடைய தரம் குறைந்துவிட்டதாக அகில இந்திய வக்கீல்கள் சங்கத்தினுடைய உதவித் தலைவரும் சென்னையில் இருக்கிற சங்கத்தின் தலைவரும் பகிரங்கமாக ஒரு மகாநாட்டிலே பேசிய விஷயம் இது. ஆகவே, அவர்கள் அப்படிப் பேசுவதற்கு ஆசிரியர்களுடைய இடம் நிரப்பாததுதான் காரணமா? அல்லது, சட்டக் கல்விக்காக இருக்கும்படியான அதனுடைய பாடங்கள், அதனுடைய நடவடிக்கைகள் ஏதாவது முன் பிருந்ததைவிட இப்பொழுது மாற்றப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரிகள் என்று வருகின்றபொழுது, இந்தியா முழுவதும் இருக்கிற கல்லூரிகளை வைத்து நாம் பார்க்கின்ற பொழுது மற்ற இடங்களிலே இருப்பதை விட நமுடைய தமிழ்நாட்டில் ஏதோ ஓரளவிற்குக் கல்லூரிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று நாம் சொல்லிக் கொள்ளலாம். அந்த அடிப்படையிலே பார்க்கிறபொழுது, இந்திய வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர், தமிழ்நாடு கல்லூரிகளைக் குறைகூறு கின்ற அளவுக்கு மற்ற மாநிலக் கல்லூரிகள் இல்லையென்பதை நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல்கலைக் கழகங்களும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால், நாம் சில ஆசிரியர்களை நியமிக்காதது என்பது அந்தத் தரத்தைக் குறைக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும். ஆகவே, அந்த குறை பாடு உண்மைதான். அதை நாம் மறுப்பதற்கில்லை. ஆகவே அதிலே இருக்கிற அந்தத் தாமதத்தைப் போக்க இப்பொழுது நாம் ஆசிரியர்களைப் போட்டிருக்கிறோம். ஆனால், சட்டக் கல்வியினுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் இப் பொழுது இருக்கிற முறையை மாற்ற வேண்டுமென்ற முடிவை இப்பொழுது பட்ஜெட் உரையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே தெரிவித்திருக்கிறார்கள். அதாவது

3 ஆண்டுகள் படித்து பட்டம் பெற்று, வேறு வேலைகளுக்குப் போய், வேறு இடங்களுக்குப் போய் அங்கே வாய்ப்புகள் கிடைக்காமல், 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் கழித்து, சரி, நாம் சட்டக் கல்வி பயிலலாம் என்று வருபவர்களை விட, 12-வது வரை படித்து, நாம் எப்படியும் வழக்கறிஞராகத்தான் வரவேண்டுமென்ற அந்த விருப்பத்தோடு வருகின்ற மாணவர்கள் நல்ல தரம் உள்ளவர்களாவும் தரமுள்ள வழக்கறிஞர்களாவும் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலேதான் அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தினுடைய— பார் கவுன்சிலினுடைய—ஏற்பாட்டின்படி, அவர்களுடைய யோசனையின்படி 5 ஆண்டுச் சட்டக் கல்வியைக் கொண்டுவருவது என்கிற முடிவை பல்கலைக் கழகம் ஏற்றிருக்கிறது, நாமும் அதை ஒத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி வருகின்றபொழுது இரண்டு விதத்தில் தரம் உயரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒன்று, வழக்கறிஞர்களாக வரவேண்டுமென்று நினைப்பவர்கள்தான் அதற்கு வருவார்கள். இன்னொன்று, 12-வது படித்து வெளியே வருகின்ற மாணவர்கள் உண்மையிலே தரம் உயர்ந்த மாணவர்களாக வந்து கொண்டிருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பு மாணவர்களானாலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தரம் உயர்ந்து வருகின்றார்கள். ஆகவே, இந்த இரண்டும் சேர்கின்றபொழுது அந்த 5 ஆண்டுகள் சட்டக் கல்வி என்பது தரம் உயர்ந்த கல்வியாகவும் தரம் உயர்ந்த வழக்கறிஞர்களைத் தருகின்ற கல்வியாகவும் இருக்கும் என்கிற உறுதியை நான் தர விரும்புகிறேன்.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி மாணவர்கள் தேர்வுகள் எழுதும்போது, கண்காணிப்புகள் ஒழுங்காக நடைபெறுகிறதா? தேர்வுத்தாள்கள் திருத்துவோர்களை ஒரே இடத்தில் இருக்கச் செய்து, எந்தத் தாள் யாரிடம் செல்கிறது என்று தெரியாத அளவிற்கு குறித்த சில நாட்களுக்குள் திருத்தித் தர அரசு பணிகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்வை நடத்துகின்ற பொறுப்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது. அதைச் சரியாக நடத்த வேண்டுமென்ற பொறுப்புணர்வோடு பல்கலைக் கழகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது காணப்படுகிற குறைகளை நிவர்த்திக்கவும் அவர்கள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**திரு. கு. ரமணி :** அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் படியான விளக்கம் வரவேற்கத்தக்கது. இந்தச் சட்டக் கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கு அரசு பக்கத்திலிருந்து ஒரு சரியான, ஜாக்கிரதையான, கல்வியின் தரத்தைக் காப்பாற்ற



வேண்டிய அவசியமான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது அவர்களுடைய நடவடிக்கையிலிருந்து தெரிய வருகிறது. ஆனாலே திறமையுள்ள நல்ல மாணவர்களை செலக்ட் பண்ணுவது ஒரு முக்கியமான நடவடிக்கை. கோவையிலே ஏற்படுத்தியிருக்கும் படியான சட்டக் கல்லூரிக்குச் சொந்த இடமும் போதிய வசதிகளும் இல்லாததால் அங்கே சரியாக படிக்க முடியாத கஷ்டம் இருக்கிறது என்பது உண்மைதானே? அதற்கு ஏதாவது உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9·40]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கு ஒரு இடத்தைப் பார்த்தோம். பீளமேட்டிலேதான் பார்த்திருக்கிறோம் என்று கருதுகிறேன். அந்த இடத்தைப் பார்த்தவுடனே பக்கத்தில் இருப்பவர்கள் இங்கே சட்டக் கல்லூரி வரக்கூடாது என்று சொல்கிறார்கள் ஆகவே, ஒவ்வொரு இடத்திலும் இடத்தைப் பார்க்கின்றபொழுது பக்கத்தில் இருப்பவர்கள் சட்டக் கல்லூரி இங்கே வரக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்து, அந்த இடத்தை மாற்றிக் கொண்டிருக்கிறோம். வெகு விரைவில் இடம் கிடைத்தவுடன் கட்டிட வேலைகளைத் துவங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் வரும் கல்வி ஆண்டிலிருந்து வழக்கறிஞர் பட்டப் படிப்பு படிக்கலாம் என்ற நிலைமை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. பிளஸ் 2 படிக்கின்ற மாணவர்கள் அதிகமாக இருப்பதால் வழக்கறிஞர் பட்டப் படிப்பு படிக்கின்ற இடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசிடம் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, நமக்கு முன்னால் இருக்கின்ற மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அந்தச் சட்டக் கல்லூரி முறையாக நடைபெற வேண்டும், ஒழுங்காக நடைபெற வேண்டுமென்பதுதான். ஆகவே அதற்காகத்தான் நாம் சென்ற ஆண்டில், சென்னையிலே இருக்கின்ற சட்டக் கல்லூரியின் எண்ணிக்கையைக் குறைத்து, திருச்சியிலே ஒரு கல்லூரியாகவும், கோவையிலே ஒரு கல்லூரியாகவும் வைத்து, அதே எண்ணிக்கையை வைத்துப் புதிய கல்லூரிகள் வந்தன. அப்பொழுது நாம் எண்ணிக்கையை உயர்த்த விரும்பவில்லை. இப்பொழுது உள்ள நிலைமையில், மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தாமல், இருக்கின்ற கல்லூரி சரியாக, முறையாக நடக்க ஆரம்பித்த பிறகு, சிந்திக்க வேண்டிய பிரச்சினை மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பது. அதுவரையில் இதைப்பற்றி சிந்திக்காமல் இருப்பது நல்லது.

[1983 மார்ச் 9

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே படிப்பிற்கும், பிராக்டிசிற்கும் கொஞ்சமும் தொடர்பு இல்லாமல் இருப்பது போலத் தெரிகிறது. ஆகவே, பிராக்டிகல் நாலெட்ஜ் வேண்டுமென்ற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியிருந்தால் நிச்சயமாக இந்த மாணவர்கள் ஆர்வத்தோடு படிக்கவும், பிராக்டிகல் நாலெட்ஜ் பெறவும் வசதியாக இருக்குமே, அதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, பிராக்டிஸ் தரப்பட வேண்டுமென்பது எல்லாத் தொழில் பயிற்சிகளுக்குமே இருக்கின்ற ஒரு பொதுப்படையான கருத்து தான். அந்த அடிப்படையிலே வழக்கறிஞர் படிப்பு படிப்பவர்களுக்கும் பயிற்சி தரப்பட வேண்டுமென்பதும், அவர்கள் பயிற்சி பெற வேண்டும் என்பதும் உண்மைதான். ஆனால் வழக்கறிஞர் தொழிலைப் பொறுத்தவரையில் எப்படித்தான் சிந்தித்துப் பயிற்சி அனுபவத்தைத் தந்தாலும் அதை அவர்கள் கோர்ட்டுகளில் பயன்படுத்தி வெற்றிகரமான வகையில் வர முடியுமா என்பது கேள்வி. அது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற அனுபவத்தின் மூலமாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

1981—83 ஆம் ஆண்டுகளில் சட்டக் கல்லூரிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள்.

*வினா எண் 332—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82, 1982–83 ஆம் ஆண்டு அனைத்து சட்டக் கல்லூரிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களில் பொது ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை எத்தனை ?

(ஆ) ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 1981–82 ஆம் ஆண்டு 95
1982–83 ஆம் ஆண்டு 110.

(ஆ) 1981–82 ஆம் ஆண்டு 1.
1982–83 ஆம் ஆண்டு ஒருவரும் இல்லை.



1983 மார்ச் 9]

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவரவர்களே, பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தகுதியிருந்தும் சில பேர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற மனு ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு முதல் ஐந்தாண்டு சட்டப் படிப்பு என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பது தமிழகத்திலே உள்ள எல்லாச் சட்டக் கல்லூரிகளிலும் அமல்படுத்த இருக்கிறார்களா ? மேல்நிலைப் படிப்பு படித்த மாணவர்களுக்கு ஐந்தாண்டு என்று இருப்பதைப் போல, பட்டப் படிப்பு படித்த மாணவர்களின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இப்பொழுது எஞ்ஜினியரிங் கல்லூரி இருக்கிறது, அதற்கு 12 ஆவது படித்த மாணவர்களை நாம் தேர்வு செய்கிறோம். அப்பொழுது பட்டப் படிப்பு படித்த மாணவர்களைப் பற்றி ஒரு கவலை எடுத்துக் கொண்டாலும், அவர்களுடைய நிலைமையை வைத்துக் கொண்டு நாம் அதைப் பார்ப்பதில்லை. அதைப் போல மெடிகல் காலேஜ். அதைப்போல் அக்ரிகல்சர் யூனிவர்சிட்டி, அதைப்போல வெட்னரி காலேஜ் ஆகியவைகளில் அப்படித்தான் செய்கிறோம். அதைப்போல ஐந்தாண்டுச் சட்டக் கல்லூரி என்னும்பொழுது பட்டம் படித்த மாணவர்களை வைத்துக் கொண்டு செய்யவில்லை. 12 ஆண்டு படிப்பு படித்த மாணவர்கள் சிறப்பாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் இப்படிப்பட்ட நிலைமைகளைக் கொண்டு வருகிறோம். இன்னும் சொல்லப் போனால் ஹையர் செகண்டரி மாணவர்கள், எஞ்சினியரிங் கல்லூரியிலே தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பார்க்கும்பொழுது—அந்த அடிப்படையிலே கேள்வி கேட்டிருப்பதால் சொல்கிறேன்.

1971-77-க்கு முன்னால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதம் இடங்களைக் கூட அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் இந்த ஆண்டு அந்த இடங்கள் முழுவதையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். எவ்வளவு மார்க்குகள் வாங்கிப் பெற்றிருக்கிறார்கள் என்றால் 85-ம் அதற்கு மேலும் வாங்கிப் பெற்றிருக்கிறார்கள். ஆக 15 ஆண்டுகளாக கல்வி என்பது தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய அறிவின் தரத்தை உயர்த்தியிருக்கிறது. அப்படி தாழ்த்தப்பட்ட மாணவர்களே அறிவின் தரத்திலே உயர்ந்திருக்கும் பொழுது மற்ற வகுப்பு மாணவர்களும் அறிவின் தரத்திலே உயர்ந்

[1983 மார்ச் 9

திருப்பார்கள். அப்படிப்பட்ட மாணவர்கள் சேர்ந்து அவர்கள் தரமுள்ள வழக்கறிஞர்களாக நமக்குக் கிடைப்பார்கள் என்று நாம் கருதுகின்றோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது இந்த சட்டக் கல்லூரிகளில் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை எத்தனை என்பதை அறிய விரும்புவதோடு அதிலே பின்தங்கிய வகுப்பினர், ஆதி திராவிடர் இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா, அதோடு இப்போது தகுதி, அதாவது மெரிட் பேசிஸ்-இல் நடக்கிறதா அல்லது வேறு எந்த முறையிலே தேர்வு நடக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை, மதுரை, திருச்சி, கோவை சட்டக் கல்லூரிகளில் மொத்த இடங்கள் 280. விகிதாசார அடிப்படையைப் பயன்படுத்தி, இண்டெர்வியூ வைத்துத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்—மற்ற கல்லூரிகளைப் போல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 333 அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

## மதுரையில் வீட்டுவசதி வாரியம் மூலம் வழங்கப்பட்ட மனையிடங்கள் மற்றும் கட்டி முடிக்கபபட்ட வீடுகள்

* வினா எண் 334—திரு. க. பாரமலை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள (பிளாட்) மனையிடங்கள், கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் மொத்தம் எவ்வளவு?

(ஆ) அதில் அரிசன மற்றும் மலைவாழ் மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள (பிளாட்டுகள்) மனையிடங்கள், வீடுகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மதுரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ள (பிளாட்) மனையிடங்கள்—1,475. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்—2,180.

(ஆ) அரிசன மற்றும் மலைவாழ் மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட (பிளாட்டுகள்) மனையிடங்கள்—5, வீடுகள்—69.



1983 மார்ச் 9]

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் 1,475 பிளாட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்லுகிறார்கள். அதிலே, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு 5 என்று சொல்லி இருக்கிறார்கள். 10 சதவீதம் என்று சொன்னால் கூட ஏறக்குறைய 140 இடங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, இது மிகக் குறைவாக இருப்பதை அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்வார்கள். இருந்தாலும் அப்போதைக்கப்போது சரண்டர் பண்ணப்பட்ட பிளாட்டுகளையாவது, மொத்தமாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒதுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது உண்மை. 10 சதவீதம் என்று இருந்தது. அவை இப்போது இந்த அரசு 18 சதவீதமாகக்கூட உயர்ந்திருக்கிறது. 1982ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 8-ஆம் நாளிலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். ஆரம்பகாலத்தில் போதிய விண்ணப்பங்கள் கொடுக்காமல் இருந்தார்கள். இப்போது போதிய விண்ணப்பங்கள் வர ஆரம்பித்திருக்கின்றன. அதனால் இப்போது இந்தக் குறை தீர்ந்துவிடும்.

திரு. க. பாரமலை : நம்முடைய அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல விண்ணப்பங்கள் வராமல் இருந்தது உண்மையானாலும் பின்னால் விண்ணப்பங்கள் வந்த காலத்தில் ஏற்படுகிற காலி இடங்களுக்கு அரசுதான் அந்த இடங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதைச் சில நேரங்களிலே குலுக்கல் அடிப்படையில்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிற காரணத்தினால் அப்படிப்பட்ட ஒதுக்கீடு கிடைக்காமல் போய்விட்டது என்று அரசுக்குத் தெரிந்து இருக்கக்கூடும். ஆகவே, நான் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட சரண்டர்டு பிளாட்டுகள் இன்னும் இருக்கின்றனவா அப்போதைக்கப்போது வீடு கட்டாமல் இருக்கின்ற சரண்டர்டு பிளாட்டுகளிலாவது இந்த நடைமுறைகளைச் சொல்லாமல் தகுதி உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு கொடுப்பதற்கு அரசு முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சரெண்டர் பிளாட்டுகள் என்று வரும்போது ஹரிஜனங்கள் மனு செய்தால் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீடு ஒதுக்கும்பொழுது குலுக்கல் முறை வருமானால் அதிலே ஹரிஜனங்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் ஒதுக்க முடியாது. ஆகவே, 18 சதவிகிதம் தனியாக குலுக்கலுக்கும், தனியாக 18 சத விகிதமும் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 9

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 18 சதவிகிதம் என்று ஒதுக்கிவிட்டால் அது அவர்களுக்குத்தான். எனவே, வேறு ஒருவரும் தலையிடுவது கிடையாது. அவர்களுக்கே 18 சதவிகிதமும் கிடைக்கிறது. மாநில அரசு பணியாளர்களுக்கும், வீட்டுவசதி வாரிய ஊழியர்களுக்கு 18.5 இப்படி பிரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் படித்தால் நேரமாகிவிடும். அது அது அவர்களுக்காக ஒதுக்கப்பட்டதுதான்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட மனை நிலங்களுடைய கிரயம் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது, பிளாட்டுகள் தவணை முறையில், எத்தனை தவணையில் திரும்ப செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இ.டபிள்யூ.எஸ்., எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி., மற்றும் எச்.ஐ.ஜி., என்று ஒவ்வொன்றுக்கும் தவணைத் திட்டம் இருக்கிறது. எனவே, இதற்கான தனிக்கேள்வி போட்டால், விளக்கமான பதில் தரப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக ஒதுக்கப்படும் பிளாட்டுகள் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்படுகிறபோது ஒரு சிலர், போலிச் சான்றிதழ் கொடுத்து அந்த மனைகளைப் பெற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. எனவே, இதை மறுபரிசீலனை செய்து, உண்மையான மலைவாழ் மக்களுக்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இந்த 18 சதவீதத்திற்குள் வந்துவிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால், ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் என்று ஒதுக்கப்படுகிற காரணத்தால், அவர்களும் வந்துவிடுவார்கள் என்று கருதுகிறேன். போலிச் சான்றிதழ் பெற்று இடம் வாங்கி இருப்பதைப் பற்றித் தகவல் குறிப்பிட்டுச் சொன்னால் அந்த முறையில் மனை கொடுத்தது ரத்து செய்யப்படும்.



1983 மார்ச் 9]

திண்டுக்கல் நகர குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 335—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரத்தில் தற்போதைய குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : திண்டுக்கல் நகராட்சி குடிநீர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு ஒரு மேம்பாட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே, 1954ஆம் ஆண்டிலே அப்போது இருக்கக்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று போதுமான முன் யோசனையும் இல்லாமல், பெரும்பாலும், உபயோகம் இல்லாமல், நகர மக்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். இப்போது வைகைப் பேரணையிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டுமென்ற திட்டம் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே அமுல்படுத்துவதற்கு முன்னாலே, வறட்சி காலத்தை முன்னிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முழு முயற்சி எடுத்து அமுல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1982ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாள் முதல் மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது. மின்சாரம் சீராக வழங்கப்பட்டு வருவதால், குடிதண்ணீர் வினியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. மேலும், செம்பட்டியிலிருந்து ஆத்தூர் தலைமை நீரேற்று நிலையம் வரையில் நேரடியாக மின்சாரம் கொண்டுவரக்கூடிய முறையில்—ஒரு பீடர் லைன் சுமார் 2.54 இலட்சம் செலவில் அமைக்க அரசு அனுமதித்து உள்ளது. இவைகள் எல்லாம் செயல்பட்டால் தற்சமயத்தில் உள்ள சிரமம் சீராகிவிடும். புதிய மேம்பாட்டுத் திட்டம் அமுல்படுத்தும்போது எல்லா வகையிலும் பாராட்டக்கூடிய வகையில் நிலைமைகள் அமைந்துவிடும்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம், அந்த அணையில் தண்ணீர் இல்லை. ஜெனரேட்டர் வழங்குவதற்காக சாங்ஷன் செய்திருப்பதாகவும், பீடர் லைன் போட அனுமதி அளித்திருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இன்றைக்கு அந்த அணையிலே தண்ணீர் இல்லை. நான் இதைக்

குற்றச்சாட்டாக சொல்லவில்லை. உடனடியாக வைகைஅணை
யிலிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு ஒரு முன்னோடித் திட்டத்தை
அமுல்படுத்தி, அந்த நகரத்திற்கு தண்ணீர் கொடுக்க அரசு ஏற்
பாடு செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வர் அவர்களே, குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று ஆய்வில்
இருக்கிறது என்று சொன்னேன். அந்தப் பதில் இதற்கும்
பொருந்தும் என்று நினைக்கிறேன்.

வீரபாண்டி தொகுதியில் உள்ள எளம்பிள்ளை, ஆட்டையாம்பட்டி
பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 336—செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதியில் உள்ள
எளம்பிள்ளை ஆட்டையாம்பட்டி, பேரூராட்சிகளுக்கு பூலாம்பட்டி
குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசிடம்
செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மேற்கூறிய இரண்டு பேரூராட்சிகளையும் சேர்த்து
ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரி
யத்தால் தயாரிக்கப்பட்டு அதன் தீவிர பரிசீலனையில் உள்ளது.
பரிசீலனை முடிந்து அரசின் நிர்வாக ஒப்புதல் அளித்தபின் வேலை
துவக்கப்படும்.

செல்வி ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பூலாம்பட்டி திட்டம் எவ்வளவு மதிப்பீட்டில் ஆரம்
பிக்கப்படுகிறது. மேலும் இந்தக் குடிநீர்த்திட்டத்தினால்
எத்தனை கிராமங்கள் பயன் அடையும் என அமைச்சர் அவர்கள்
அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை
வர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், கொங்கணாபுரம், ஆட்டை
யாம்பட்டி, வெண்ணாத்தூர், மல்லசமுத்திரம், அர்த்தனூர்,
எளம்பிள்ளை, இடங்கல்சாலை பிள்ளாநல்லூர் ஆகிய பேரூ





ராட்சிகளுக்கும், மற்றும் இடைப்பாடி நகராட்சிக்கும் மேலும்
வழித்தடங்களில் உள்ள சுமார் 129 கிராமங்களுக்கும் சேர்த்து
ஒட்டுமொத்தமாக ஒரு கூட்டுக் குடிநீர் வழங்குத்திட்டத்திற்கு
விரிவான ஆய்வுத்திட்டம் களப்பணியாளரிடமிருந்து பெறப்
பட்டுள்ளது. இந்த திட்டத்தினுடைய உத்தேச மதிப்பீடு ரூபாய்
9 கோடி. 1,87,670 மக்கள் இதனால் பலன் பெறக்கூடும்.

செல்வி திரு. ப. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த பூலாம்பட்டி குடிநீர் திட்டம் எப்போது
முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்
களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
இத்திட்டத்திற்கு 9 கோடி ரூபாய் ஆகும் என்று தெரிகிறது; ஆய்வு
அறிக்கை தயாராகிவிட்டது. மேலும் ஆகவேண்டிய காரியங்கள்
எல்லாம் முடிந்த பின் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு
விரைவில் செயல்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, இந்த
9 கோடி ரூபாய் குடிநீர்திட்டம் என்னுடைய தொகுதியில் அர்த்த
னூர், மஞ்சனூர், நடுப்பட்டி, புல்லாநல்லூர், வெண்ணாத்தூ
போன்ற ஊர்களிலுள்ள மக்கள், குறிப்பாக 43,000 கைத்தறி
நெசவாளர்கள் பயன்படும் வகையில் அமைந்திருக்கிறது. அதற்
காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.
ஆனால் நேற்றைக்கு முன்தினம் வந்திருக்கிற தகவல், அர்த்தனூர்
பகுதியில் கடுமையான வறட்சியின் காரணமாக 530 அடி தோண்
டியும் தண்ணீர் கிடைக்க வில்லை. ஆகையால் மக்கள் மிகவும்
அவதிப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்
படுத்தினாலொழிய அந்த மக்களுக்கு குடிநீர் கிடைக்க வாய்ப்பு
இல்லை. எனவே எவ்வளவு விரைவில் இந்தத் திட்டம் நிறை
வேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே,
மிக வேகமாக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,
இந்தத் திட்டம் 1978 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டு, நம்முடைய மாண்பு
மிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் போய், விவரங்
கள் கேட்கப்பட்டு, பல ஆண்டுகளாக செயற்குறிப்பு இருந்து
வந்தது என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தினால் பயன்
படக்கூடிய மக்கள் கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்திற்குமேல்
இருக்கக் கூடும். ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை
ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 9

யாண்புமிகு திரு. எஸ். இாரகவானந்தம் : தலைவரவர்களே, எவ்வளவு விரைவிலே ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே ஆரம்பிக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிக் கூறும்போது, திட்டம் தேன் போல் இருக்கிறது என்றுதான் கருதுகிறேன். இது குடிநீர் பிரச்சினை. ஆகவே, விரைவிலே நடவடிக்கை எடுக்கிறேன். ஆய்விலே உள்ளது என்ற பதிலை கொடுக்காமல் ஒரு கால வரையறையைக் குறிப்பிட்டு, திட்ட மதிப்பீடு மீண்டும் ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடக்கூடிய சூழ்நிலை உருவாகாமல், நிர்வாக ஒப்புதலை விரைவாகப் பெற்று, அதை நடைமுறைப்படுத்த அரசு முன்வருமா? ஒரு கால வரையறை குறிப்பிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபோன்ற காரியங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சொல்வது அவ்வளவு சுலபம் அல்ல. அதற்காகத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ''ஓமிஷன் இஸ் பெட்டர்தேன் கமிஷன்'' என்று சொன்னார்கள். இத்தகைய திட்டங்களை ஒரு கால வரையறைக் குறிப்பிட்டு 2 மாதம், 3 மாதத்தில் முடித்துவிடுவோம் என்று சொல்வது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளை கருத்திற்கொண்டு, எவ்வளவு விரைவிலே முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவிலே செய்து முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

மணலூரிலிருந்து மதுரைமாநகராட்சிக்கு குடிநீர் கொண்டுபோகும் திட்டம்.

*வினா எண் 337—திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குக் குடிதண்ணீர் மணலூரில் இருந்து கொண்டு போகும் வேலை தற்போது நடைபெறுவது உண்மையா?

(ஆ) நெடுஞ்சாலை இடையில் குறுக்கிடுவதால் வேலை நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?



1983 மார்ச் 9]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலையில் குழாய் பதிக்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு தேசீய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் ஒரு கருத்துருவை அனுப்பியுள்ளார்.

அண்மையில் கிடைத்த தகவல்படி அனுமதி கிடைத்துவிட்டது என்றும் வேலைகள் விரைவிலே தொடங்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவாகளே, மதுரை மாநகராட்சியில் குடிநீர் மிகவும் பிரச்சனையாக இருக்கிற காரணத்தால் இந்தத் திட்டத்தை கொண்டுவருகிற நேரத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறை தடுத்து நிறுத்தயது ஏன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளின் குறுக்கே குழாய்களைப் போடக்கூடாது என்று தடுத்தார்கள். ஆனால் அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு, இப்போது அனுமதி கிடைத்திருப்பதாக புதியதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. வேலைகளும் துவங்கப்படும். இனி காலதாமதம் ஆகாது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று நிறைவேற்ற இருக்கிற வேறு ஏதாவது திட்டங்களுக்கு ஒப்புதல் வேண்டி நெடுஞ்சாலைத் துறைக்கோ, அல்லது மத்திய அரசின் ஒப்புதலுக்கோ, ஒப்புதல் வழங்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டு, அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கும் திட்டங்கள் வேறு ஏதாவது இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஞாபகத்தில் அப்படி வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

[1983 மார்ச் 9

திரு. எஸ். என். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுடைய இரண்டாவது பெரிய நகரமாகவும், வரலாற்றுச் சிறப்புடைய கோவில்கள் நிறைந்த நகரமாகவும் வளர்ந்து வருகிற திருநகரமாக மதுரை நகரம் விளங்குகின்ற காரணத்தால் அந்த மதுரை நகரத்திலே குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் வைகையாற்றிலே இருந்து குழி தோண்டி தண்ணீரை எடுக்கிற பரிதாப நிலை இருக்கிற காரணத்தால் மணலூரிலிருந்து எவ்வளவு காலத்தில் தண்ணீர் மதுரைக்கு கிடைக்கும் என்று அரசு எதிர்பார்க்கிறது? அதற்கு உத்தேசமாக எவ்வளவு செலவாகும் என்று எதிர்பார்க்கிறது. அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் இந்த பணி விரைவாக எடுத்துக் கொள்ளப்பெற்றால் எவ்வளவு காலன் தண்ணீர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்புவனத்திலிருந்து ஒரு மில்லியன் காலன் தண்ணீரும், மணலூரிலிருந்து 1 மில்லியன் காலன் தண்ணீரும், மேலக்காயலின் மூலமாக ஒரு மில்லியன் காலன் தண்ணீரும் ஆக 3 மில்லியன் காலன் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே சில நாட்களாக மிகக் கடுமையான முறையிலே குடிதண்ணீர் பஞ்சம் இருக்கிறது. மதுரை நகருக்கு தண்ணீர் என்பது வைகையாற்றுப் படுகையில் இருந்துதான் எடுக்கப்படுகிறது. வைகையாற்றுப் படுகை வற்றிவிட்ட காரணத்தாலே, பெரியார் ஆற்றிலிருந்து ராட்சத பம்பு செட்டுகளை வைத்து தண்ணீர் இறைத்து. வைகையாற்றுப் படுகையை வெட் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு இப்படி செய்து மதுரை நகருக்கு குடிதண்ணீர் அளித்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து உடனடியாக இதற்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய ஆலோசனை ஒரு பெரிய கம்பர்-சம்-பிராஸஸ் என்று கருதுகிறேன். அது பற்றி பேசியும் இருக்கிறேன். அதற்கு மாறாக, உடனடியாக 650 குழாய் கிணறுகளை மதுரை நகரத்தில் போட விருக்கிறோம். அந்த வேலைகள் திருப்புவனம், மணலூர் ஆகிய இடங்களில் ஆரம் பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. அதற்கு முன்னதாக, அங்கே இருந்து லாரிகள் மூலமாக தண்ணீர் கொண்டு வந்து ஓரமாக இருக்கக்கூடிய ஊர்களுக்கு கொடுத்துவிட வேண்டும் என்ற ஒரு ஆலோசனையையும் சென்ற மாதம் 28 ஆம் தேதி என்று கருது கிறேன்—அதிகாரிகளை அழைத்துப் பேசும் போது கூறியிருக்



1983 மார்ச் 9]

கிறேன். அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையையும் எடுத்துச் சொன்னேன். அது அவ்வளவாக சாத்தியமாகக்கூடியது அல்ல என்றுதான் அவர்கள் கூறினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை வாழ் உறுப்பினர் என்கிற காரணத்தால் மறுபடியும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொலை பேசி மூலமாக அழைத்துப் பேசியாவது அதைப் பரிசீலனை செய்ய முடியுமா என்று முயற்சித்துப் பார்க்கிறேன்.

## மேல் பவானி அணைத் திட்டம்

*வினா எண். 338—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகள் பயன்பெறுகிற வகையில் பவானி ஆற்றில் மேல் பவானி அணைத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; இல்லை.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பல ஆண்டுகளாக வறட்சிப் பகுதிகளாக இருக்கிற கோவை, மேட்டுப் பாளையம், அவினாசி ஆகிய பகுதிகள் மிகவும் வறண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்குப் பயன் தருகிற அளவுக்கு ஒரு திட்டம் சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஆய்வு செய்யப்பட்டது. அதற்கென நிலங்கள் எல்லாம் அளிக்கப்பட்டது. ஆகவே அதுபோல மேல் பவானித் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முந்தைய காலத்தில் நடைபெற்றது உண்டா. அப்படி இருந்தால் அந்த திட்டத்தின் தற்போதைய நிலை என்ன? அது ஒருசமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அவினாசி, கோபிசெட்டிப்பாளையம், தாலுக்காக்களில் ஏறத்தாழ 22 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கக் கூடிய ஒரு திட்டம் முதலிலே ரூ. 560 லட்சத்தில் தோராயமாக மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கு பவானி நீர்ப்படுகையில் சுமார் 3 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் தேவைப்படுகிறது என்று கணக்கிடப்பட்டது.

குந்தா மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் நீரை உபயோகப் படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாமா என்று முதலிலே ஒரு யோசனை இருந்தது. அதற்குப் பிறகு மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு, புன்னம்புழாவிலிருந்து நீர் கிடைக்கும் வரை பவானி பள்ளத்தாக்கிலே மேலும் புதிய நிலங்களுக்குப் பாசனம் அளிக்கும் திட்டம் எதுவும் தற்போது பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு புன்னம்புழாவிலிருந்து நீர் பெறுவதற்காக தமிழக அரசு முயற்சி செய்து வருகின்றது. அந்த முயற்சியிலே வெற்றி கிடைக்கின்ற வரை மற்ற திட்டங் களைப் பற்றி அரசு பரிசீலனை செய்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு :** தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தில் ஒப்பந்தம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றதா? அப்படி இருந்தால் அதில் காலதாமத மாகும் என்று கருதினால் மாற்று திட்டங்களை எதையாவது ஏற்படுத்தி கோவை, பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப் பாளையம், அன்னூர், அவினாசி போன்ற வறண்ட பகுதிகளுக்கு உதவுகின்ற வகையில் நீர் நிலைகளில் நீர் நிரப்புகின்ற வகையில் குறைந்த பட்ச நீரையாவது கொடுக்கின்ற வகையில் மாற்று திட்டத்தைச்செயல் படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் பாண்டியாறு—புன்னம்புழாத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்தத் திட்டம் எந்த அளவுக்கு இந்தப் பகுதிகளுக்குப் பயன்படும் என்பதை மாண்புமிகுஅமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே தமிழ்நாடு ஏற்கனவே நீர்ப்பற்றாக்குறை உள்ள மாநிலம். அதே போன்று மின்சாரமும் பற்றாக்குறைதான். இருப்பினும் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதைவிட மிக முக்கியமாக கோவை மாவட்டத்தில் அவிநாசி, கோபிச் செட்டிபாளையம் போன்ற வறண்ட தாலூக்காக்களில் குடி நீர் பிரச்னை மற்றும் பல்வேறு பிரச்னைகளை தீர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தினை மறு பரீசீலனை செய்யவேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டது. எனவே, இதிலே குடி நீர் பிரச்னை மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் வரு கின்ற காரணத்தால் கேரள அரசும் அதை மறுபரிசீலனை செய்ய ஒப்புக்கொண்டு தற்போது பல கட்டங்களில் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. எனவே நல்லெண்ணத்தோடு இப்போது பேச்சுவார்த்தை நடந்து வருகின்ற காரணத்தால் இந்தத் திட்ட த்தைப்பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று



டிவு செய்திருக்கிறோம். எனவே முதலிலே பாண்டியாறு ன்னம்புழா திட்டத்தின் மூலம் நீர் பெறுவதற்காக முயற்சி ;ய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, கோவை மாவட்டத்தில் வறட்சிப் பகுதியாக இருக்கக் டிய அவினாசி, அன்னூர் மற்றும் கோவைத் தாலூக்காக்களில் ந்தவிதமான பாசன வசதியும் இல்லை என்பது மாண்புமிகு மைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட ழ்நிலையில் பவானி ஆற்றின் மேல் பவானித் திட்டம் என்பது ரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். தற்கு முன்னாலே பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் என்பதில் கரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதாக லமுறை இதே அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அமல் நடத்தினால் காவை, சேலம், பெரியார் போன்ற மாவட்டங்கள் பயன்படத்தக் க்கூடியதாக அமையுமே, எனவே இதனை மேலும் விரிவுபடுத்த கரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி தீவிரப்படுத்தப்படுமா ன்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** மாண்புமிகு பரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடந்து காண்டிருக்கின்றது என்று தான் நான் சொன்னேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பாண்டியாறு ன்னம்புழா திட்டம் சம்மந்தப்பட்ட வரையிலும் ப்ளானிங் மிஷனில் அது மின்சாரத்தை உற்பத்தி பண்ணுவதற்கான திட்ட ாக ஏற்றுக் கொண்டதிலிருந்து மாற்றுவதற்கான பேச்சு ார்த்தை கேரள அரசோடு நடத்தி இருப்பதாக வந்துள்ளது. துிலே காலதாமதம் ஏற்படலாம். ஆகவே வறண்டு கிடக்கின்ற வினாசி, பல்லடம் போன்ற பகுதிகளின் பாசன வசதிக்காக ந்தா கழிவு நீர்த்திட்டம் என்ற ஒரு திட்டத்தை காங்கிரஸ் ல்லாத ஆட்சி இருந்தபோது அதாவது திராவிட முன்னேற்றக் ழகம் ஒன்றாக இருந்த போது திரு, அண்ணாதுரை அவர்கள் தலமைச்சராக இருந்தபோது அவர்கள் ஒரு ஸ்கீம் தயார் ண்ணி வேலை செய்ய ஆரம்பித்தது நின்றுவிட்டதே அதற்கு ன்ன காரணம்? அதைத் திரும்பவும் எடுத்து நடத்தி அங்கே ண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய பிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா ஒப்பந்தம் ஏற்பட்டபோது தமிழகத்திற்கு மின்சாரம் கிடைக்கக்கூடிய முறையில் வழிவகை செய்யப்பட்டது. ஆனாலும் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அதே நேரத்தில் இங்கே வறண்ட பகுதிகள் அதிகமாக இருப்பதால்

விவசாயத்திற்கும், குடி நீருக்கும் அந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படவேண்டும் என்ற அடிப்படை அம்சத்தின்படி அது மறு பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டோம். அது இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. அதற்குமேல் நான் விளக்கமாக பேசாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன். தண்ணீர் பிரச்னை முக்கியமானது என்ற அடிப்படையில் மின்சாரத்தில் ஒருபகுதியைக் கூட கேரள அரசுக்குக் கொடுத்துவிட்டு நமக்கு இருக்கின்ற தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வகையில் அதிகமாக நீர் வேண்டும் என்பதற்காக அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் குந்தா மின் திட்டத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நீரிலிருந்து கிடைக்கக் கூடிய கழிவு நீரிலிருந்து இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிவிட முடியாது. காரணம் 22 ஆயிரம் ஏக்கருக்கு நாம் பாசன வசதி அளிக்கும் ஒரு திட்டத்தை தீட்டினோம். இந்த திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்றால் 3 ஆயிரம் மெட்ரிக் கன அடி தண்ணீர் நமக்குத் தேவைப்படுகிறது. அதுவும் குந்தாவிலிருந்து அந்த அளவுக்குக் கழிவு நீர் வரவில்லை. எனவே பாண்டியாறு—புன்னம்புழாவிலிருந்து நாம் அதிகமாக விவ்சாயத்திற்கும், குடி நீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் தண்ணீர் பெறுவோமானால் ஒட்டுமொத்தமாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்றபோது இன்னும் கூடுதலான பகுதிகளுக்கும் பயன்படுத்த முடியும். எனவே கொஞ்சம் பொறுத்து இருந்தாலும், காலதாமதம் ஆனாலும், ஒரு நல்ல திட்டமாக இதை எடுத்து செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதன் காரணமாக ஆக்கபூர்வமான பல்வேறு பேச்சு வார்த்தைகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

(முற்பகல் 10.10.)

## பாண்டலம் ஏரிக்கு சாத்தனூர் அணையிலிருந்து நீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 339—திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம் பாண்டலம் ஏரிக்கு சாத்தனூர் வலதுபுற வாய்க்காலிலிருந்து நீர் விடுவதற்கு ஆய்வு செய்யப்பட்டது உண்மையா ?

(ஆ) தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது உண்மையா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (அ) மற்றும் (ஆ) ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.



திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணி எப்போது முடியும். அதனால் எவ்வளவு நிலங்கள் பாசனம் பெறும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணி விரைவில் முடிந்துவிடும். அந்த ஏரியின் மூலம் கிட்டத்தட்ட 462 ஏக்கர் நிலங்களுக்கு பயன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலை தலைவர் அவர்களே, அந்த பணியினை விரைவில் முடித்து திட்டத்தினை இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ள அரசு முன் வருமா ? அந்த திட்டத்தை உடனே தீவிரப்படுத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை விரைவில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அங்குள்ள பொறியாளர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டுள்ளது.

## கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

*வினா எண். 340—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பின் எடையை கூடுதலாக குறித்து கூடுதல் கிரயத்தை .பெற்றுக் கொள்வதாக உள்ள புகார் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : உரிய விசாரணைக் குப்பின் கரும்பு அலுவலகத்தில் பணியாற்றிய இரு இளநிலை எழுத்தர்கள் திருவாளர்கள் எம். வேலு மற்றும் ஏ. அவுணியா, எடை போடுவதில் முறைகேடாக நடந்திருப்பதை ஊர்ஜிதம் செய்யப்பட்டது. மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு திரு. ஏ. அவுணியா எதிர்பாராமல் மாரடைப்பால்இறந்துவிட்டார்.மற்ற இளநிலை எழுத்தாளர் திரு. எம். வேலு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, எடை போடுவதில் தவறுகள் நடந்ததால் இரு இளநிலை எழுத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது ஒருவர் இறந்துவிட்டார் என்றும் ஒருவரை பதவி நீக்கம் செய்யப்பட்டது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி தவறாக எடைப்போட்டதில் அளவு எவ்வளவு ? அதனுடைய பணத்தின் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு டிராக்டர் இரண்டு முறை எடைபோடப்பட்டு கூடுதலான ஒரு டிராக்டர் அளவுக்கான பணத்தை இரண்டு பேரும் பங்குபோட்டு எடுத்து இருக்கிறார்கள்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு டிராக்டரை பற்றி மட்டும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஆண்டு காலமாக தொடர்ச்சியாக அந்த ஆலையில் இந்தமாதிரியான பணிகள் நடைபெற்று இருக்கின்றன. ஆகவே பல லட்சக்கணக்கான ரூபாய்களை அங்கேயுள்ள இளநிலை எழுத்தர்கள் எடை போடுவதில் தவறு செய்து கொள்ளை அடித்து இருக்கிறார்கள். இதனுடைய புள்ளிவிவரங்களை அரசு அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ! மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு விசாரித்ததன் அடிப்படையில் இந்த விவரத்தைத் தந்து இருக்கிறார்கள். விசாரணையில் கண்டு பிடிக்கப்பட்டிருப்பது ஒரு டிராக்டர் இரண்டு முறை எடை போடப்பட்டு அதற்குண்டான கூடுதல் பணத்தை இரண்டு இளநிலை உதவியாளர்களும் பங்கிட்டு கொண்டார்கள். எனவே அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு ஒருவர் மாரடைப்பால் இறந்துவிட்டார். இன்னொருவர் மேல் விசாரணை மேற்கோண்டு அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுதான் விசாரணையில் இருக்கிற முடிவு ஆகும்.

### கூடலூர் தொகுதியிலுள்ள தங்கச் சுரங்கம்

*வினா எண். 341—திரு. கே. உச்சி ; மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் தங்கச் சுரங்கம் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் கனிப்பொருள் ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு அந்தத் தங்கத்தை எடுக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படுமா ?



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) கைவிடப்பட்ட தங்கச்சுரங்கங்கள் இருப்பது தெரியும்

(ஆ) அங்குள்ள தங்கத்தின் அளவு பொருளாதார முக்கி துவம் வாய்ந்தது அல்ல எனவும், வியாபார ரீதியில் லாபகர மானது அல்ல எனவும் ஆய்வுகளின் மூலம் முன்னே கண்டு பிடிக்கப்பட்டுள்ளதால் மேற்கொண்டு ஆய்வுகள் தேவையில்லை என்று கருதப்படுகின்றது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, தமிழக திலே தங்கம் எந்த எந்த இடங்களிலே கிடைக்கிறது ? தர்மபுரி மாவட்டத்திலே கிருஷ்ணகிரி தொகுதியிலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நீலகிரியைப் பற்றியது.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, தங்கத்தைத் தவிர கூடலூர் பகுதியிலேயும் அதையொட்டிய பகுதிகளிலேயும் செம்பு, ஈயம், மைகா போன்ற பொருட்கள் அதிகமாக இருப்தாக ஜியலாஜிக்கல் சர்வேயில் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளைக் கண்டுபிடித்து வெளியே கொண்டுவர அரசு தீவிர கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : கேள்வி நீலகிரி மாவட்டத்திலே தங்கம் கிடைப்பது பற்றியது. வயநாடு பகுதியிலே சில இடங்களிலே தங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டு ஒரு டன்னுக்கு 3 கிராம் தான் கிடைக்கிறது என்ற காரணத்தினால் வியாபார ரீதியாகவெட்டியெடுக்கப்படுகிறபோது அது இலாபகரமாக இருக்காது என்றகாரணத்தினால் வெட்டி எடுக்கின்ற நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருக்கின்றன. மற்ற எந்த எந்தப் பகுதிகளில் என்ன என்ன கனிமப் பொருட்கள் இருக்கின்றன என்பதைப்பற்றிய தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தருகிறேன்.

### தமிழ்நாட்டில் கருப்புக்கல் வெட்டியெடுப்பதற்கான உரிமம்

வினா எண். 342—திரு. பாபு ஜனார்த்தனன். திரு. எஸ். இராசரராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் கருப்புக்கல் (Granite Stone) வெட்டியெடுக்க எவருக்கேனும் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) கருப்புக்கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும்உரிமம் எத்தனை நபர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது ?

[1983 மார்ச் 9

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ கனே, இந்த கருப்புக்கற்களை வெட்டியெடுக்கும் வேலையில் என்னுடைய தொகுதியில் நிறைய பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் இதில் வேலை பெறுகிறார்கள். ஆகவே அதை அரசாங்கமே கூட்டுறவு முறையிலோ அல்லது டான்சி மூலமாகவோ வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். டாமின் நிறுவனம் கருப்புக் கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா நிலங்களில் இருக்கிற கறுப்புக் கற்களை தனியார்களுக்கு கொடுப்பதற்கு யோசித்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போல அரசிற்கு தேவைப்படாத பல நூற்றுக்கணக்கான இடங்களில் கருப்புக் கற்கள் உள்ளன. அதை தனியார்களுக்குக் கொடுத்து அரசிற்கு வருமானம் வருகிறவகையிலே நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் பட்டா நிலங்களில் கூட நாம் உரிமம் கொடுக்காமல் இருந்தோம். ஆனால் பல பேர்கள் அந்த இடத்திற்குச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். உயர்நீதிமன்றம் பட்டா நிலங்களில் அந்த சொந்தக்காரர்களுக்கு உரிமம் கொடுக்க வேண்டுமென்று அரசிற்கு அறிவுரை வழங்கி, அப்படியொரு உத்தரவு இருக்கிற காரணத்தால், கொடுக்கலாமா என்று அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. கோர்ட் டிற்குச் சென்று யார், யார் கோர்ட் டைரக்ஷன் வாங்கினார் களோ, அவர்கள் அனுமதிக்கப்பெற்று, வெட்டியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பட்டா நிலத்தைப் பற்றி முடிவு செய்ததற்கு பின்னால், டாமினுக்கு தேவைப்படாத, புறம் போக்கு நிலம் பற்றி யோசிக்கலாம்.



1983 மார்ச் 9]

புதுக்கோட்டையில் மின்னணுத் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

*வினா எண் 343—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் (எலக்ட்ரானிக்) மின்னணு தொழிற்பேட்டை ஒன்று ஆரம்பிக்க தமிழக அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) பின் தங்கிய பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களில் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாநிலத்திலும் ஓரிரு பின்தங்கிய பகுதிகளைச் தேர்ந்தெடுத்து, அங்கே பெருரகத் தொழில்களும் சிறுதொழில்களும் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியடையக் கூடிய வகையில் தொழில் கேந்திரம் (நியூக்கிளியர் காம்ப்ளெக்ஸ்) அமைத்தல் பற்றி கொள்கை அளவில் மைய அரசு அறிவித்துள்ளது இதனடிப்படையில் புதுக்கோட்டையில் மின்னணுத் தொழில் மற்றும் அது சார்புடைய தொழில் கேந்திரம் ஒன்றினையும் திண்டுக்கல் பகுதியில் தோல் தொழிலுக்குரிய அபிவிருத்தி கேந்திரம் ஒன்றினையும் அமைக்கலாம் என மாநில அரசு மைய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது. இவற்றினை அமைப்பதற்குரிய திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கென மைய அரசு, மைய அரசைச்சார்ந்த தொழில் துறை இணைச் செயலர் தலைமையில் பணிக்குழு ஒன்றினை அமைத்தது. இக்குழுவின் அறிக்கை இறுதி வடிவில் மைய அரசிற்கு சமர்ப்பிக்கப் பட்டுவிட்டது. மத்திய அரசினுடைய முடிவு எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறிக்கை எப்போது சமர்ப்பிக்கப் பட்டது ? அதற்கு பிறகு மத்திய அரசிற்கு நினைவூட்டி தமிழக அரசு இதுகுறித்து வற்புறுத்தி இருக்கிறதா? அதன் அடிப்படையில் ஏதாவது தமிழக அரசிற்கு பதில் வந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப் போல இணைச்செயலர் தலைமையிலான மத்திய அரசின் குழு இரண்டு மாதங்களுக்கு முன்னால் இங்கே வந்து, இடங்களைச் சுற்றிப் பார்த்து, புதுக்கோட்டைப் பகுதியில் சுமார் 80 கோடி

[1983 மார்ச் 9

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) 7—12—1977க்கு பின் தனிநபர் எவருக்கும் அரசு நிலங்களில் கரும்பாறை வெட்டி யெடுக்க உரிமம்,வழங்கப்படவில்லை.

(ஆ) வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு மாநில அரசின் உரிமம் தேவையில்லை.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஆண்டுக்கு முன்பு கருப்புக் கல் வெட்ட உரிமம் பெற்றவர்களுக்கு அவை முடிவடைந்த வுடன்—அவர்களுக்கு புதுப்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே,
தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சார்பில் அரசுக்குச் சொந்த
மான நிலங்களில் உள்ள பகுதிகளிலே கருப்புக்கல் வெட்டி
யெடுக்கப்படுகின்றன. ஆனால் ஏற்கெனவே சுமார் 29 பேர்
களுக்கு 554 ஏக்கர் அளவில் உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்
கின்றன. அவைகள் எல்லாம் பல்வேறு காலங்களிலே 1983 ஆம்
ஆண்டிலே 17 பேர்கள், 1984 ஆம் ஆண்டிலே 3 பேர்கள்,
1986 ஆம் ஆண்டிலே ஒருவர், 1987 ஆம் ஆண்டிலே 6 பேர்கள்
1996 இல் 2 பேர்கள் என்ற முறையிலே பல்வேறு நிலைகளிலே
அந்த லீஸ் பீரியட் முடிகிறது. 8-ஆவது விதியைத் திருத்தியதற்குப்
பிறகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பட்டா நிலமாக இருந்தால்
அவர்களுக்கு அந்த உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று
இருக்கிறது. அதன் அடிப்படையில் பல பேர்கள் உயர்நீதி
மன்றத்திற்குச் சென்று அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில்,
பட்டா நிலங்களில் வெட்டியெடுக்க வேண்டுமென்று கேட்டு
அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று ஹைகோர்ட் உத்தர
விட்டிருக்கிறது. சுமார் 33 பேர்களுக்கு கொடுக்க வேண்டிய
சூழ்நிலை பட்டா நிலங்களில் கொடுக்க வேண்டிய சூழ்நிலை
ஏற்பட்டிருக்கிறது. எனவே இனிமேல் லீஸ் விடப்பட்டிருக்கிற
பகுதிகளைப் பொறுத்தவரையில் புறம்போக்கு மற்றும்
அரசுக்குச் சொந்தமான நிலங்களிலே அரசின் 'டாமின்' நிறுவனமே
அதை வெட்டியெடுக்கின்ற பணியை மேற்கொள்ளும். பட்டா
நிலங்களாக இருப்பின் மனுச் செய்கிறவர்களுக்கு லீஸ் பீரியட்
முடிகிற அந்த நிலங்களில் மட்டுமல்ல, டாமின் நிறுவனத்திற்குத்
தேவைப்படாத சிறு சிறு பகுதிகளாக கருப்புக் கற்கள்
இருக்கிற இடங்களில் பட்டா நிலங்களாக இருக்குமானால்
— தனியார்களுக்கு உரிமம் வழங்குவதற்காக ஒரு கொள்கை
முடிவு எடுக்கலாமா என்று அரசு ஆலோசித்துக் கொண்டிருக்
கிறது. உயர்நீதிமன்றத்திலே ஒரு டைரக்ஷன் கொடுத்
திருக்கிற காரணத்தினாலே அரசே அந்தப் பட்டா நிலங்
களில் அனுமதி வழங்கலாமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்
கிறது.



1983 மார்ச் 9]

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த கருப்புக் கற்களை பெயர்ப்பு செய்கின்ற அந்தத் தொழிலாளர் கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள், அந்த உரிமங்களுக்கு தமிழக அரசே முன்வந்து ரினியூவல் செய்கின்ற முறையிலே—அவ்வாறு செய்தால் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கும்—அரசே அக்கறை எடுத்து எக்ஸ்பையர் ஆகிறவர்களுக்கு உரிமம் பெற்றுத் தர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, கருப்புக்கல்லைப் பொறுத்தவரைக்கும் வெளிநாடுகளிலே அதிக கிராக்கி உள்ள ஒன்றாக இருக்கிறது. ஏற்கெனவே தனியார்கள் முறையாக பயன்படுத்தியிருந்தால் மீண்டும் அந்தப் பகுதியிலே பட்டா நிலமாக இருந்து மனுச் செய்கிறபோது அரசு அதைப் பற்றிப் பரிசீலிக்கும். அங்கே வேலை பார்க்கிற ஆட்கள், பணியாளர்கள், வேலை இழப்பு இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு தான் அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது. இது குறித்து தீவிரமாக அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 10-20]

திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருப்புக்கல் வெட்டியெடுக்கும் உரிமம் முடிந்ததற்கு பிறகு அதை தனியாருக்கு அளிக்காமல், இத்துறையில் அனுபவம் பெற்ற ஸ்பெஷலிஸ்ட்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களுடைய சிபாரிசுகளை பெற்று, அரசே அவற்றை ஏற்று நடத்துவதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழு அல்ல. தமிழ்நாடு அரசின் டாமின் நிறுவனமே புதியதாக புரட்சித்தலைவர் அவர்கள் அரசு ஏற்பட்டதற்குப் பிறகு தான் உருவாக்கப்பட்டது. அதில் பல்வேறு எக்ஸ்பர்ட் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஆய்வு செய்து வெட்டியெடுத்து, கருப்புக்கற்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அப்படியே அனுப்பாமல் கட்டிங் அண்ட் பாலிஷிங் செய்து அனுப்பினால் மூன்று மடங்கு விலை அதிகமாக கிடைக்கும். இந்த ஆளுநர் உரையில் கூட ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. பாலிஷிங் அண்ட் கட்டிங் யூனிட் ஒன்று $3\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ரூபாய் அளவிற்கான பல்வேறு எலெக்ட்ரானிக் தொழில்களை துவங்குவதற்கான ஒரு அமைப்பினையும், அதேபோல் திண்டுக் கல்லில் தோல் சம்பந்தப்பட்ட பெரிய தொழில்கள், சிறிய தொழில்களுக்கான கேந்திரத்தையும் அமைப்பதற்கான அறிக்கையை மத்திய அரசிற்கு கொடுத்திருக்கிறது. அறிக்கை கொடுத்து சுமார் இரண்டு மாத காலம் ஆகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே இருக்கக்கூடிய, அதாவது புதுக்கோட்டையிலே மின்னணு தொழிற்பேட்டை உருவாக்குவது சம்பந்தப்பட்ட அறிக்கையைப் பற்றியும், திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழிற்சாலைக்களுக்காக ஒரு தொழிற்பேட்டை அமைப்பதுபற்றியும் அளிக்கப்பட்ட அறிக்கையின் விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மைய அரசின் தொழில் துறை இணைச் செயலாளர் தயாரித்த அந்த அறிக்கை, மைய அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் விவரம் நம்மிடத்திலே இல்லை. அந்தக் குழு இங்கே சுற்றிப் பார்த்து, பிறகு குழுவினுடைய பரிந்துரையை மைய அரசுக்குக் கொடுத்திருக்கிறது என்ற அந்தத் தகவல் நமக்கும் வந்திருக்கிறது. பல்வேறு பிராஜக்ட்ஸ் காஸ்ட், அதற்கு ரூ. 80 கோடி, இதற்கு ரூ. 80 கோடி என்பது கணக்கு. என்ன, என்ன என்பதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. பின்னால் முடிந்தால் பெற்றுத் தருகிறேன்.

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் எலக்ட்ரானிக்—மின்னணு தொழிற்பேட்டை அமைக்க—அங்கே எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டது ? அது அரசுக்குச் சொந்தமாக்கப் பட்டதா ? இந்தத் தொழிற்பேட்டையில் எவ்வளவு காலத்தில் தொழில் துவங்க அரசு முன் வரும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுதுதான் டெல்லிக்கே போயிருக்கிறது பேப்பர். வந்த பிறகு கையகப்படுத்துகின்ற வேலையை எல்லாம் ஆரம்பிக்கலாம்.

வினா எண் 344—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

உறுப்பினர் திரு. பாபு கோவிந்தராஜன் தண்டிக்கப் பெற்றுள்ளது குறித்து

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நான் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். இந்த மாமன்றத்தைச் சேர்ந்த திரு. பாபு கோவிந்தராஜன் அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்று .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு உறுப்பினரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது பேச வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்லலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : சபை விதிப்பிரகாரம் நாம் நடக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதியிலே ஒன்றுமே இல்லை. அரெஸ்ட் ஆனால் சொல்ல வேண்டுமென்று இருக்கிறது. விடுதலை ஆகிவிட்டால் முடிந்து போயிற்று என்று இருக்கிறது. அவர் அரெஸ்ட் ஆகி விடுதலை ஆகி விட்டார். ஆகவே, சபையிலே எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

திரு. ப. பொன்னுரங்கம் : பத்திரிக்கையிலே வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிக்கையிலே வருவது நமக்கு வராது. விவரத்தைப் பத்திரிக்கையிலேயே பார்த்துக் கொள்ளலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

காலராவினால் மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, எம். செல்லமுத்து, என். வரதராஜன், ப. பொன்னுரங்கம், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, செ. சிவசாமி, தி. கா. நல்லப்பன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் " சென்னையிலும் தென்னாற்காடு மாவட்டம் பண்ருட்டி வட்டத்திலுள்ள காமாட்சிபேட்டைக் கிராமத்திலும் மற்றும் முதுகளத்தூர் வட்டத்தின் சுற்றுப்புற கிராமங்களிலும் காலரா நோய் பரவுவதன் காரணமாக மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி

வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், சென்னையிலும் தமிழகத்திலுடைய பல பகுதிகளிலும் காலரா நோய் கண்டு பல பேர்கள் இறந்திருப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலே மட்டும் காலரா நோயாலும் காமாலை, குடல் அழற்சி நோய் போன்ற பல்வேறு நோய்களாலும் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இறந்து கொண்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சில தினங்களுக்கு முன்பு பண்ருட்டி பகுதியிலே காலரா நோய் கண்டு, அதிலே பாதிக்கப்பட்டவர்கள் கடலூர் மருத்துவமனையிலே இறந்திருக்கிறார்கள் என்ற செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. இப்படி, சென்னையில் பல்வேறு மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவமனைகளிலும் ஏராளமானவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் நமக்கு வந்து கொண்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம் என்று நாம் ஆய்வு செய்து பார்க்கின்றபொழுது நிலத்தடி நீரைக் குடிக்கப் பயன்படுத்துவதாலும், கை பம்புகள் மூலம் பெறுகிற நீரை அருந்துவதாலும் அப்படிப்பட்ட தொத்து நோய்கள் வருகின்றன என்று டாக்டர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து இப்படிப்பட்ட நோய்கள் அதிகமாகப் பரவலாக வந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பத்திரிகைச் செய்திகள், நிபுணர் குழுக்களுடைய அறிக்கைகள் நமக்குத் தந்துகொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-30)

சென்னையிலே குடிப்பதற்கே தண்ணீர் இல்லை. சுகாதாரக் கேடுகள் அதிகமாக இருக்கின்றன. சுற்றுப்புறச் சூழல் சரியாகக் கவனிக்கப்பெறவில்லை என்பதைப்பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல நேரங்களில் சொல்லியதைப் போல அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்றைக்கு சென்னையிலே மட்டும் ஐந்நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் வந்திருக்கின்றன. இதற்குக் காரணமாக இருக்கின்ற சுகாதாரக் கேடுகளை நாம் உடனடியாகப் போக்கியாக வேண்டும். கிராமப் பகுதிகளில் கொசுத் தொல்லை தாங்க முடியவில்லை. இரவு நேரங்களில் தாங்க முடியாத அளவில் கொசுத் தொல்லைகள் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் கொசுவை ஒழிப்பதற்காக





ஆண்டுதோறும் கொசு ஒழிப்பு மருந்துகளை அடிப்பது வழக்கம். ஆனால் சில ஆண்டுகளாக இந்தத் திட்டம் கைவிடப்பட்ட காரணத்தினால் கிராமப் பகுதிகளில் கொசுக்கள் அதிகமாக, வேகமாகப் பரவி இன்றைக்கு மக்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கொசுக்களை ஒழிக்கும் திட்டங்களை உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் சுகாதாரச் சீர்கேடுகள் மலிந்து கிடக்கின்றன. சென்னை பொது மருத்துவமனையில் பல பகுதிகள் ஆபாசமாகவும், சுகாதாரக் கேடுகள் நிறைந்தனவாகவும் இருக்கின்றன. பலயிடங்களில் மலஜலம் கழிக்கப்பட்டு மக்கள் அந்தப் பகுதிகளுக்கே செல்ல முடியாத அளவில் சென்னையிலுள்ள பொது மருத்துவமனையே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

சென்னையிலே உள்ளவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படும்பொழுது அவர்கள் சென்னை பொது மருத்துவ மனைக்குச் சென்றால், அங்கு சென்றவுடன் சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், அந்தச் சிறுநீரைப் பிடித்துக் கொடுப்பதற்குக் கூட ஒரு கழிவறை இல்லாமல் இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். அந்தப் பகுதிக்குச் செல்லும் தாய்மார்கள் சிறுநீரைப் பிடித்துக் கொடுப்பதற்காக வெளியிலே சென்று சாலைப் பகுதிகளிலே சிறுநீரைக் கழிக்க வேண்டிய அவல நிலைமை இருக்கிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அதோடு, மட்டுமல்லாமல், சென்னையில் பல பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் இருப்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், சென்னை அண்ணா சாலையில் அண்ணா சிலைக்கு அருகாமையில் கவர்ன்மென்ட் எஸ்டேட் இருக்கிறது. அந்த காம்பவுண்டுக்கு அருகில் இருக்கின்ற சாலையில் பொது மக்கள் நடந்துகூடச் செல்ல முடியாது. அந்த அளவிற்கு மலஜலமும், நீரும் கழித்திருக்கும் நிலையை நம்மால் காண முடிகிறது. இதனால் பல தொத்து வியாதிகள் வருவதற்கு ஏதுவாக இருக்கிறது. அதையும் உடனடியாகக் கவனித்து சீர் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலை ஏற்படும் நேரத்தில், காலரா நோயும், காமாலை நோயும் அதிகமாகப் பரவுகின்ற நேரத்தில், எல்லா மருத்துவமனைகளிலேயும் தேவையான மருந்துகள் கையிருப்பில் இருத்தல் வேண்டும். உயிர் காக்கும் மருந்துகள்கூட சில மருத்துவமனைகளிலே இல்லை என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் எல்லா மருத்துவமனைகளிலே

நான் சுட்டிக்காட்ட விரும்புக்கிறேன். இன்றைக்கு நல்ல தண்ணீர் வழங்காத காரணத்தால்தான் சென்னையிலே கூட கடற்கரைச் சாலைகளிலே நாம் போகும்போது பார்க்கலாம் — கடற்கரையிலே மணலைத் தோண்டி அங்கே தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரை போன்ற நகரங்களிலே ஆற்றுப்படுகைகளிலே, ஆற்றிலே குழி தோண்டி, தண்ணீர் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்று பல இடங்களில் இந்த நிலை இன்றைக்குப் பரவலாக வளர்ந்துக்கொண்டிக்கிறது. சென்னையைப் போன்று பொது நகரங்களிலே இன்று தண்ணீர் கிடைக்காத காரணத்தாலே, மக்கள் பகலெல்லாம் உணவுப்பொருள்களுக்கு ரேஷன் கடைமுன்பு க்யூ ஆகவும், இரவிலே குழாயடியிலே க்யூ ஆவும் இருக்கின்ற ஒரு அவல நிலை இருக்கிறது. குடிதண்ணீர்க் குழாயை துவாரம் செய்தால் கடும் தண்டனை எடுக்கப்படும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பைப் பார்த்தோம். குழாயிலே குடிதண்ணீரே போதுமான அளவுக்கு வராத நிலையிலே, எங்கே தண்ணீர் வரப்போகிறது? காற்று தான் வரும் குழாயில் துவாரம் போட்டால். ஆகவே அரசாங்கம் கடுமையான குடிதண்ணீர் பஞ்சம் இருந்தாலும் கூட, போதுமான நடவடிக்கை எடுக்கக் தவறிவிட்டது. குடிதண்ணீர்ப் பஞ்சம் இருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழகத்திலே போதுமான உணவுப் பண்டம் இல்லை, தண்ணீர் இல்லை. வறட்சி அதிகமாக இருக்கின்ற இந்த வேளையில்லே, மக்கள் எரிமலையாகக் குமுறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே அரசாங்கம் புல்லாங்குழல் வாசிக்கக்கூடாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே போர்க்கால நடவடிக்கை போல் மக்கள் மத்தியிலே அரசாங்கம் முனைந்து நடவடிக்கை எடுத்து வருகின்ற காலங்களிலே, இன்னும் எச்சரிக்கையாக இருந்து இதுமாதிரி நோய்களுக்கு மக்கள் ஆளாகாமல் இருப்பதற்காகவும், அப்படி ஆளாகினாலும்கூட, பாதிக்கப்படாமல் இருக்கவும், அரசினுடைய கவனத்தைத் திருப்புவதற்காகவும், 'அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக தமிழக மக்கள் அறிந்துக்கொள்வதற்காகவும், இது மிக முக்கியமான — அவசியமான — அவசரமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே, பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது சில கருத்துக்களை அரசாங்கத்தின் சார்பாக சொல்லலாம் என்று கருதுகிறேன். முதலில் இந்த டிரிங்கிங் வாட்டர், பாட்டபிள் வாட்டர் என்று சொல்வார்கள். அந்தத் தண்ணீரைப் பொறுத்த வரையில் நாம் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.





உடனடியாக அந்தத் தண்ணீரைச் சுத்திகரிப்பதற்காக The drinking water supplied by water supply systems of municipalities and panchayats have been tested often and action taken to chlorinate and rectify the defects.' அந்தத் தண்ணீரை உடனடியாக சுத்திகரிப்பதற்காக, அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அதை டெஸ்ட் செய்வதற்கு குளோரினைட் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டாவதாக 'The risk of infection by water is prevented by chlorinating the water sources like wells. அந்தத் தண்ணீர் எந்த இடத்திலேயிருந்து நாம் எடுக்கிறோமோ அந்த சோர்சை நாம் கண்டுபிடித்து, அந்த இடத்தையும் நாம் குளோரிடைன் செய்துகொண்டு வருகிறோம். அது மட்டுமல்லாமல் சென்னை நகரைப் பொறுத்தவரைக்கும் பல வீடுகளில் ஓவர்—ஹெட் டாங்க் வைத்திருக்கிறார்கள். சம்ப் என்று வைத்துக்கொண்டு அந்த சம்புக்குள்ளே தண்ணீர் போட்டு தண்ணீர் டாங்க் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த ஓவர்-ஹெட் டாங்கை நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி அதிலே ஒரு மான்-டேட்டரியாக சட்டபூர்வமாக தனியார் வீட்டில் இருந்தால்கூட அதை பரிசோதனை செய்வதற்கு அரசாங்கத்திற்கு அந்த உரிமை உண்டு, சட்ட ரீதியாக உண்டு என்ற வகையிலே செய்து இருக்கிறோம். ஏன் என்றால், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதால் வேறு யாருக்காவது வீட்டிலே வியாதி வந்தால் பிறருக்கும் அது பரவக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக, அதற்கு ஆதாரபூர்வமாக நமக்கு பவர்ஸ் இருக்கிறது என்று, நாம் அதைச் சுட்டிக்காட்டி, ஓவர்-ஹெட் டாங்கை பரிசோதனை செய்துகொண்டு இருக்கிறோம். அதிலே கொசு உற்பத்தியாவதும் தடுக்கப்பட, அதை நிவர்த்தி செய்வதற்காக இப்படி ஒரு சட்டம் பயன்படுகிறது. ஆகவே இருக்கக்கூடிய சட்டத்தின் எல்லைக்குள்ளே நாம் அதைச் செய்து கொண்டு வருகிறோம்.

மூன்றாவதாக, The water samples have been taken from the water supplied through bore wells and tested in the water Analys's Laboratory at Madras to know whether the water is suitable for consumption.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1983 மார்ச் 9

யும் உயிர் காக்கும் மருந்துகள், மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் மருந்துகள் ஆகியவற்றை உடனடியாக வாங்கி வைக்க வேண்டுமென்று அரசு ஆணையிட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி இந்த அவையிலே விவாதிக்க வேண்டும் ; அதில் எல்லா உறுப்பினர்களும் பங்கு கொண்டு விவாதிக்க வேண்டும். ஆகவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து எல்லோரும் விவாதிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பு. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த மார்ச் 5, 6 தேதிகளில் சென்னை நகரத்தில் பல பகுதிகளிலேயும், தென்னாற்காடு மாவட்டத்தில் பன்ருட்டி தாலுக்காவில் காமாட்சிப்பேட்டை என்ற கிராமத்திலேயும், இப்படி பல பிரதேசங்களிலேயும் காலரா நோய் பரவியிருக்கிறது. காமாட்சிப்பேட்டை கிராமத்தில் காலரா நோயினால் பீடிக்கப்பட்ட நான்கு பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கே இறந்து விட்டார்கள். இன்னும் பல நூறு பேர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளிலேயும் இன்றைக்குச் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்த நிலைமை ஏற்பட்டிருக்கக் காரணம், குறிப்பாக தமிழகத்திலே ஏற்பட்டுள்ள கடும் வறட்சிதான். குறிப்பாகப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் பல்வேறு இடங்களிலேகிடைக்காத நிலைமை இருக்கிறது.அதோடு,வழங்கப்படுகின்ற உணவு தானியங்கள் நல்ல முறையில், சீராக இல்லாத காரணத்தால் இப்படிப்பட்ட தொத்து நோய்கள் பரவுகின்றன. ஆகவே, இந்தத் தொத்து நோய்களைத் தடுப்பதற்குத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனைகளுக்குப் போதுமான, தேவையான மருந்துகளை அனுப்பி, அதை வைத்துக்கொண்டு இந்த நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் எல்லாக் கிராமங்களுக்கும் கிடைக்கும் பொருட்டும் இந்தப் பிரச்னையைக் குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, பல வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழகத்திலிருந்து காலரா நோயையும், அம்மை நோயையும், விரட்டி விட்டோம் என்று பெருமையோடு நமது அமைச்சரவர்கள் அடிக்கடி சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இன்று பார்த்தால் அம்மை நோய் இருக்கிறதோ இல்லையோ, காலரா நோய் வந்துவிட்டது, சென்னையில் காலரா நோய் என்பது ஆச்சரியமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. பண்ணுருட்டிக்கு பக்கத்திலே நம் அமைச்சர் இருக்கக்கூடிய இடம்.



1983 மார்ச் 9] [திரு. செ. சிவசாமி]

அதற்குப் பக்கத்திலுள்ள காமாட்சி புரத்திலே காலரா நோய் வந்து 4 பேர்கள் இறந்திருக்கிறார்கள். பல பேர்கள் ஆஸ்பத்திரியிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் விழுப்புரம் முதுகளத்தூரிலே காலரா, இப்படியாக--பரவலாக தமிழகம் முழுவதும் காலரா வரக்கூடிய நிலையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. முதுகளத்தூர் காமாட்சிபுரத்திலே முருகம்மாள் என்ற பெண்ணும், துரைபாண்டியன் என்ற பையனும் இறந்து இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கல்லான், களஞ்சியத்திலே பஞ்சாயத்து போர்டு தலைவரே காலராவில் இறந்து இருக்கிறார். முதுகளத்தூர் தாலுக்காவில் 12 வயது முஸ்லீம் பையன் காலராவில் இறந்திருக்கிறார். இளையாங்குடியிலே காலரா வந்து ஒருவர் ஆஸ்பத்திரியிலே கொண்டுவரப்பட்டிருக்கிறார். இப்படியாக கிராமங்களிலே மிகப் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. மக்கள் கிராமங்களை காலி செய்து கொண்டிருக்கிறார்கள். முதுகளத்தூரிலே ஒருவர் காலராவில் பாதிக்கப்பட்டு இறந்திருக்கிறார். கிராமங்களில் அபாயகரமான நிலைமை இருக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கிராமங்களிலெல்லாம் பெரிய பீதி ஏற்பட்டிருக்கிறது. உணவு தட்டுப்பாடு வேறு ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தோமானால், இந்த பொதுச் சுகாதாரமே இன்று கெட்டிருக்கிறது என்ற நிலைமையும் காரணமாகும். குடிதண்ணீரிலே பல கிருமிகள் இருக்கிற காரணமாகவும், இந்தப் பஞ்சத்தின் காரணமாக பலதரப்பட்ட உணவு சாமான்களை சாப்பிடுவதன் காரணமாகவும் இந்தக் காலரா வந்திருக்கிறது. இதை உடனடியாக தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல தமிழகத்தின் தலைநகரத்திலே, தென்னாற்காடு மாவட்டத்திலே, முகவை மாவட்டத்திலே இன்று இந்தக் காலரா நோய் பரவியதன் மூலமாக உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற செய்தி நமக்குக் கவலையையும், வேதனையையும் தருவதாக அமைந்துள்ளது. பத்திரிகையிலே 3 அல்லது 4 என்று வந்திருந்தாலும், உண்மையிலே இந்த எண்ணிக்கை நிச்சயமாக அதிகமாக இருக்கலாம். அதை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். கிராமப்புறங்களில் இன்னும் காலரா, மஞ்சட் காமாலை நோய்கள் அதிகமான அளவிலே பரவிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு தமிழகத்திலே உள்ள மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் போதுமான அளவுக்கு வழங்கத் தவறிய காரணத்தால் தான் இந்த நோய் மிகக் கடுமையாக பரவிக்கொண்டிருக்கிறது என்

இங்கே கிண்டியிலே இருக்கக்கூடிய வாட்டர் அனலிட்டிகல் லாபரட்டரியிலே போர் வெல்ஸ் மூலமாக ஆங்காங்கு நாம் சாம்பிள் போர் வெல்ஸ் போட்டு தண்ணீரை எடுத்து உடனடியாக பரிசோதனை செய்துகொண்டு இருக்கிறோம்.

நான்காவதாக In places where the water is found not suitable for consumption, suitable instructions were given and arranged for protected water supply.

நாம் சில இடங்களில் அது தவறான வாட்டர் என்று கண்டுபிடித்த உடன் அதை யாரும் பயன்படுத்தக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். இந்த வகையிலே நாம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். இதிலே ஒரு சிக்கல் இருப்பதை நான் இந்த மன்றத்திலே விளக்குவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். வாந்திபேதி வந்தவுடனே பலர் தண்ணீரே சாப்பிடக்கூடாது என்ற தவறான எண்ணம் மக்கள் மத்தியிலே இன்னும் பரவிக் கொண்டு இருக்கிறது. நாம் இதற்காகத்தான் மாசிவ் ஆக ஒரு நல்ல அளவிற்கு நாம் எஜுகேட் செய்யவேண்டுமென்று, அதை விளக்கிச் சொல்லவேண்டுமென்று கூட ஆணையிட்டு இருக்கிறோம், பல பிட் நோட்டீஸ்கள் போட்டும், பிரசுரங்கள் மூலமாக வீடு வீடாக கிராமங்களிலே கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். யாருக்கு வாந்திபேதி வந்தாலும் கூட, குறிப்பாக பேதி ஆரம்பித்த உடனே, ஒரல் டி-ஹைட்ரேஷன் என்று சர்க்கரை—ஒரு ஸ்பூன், ஒரு சிட்டிகை உப்பு எடுத்து, ஒரு டம்ளர் தண்ணீர்எடுத்து கொதிக்கவைத்து ஆறிய தண்ணீரிலே கலந்து கொஞ்சம் கொஞ்சமாக நாம் சாப்பிடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். தவறான அந்தக் கருத்தின் அடிப்படையிலே (குறுக்கீடு), ஒரு ஸ்பூன் சர்க்கரை; ஒரு சிட்டிகை உப்பு, அதாவது

'One spoon of sugar and a pinch of salt in a tumbler of hot-cold water.'

என்று டி-ஹைட்ரேசன் Gl cose Sal ne என்ற வகையிலே நாம் அதைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ஏன் என்றால் பலருக்கு பேதி வந்த உடனே சாப்பிட்டால் தண்ணீர் மாதிரியாக போகும் என்ற தவறான எண்ணத்தின் காரணமாக காஸ்ட்ரோ என்டிரிடிஸ், அதிலே அக்யூட் காஸ்ட்ரோ என்டிரிடிஸ், அதற்கு ஏ.ஜி.இ. என்று பெயர். அப்படிப்பட்ட வியாதி வருகிறது என்றால், கொஞ்சம் இன்ட்ராவீனஸ் குளுகோஸ் சலைன் போட்டுக்கொள்வதற்கும் தாமதம் செய்கிறார்கள், அங்கே ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டேன் என்று





சொல்கிறார்கள். ஏதோ தோசம் என்று மந்திரம் செய்து, கழுத்திலே ஒரு நூலைப் போட்டு, இப்படியெல்லாம் செய்வதன் காரணமாக, ஒரு மூட நம்பிக்கையின் காரணமாக நாம் பல உயிர்களை இழந்துவிடக் கூடிய துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே பெரியவர்கள் மட்டுமல்ல குழந்தைகள் கூட உயிரை இழக்கிறார்கள். குழந்தைகளுடைய இறப்பு விகிதாச்சாரத்தை குறைக்கக்கூடிய சக்தி இருக்கிறது. அகில இந்தியாவிலே 115 குழந்தைகள் 1,000 குழந்தைகளுக்கு இறந்துபோகிறார்கள். அது ஆயிரத்துக்கு 115 ஐ.எம்.ஆர். என்று இருக்கிறது. ஆனால் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இப்போது மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து 80 ஆக குறைத்திருக்கிறோம். பல இடங்களில் 75 ஆகவும் குறைந்திருக்கிறது ; அதாவது 7.5 சதவீதம்.

இதுபற்றிய விவரம் அனைவருக்கும் நன்றாகத் தெரியவேண்டும் என்பதற்காக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பேதி வந்தவுடன் தாராளமாக தண்ணீர் குடிக்க வேண்டும் ; உடனடியாக டாக்டரிடம் போக வேண்டும் என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பதை மக்களுக்குச் சொல்லவேண்டும். பொதுமக்கள் பிரதிநிதிகளான மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் இதில் அக்கரை எடுத்துக்கொண்டால் நல்லது. இது சம்பந்தமாக இப்போது ' பிட் நோட்டீஸ் ' எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் 2,025 பேர்களுக்கு அக்யூட் காஸ்ட்ரோ என்ட்ரைட்டீஸ் வந்தது. அதில் 16 பேர் இறந்திருக்கிறார்கள். இதை பலர் காலரா என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இது காலரா அல்ல. காலரா என்று டிக்ளேர் செய்ய வேண்டுமென்றால் மலத்தில் காலரா கிருமி இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். காலரா என்றால் மலத்தில் அந்தக் கிருமி இருக்கும். ' பாக்ஸ்லி நெகடிவாக ' இருக்கும். அதையெல்லாம் பார்த்துதான் சொல்ல வேண்டும். அது தெரியாமல் நாம் இந்த மாமன்றத்திலே காலரா என்று இல்லாத ஒன்றை மிகைப்படுத்திச் சொல்வதாக இருந்தால் — நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை — பத்திரிக்கைகளில் அந்தச் செய்தி வந்து, நமக்கு சில பாதகங்கள் ஏற்படும். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்காக நிறைய விவரங்களை சேகரித்து வைத்திருக்கிறேன்.

இப்படிப்பட்ட செய்திகள் வரும்போது பத்திரிகைக்காரர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்துபேசி, பிரசுரம் செய்வதாக இருந்தால் நன்றாக இருக்கும். இல்லை என்றால், காலரா என்று போட்டுவிட்டால் மற்ற மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகின்ற டூரிஸ்டுகள் எண்ணிக்கை குறைந்துவிடக்கூடும்,

காரணம் அவர்களுக்கும் பீதி ஏற்படும். There is no necessity for unnecessary alarm. அனாவசியமாக நாம் பயப்பட வேண்டிய தில்லை. அதனால் அமைதியாக பிஃடில் வாசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். We need not do that also. நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் ஒன்றை மிகைப் படுத்தி, பெரிதாகச் சொல்லி, ஒரு விபரீத நிலையை உருவாக்க வேண்டியதில்லை.

அடுத்து, ஜாண்டிஸைப் பொறுத்த வரையில் 672 பேர்களுக்கு வந்திருக்கிறது. அதில் 15 பேர்கள் இறந்திருக்கிறார்கள். இதைக் கூட ஒவ்வொரு ஆண்டும் நாம் பார்க்கும்போது—இரண்டு, மூன்று ஆண்டுகளில் குறிப்பு இருக்கிறது. மானியக் கோரிக்கைகள் வரும் போது அதுபற்றி விரிவாகச் சொல்கிறேன்—கட்டுப்படுத்தியிருக்கி றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே வாந்திபேதி வந்தது உண்மை. ஆனால் உடனடியாக அவர்கள் ஃபஸ்ட் எய்டு செய்யவில்லை. தண்ணீர் கொடுக்கவில்லை. தண் ணீர் குடிக்கக்கூடாது என்ற தவறான எண்ணத்தினால் 43 பேர் கள் அங்கே இறந்துவிட்டார்கள். அதுபற்றி உடனடியாக பிரச் சாரம் செய்திருக்கிறார்கள். உடனடியாக குளுக்கோஸ் இன்ட்ரா வீனஸ் ஊசிப் போட்டுக் கொண்டால் உயிரிழக்கும் நிலை வராது.

முகவை மாவட்டத்தில் 311 பேர்களுக்கு 41 பேர்கள் உயிரி ழந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த அக்யூட் காஸ்ட்ரோ என்ட்ரைட்ஸ்தான்; வேறு நோய் அல்ல. இந்த விஷயங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதை, இந்த நான்கு வகைகளிலே என் னென்ன செய்திருக்கிறோம் என்பதைத் தெளிவு படுத்த தேவை யான விவரங்களைக் கொடுத்திருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இப்போது வறட்சி இருக்கிற காரணத்தால் நாம் முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. We have asked for certain amount from the Drought Relief Fund. இப்போது நம்முடைய தமிழ்நாட்டுக்கு வறட்சியைப் பார்வையிட வந்திருக்கிற 'ட்ரவுட் கமிட்டி' யிடம் மருந்துகள் வாங்குவதற்கு கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்கள் கொடுக் கிறார்களோ இல்லையோ வேலை நடந்துகொண்டிருக்கிறது. ஆனாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லும் போது, The nett amount required is as follows; To provide curative medicines in respect of persons likely to be affected by water borne diseases. இப்போது வறட்சி இன்ஸ்பெக்ஷனுக்காக வந்திருக்கிற கமிட்டியிடம் கூட கேட்டிருக்கிறோம்.





எல்லா மாவட்டங்களிலும் 'வார்ட்டர் போர்ன்' நோயினால் நமக்கு கூடுதலாக செலவாகக் கூடிய தொகை 6.44 கோடி என்று அந்தக் குழுவிடம் தெரிவித்திருக்கிறோம். அந்தத் தொகையை கேட்டிருக்கிறோம்.

'For providing multi-vitamin tablets for children and pregnant women to prevent mal-nutrition Rs. 7.61 crores.

[முற்பகல் 10-50]

மால் நியூட்ரிஷன் ஏற்படுமானால் பெதி வருவதற்கான வாய்ப்பு ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே, அந்த Multi Vitemin மாத்திரை களுக்காக 7.61 கோடி ரூபாய் தேவை என்று கேட்டிருக்கிறோம்.

மூன்றாவதாக, "For dis-infectant measures and vaccine Rs. 3 Crores" தடுப்பு ஊசிகளுக்காக 3 கோடி ரூபாய்களும், ஆக, மொத்தமாக 17.05 கோடி ரூபாய்களை நாம் கேட்டிருக்கிறோம். இந்த, இலாகாவிற்காக, இந்த தடுப்பு முறைகளை நடைமுறைப் படுத்துவதற்காக. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் போன்றவர்கள் எல்லாம், இதற்கென மத்திய அரசாங்கத்தோடு வாதாட தயாராக இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயம் உண்டு. ஆகவே அதை அவர்கள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் சொன்னார்கள் என்று கருது கிறேன். காலரா அறவே நீக்கப்பட்டது என்று, காலரா அறவே நீக்கப் படவில்லை. ஸ்மால்-பாக்ஸ் தான் நீக்கப்பட்டிருக்கி றது. காலராவினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கைத்தான் குறைக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய எண்ணிக்கை தற்போது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆனால், Acute Gastro Entritis என்பதைப் பொறுத்த வரையில், நான் ஏற்கெனவே சொன்னது போல், அது வந்த உடனே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதனால் எந்த வித மான உயிரிழப்பும் ஏற்படக்கூடாது என்றால், மக்களுக்கு நல்ல முறையில் அதற்கென பிரச்சாரம் அளிக்கப்பட வேண்டும். உடனடி யாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்ணீரிலே சர்க்கரையோ, உப்பையோ போட்டு சாப்பிட வைக்க வேண்டும், அத்தோடு உடனடியாக மருத்துவமனைக்கும் அழைத்துக் கொண்டு போய், Intravenous, Glucose, Saline கொடுக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட தடுப்பு முறைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தேவையான எச்ச ரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, இவ்வளவு நான் சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, இது குறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க தேவையில்லை என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கள் காலரா பற்றித்தான் கேட்டார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவிதமான நோய்களைப் பற்றியும் இங்கே விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவோ தடுப்பு நடவடிக்கைகளை எல்லோரும் அறிந்து கொண்டீர்கள். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக் கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### பவானிசாகரிலிருந்து தண்ணீர் விடப்படுவது முன்னதாகவே நிறுத்தப்பட்டதால் பயிர்கள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், ஆர். ரங்கசாமி, ஜி.கே. சுப்பிரமணியன். ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீ..மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம் பவானிசாகர் அணையி லிருந்து தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை வாய்க்கால்களில் 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீரை நிறுத்திவிட்ட காரணத் தால் கரும்பு மற்றும் நெற்பயிர்கள் பாதிக்கப்பெற்று விவசாயிகள் கவலையுறுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலை வர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால்கள் கொடிவேரி அணைக்கட்டிலிருந்து பிரிகின்றன. இந்த அணை பவானிசாகர் நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ளது. இதன் கீழ் உள்ள பாசன பரப்பு 24,500 ஏக்கர்களாகும். இக்கால்வாய்களின் பாசன காலம் 15 ஏப்ரல் முதல் 15 பிப்ரவரி வரையாகும். இக்கால்வாய்களுக்குத் தேவையான நீர் பவானிசாகர் நீர்த்தேக்கத்திலிருந்து விடப்படு கிறது.



1983 மார்ச் 9] [திரு. கே. இராஜா முகமது]

1982-ஆம் ஆண்டு இக்கால்வாய்கள் 15—4—82 அன்று திறக்கப்பட்டு, தொடர்ச்சியாக 2—2—1983 வரை தண்ணீர் கொடுக்கப்பட்டது. தென்மேற்கு பருவ மழையும், வட கிழக்குப் பருவ மழையும் பவானிசாகர் நீர் பிடிப்புப் பகுதியில் பொய்த்த தால், இவ்வாண்டு நீர் வரத்து மிகக் குறைவாக இருந்தது. இக் கால்வாய்களுக்கு தொடர்ச்சியாக பவானிசாகர் நீர்த்தேக்கத்தி லிருக்கும் தண்ணீரைப் பயன்படுத்தி பாசன வசதி 2—2—83 வரைதான் கொடுக்க முடிந்தது. 1—2—1983 அன்று பவானி சாகர் நீர்தேக்கத்தின் கொள்ளளவு 21 மி.க. அடி (முழு கொள் ளளவு 32,800மி.க. அடி). எந்த ஆண்டிலும் இந்த அளவுக்கு பவானிசாகர் நீர்த்தேக்கத்தில் கொள்ளளவு குறைந்ததில்லை. ஆகையால் 3—2—83 முதல் 15—2—83 வரை தண்ணீர் அனுப்ப முடியாததற்கு காரணம் பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் நீர் இல்லாமையும், நீர் வரத்து குறைவாக இருந்ததுமே ஆகும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயிருக்கிற விவசாயிகள் தங்களுடைய கரும்புப் பயிர் பாதிக்கப்படுகின்ற காரணத்தால், அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர் களும் கருணைக் கொண்டு, இப்போது அந்தப் பகுதியிலே தண் ணீர் விட்டிருக்கிறார்கள். அதை 7, 8 நாட்களுக்குத் தான் விட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதை மேலும் 10 நாட்களாக வரும் அளவிற்கு, இன்னும் 3 நாட்களுக்காவது அதிகமாக தண்ணீர் விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வாரா என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, ஏற்கனவே பவானிசாகரில் 19 அடி தண்ணீர் இருந்தபோது, 150 டன் அளவிற்கு மீன்கள் இறந்திருக்கின்றன. செய்திகளிலே வந்ததைப் பார்த்திருக்கலாம். கொஞ்சம் அதைக் கவனத்திலே கொண்டுதான், இன்றைக்கு எச்சரிக்கையாக தண்ணீரை விட்டு 10,000 ஏக்கர் நிலங்கள் அந்தப் பகுதியிலே விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பயிரைப் பாதுகாக்க வேண்டும் என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று முதல் அமைச்சர் அவர்களின் ஆணையினைப் பெற்று இப்போது ஒரு வாரத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் 3 நாட்களுக்கு கொடுப்பதற்கு முயற்சி செய்கிறோம். அதற்கும் மேலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து திரும்ப வும் நீர் வேண்டும் என்று கேட்டுவிடக் கூடாது. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அங்கே இருக்கக் கூடிய மீன்களைக்

[திரு. கே. இராஜா முகமது] [1983 மார்ச் 9

காப்பாற்ற முடியாமல் போய்விடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மேலும் 3 நாட்களுக்குக் கொடுப்பது பற்றி இந்த அரசு பரிசீலித்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் மேலும் கூடுதலாக 3 நாட்களுக்குத் தருவதற்காக அந்த விவசாய மக்களின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையினை பேரவைக்கு அளிக்கிறேன் :

''(அ) 1960–61 மற்றும் 1962–63 முதல் 1969–70 வரையிலான ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசுக் கணக்குகள் குறித்த பொதுக் கணக்குக் குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்ட பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை குறித்த மேற்படி குழுவின் இருபத்து மூன்றாவது அறிக்கை ;

(ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1962–63 முதல் 1970–71 ஆம் ஆண்டுகள் வரையிலான ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கைகள் மீது பொது நிறுவனங்கள் குழு (1974–75) அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கை/மேல் நடவடிக்கை குறித்த மேற்படி குழுவின் இருப்பத்து நான்காவது அறிக்கை.''

(ஆ) உரிமைக் குழு

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

9—2—1983 தேதியன்று சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களால் அவை உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட பிரச்சினை தொடர்பாக 7–3–1983 ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரைவின் முன் அளிக்கப்பெற்ற அவை உரிமைக் குழுவின் இடைக்கால அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, உரிமைக் குழு அவைக்கு அறிக்கை அளிப்பதற்கு மேலும் ஒரு மாதம் அவகாசம் அளிக்கப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



1983 மார்ச் 9]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

1983 84 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை விமர்சனம் செய்யும் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்கள் இந்த விவாதத்திலே ஈடுபட்டு வரவு-செலவுத் திட்டத்தை விமர்சனம் செய்கின்ற போது அண்மையிலே நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை மனதிலே வைத்துக் கொண்டு குறிப்பாக திருச்செந்தூர் தேர்தல் முடிவினை மனதிலே வைத்துக் கொண்டு அதிலே ஏற்பட்ட விரக்தியிலும், கோபத்திலும் அதே கண்ணோட்டத்தோடு விமர்சனம் செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் உண்மையிலேயே திருச்செந்தூர் தேர்தலைப் பொறுத்த வரையிலே யாருக்குக் கோபம் வந்திருக்க வேண்டும் என்றால் எங்களுக்குத் தான் வந்திருக்க வேண்டும். காரணம் வெற்றி பெற்ற நாங்கள் விழா கொண்டாடுவதற்கு முன்னே தோல்வியுற்றவர்கள் எல்லாம் விழாக் கொண்டாடி முடித்துவிட்டார்கள். நாங்கள் அதற்காகக் கோபப்பட்டிருக்க வேண்டும். அடுத்து கடுமையான தோல்வி என்று சொன்னவர்கள் இரண்டு நாட்கள் கழித்து தேர்தலிலே தில்லுமுல்லு என்று தந்தி அடித்தார்களே, அதற்காக நாங்கள் கோபப்பட வேண்டும். ஆனால் நாங்கள் அதற்காகக் கோபப்படவில்லை. ஆனால் அவர்கள் கோபத்திலே விமர்சனம் செய்கிறார்கள். இன்னொரு சாரார் வேறு வகையில் விமர்சனம் செய்கிறார்கள். அவர்கள் தேர்தல் நேரத்தின்போது சொன்னார்கள், இந்தத் தேர்தலில் ஒரு கை பார்த்து விடுகிறோம், இது மாநிலக் கட்சிகளுக்குள்ளே நடக்கின்ற தேர்தலா அல்லது தேசிய நீரோட்டமா என்று சொன்னார்கள். ஆனால் அந்த நீரோட்டத்தை இன்று காணவே முடியவில்லை. அவர்களும் ஒரு பக்கத்திலே விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்தின் பொது தேவைகள் என்று வருகின்ற நேரத்திலேயாவது அதாவது மாநிலத்திற்குத் தேவையான காரியங்கள் என்று வருகின்றபோது அந்த அளவிலேயாவது நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும், குறிப்பாக நம்முடைய மாநில அரசு மத்திய அரசுக்கு அளிக்கின்ற வறட்சி பற்றிய அறிக்கையினைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் குறைசொல்லிப் பேசினார்கள்.

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 மார்ச் 9

[முற்பகல் 11-00.]

தன்னுடைய பட்ஜெட் விவாதத்தின் போது மறுபடியும் அதை குறையாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன ? நாம் அனுப்பிய அறிக்கையானது சரியான நேரத்தில் சரியான அறிக்கையை அனுப்பியிருக்கிறோம் என்பதை இங்கே தமிழ்நாட்டுக்கு வருகை தந்த மத்திய குழுவினர் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குழுவின் தலைவரான மதிப்பிற்குரிய திரு. ஆர். கே. ஸ்ரீவத்சவா அவர்கள் இங்கே வந்து பார்த்து விட்டு பின்னால் நிருபர்களிடம் பேசும்போது கூறியிருக்கிறார்கள்:

We cannot say that the report is delayed. After all the crop conditions will be known only at the end of January. If the State had sent its report earlier perhaps it might not have been full and complete என்று. ஆக மத்தியிலிருந்து வருகின்ற அதிகாரிகள் கூட உண்மையான நிலை சரியான நேரத்தில் அனுப்பப்பட்டதாக ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மாநிலத்தில் இருக்கிறவர்கள் அவ்வாறு கூறவில்லையே என்ற வருத்தம் நிச்சயமாக எனக்கு இருக்கிறது. அது மட்டும் அல்ல. மாநிலத்தில் நிதியமைச்சராக இருக்கிற மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் வரி போட்டு விட்டார்கள் என்ற வருத்தத்தை பல பேர் தெரிவித்து இருக்கிறார்கள். கண்டனமும் தெரிவித்து இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மெம்பர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியதை நான் பகுத்துப் பார்த்தபோது உண்மையாகவே நான் வருத்தப்பட்டேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று மாநாடு கூட்டிய கட்சி, மாநில சுயாட்சிக்கு மாநாடு மட்டும் அல்ல பேரணி நடத்தி அதற்காக பொதுக்கூட்டங்கள் நடத்தி இவ்வளவும் செய்த அந்தக் கட்சி ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லை இந்த மாநிலத்திற்கு அதிகாரம் இல்லை என்று. தேவையான அதிகாரம் இல்லை என்பது மட்டும் அல்ல வருகின்ற வருவாயை மத்திய சர்க்கார் கொடுக்க வேண்டியதை கொடுக்கவில்லை என்று ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை என்ற என் மன வருத்தத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது சரியானதாக இருக்கும் என்று கருதுகிறேன். மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று பேசியவர்கள் இன்று மாநிலத்தில் வெறும் சைலண்டாகவும், மத்தியில் சரண்டராகவும் இருப்பது எப்படி என்பது எனக்குப் புரியவில்லை. ஒன்றை தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். நமது அரசியல் அமைப்புச் சட்டமே நமக்கு சதி செய்திருக்கிறது. அன்றைக்கே மாநிலங்களுக்கு குறைவாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேவையான நிதி ஆதாரம் கொடுக்கப்படவில்லை. இன்றைக்காவது அதை மாற்றி அமைக்கவேண்டும் என்று நம்முடைய



1983 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தனது வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிட்டு இருப்பதை நான் மனமார வரவேற்கிறேன். நிச்சயமாக நம்முடைய பிரதான எதிர்க்கட்சியும் அதை வரவேற்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அன்றைக்கே மதிப்குரிய திரு. செத்தல்வார்ட் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து இருந்தார்கள். அந்த நேரத்தில் அரசியல் நிர்ணய குழுவினுடைய ஸ்டடீ டீம் ஒன்று அமைக்கப்பட்டு சென்டிரல் ஸ்டேட் ரிலேஷன் என்ற தலைப்பில் திரு. செத்தல்வார்ட் அவர்கள் அன்றைக்கு குறிப்பிட்டது இன்றைக்கும் பொருந்தக்கூடிய ஒரு சொல்லாக இருக்கிறது. The outstanding feature of the financial relationship between the centre and the State consequently is that the former is always the giver and the latter, the receiver. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது கூட பரவாயில்லை. மத்திய அரசு கொடுக்கும் நாம் வாங்கிக்கொள்வோம் என்று சொன்னால் அதிலே நமக்கு ஒன்றும் குறை வந்துவிடாது. அவர்கள் கை உயர்ந்து இருக்கிறது நம்முடைய கை தாழ்ந்திருக்க வேண்டுமா என்று கூட நான் கேட்கவில்லை. நிலமை இன்றைக்கு அதை விட மோசமாகப்போய்க் கொண்டிருக்கிறது. அவர்கள் கொடுத்து நாம் வாங்கக்கூடிய நிலமை இருந்தால் கூட பரவாயில்லை. அவர்கள் கொடுக்கவே மறுக்கிறார்கள். கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்கிற சூழ்நிலை இன்றைக்கு நிச்சயமாக இருக்கிறது பின்னால் அதை நான் குறிப்பிடயிருக்கிறேன். இன்றைய சூழ்நிலை அவர்கள் கொடுப்பவர்கள் நாம் வாங்குபவர்கள் என்று இருந்ததை மாற்றி அவர்கள் ஏதோ யாசகம் போடுபவர்கள் நாம் பிச்சைக்காரர்களாக இருப்போம் என்ற நிலை. மாநிலங்கள் எல்லாவற்றுக்கும் சேர்த்தே சொல்கிறேன். காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்கள் உட்பட சொல்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. எல்லா அதிகாரங்களையும் தாங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற ஒரு மனோபாவம் ஏகாதிபத்திய மனோபாவம் மத்திய அரசுக்கு வந்து இருக்கக்கூடாது. இன்றைக்கு வந்துவிட்டது. ஆரம்பத்திலேயே அதிகமான அதிகாரத்தை பெற்று இருப்பவர்கள் இன்று மேலும் மேலும் அதிகாரங்களை பிடுங்கிக் கொள்வதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொன்றாக மாநில அதிகாரத்தில் இருப்பதை பொதுப்பட்டியலுக்கு கொண்டுவரவேண்டும் என்று நினைக்கிறார்கள். பொதுப்பட்டியல் என்றால் நமக்கு நன்றாகத் தெரியும். பொதுப்பட்டியலுக்குப் போனால் அது அவர்களுக்குத்தான் உரிமையாகப் போய் சேர்ந்துவிடும். அந்த காலத்திலேயே அப்படிப்பட்ட பிரச்சனைகள் இருந்து இருக்கின்றன. ஒரு காலத்தில் சுகாதார இலாக்காவையே பொதுப்பட்டியலுக்கு கொண்டு வரவேண்டும் என்று அன்றைக்கு மத்தியில் அமைச்சராக இருந்த திருமதி ராஜ்குமாரி அமர்தகௌர் அவர்கள் முயற்சிசெய்தார்கள். அப்போது அதைக் கடுமையாக எதிர்த்து வெற்றி பெற்றவர் உத்திரபிரதேசத்தின் முதலமைச்சராக

இருந்த திரு. பண்டித கோவிந்தவல்லப பந்த் அவர்கள். அந்த நேரத்தில் எல்லாம் நியாயமான காங்கிரஸ்காரர்கள் நிறைய பேர்கள் காங்கிரஸில் இருந்தார்கள். அப்போது நடைபெற்றது இன்றைக்கு நடைப்பெறவில்லை என்பது நிச்சயமாக வருத்தம் தரக்கூடிய ஒரு செயலாகும். இன்றைக்கு இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் அதிலும் குறிப்பாக இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது அப்படிப்பட்ட பண்டித கோவிந்தவல்லப பந்த் போன்றவர்கள் ஓரிருவராவது காங்கிரஸ் உணர்வை பெற்று இருத்தல் வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதை எதிர்பார்த்துதான். எனவே, அன்றைக்கு அரசியல் அமைப்பு நிர்ணயச் சபையிலிருந்த மதிப்பிற்குரிய மறைந்த திரு. சந்தானம் அவர்கள் தீர்க்க தரிசனமாக சொன்னார்கள். The provinces will be beggers at the doors of the centre என்று 20–30 ஆண்டு காலத்திற்கு பின்னாலே என்ன நடக்கும் என்பதை எதிர்பார்த்து தீர்க்க தரிசனமாக அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு எதை நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதிகாரங்கள் கிடையாது. நமக்கு வரி போடும் உரிமைகள் முக்கியமான வரிகள் போடும் உரிமைகள் எதுவும் நமக்கு இல்லை. எதை நம்பியிருக்கிறோம். பைனான்ஸ் கமிஷனை மட்டுமே நம்பி இருக்கிறோம். அந்த நிதிக் கமிஷனை மத்திய சர்க்கார்தான் நியமிக்கிறது. அதுவும் நிரந்தரமான நிதிக் கமிஷனாக உண்டா என்றால் கிடையாது. அன்றைக்கு இருந்து அறிஞர் அண்ணா காலத்திலிருந்து நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம் பெர்மனன்ட் நிதிக் கமிஷன் தேவை என்று. வருஷத்திற்கு வருஷம் இவ்வளவு இவ்வளவு வருகிறது என்று ஸ்டேட்டிஸ்டிக்ஸ் எடுத்து வைத்து மாநிலங்களுக்கு இவ்வளவு, மத்திய சர்க்காருக்கு இவ்வளவு என்று பிரித்து கொடுக்கிற அதிகாரங்கள் பைனான்ஸ் கமிஷனுக்கு இருக்கிற காரணத்தினால் நாம் நிரந்தர பைனான்ஸ் கமிஷன் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது ஆறாவது பைனான்ஸ் கமிஷன் திரு. ஒய். பி. சவான் தலைமையில் நியமிக்கப்பட்டு இருக்கிறது. ஆளுக்கு ஒரு மாதிரி அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நியமிக்கப்படுகிறவர்களும் அரசியல்வாதிகள், நியமிக்கிறவர்களும் அரசியல்வாதிகள். அப்படியே அவர்கள் ஒழுங்காக இருந்து நியாயமாகச் சொன்னாலும் அதை மத்திய சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. பைனான்ஸ் கமிஷனுடைய ரெக்கமன்டேஷனை மத்திய சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்ற அவசியமே இல்லை. ஆகவே மாநில அரசினுடைய நிலைமை இன்னும் மோசமாக ஆகிவிடுகிறது. மத்திய சர்க்காருடைய கட்டளைக்கு அடி பணிந்தால் ஒழிய வேண்டிய பணம், வேண்டிய நிதி மாநிலங்களுக்குக் கிடைக்காது என்ற நிலைமைதான் இன்றைக்கு இருக்கிறது.



அதைப்பற்றிக் குறிப்பிட்டு அன்றைக்கே நம்முடைய அரசியல் சட்டத்தைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார் திரு. ஐவர் ஜென்னிங்க்ஸ். அன்றைக்கே குறிப்பிட்டிருப்பது Commissions propose but politicians dispose என்பதுதான். இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது.

எந்த எந்த வரிகளிலே அதிகமாகப் பணம் கிடைக்குமோ அது பூராவும் மத்திய சர்க்காருக்கு. ஆனால் எந்த எந்த வரியிலே பணமே கிடைக்காதோ அல்லது வரியே போடமுடியாதோ அது எல்லாம் மாநிலத்திற்கு என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கிறது. நான் ஒன்றிரண்டு மட்டும் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு இருக்கிற வரி ஆதாரங்கள் என்ன என்ன ? நிலவரி, விவசாய வருமான வரி, வாரிசு வரி, மரண வரி, நுழைவு வரி, மின்சாரத்தின் மீது போடப்படுகிற வரி, சாலைப் போக்குவரத்து வரி, கால்நடைகள், கோழி, ஆடு, மாடுகள் மீது போடப்படுகிற வரி, டோல்டாக்ஸ், சுங்க வரி, தொழில் வரி, புரபஷனல் டாக்ஸ், தலைவரி, ஒவ்வொரு தலையையும் எண்ணி வரிப் போடலாம் என்று நமக்கு அதிகாரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். யாராவது அதைப்போட முடியுமா? போட்டுவிட்டு நம் தலையை வைத்துக்கொண்டிருக்க முடியுமா அப்படிப்பட்ட வரியைக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்டாம்ப் டியூட்டி, கேளிக்கை வரி இப்படி ஒன்றிரண்டு வரிகளைத் தவிர வேறு எதையுமே நமக்குக் கொடுக்கவில்லை. அதைத்தான் அன்றைக்கே ஆற்காடு சர். ஏ. ராமசாமி முதலியார் குறிப்பிட்டிருக்கிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வரிகள் போலியானவை, மாநிலத்திற்குப் பணம் அவைகளால் கிடைக்காது, அவையெல்லாம் மலடுதட்டிப்போனவை என்று அன்றைக்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட வரி ஆதாரங்களைத் தான் மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு எப்படிப்பட்ட வரிகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எக்சைஸ் டியூட்டி வருஷம் ஒன்றுக்கு இந்த வருடம் மட்டும் 6,024 கோடி ரூபாய் அதன் மூலமாக வருமானம் வந்திருக்கிறது. கஸ்டம்ஸ் டியூட்டி, சுங்க வரி 5,879 கோடி ரூபாய் வருமானம். கார்ப்பரேஷன் டாக்ஸ், அதிலே ஒரு ஏமாற்றத்தை மத்திய சர்க்கார் செய்தார்கள். வருமானவரி என்று சொன்னால் மாநிலங்களுக்கு பங்கு கொடுத்தாக வேண்டும், ஆகவே கம்பெனிகளில் வருகின்ற வருமானத்திற்கு என்று தனியாகவே கார்ப்பரேஷன் டாக்ஸ் என்று போட்டு அதிலே இருந்து மாநிலங்களுக்கு பங்கே கிடையாது என்று சொல்லி போட்டார்கள், அதிலே 2,386 கோடி வருமானம், வருமான வரியிலே 531 கோடி வருமானம், இதர வரிகளிலே 671 கோடி ரூபாய் வருமானம் இந்த ஆண்டு மட்டும் மத்திய சர்க்காருக்கு இந்த 14 வரிகள் மூலமாக 15,491 கோடி ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆனால் அதிலிருந்து எவ்வளவு

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 மார்ச் 9

மாநிலங்களுக்கு அளிக்கிறார்கள் என்றால் 22 மாநிலங்களுக்கும் அவர்கள் அளிப்பது 16 ஆயிரம் கோடி ரூபாயிலே 101 கோடி ரூபாய்தான். இது தேவைதானா ?

இதைக் கேட்டால் திரு. சுந்தர்ராஜ் அவர்கள் கோபித்துக் கொள்கிறார்கள். மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்கிறார்களே என்று சொல்கிறார்கள். நாங்கள் நியாயமாக நடக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் தமிழ்நாட்டுக்கு மட்டும் பேசவில்லை, அவர்களுடைய கட்சி ஆளுகிற கேரள மாநிலத்திற்கும் சேர்த்தே பேசுகிறேன், மற்ற மாநிலங்களுக்கும் சேர்த்தே பேசுகிறேன், 15,491கோடி ரூபாயில் மாநிலங்களின் பங்கு 101 கோடி ரூபாய்தான் என்றால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானா? இதை மாற்ற வேண்டும். அதைத்தான் நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதை காங்கிரஸ் நண்பர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும். டிவிஷனல் பூல் என்று சொல்கிறார்கள். எக்சைஸ் என்று போட்டால் அதை மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். வருமானவரி என்று போட்டால் மாநிலங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். அதிலே மத்திய அரசு ஒரு தந்திரத்தை கையாள்கிறது. டிவிஷனல் பூல் என்பதிலே அவர்கள் தங்களுக்கு வருகிற வருவாயிலிருந்து மாநிலங்களுக்குக் கொடுக்காமல் தடுக்கவேண்டுமென்பதற்காக ஒரு உபாயத்தை தந்திரத்தை கையாள்கிறார்கள். அதற்கு ஸ்பெஷல் லெவி என்று போடுகிறார்கள் அல்லது சர்சார்ஜ் என்று போடுகிறார்கள். ஸ்பெஷல் லெவி, அல்லது சர்சார்ஜ் என்று அவர்கள் சொன்னால் அதிலே மாநில அரசுகளுக்கு பங்கு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே போடுகிற எல்லாவற்றையும் ஸ்பெஷல் லெவி என்றும் சர்சார்ஜ் என்ற பெயரிலேயும் போடுகிறார்கள், இதனால் மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடியதை தடுக்கிறார்கள். இதைத்தான் நியூஸ் டுடே என்ற பத்திரிகை தலையங்கத்திலே எழுதியிருக்கிறது.

(முற்பகல் 11—10)

"The State Governments have had a raw deal in the budget. They will get nothing by way of share from the steep increase in prices of oil, railway and P and T rates, corporate tax and customs duty which amount to 80 per cent of the total increase. The States have been placed at the mercy of the Centre's whims and fancies which, all of us know, are as erratic as erratic can be"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் இன்னொரு தந்திரத்தைக் கையாளுகிறார்கள். வரி போட்டால்தானே மாநிலத்திற்கு பங்கு



1983 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

கொடுக்கவேண்டும். ஆகவே விலையை உயர்த்துகிறோம் என்று சொல்கிறார்கள். காரணம் எல்லா கார்ப்பரேஷன்களும் மத்தி சர்க்காருடைய கார்ப்பரேஷன்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் மாதிரி. அதனால் வரி போடுவதில்லை. அதற்கு பதிலாக விலையை உயர்த்துகிறோம் என்று சொல்கிறார்கள்.

இன்னொன்று. உலகத்திலேயே நடக்காத ஒரு அதிசயம் நடந்து இருக்கிறது. வரி போடுவது என்றால் பட்ஜெட்டிலே தான் போட வேண்டும். இன்றைக்கு நாவலர் அவர்கள் போட்ட வரியைப் பற்றி நாம் எல்லோரும் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் பிரணாப் குமார் முகர்ஜியோ, மத்திய அரசோ பட்ஜெட்டிலே வரி போடவில்லை. வெறும் 716 கோடி ரூபாய்தான் பட்ஜெட்டிலே வரி. ஆனால் பட்ஜெட்டிற்கு முன்னாலும், பின்னாலும் 1982-ம் வருடம் நவம்பர் மாதத்திலேயிருந்து, 1983-ம் வருடம் பிப்ரவரி மாதம் 24-ம் தேதி வரையில் வரிசையாக கோடிக்கணக்கில், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய், ஏறத்தாழ 2,100 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். இதை யாரும் விமர்சனம் செய்ய முடியாது. பட்ஜெட் விவாதத்தில் வரவில்லை. ஒரு எக்சிகியூட்டிவ் உத்தரவு போட்டு 2,100 கோடி ரூபாய்க்கு வரி போட்ட புதுமை இந்த உலகத்திலே எங்குமே கிடையாது. மாண்புமிகு இந்திரா காந்தி சர்க்கார் ஒன்றுக்குத்தான் அந்த பெருமை சாரும். இப்படிப்பட்ட வரியை நாவலர் அவர்கள் போடவில்லை. அதற்காக நான் அவரை பாராட்டுகிறேன். பட்ஜெட்டில் போடப்பட்ட வரி சரியா, தவறா என்று சொல்வது எதிர்க் கட்சிகளின் உரிமை. ஆனால் விமர்சனம் செய்யமுடியாத அளவிற்கு மத்திய அரசாங்கம் வரியை போட்டிருக்கிறதே, அப்படிப்பட்ட அரசாங்கத்தை நிச்சயமாக மாநில அரசுகள் பின்பற்றக் கூடாது என்று நான் விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மிகவும் கடுமையான வறட்சி. அதுபற்றிச் சொன்னால் அதற்கும் சொல்கிறார்கள். இது என்ன அழுகிற பட்ஜெட்டாக இருக்கிறதே என்று. மக்கள் அழும்போது அரசாங்கம் அழத்தான் வேண்டும். மக்கள் அழும்போது அரசாங்கம் சிரித்துக் கொண்டிருந்தால், அதற்கு நீரோ மன்னன் என்று பெயரே தவிர, இந்த நாட்டு மன்னனாக முடியாது. அப்படிப்பட்ட நிலைக்கு நிச்சயமாக நம்முடைய அரசு போகாது.

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் 17-வது அம்சத் திட்டத்தை நிச்சயமாக காங்கிரஸ் நண்பர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அம்மையார் அவர்கள் அதில் குறிப்பிடுகிறார்கள். பொது விநியோகம், பப்ளிக் டிஸ்ட்ரிபியுஷன் ஸிஸ்டம் நாட்டினுடைய மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச் செல்ல வேண்டும் அதற்காக நியாயவிலைக் கடைகள் திறக்கவேண்டும் என்று குறிப்

[திரு. கோ. விஸ்வநாதன்] [1983 மார்ச் 9

பிடுகிறார்கள். இதை மிகத் தீவிரமாக அமல்படுத்துகிற மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். அதனுடைய விளைவாக 17 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை திறந்து இருக்கிறோம். அந்த கடைகளில் அரிசி விநியோகம் செய்தாக வேண்டும். சத்துணவுத் திட்டத்திற்குக் கொடுப்பதைப் போல, இந்த கடைகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றால் மாதம் ஒன்றிற்கு 80 ஆயிரம் டன் அரிசி தேவையென்று மத்திய அரசிடத்திலே கேட்டோம். என்ன நடந்தது என்பதையெல்லாம் மறுபடியும் நான் கூற விரும்பவில்லை. எல்லோரும் எடுத்து பேசியிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? மத்திய அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பவர் இங்கே அரசினுடைய ''புட் மானேஜ்மென்ட்' சரியாக இல்லையென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். பிரதமருடைய 20 அம்சத் திட்டத்திலே ஒன்றாக இருக்கிற ஒரு அம்சத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே இருக்கிற ஒரு அமைச்சர் அது சரியில்லை என்று சொல்கிறார். அப்படியானால் நாம் நிறைவேற்றுவது சரியில்லையா? அல்லது 20 அம்சத் திட்டத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லையா? என்பது புரியவில்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் மாதம் ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசி கேட்டோம். ஆனால் இன்றைக்கு மத்திய சர்க்கார் மனமுவந்து அளித்திருப்பது 5 ஆயிரம் டன். மறுபடியும் கேட்கிறேன். அதற்கு யானைப் பசிக்கு சோளப் பொறி என்று சொல்வதா? அல்லது மாற்றாந்தாய் மனப்பான்மை சொல்வதா? காங்கிரஸ் நண்பர்கள் சொல்லட்டும், எந்த வார்த்தையில் அதை வர்ணிப்பது? 80 ஆயிரம் டன் மாதம் ஒன்றுக்கு நமக்கு தேவை, ஆனால் மத்திய சர்க்கார் கொடுப்பதாக தெரிவிப்பது 5 ஆயிரம் டன். இன்னும் எதிர்காலத்தில் கொடுப்பதாகச் சொன்னால் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் இதோடு நிற்கும் என்று சொன்னால் நிச்சயமாக அதை மாநில அரசால் தாங்கிக்கொள்ள முடியாது.

அடுத்து சென்னைக்கு தேவையான மாஸ் ட்ரான்சிட் சிஸ்ட்டம். அதற்கு இந்த ஆண்டு மத்திய சர்க்கார் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. உங்களுடைய ஞாபகத்திற்கு ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன், இதற்கு செலவாகிற தொகை, எஸ்ட்டிமேட் எவ்வளவு என்று கேட்டால் 54 கோடி ரூபாய். இந்த ஆண்டு பட்ஜெட்டிலே மத்திய சர்க்கார் கொடுத்திருப்பது ஒரு கோடி ரூபாய். இப்படி ஒவ்வொரு கோடியாக கொடுத்து 50 ஆண்டு காலத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறார்களா? எந்த ஆண்டில், எந்தத் தலைமுறையில் இந்த மாஸ் ட்ரான்சிட் சிஸ்ட்டம் சென்னைக்கு வரப்போகிறது? இந்த ஆண்டு இல்லையென்றாலும், அடுத்த ஆண்டிலாவது அதிகத் தொகையைப் பெறுவதற்கு வற்புறுத்த வேண்டும். அங்கே மத்தியிலே இருக்கிற ஆளும்கட்சிக்காரர்களும் வலியுறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.



1983 மார்ச் 9] [திரு. கோ. விஸ்வநாதன்]

வரவு செலவுத் திட்டத்திலே புது வரிகளை ரூ. 26 கோடிக்கு நிதியமைச்சர் அவர்கள் போட்டிருந்தாலும் சில நல்ல சலுகைகளையும் அறிவித்திருக்கிறார்கள். அவை அதிகமான சலுகைகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அந்தச் சலுகைகளுடைய விளைவாக நிச்சயமாக வருமானம் பெருகும் என்பதை மட்டும் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ரூ. 1 கோடி போய்விட்டதே என்று அவர்கள் வருத்தப்படவேண்டியதில்லை. காரணம், குறிப்பாகச் சொன்னால், டயர், டியூப் போன்றவைகளுக்கு 3 சதவிதம் வரியைக் குறைத்திருக்கிறார்கள். அவற்றை வாங்குபவர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கலாம். ஆனால், அதனுடைய விளைவாக, இது வரையிலே பாண்டிச்சேரிக்குப் போய் அங்கே டயர் டியூப்களை வாங்கிக் கொண்டிருந்தவர்கள் பல பேர்கள் இருந்தார்கள். அதனால் கோடிக்கணக்கான ரூபாய் போய்க் கொண்டிருந்தது. அது நிச்சயமாக நிறுத்தப்பட்டு அந்த வருவாய்த் தமிழ்நாட்டிற்கு வரும் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

போட்டிருக்கிற வரியில் முக்கியமான ஒரு வரியை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வரியைப் பொறுத்த வரையில், பொதுவாக வரியை உயர்த்தினால் வருமானம் பெருக வேண்டும். ஆனால், இன்றைக்குப் போடப்பட்டிருக்கிற ஒரு வரியைப் பொறுத்தமட்டில் வரியை உயர்த்தினால் வருமானம் குறைந்துவிடும். இங்கே வரி போட்டு, வரவேண்டிய வருமானம் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு வருவதற்குப் பதிலாக, அந்த வருமானம் பூராவும் திரு. டி. இராமச்சந்திரனுக்குப் போய்விடும். நிச்சயமாக அதை நம்முடைய நாவலர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹெவி வெஹிகுல்சுக்கு இன்றைக்கு பாண்டிச்சேரியிலே 6 சதவீதம் தான் வரி. லாரியும், பஸ்ஸும் வாங்குபவர்கள் அங்கே சென்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே அதற்கு இருக்கிற வரி, சேல்ஸ் டாக்ஸ் 15 சதவீதம், சர்சார்ஜ் 5 சதவீதம், அடிஷனல் சர்சார்ஜ் 5 சதவீதம், இப்பொழுது புதிதாக போடப்பட்டிருக்கிற என்ட்ரி டாக்ஸ் 2 சதவீதம். ஆனால் பாண்டிச்சேரியிலே 6 சதவீதம் என்றிருக்கிற காரணத்தால் ஒரு சேசிஸ் வாங்கினால் ரூ. 17,000 தமிழ் நாட்டிலே வாங்குவதற்கும் பாண்டிச்சேரியிலே வாங்குவதற்கும் வித்தியாசம் இருக்கிற காரணத்தால், சென்ற பிப்ரவரி மாதத்தில் மட்டும் எனக்குத் தெரிந்த வரையில், லேலண்ட் கம்பெனியும், டாடா கம்பெனியும் 500 சேசிஸ்களைப் பாண்டிச்சேரியிலே விற்றிருக்கிறார்கள். ஏறத்தாழ ரூ. 6 கோடிக்கு மேல் வருஷம் ஒன்றுக்கு பாண்டிச்சேரிக்கு வருமானம் போகிறது. அதிலே பெரும்

பங்கு தமிழ்நாட்டுக்கு வந்து சேர வேண்டும். அதை நம்முடைய நாவலர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், இன்றைக்கு மோட்டார் கார்களுக்கும் 2 சதவீதம் நுழைவு வரி போட்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரியிலே அதற்கு வெறும் 5 சதவீதம்தான் வரி போட்டிருக்கிறார்கள். நாம் ஏற்கனவே, சேல்ஸ் டாக்ஸ் 7 சதவீதம், சர்சார்ஜ் 5 சதவீதம், அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் 5 சதவீதம் போட்டிருக்கிறோம். இப்பொழுது புதிதாக போட்டிருக்கிற என்ட்ரி டாக்ஸ் 2 சதவீதம், ஆக இவ்வளவையும் சேர்த்துப் போட்டிருக்கிறோம். இனி பஸ் லாரி வாங்குபவர்களோடு, கார் வாங்குபவர்களும் பாண்டிச்சேரிக்குப் போய்விடக்கூடாது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வழி செய்ய வேண்டும்.

பாண்டிச்சேரியிலே வரியை உயர்த்த முடியுமா என்றால் நிச்சயமாகச் செய்யலாம். அங்கே சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் 10 சதவீதம். அங்கேயிருக்கிற அரசு சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் போடக் கூடாது என்று சொல்லிவிட்டு, மாநில வரியாக 6 சதவீதம் தான் போட வேண்டுமென்று வற்புறுத்துவதன் காரணமாக இங்கே தென் மாநிலங்களிலே உள்ளவர்கள்—பெரும்பாலும் தமிழகத்திலே உள்ளவர்கள் எல்லாம்—அங்கே சென்று வாங்குகிற நிலைமை இருக்கிறது. அதனாலே நம்முடைய வருமானம் போய்விடுகிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும். வழி வகைகளை யோசிக்க வேண்டுமென்று நம்முடைய நாவலர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின் வெட்டு கடுமையாக இருக்கிற காரணத்தால் இன்றைக்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி முழுமையாக இல்லை. அதனாலே, பொருளாதாரப் பேராசிரியர்கள் கணக்குப் போட்டு ரூ. 500 கோடிக்கு மேலே நமக்கு—தமிழ்நாட்டுக்கு—இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். அதை நிச்சயமாக நம்மாலே ஈடு செய்ய முடியாது. அதற்கு நாம் வழி செய்தாக வேண்டும். மின் உற்பத்திக்காகத் தமிழக அரசு நிறைய பணத்தை ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கதாகும். மின் நிலைமை சீராகின்ற வரையில், இழக்கின்ற பணத்தைச் சீர்படுத்துவதற்கு —அருமை நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் கூடக் கேட்டிருக்கிறார்கள்—பட்ஜெட்டிலே இவ்வளவு பெரிய பற்றாக்குறை இருக்கிறதே, அதை எப்படி சீர் செய்யப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறீர்கள் ? என்று அந்தக் கேள்வியோடு, மத்திய சர்க்காரையும் பார்த்து, இன்னும் கொஞ்சம்கொடுக்கக் கூடாதா, தாராளமாக என்று அவர்கள் கேட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் மாநில சுயாட்சியை மறந்திருக்க மாட்டார் என்று நான் குறிப்பிடுவேன்.





இன்றைக்கு நாம் எல்லாவற்றிலும் சிக்கனத்தைக் கடைபிடித்தாக வேண்டும். குறிப்பாக, பொதுத் துறை நிறுவனங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் நஷ்டக் கணக்கைக் காட்டக் கூடாது. அதிலே அரசு மிகவும் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. துரைமுருகன்: பாய்ன்ட் ஆப் கிளாரிபிகேஷன். நாங்கள் கேட்கவேண்டுமென்று விசுவநாதன் சொன்னார். நாங்கள் கேட்பதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவரே சொன்னார், ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே நாங்கள் மத்திய சர்க்காரை எதிர்த்துப் பழக்கப்பட்டவர்கள் என்று. ஆனால், நீங்கள், கேட்பவர்கள், உறுதியாகக் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். அரிசி வேண்டுமென்று முதலமைச்சர் உண்ணா விரதம் இருந்தார். கொச்சியிலே போய் என்ன சொன்னார் ? அரிசி கேட்பதற்காக உண்ணா விரதம் இருக்கவில்லை. சென்ட்ரல் பூலுக்கு நாங்கள் தரவில்லையென்று சொன்னார்கள். அதை கிளாரிஃபை செய்வதற்காகத்தான் உண்ணாவிரதம் இருந்தேன் என்று சொன்னார்கள். டெல்லிக்காரன் பார்த்தான், ' ஓகோ, அரிசி கேட்கவில்லை போலிருக்கிறது ' என்று எண்ணி, அவன் பிச்சைக்காரனுக்குப் போடுகிற மாதிரி கொஞ்சம் அரிசியைப் போட்டு அனுப்பிவிட்டான். ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், நான் அரிசி கேட்கத்தான் போவேன். அரிசி கேட்கத்தான் இங்கே உண்ணாவிரதம் என்று உண்ணாவிரதம் இருந்துவிட்டு, கொச்சிக்குப் போய், நான் அரிசி கேட்கப் போகவில்லை, நான் சென்ட்ரல் பூலுக்குத் தரவில்லையென்றார்களே, அந்த ' டவுட்'டைப் போக்க உண்ணாவிரதம் இருந்தேன் என்றார்கள். முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்கள். விசு உங்களுக்குப் புரியாது, என்பதுதான்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, ஏன் உண்ணா விரதம் இருக்கப் போகிறேன் என்பதை மிகத் தெளிவாக, மேலவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியுங்கூட, நாங்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதால்தான் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று தெளிவாகவும் சொன்னார்கள். சொன்னபடிதான் இருந்தார்கள். அதைத்தான் கொச்சியிலே எடுத்து சொன்னார்களே தவிர, என்ன, என்ன காரணங்களை வைத்து இருக்கலாம் என்பதற்குப் பலரும் யோசனைகளைச் சொல்லலாம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொல்வதும் ஒரு யோசனையாக இருக்கலாம். ஆனால் இருந்தது எதற்கு என்பதுதான் இப்பொழுது முக்கியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1983 மார்ச் 9

திரு. கோ. விஸ்வநாதன் : துணைத் தலைவரவர்களே,
Doubting Thomas என்ற ஒரு சொற்றொடர் உண்டு.
துரைமுருகன் அவர்கள் Doubting Thomas ஆக மாறிவிடக்
கூடாது. இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் தேவை
என்று கேட்பதிலே நாங்கள் நிச்சயமாக எந்தக் காரணத்
தைக் கொண்டும் பின்வாங்கவில்லை. இந்த முதலமைச்சரவர்
கள் செய்வதைப்போல் வேறு எந்த முதலமைச்சரும் இருந்
திருக்க முடியாது. உண்ணாவிரதம் இருந்து இந்த மாநிலத்திற்
காகப் பாடுபட்ட ஒரேயொரு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்
தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தான் என்று கூறுவதிலே
நான் பெருமையடைகிறேன்.

[முற்பகல் 11–20]

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, நீங்கள்
மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்பதைத்
தவறு என்று சொல்லவில்லை. ஆனால் நான் ஒன்றைக் கேட்
கிறேன். இந்த அவையிலேயே மாநில சுயாட்சிக் கோரிக்கை
வந்தபொழுது அதை வேண்டாமென்று சொன்னவர்கள்தான்
நீங்கள். இப்பொழுது சொல்கிறேன். நிதியமைச்சரவர்கள்
சொல்கிறார்கள், ஸ்டேட் அட்டானமியை நாம் கேட்கவேண்
டும். தன்னாட்சி என்று போட்டிருக்கிறார்கள். கடலூர்
மாநாட்டிலே சீஃப் மினிஸ்டர் அவர்கள் அதிக அதிகாரம் வேண்
டும் ; It means........It is not autonomy. Autonomy
கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். கான்ப்பரன்சிலே
ஒன்று, இங்கே ஒன்று. இதே மாமன்றத்திலே எதிர்த்துச்
சொன்னார்கள், மாநில சுயாட்சி வேண்டாமென்று அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தினர் குரல் கொடுத்தார்கள்.
இன்றைக்குக் கேட்கிறோம் என்று சொன்னால், மத்திய அரசு
ஒன்றும் அவ்வளவு இலேசானது அல்ல ; அடித்தால்தான்
கறக்கும்.

திரு. கோ. விஸ்வநாதன் : துணைத் தலைவர் அவர்களே,
மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கேட்பது என்பது வேறு ; மாநில
சுயாட்சி கேட்பது வேறு. அதற்குப் போதுமான வரையறை
எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. அறிஞர் அண்ணா அவர்களே
கூட, மாநில சுயாட்சி என்றால் இன்னதுதான் என்று முடிவாகக்
கோடிட்டுச் சொல்லவில்லை. என்னென்ன தேவை என்று வற்
புறுத்தியிருக்கிறோம். அண்ணா அவர்களை இது குறித்துக்
கேட்டபொழுது, இதைப் பற்றி வரையறுத்துச் சொல்ல முடியாது;
காலப் போக்கில் அதெல்லாம் மாறிக்கொண்டே இருக்கும் என்று
கூறியிருக்கிறார்கள். எனவே, திரு. துரைமுருகன் அவர்கள்
இதைப் பற்றி அதிகமாகக் கவலைப்படாமல், காலாகாலத்தில்
சேர வேண்டிய அதிகாரங்களைக் கேட்பதில் அவர்களும் சேர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் செயல்களின் காரணமாக மாநில அரசு
பாதிக்கப்பட்டிருக்கிறது.



1983 மார்ச் 9]

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அண்ணா அவர்கள்
கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். இதே மாதிரி நிலை
மையை, மாநில சுயாட்சி பற்றிய டிபேட் வந்தபொழுதும்
அமைச்சர் பண்ருட்டி சொன்னார்கள். அப்பொழுது எங்க
ளுடைய அமைச்சராக இருந்தவர். அவர் இப்பொழுதும்
அமைச்சராகத்தான் இருக்கிறார், எப்பொழுதும் அமைச்சராக
அவர் இருப்பார், யார் வந்தாலும், அமைச்சராக இருப்பார்,
அவர் "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி"யிலிருந்து அண்ணா அவர்
களின் பேச்சை எடுத்துக் காட்டினார்கள். மாநில சுயாட்சி
"அட்டானமி" கேட்டார் என்று சொன்னார்கள். டாக்டர்
ஹண்டே அவர்களும் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள்.
அவர்களுக்குக் கூடத் தெரியும். எனவே, மாண்புமிகு உறுப்
பினரவர்களை அண்ணா கேட்கவில்லை என்று சொல்லி அண்ணா
மீது பழியைப் போடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அது
ஒன்றைத்தான் விட்டு வைத்திருக்கிறோம். அதையும் இழிவு
படுத்தி விடக்கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே, 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற
தேர்தலின்போது, சட்டமன்ற உறுப்பினர்களை இந்திரா
காங்கிரசுக்குப் பாதியைக் கொடுத்துவிட்டு, அமைச்சரவையிலேயும்
பாதியைக் கொடுத்துவிடச் சம்மதித்துத் தேர்தலில் நின்று,
கூட்டாட்சியை உண்டாக்குவதற்குத் திராவிட முன்னேற்றக்
கழகம் ஒத்துக்கொண்டதே, அப்படிப்பட்ட நேரத்தில் வெற்றி
பெற்றிருந்தால் இந்தச் சட்டமன்றத்திலே மாநில சுயாட்சித்
தீர்மானத்தை நிறைவேற்றியிருக்குமா என்பதைப்பற்றித்
துரைமுருகன் அவர்கள் விளக்குவார்களா ?

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவரவர்களே, அண்ணா
அவர்களே சொல்லியிருக்கிறார்கள், Electoral adjustment is one
thing and electoral alliance is another thing என்று
நான் இப்பொழுதும் சொல்கிறேன். எங்களுக்குள் அப்பொழுது
கூட்டிருந்தாலும், கூட்டணி ஆட்சியை அமைத்திருந்தாலும், அப்
பொழுதும் இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று
கேட்போம். கூட்டு வைத்திருந்தாலும் எங்கள் கொள்கையை
விடாமல் இருப்போம்.

* * * * * *

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவரவர்களே,
மக்களை நம்பி ஆட்சிக்கு வந்ததுதான் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி நீக்க
அகற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் மாண்புமிகு உறுப்பினர் ஜி. விஸ்வநாதனைத் தாண்டி வேறு எங்கெங்கோ போய், ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டிய அளவிற்குப் போய்விட்டது. திரு. ஜி. விஸ்வநாதன் அவர்கள் விளக்கம் தர, தன்னிலை விளக்கம் தர, அவரைப் பொறுத்த வரையில் சொல்லலாம். அவரைத் தாண்டி மற்றவர்களுக்கு அந்த நிலைமை வரக்கூடாது. அது யாராக இருந்தாலும் சரி.

திரு. கோ. விஸ்வநாதன் : துணைத் தலைவரவர்களே, மத்திய அரசின் விலைவாசிக் கொள்கையினாலே........

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய மாண்புமிகு திரு. துரைமுருகன் மிகச் சாமர்த்தியமாக மற்ற விஷயங்களையெல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். ஆனால் ஒரு குண்டு தூக்கி போட்டிருக்கிறார்கள்.

** ** ** **

சொல்லாத ஒரு வாசகத்தை, இங்கே வெறும் விஷயங்களை எல்லாம் பேசியிருக்கிறார்கள். நானும் இருந்தேன் பேரறிஞர் அண்ணா சொன்னார் என்று சொன்னதெல்லாம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் நடக்காத ஒன்றை உண்மைக்கு முற்றிலும் முரணாக இருக்கக் கூடிய ஒரு கருத்தை, இந்த வார்த்தையை மிக சாமர்த்தியமாக நம்முடைய துரைமுருகன் இங்கு பேசிய—பயன்படுத்திய அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவு இடுகிறேன். (கூச்சல் குழப்பம்).

திரு. துரைமுருகன் : அதையும் நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையும் எடுத்துவிடலாம். வேகமாகப் பேசும்போது தேவையில்லாததைச் சேர்த்துச் சொல்லி விடுகிறீர்கள்; நீக்கும்படி வருகிறது.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்திலே நடைபெறுகிற விவாதத்தில் சட்ட மன்றத்திலே ஏற்கெனவே பேசப்பட்ட அந்த கருத்துக்கள் அடிப்படையில் உறுதி செய்யப்பட்ட கருத்துக்களை வாதிப்பார்களே

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





யானால் பிரச்சினை எழாது. ஆனால் உறுதி செய்யப்படாத சட்டமன்றத்திலே எடுத்து வைக்கப்படாத இப்படிப்பட்ட கருத்துக்கள் அடிப்படையில் மாநில சுயாட்சி என்று அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையைக் கொச்சைப் படுத்துவதற்காக அல்லது அந்த—அந்தக் கொள்கையை கைவிடுவதற்காக அதிக அதிகாரங்கள் கேட்கிறோம் என்ற விவாதத்தின் அடிப்படையில் அறிஞர் அண்ணா அவர்கள் கொள்கையை திசை திருப்புகிற வகையில் பேச்சுக்கள் எழுவதன் காரணமாக ஒரு கட்சி இன்னொரு கட்சியை குறை சொல்கிற நிலைமை ஏற்படுகிறது. அந்த வகையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் உடன்பாட்டில் கையாண்ட முறையைப் பற்றி மாநில சுயாட்சிக்கு குறை ஏற்பட்டாதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். அந்தக் கேள்வி எழுந்த காரணத்தினாலே தான் எதிர்க் கட்சிகள் சார்பில் டில்லியிலே சென்று முதலமைச்சரவர்கள் இப்படிப் பேசினார்கள் என்று ஒரு பத்திரிகையிலே வந்திருக்கிறதே, அப்படி டில்லியிலே காங்கிரஸ் கட்சியிடத்திலே தன்னுடைய கட்சி ஒப்படைக்கப்பட்டதாக சொன்ன ஒரு கருத்து வந்து, அந்தக் கருத்து இதுவரையிலும் மறுக்கப்படாத நிலையில் இது மாநில சுயாட்சிக்கு அதிகஅதிகாரம் கேட்பதற்கு ஏற்றது தானா என்ற கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே அந்த அடிப்படையில் மாநில சுயாட்சி என்ற பொது அடிப்படையில் இந்த மாநிலத்திலே உள்ள எல்லாக் கட்சிகளும் கூட ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு அடிப்படையான கொள்கையை தங்களுடைய நோக்கத்திற்காக இழிவு செய்யும் முறையில் அதற்காக அரசியல் கட்சியினுடைய நடவடிக்கையை எடுத்து வைத்து, அதை கொச்சைப் படுத்துவதை அல்லது அதனுடைய தரத்தை தாழ்த்துவதை அறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைக்கு பலவீனம் ஏற்படுத்துவதை இந்த அவையிலே தொடராமல் இருக்க தாங்கள் ஆணையிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவரே டில்லிக்குப் போயிருந்த போது பாரதப் பிரதமரோடு அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. இந்திரா காங்கிரசுடன் இணைத்து விடுவோம் என்றோ அல்லது கூட்டு சேர்த்து விடுகிறோம் என்றோ அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள்—தெளிவாக வெளியே பேசினார்கள். பத்திரிகைகளிலெல்லாம் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தேர்தல் கூட்டங்களிலே பேசினார்கள். அதைப்பற்றி நான் பேசவில்லை. கூட்டாவது பொறியலாவது—என்று யார் கேட்டது கூட்டு, கூட்டும் கேட்கவில்லை பொறியலும் கேட்கவில்லை என்று சொன்னார்கள். அமைச்சர் ஆர். வி. அவர்களும் காங்கிரஸ்காரர்களும் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நாங்கள் இதனைப் பற்றிப் பேசவில்லை. எனவே சந்தேகத்தின் அடிப்

படையிலே எழுப்பப்பட்டது. பத்திரிகையிலே அவரவர்கள் விருப்பம்போல் அவர்களுடைய வியூஸ் எழுதினார்கள். வியூஸ் வைத்து பேசுவது ஒன்று பேசுகின்றபோது நடந்தது. **அது நாட்டு மக்களுக்குத் தெரிந்த விவகாரம். சந்தேகத்தின் அடிப் படையிலே வாதம் எழுப்பப்படுவது வேறு, நாட்டின் உண்மையின் அடிப்படையிலே வாதம் எழுப்புவது வேறு.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களின் இந்த விவாதத்தில், அடிப்படையிலே இரண்டு தவறு இருக்கின்றது ஒன்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் தேர்தலுக்காக செய்து கொள்ளக் கூடிய உடன்பாடு காரணமாக ஒரு அரசியல் கட்சி யுடைய கொள்கைகள் கைவிடப்படுவதில்லை. தேர்தலிலே யார் யாரோடு யார் யார் கூட்டு சேர்ந்தாலும் கூட்டு சேருவது காரண மாக கொள்கை கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டால் அன்றி, கொள்கை கைவிடப்பட்டதாக ஆகாது. மற்றொன்று திருச் செந்தூர் இடைத் தேர்தலிலே முதலமைச்சரவர்கள் பேசினார் கள். என்கட்சியுடன்கூட்டு சேர்ந்தாலும் சேராவிட்டாலும் எனக்கு அது பற்றிக் கவலை இல்லை என்று அவர் சொன்னாலும், அல்லது காங்கிரஸ் கட்சியினுடைய அமைச்சர், ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூட்டு சேருவது பற்றி நான் ஒன்றும் கவலைப்படவில்லை என்று அவர் சொன்னா லும் பத்திரிகையிலே திட்டவட்டமாக மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திருமதி இந்திரா காந்தி அவர்களிடத்திலே பேசுகிறபோது இப்படிப் பேசினார் என்று வெளிவந்த கருத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மறுத்து அறிக்கை இன்னும் விடவில்லை. முதல் அமைச்சரைப் பற்றி வந்திருக்கிற கருத்துக்கு திட்டவட்டமாக நான் அப்படிப் பேசவில்லையென்று ஏன் அறிக்கை வரவில்லை என்று கேட்டால்—அப்படி பேசு வதற்கும் இடம் இருக்க வேண்டும்—அதே நேரத்தில் தேர்தலிலே தங்களுடைய கட்சிக்காக ஓட்டுப்பெற வாய்ப்பாகவும் பேச வேண்டும் என்ற காரணந்தாலே தான் அறிக்கை விடவில்லை என்பதை நான் குற்றச் சாட்டாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் பேசு கின்றபோது மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையாரோடு பேசுகின்ற போது அரசியலைப் பற்றி எதுவுமே பேசவில்லை என்று அதற்குப் பிறகு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு கருத்தை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொல்லியது போன்று, தேர்தல் காலத்திலே நம்முடைய நாட்டிலே கூட்டு சேருகின்ற

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



போது, பல கட்சிகள் தேர்தலுக்காக கூட்டு சேருகின்றபோது
கொள்கைகளை விட்டு விடுகின்றன என்றோ, அல்லது கோட்
பாடுகளை விட்டு விடுகின்றன என்றோ பொருள் அல்ல என்ற
அளவில்தான், சென்ற, 20, 25 ஆண்டுக் காலத்திலே நடந்த
கூட்டுக்களைப் பார்ப்போமேயானால், 2 கட்சிகள் சேர்ந்ததன்
காரணமாக ஒரு கட்சி தன்னுடைய கொள்கையை விட்டுவிடு
கிறது என்றோ, அல்லது கட்சிக்கொள்கையை மாற்றிக் கொள்
கிறது என்றோ பொருள் அல்ல என்ற அந்தக் கருத்தை நான்
ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு
முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். அரசியலைப்பற்றி நான் பேசவில்லை. ஒரு
45 நிமிடங்கள் பேசியது மாநிலப் பிரச்சினைகளையும், மற்றவை
களையும் தான் பேசினேன் என்று தெளிவாக எடுத்துச் சொல்லி
யிருக்கிறார்கள். சில பத்திரிகையிலே வந்திருக்கலாம்.
அப்படி வந்ததற்குப் பிறகுதான் பேட்டியிலே குறிப்பிட்டு இருக்கி
றார்கள் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் தெளிவுபடுத்து
கிற முறையிலே சொன்ன சில கருத்துக்களை நான் வரவேற்றா
லும் கூட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெறும்
அரசியல்வாதி அல்ல. ஒரு மாநிலத்தினுடைய முழுப் பொறுப்பை
ஏற்று இருக்கிற, அந்த உரிமையோடு உள்ள ஒரு இடத்திலே
அமர்ந்திருப்பவர். அவர் இப்படிப் பேசினார் என்று பத்திரிகை
யிலே முதல் பக்கத்திலே, மிகப் பெரிய அளவிலே, எக்ஸ்பிரஸ்,
ஹிந்து போன்ற பத்திரிகையிலே வந்த கருத்தை, அப்படிப் பேசிய
தாக பத்திரிகையிலே வந்தக் கருத்தை அகில இந்தியா அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்கத்தை, லட்சி
யத்தை மாசுபடுத்துவதாக இருக்கிற காரணத்தால், இந்தக்
கருத்து உண்மை அல்ல என்றால் அப்படி அறிக்கை விடவேண்டிய
பொறுப்பு ஒரு முதலமைச்சருக்கு உண்டு. மாண்புமிகு முதல்
அமைச்சர் என்ற பொறுப்பு இல்லாமல், வெறும் அரசியல்வாதி
யாக இருந்தால்ஒரு கருத்து தவறாக வந்தாலும் கூட அதைப்பற்றி
அலட்சியப்படுத்தலாம். மாநிலத்தினுடைய முழுப் பொறுப்பிலே
உள்ள முதல் அமைச்சர் அவர்கள் பிரதமரைச் சந்தித்துப் பேசியது
பற்றி வெளியிடப்பட்ட செய்திகளைப் பற்றி, இது ஒரு பெரிய
தவறான கருத்தை உண்டாக்குகின்றது. என்று கருதினால் அதை
மறுத்து இருப்பாரேயானால் நான் கூட அதை வரவேற்று இருப்
பேன் பாராட்டி இருப்பேன். அப்படித் தெரிவிக்காமல் ஒரு பொது
வான நோக்கத்தில் நான் கூட்டுப் பற்றி கவலைப்படவில்லை என்ற
ஒரு கருத்துதான் வந்ததே தவிர, பேசப்பட்டதாக சொல்லப்பட்ட
கருத்துக்கள் சூழ்ச்சிகரமாகவோ, தவறாகவோ பேசப்பட்டது
என்று சொல்லப்பட்டவை மறுக்கப்பட்டு அறிக்கை வந்திருக்கு
மானால் இந்தக்குழப்பம் ஏற்பட்டு இருக்காது.

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் விலைக் கொள்கையால் விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. இது மட்டுமல்லாமல் அவர்கள் எந்தச் செயலைச் செய்தாலும் பாதிக்கப்படுவது மாநில அரசு என்று சொல்லவே நான் வந்தேன். நாம் எல்லாம் இரட்டை வேடத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறோம். இரட்டை நாக்குகளைப் பற்றிப் கேள்விப்பட்டு இருக்கிறோம். ஆனால் மத்திய அரசு இப்போதெல்லாம் இரட்டை நிலையை ஏற்படுத்திக் கொண்டிருகிறது. அதிலே கடைசியாக கெரோசினுக்கு இரட்டை விலை என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாநில அரசு பாதிக்கப்படுகிறது. இரட்டை விலையைக் கொண்டு வந்ததாலே இதிலே பல தவறுகளின் காரணமாக ஊழல்களுக்கு இடம் கொடுக்கிறது. ஆகவே இன்றைக்கு அந்த நிறைவேற்றுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற மாநில சர்க்காருக்கு மிகப் பெரிய பாதகம் ஏற்பட்டு இருக்கிறது. பொது மக்கள் பாதிக்கப்படும்போது அவர்கள் மாநில அரசைப் பார்த்து குறை சொல்ல ஆரம்பிக்கிறார்கள். இதற்கு முழுப் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதை நாம் நிறைவேற்றுகின்றபோது மிக ஜாக்கிரதையாகவும், கண்காணிப்பாகவும் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு இந்த 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து அமர்கிறேன்.

*திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கை தமிழகத்தினுடைய அரசால் எப்போது தாக்கல்செய்யப்படும் என்று தமிழக மக்கள் எல்லாம் பரவலாக எல்லோரும், ஏன் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே எதிர்பார்த்துக் கொண்டு இருந்த நேரம் ஒன்று உண்டு. ஆனால் எதிர்பார்த்த பலன் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

பல கோடி ரூபாயை தமிழ்நாட்டு மக்கள் வரியாக இந்த இரசுக்குத் தருகிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கை மூலமாக அவர்களுக்குத் தமிழக அரசு என்ன தர இருக்கிறது என்பதை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு எல்லாம் ஏமாற்றம் தருகின்ற வகையில் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் விவசாயிகளுக்கோ, அல்லது அரசாங்க ஊழியர்களுக்கோ, அல்லது ஆசிரியர்களுக்கோ, அல்லது





தொழிலாளர்களுக்கோ எந்த விதமான சலுகைகளையும், நன்மைகளையும் அரசு அறிவிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே வறட்சியைப் பற்றிக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே கடந்த 1981-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பருவ மழை தவறியதன் காரணமாக வறட்சி ஏற்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக வடாற்காடு மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சி நிலவி இருக்கிறது. அதிலும் குறிப்பாக, என்னுடைய தண்டராம்பட்டு தொகுதி மிகவும் கடுமையான முறையில் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பத்திரிகை நிருபர்கள் தினமணி, இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினகரன்—போன்ற பத்திரிகை நிருபர்கள் என்னுடைய தொகுதியில் பல கிராமங்களைச் சுற்றிப்பார்த்து குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, தண்ணீர் குடம் 20 பைசா வீதம் விற்கப்படுகிறது என்றெல்லாம் கூட தகவல்களைச் சேகரித்து செய்திகளை வெளியிட்டு இருக்கிறார்கள்.

பிழைப்பதற்காக வேலை தேடி ஒவ்வொரு கிராமங்களில் இருந்தும் 50 பேர் முதல் 300 பேர் வரையில் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கருநாடக மாநிலங்களுக்கும், பம்பாய் போன்ற மாநிலங்களுக்கும் சென்று விட்டார்கள் என்றும் செய்திகள் போட்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழக அரசு இதற்காக என்ன செய்து இருக்கிறது? ஒரு ஆண்டு முடியும் தருவாய் வரையில் மழை பெய்யவில்லை என்றால், அக்டோபர் நவம்பர் மாதங்களில் மழை பெய்யவில்லையென்றால், உடனடியாக டிசம்பர் மாதத்திலேயே இந்தந்தப் பகுதிகளில் கடுமையான வறட்சி இருக்கிறது என்று சொல்லி, அதனை வறட்சிப் பகுதியாக அறிவித்து இருக்கவேண்டும். ஏன், வறட்சி என்று அறிவிக்கவில்லை? வறட்சி என்று அறிவித்தால்தான் அந்தப் பகுதியில் சில பல நன்மைகளைச் செய்ய முடியும்.

விவசாயிகளுக்கு விவசாயம் செய்யத் தண்ணீர் இல்லை என்று சொன்னாலும், மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக மின்சாரமும் இல்லை. ஆங்காங்கு கூலி வேலை செய்து பிழைப்பதற்கு இதனால் கூலி வேலை கூட கிடைக்கவில்லை. அப்படியே ஏதேனும் கூலி வேலை செய்து சிறிது பணம் சம்பாதித்தாலும், அவன் அதன் மூலம் வாங்கிச்சாப்பிட அரிசி கூட கிடைக்கவில்லை. மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. இந்த மாதிரியான பிரச்னைகள் என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் இருக்கின்றன. உண்மையை சொல்லப்போனால், வடாற்காடு மாவட்டம் முழுவதும் இத்தகைய நிலைமை இருக்கிறது.

நிலைமைகள் இப்படி இருக்கின்ற நேரத்தில், ஆளும்
கட்சித்தரப்பில் உள்ளவர்கள் சொல்கிறார்கள், எங்கள் கட்சி
யைச் சேர்ந்தவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்ட
வில்லை என்று. பாராட்டவேண்டும் என்று எந்த அடிப்படை
யில் எதிர்பார்க்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.
தமிழகத்திலே உள்ள நிலைமைகளைச் சுட்டிக்காட்டாமல்
எப்படி இருக்க முடியும். ஆகவே, பாராட்டவேண்டும் என்று
நீங்கள் எதிர்பார்ப்பது, நியாயம் இல்லாத ஒன்று என்பதை
நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். இந்த
ஆட்சியின் மீது குறைகளைச் சொல்கிறீர்களே என்று இங்கே
பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். நான்
அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். உண்மையிலேயே தற்போ
துள்ள நிலைமைகளில் நீங்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை
எடுத்து அதற்குரிய வகையில் செயல்முறைகளைச் செயல்படுத்தி
யிருந் ருப்பீர்களானால், நாங்கள் எல்லோருமே அதைப் பாராட்
டக் கடமைப்பட்டு இருக்கிறோம். நீங்கள் எடுக்கவேண்டிய நட
வடிக்கைகளை காலாகாலத்தில் எடுக்கத் தவறிய காரணத்தால்
தான், நாங்கள் அவைகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய நிலைமை
இருக்கிறது. எதிர்கட்சி வரிசையில் இருப்பவர்கள் என்ன தவறு
செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டித்தான் ஆகவேண்டும்.
ஆகவே, அதற்காக நீங்கள் வருத்தப்படுவதில் நியாயமில்லை
என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

விவசாயிகள் தங்களுடைய சொந்த நிலங்களில் சாதாரணமாக
விதைப்பொருள்களைக் கூட பயிர் செய்ய முடியாத நிலையில்
இருக்கிறார்கள். எல்லா நிலங்களும் காய்ந்து கிடக்கின்றது.
ஆகவே, விவசாயிகளுக்கு விதைகள் கொடுப்பதற்கும்,
ந்து கொடுப்பதற்கும்—அவைகள் மானிய விலையில் கொடுப்ப
தற்கும் அரசாங்கம் முன் வரவேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி மானியவிலையில் கொடுப்
பதோடுமட்டுமல்லாமல், அவர்களுக்குத் தகுந்த இழப்பீட்டையும்
தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்திற்
காக பல கோடி ரூபாய் செலவு செய்கிறார்கள். இது வரவு
இல்லாமல் செலவு செய்வதாக இருக்கிறது. அப்படிச் செய்
கின்ற இந்த நேரத்திலே, விவசாயிகள் கடுமையான பஞ்சத்தால்
பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில், அவர்களுக்கு மானியம் அளிக்
கவும் இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மின்சாரம் தட்டுப்பாடாக இருக்கிறது. விவசாயி
களுக்கு எல்லாம் ஏற்கனவே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, 90
நாட்களுக்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட இருப்பதால்,
மோட்டார் வாங்கி வைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டதால்,
அவர்கள் எல்லாம் காலாகாலத்தில் மின் இணைப்பு பெறுவதற்காக





மோட்டார் வாங்கி வைத்து இருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இன்றைக்கு ஒவ்வொருவர் வீட்டுத் திண்ணையிலும் வைக்கப்பட்டுள்ளன. இப்போது அறவே மின் இணைப்புத் தரக்கூடாது என்று அறிவித்து இருக்கிறீர்கள். இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, விவசாய உபயோகத்திற்காக மட்டும் மின் இணைப்பு கொடுக்க அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மின்வெட்டு 100 சதவீதம், 75 சதவீதம் என்று இருப்பதால், தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். தொழிற்சாலைகள் எங்கேயும் செயல் பட முடியவில்லை. இதன் காரணமாக தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மாற்று உதவி செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க ஊழியர்களைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு வரி கூட குறிப்பிடப்படவில்லை லஎன்பதை நான் மெத்த வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். 1981-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் என்று நினைக்கிறேன்—அரசாங்க ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தின் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசாங்க ஊழியர்களை அழைத்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு இதுவரையில் அரசாங்க ஊழியர்களை அணுகி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், அவர்களுக்குள்ள குறைகளை நீக்குவதற்கும் தமிழக அரசு எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதுவரையில் அவர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லையென்றாலும், அவர்கள் தற்போது பல கோரிக்கைகளை அரசின் முன் வைத்துக் கேட்டுக்கொண்டு இருப்பதால், அவைகளை நிறைவேற்றித் தருவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோருக்குக் கூட மாதச்சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்க ஊழியர்களுக்கு உயர்ந்துள்ள தற்போதுள்ள நிலைமையில், அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற அகவிலைப்படியை உயர்த்தித் தருவதும், அவர்களுக்கு பல சலுகைகளை நாம் அறிவிப்பதும் முறையாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அவர்களை அழைத்துப் பேசுவது தவறு என்று அரசு கருதக் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். அவர்களுக்கு உதவிகரமான வகையில் அரசாங்கம் எந்தத் திட்டத்தையும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடாமல் இருப்பதை நான் மிகுந்த வருத்ததோடு இந்த அவையின் முன் வலியுறுத்தி மீண்டும் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[1983 மார்ச் 9

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : மாண்
புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்
கிறார்கள். குற்றச்சாட்டைச் சொல்லும் போது ஆதாரத்தோடு
சொல்லுங்கள்; இல்லை என்றால் சொல்லவேண்டாம்.

திரு. த. வேணுகோபால் : மாற்றுத் தலைவரவர்களே,
ஆதாரம் வேண்டுமென்று கேட்டால், தேவையான ஆதாரங்களை
கொடுக்க நான் தயாராக இருக்கிறேன், அதற்கு நான் பொறுப்
பேற்றுக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆதாரம் வேண்டு
மென்றால் என்பதல்ல. இந்த அவையில் பேசும்போது, குற்றச்
சாட்டுகளைச் சொல்லும்போது ஆதாரத்தோடுதான் சொல்ல
வேண்டும். வேண்டுமா, வேண்டாமா என்று அல்ல. ஆதாரம்
இல்லாமல் பேசக்கூடாது.

திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவரவர்களே, அமைச்
சரவர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால்
நேற்றைக்கு ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஆதாரம்
தரவேண்டும் என்றார்கள் ; ஆதாரம் தருகிறேன் என்று சொன்
னார்கள் ; நாவலர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நான் திரு. துரை
முருகன் அவர்களைக் கேட்கவில்லை ; குற்றச்சாட்டுச் சொல்
கிறவரைக் கேட்கிறேன். ஒருவர் ஒத்துக்கொண்டார். நீங்கள்
ஒத்துக்கொள்ளவில்லை என்பது சரியல்ல. விதிமுறைகளின்படி
இந்த அவையிலே ஆதாரத்தோடு பேசவேண்டுமென்று சொல்
கிறேன்.

திரு. துரைமுருகன் : அவர், பொறுப்பேற்றுக்கொள்கிறேன்
என்று அவை முன்னால் சொல்லியிருக்கிறார். பொறுப்பேற்றுக்
கொள்கிறேன் என்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் பொறுப்போடு
சொல்கிறேன்: பொறுப்போடு பதில் வரவேண்டும். ஆதாரம்
இல்லாமல் பேசுவதை நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால் ):
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றச்சாட்டு கூறிய மாண்புமிகு
உறுப்பினரிடத்தில் ஆதாரம் காட்டுங்கள் என்று கேட்கிற கார
ணத்தால், திரு. துரைமுருகன் குறுக்கிட்டுப் பேசுவது முறையல்ல,



1983 மார்ச் 9]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நான் சொல்லிய குற்றச்
சாட்டுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்கிறார்கள். நான்
பொறுப்போடுதான் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறேன்.
அதை நிரூபிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன்.
அத்தகைய நிலைமைகள் இருக்கின்றன என்பதை வலியுறுத்திக்
குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, கிராம அதிகாரிகளை வேலை நீக்கம் செய்தீர்
கள். புதிதாக ஆட்களை நியமிப்பதற்காக, தேர்வு நடத்தி,
இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், இன்னும் அவர்களை
ஏன் பதவியில் நியமனம் செய்யவில்லை என்று எனக்குத் தெரிய
வில்லை. அதற்கு என்ன காரணம்? அதைத் தடுத்து நிறுத்தும்
சக்தி எது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்திற்காக இந்த நிதி
நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டு
உள்ளது. பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டவை இடிந்து
கிடக்கின்றன. பல இடங்களில் கட்டி முடிக்கப்படாமல் இருக்
கின்றன. இவற்றையெல்லாம் உடனடியாக நிவர்த்தி செய்ய
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், எங்க
ளுடைய வடாற்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறி
விக்க வேண்டும் என்று பல நேரங்களில் கேட்கப்பட்டிருந்தும், அது
அறிவிக்கப்படாமல் இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டு
இருப்பதால், இந்த நிதிநிலை அறிக்கை செவிடன் காதில்விழுந்த
சங்குபோல் இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லி என் உரையை
முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தமிழக முத
லமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களின் சாதனைப்பட்டியல்
களைக் கொண்ட நிதிநிலை அறிக்கையைத் தந்து இருக்கின்ற
நிதியமைச்சர் நாவலர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக்
கூறி, என் உரையைத் தொடங்குகிறேன்.

ஏழை மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்கள்
உபயோகிக்கும் பொருள்கள் மீது வரி போடாத அளவில் இந்த
நிதிநிலை அமைத்து இருப்பதற்காக என்னுடைய மகிழ்ச்சியை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். பருவ மழை பொய்த்த நேரத்
திலும், விளைபொருள்களின் உற்பத்தி குறைந்த நேரத்திலும்,
எந்த ஒரு நிலையிலும் தமிழக மக்களைப் பட்டினி போட விட
மாட்டேன், பட்டினி கிடக்க விடமாட்டேன் என்று புரட்சித்
தலைவர் உறுதி அளித்ததற்கிணங்க இந்த நிதிநிலை அறிக்கை

[திரு. த. வேணுகோபால்] [1983 மார்ச் 9

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு
வரிச்சலுகை அளிக்கப்பட்டு, 26 கோடி ரூபாய் அளவிற்கு
புதிய வரிகள் போடப்பட்டுள்ளன. இந்த 1 கோடி ரூபாய்
வரிச்சலுகை என்னென்ன பொருள்களுக்குச் சொல்லி
யிருக்கிறீர்கள் என்றால், டயர், ட்யூப் போன்ற
பொருள்களுக்கும், மரவள்ளிக்கிழங்கு மாவு, சவ்வரிசி
போன்ற பொருள்களுக்கும் மற்றும் சில பொருள்களுக்கும் கொடு
த்து இருக்கிறீர்கள். ஆனால் புதிய வரிகள் என்ற அடிப்படை
யில் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பல பொருள்களுக்கு
போட்டு இருக்கிறீர்கள். அதன் காரணமாக இன்றைக்கு தமிழக
மக்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்க நேரிடும் என்பதை இந்த
அரசு உணர்ந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள வறட்சி நிலையைப் பற்றி ஆய்வு செய்
வதற்காக, மதிப்பீடு செய்வதற்காக, மைய அரசு குழு வந்
திருந்தது. அது வடாற்காடு மாவட்டத்திற்கு வந்தது. வடாற்
காடு மாவட்டத்தில் கலசப்பாக்கம் தொகுதியில் எரும்பூண்டி,
நார்த்தாம்பூண்டி, மங்கலம் போன்ற இடங்களில் சுற்றிப்பார்வை
யிட்டது. என்னுடைய தொகுதியான தண்டராம்பட்டு தொகுதி
யையும் பார்வையிட இருந்தது. இருந்தாலும், நேரம் இல்லாத
காரணத்தால், என்னுடைய தொகுதியில் உள்ள கிராமங்களைப்
பார்வையிடவில்லை. இருப்பினும், அந்தக் குழு திருவண்ணாமலை
யில் உள்ள சாத்தனூர் திட்ட விடுதியில் அமர்ந்து எங்களிடம்
விசாரணையை நடத்தியது. நானும், திருவண்ணாமலை மற்
றும் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த குழு
வைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்லி
யிருக்கிறோம். என்னுடைய தொகுதியில் மிகவும் கடுமையான
வறட்சி ஏற்பட்டுள்ளது என்பதை அவர்களிடமும் சொல்லியிருக்
கிறேன். இந்த மாமன்றத்தின் மூலம் இந்த அரசுக்கும் அதனைத்
தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தமிழகத்தில் தற்போது
ள்ள வறட்சி நிலையைக் கருத்தில் கொண்டு, சில குறிப்பிட்ட
மாவட்டங்களையோ அல்லது அந்த மாவட்டங்களில் உள்ள குறிப்
பிட்ட தொகுதியையோ வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டு
மென்று மத்தியக் குழுவிடம் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால்
தமிழக சர்க்கார் ஏன் இதுவரையில் தமிழகத்தை, குறிப்பாக
வடாற்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க
வில்லை? வறட்சிப் பகுதி என்று அறிவிப்பதில் ஏன் கால தா
மதம்? அறிவித்தால் தானே பல நன்மைகளை விவசாயிகள்
பெறமுடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டம். பல கோடி ரூபாய் செலவில்
இந்த சத்துணவு போடப்படுகிறது. அதனால் பல வேலைகள்,
அரசாங்கத்தின் சார்பிலே செய்யப்படுகிற வேலைகள் எல்லாம்



1983 மார்ச் 9] [திரு த. வேணுகோபால்]

'சத்து இன்றி' போய்விட்டன. காரணம், ஊரகத் தொழில்
துறை, நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை போன்ற
பல்வேறு துறைகளிலும் செய்யப்பட்ட வேலைகளுக்கு எல்லாம்
இன்றுவரையில் அவர்களுக்கு உரிய பில் தொகை கொடுக்கப்
படவில்லை. ஏன் கொடுக்கப்படவில்லை என்று கேட்டால்
நிதி இல்லை; ஆகையால் கொடுக்கப்படவில்லை என்று அதிகாரி
கள் சொல்கிறார்கள். ஏன் நிதி இல்லை என்று கேட்டால் அந்
தப் பணம் எல்லாம் சத்துணவுத் தி டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்
கிறது என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாற்றுத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள்
நெடுஞ்சாலைத் துறையிலும் ஊரகத வளர்ச்சித் துறையிலும்
செய்யப்பட்ட பல வேலைகளுக்கு இன்னும் பணம் கொடுக்கப்பட
வில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். என்ன
வேலைகள், எப்போது செய்யப்பட்ட வேலைகள், யார் யாரு
க்கு பணம் கொடுக்க வேண்டும், எவ்வளவு பணம் கொடுக்க
வேண்டும் என்ற விவரங்களை எல்லாம் தெளிவாக எடுத்துச்
சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்
கும். இல்லை என்றால் இது 'காற்றிலே கலந்த கீதமாக'ப்
போய்விடுவதாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவிக்கக் கட
மைப்பட்டிருக்கிறேன்.

**திரு. த. வேணுகோபால்:** மாற்றுத் தலைவரவர்களே, குறி
ப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொல்கி
றார்கள். திருவண்ணாமலை நகரிலே நெடுஞ்சாலைத் துறை
அலுவலகம் மூலம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்
பட்ட பணிகள் எல்லாம் வேலைகள் முடிக்கப்பட்டு, 4, 5 மாதங்
கள் ஆன பின்னாலும் அவர்களுக்கு உரிய பில் தொகை
வழங்கப்படவில்லை. அதைப்போன்று பொதுப்பணித் துறையி
லே........

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ;** மாற்றுத் தலைவர்
அவர்களே, நீங்களும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.
ஆனால் மாண்புமிகுஉறுப்பினர் வேணுகோபால் அவர்கள் குற்றச்
சாட்டைச் சொல்லும் போது ஆதாரப்பூர்வமாகச் சொல்ல
வேண்டும். ஆதாரம் இல்லாமல் இந்த அவையிலே குற்றச்சாட்
டுக்களைச் சொல்லக்கூடாது. அதை இந்த அவை ஏற்கக்கூடாது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, திரு. வேணு
கோபால் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் என்னென்ன பணி
கள் செய்யப்பட்டன? யார், யாருக்கு பணம் கொடுக்க வேண்
டும்? எவ்வளவு பணம் பாக்கி இருக்கிறது என்பதை ஆதாரத்
தோடு சொல்ல வேண்டும். (திரு பெ. சு. திருவேங்கடம் எழுந்
தார்) நான் திருவேங்கடம் அவர்களைக் கேட்கவில்லை; குற்ற
சாட்டை சொல்லுகின்ற திரு. வேணுகோபால் அவர்களைத்தான்
கேட்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1983 மார்ச் 9

அளிக்கப்பட்டு இருப்பதற்காக நான் மாண்புமிகு நிதி அமைச்சர்
அவர்களுக்கு உளமாற பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்,
எந்த அளவிற்குப் பாராட்ட வேண்டிய கருத்துக்கள் இந்த நிதி
நிலை அறிக்கையில் இருந்தும்கூட, பாராட்ட வேண்டிய எத்
தனையோ அம்சங்கள் இருந்தும்கூட, அவைகளைப் பாராட்ட
மனம் இல்லாமல் வழக்கம்போல் எந்த அளவிற்குக் குற்றங்களை
குறைகளை, சொல்ல முடியுமோ அந்த அளவிற்கு எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள் என்றால் அவைகள்
எப்படி இயங்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள்
எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ''எதிர்க்கட்சி என்பது ஆளும்
கட்சி நல்லது செய்யும்போது பாராட்டுவதும், தவறுகளைச் செய்
கிறபோது அதை எடுத்து சுட்டிக்காட்டுவதும் இருக்கின்ற சூழ்
நிலைகளில்தான் எதிர்க்கட்சிகள் செயல்பட வேண்டும்'' என்று
பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை நான்
இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்ட பிறகு
எந்த அளவிற்குப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பெற்று, ஏழை
எளிய மக்கள், வறுமையில் வாடும் மக்கள் ஆகியோர் பயன்பெற்று
இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.
அந்தவகையில் இந்த அரசின் மீது குற்றங்களைச் சொல்கிறபோது
இந்த நல்ல காரியங்களுக்காக அதைப் பாராட்ட வேண்டிய
கடமையும் அவர்களுக்கு இருக்கிறது. அதைச் செய்யாமல் இருக்
கிறார்கள் என்பதை இந்த மாமன்றம் புரிந்துகொள்ள வேண்டும்
என்று நான் கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் வறட்சி ஏற்படுவதற்கும், வெள்ளம் ஏற்படு
வதற்கும் இந்த அரசு ஒரு திறமையற்ற அரசு, அதனால்தான்
இப்படியெல்லாம் ஏற்படுகிறது என்கிற அளவில் இங்கே கருத்துக்
களை வெளியிட்டுள்ளார்கள். புரட்சித் தலைவர் அவர்கள்
திறமை வாய்ந்த ஒரு தலைவராக இருக்கிற காரணத்தாலும்,
அவருடைய அமைச்சரவையிலே அறிவாற்றல் நிரம்பிய அமைச்
சர்கள் பொறுப்பேற்றிருக்கிற காரணத்தாலும், ஏழை எளிய
மக்களுக்குத் தங்களால் இயன்ற அளவு உதவி செய்ய வேண்டு
மென்று நினைக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்
டிருப்பதால், இந்த அரசு ஒரு நல்ல இயக்கமாகச் செயல்பட்டுக்
கொண்டிருப்பதாலும், இன்றையதினம், இந்த நாட்டு மக்களுக்கு
நல்ல பல உதவிகளை செய்துக் கொண்டு வருகிறது. இந்த
அரசு, என்று சொன்னால் அது மிகையாகாது என்று சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 9] [திரு. என். விஜயபாலன்]

எதிர்க்கட்சிக்காரர்கள், இந்த தமிழகத்திற்கு தேவையான திட்டங்களை எடுத்துச் சொல்வார்களேயானால், அவர்களை நாம் பாராட்டலாம். ஆனால், குறைபாடுகளை எடுத்துச் சொல்கிற அளவுக்கு இந்த அரசு இன்னின்ன திட்டங்களை மேற்கொண்டால், இந்த நாடு முன்னேறும், அல்லது இன்னின்ன திட்டங்களை மேற்கொண்டால் இந்த நாடு வளம் பெறும் என்பது போன்ற கருத்துக்களை ஒருவர்கூட எடுத்துச் சொல்லவில்லை என்பதை, இந்த மாமன்றம் மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள மக்கள் முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மேலும், தமிழகத்தில், பருவமழை பொய்த்ததன் காரணமாக குடிதண்ணீர் பற்றாக்குறையும், வறட்சியும் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அவைகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் தெரிந்த உடனேயே பல்வேறுபட்ட பகுதிகளில், எந்த அளவுக்கு போரிங்குழாய்களையும், மற்றவைகளையும் போட்டு குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டது என்பதை எண்ணி உளமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல வறட்சி ஏற்பட்டு, தமிழகம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்ட போது, வறட்சியை சமாளிப்பதற்காக ஏறத்தாழ 45 கோடியே 63 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, செலவு செய்தது மட்டும் அல்லாமல், மேலும் பலவிதமான திட்டங்களைத் தீட்டி, இந்த வறட்சியைப் போக்குவதற்கான முறையில் அவை எப்படி செயல்பட வேண்டும் என்ற அளவில் இந்த அரசு எடுத்துக்கொண்டு வரும் முயற்சிகளையும், நடவடிக்கைகளையும், நான் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் தஞ்சை மாவட்டம், தமிழகத்தில், விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கும் ஒரு மாவட்டம் என்பதை எல்லோருமே அறிவார்கள். வான் பொய்த்ததன் காரணமாக அங்கே கடுமையான வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதால், அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள், எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை தமிழக அரசு தெளிவாக அறியும் என்று கருதுகிறேன். ஆகவே, தஞ்சை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக—வறட்சி மாவட்டமாக அறிவித்து, தேவையான பணிகளைச் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்வதோடு, தஞ்சை மாவட்டத்தில் பாசன வசதியே இல்லாமல் அல்லல் பட்டுக்கொண்டிருந்த விவசாயப் பெருமக்களைக் காக்க, ஆயிரக்கணக்கான வடிகுழாய் கிணறுகளை அமைத்து ஆவன செய்ததற்கு இந்த அரசை பாராட்டிக் கொள்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1983 மார்ச் 9

அதே நேரத்தில் நான் சார்ந்திருக்கிற பூம்புகார் தொகுதி தரங்கம்பாடி வட்டத்தைச் சேர்ந்தது ஆகும். அந்தப்பகுதி, பெரும்பாலும், கடைமடைப்பகுதி என்று சொல்லப்படுகிற பகுதியாகும். அங்கே விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் அல்லல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த தரங்கம்பாடி வட்டத்தினை வறட்சிப்பகுதி என்று அறிவித்து, அதற்கான நிவாரண வேலைகளைச் செய்யுமாறு மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் மின்சார தட்டுப்பாடு மிகக் கடுமையாக ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையில், பெரும் அளவிற்கு சங்கடங்கள் ஏற்படுவதிலிருந்து தடுப்பதற்காக நடவடிக்கைகளை எடுத்ததோடு அப்படியிருந்தும் கூட, 50,000க்கும் மேற்பட்ட குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க அரசு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டு வருவதைக் குறித்தும், மின் இணைப்பு இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவுக்குத் திட்டத்தைச் செயல்படுத்தியது குறித்தும் நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக முயற்சிகளை பெரிய அளவிற்கு செய்து, பெரிய அளவிற்கு மின் உற்பத்தி திட்டங்களுக்காக, நிதி ஒதுக்கீடு செய்துக்கொண்டிருக்கிற சூழ்நிலையையும் எண்ணிப் பார்க்கிறேன். மேட்டூர் மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும் தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்துவது குறித்தும், வட சென்னையில் மின் உற்பத்தித் திட்டம் போட்டு, இந்தத் திட்டம் அனைத்தும் மத்திய அரசுக்கு அனுப்ப அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, எந்த அளவுக்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து, நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஒரு நாடு வளம் பெற வேண்டுமானால், தொழில் வளம் நிரம்பியதாக இருந்தால்தான், சிறப்புடையதாகவும், மேம்பாடு உடையதாகவும் விளங்கும் என்ற அடிப்படையில், தொழிற்சாலைகளை தொடங்குவதற்காக தமிழக அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் அரக்கோணத்தில் 7 கோடி ரூபாய் செலவில் ஒரு உருக்கு மறு உருளை ஆலையையும், அதே போல 10 கோடி ரூபாய் செலவில் காட்பாடியில் வெடி மருந்து தயாரிப்பதற்கான தொழிற்சாலையையும், அதே போல தூத்துக்குடியில் 60 கோடி ரூபாய் செலவில் இரசாயன உரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும் அமைக்கப்படுவதாகச் சொல்லப்



1983 மார்ச் 9] [திரு. என். விஜயபாலன்]

பட்டிருக்கிறது. இவையெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால், தமிழக அரசு எந்த அளவுக்கு தொழில் வளர்ச்சியிலே கவனம் செலுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.

இவைகளை மேலும் வளம்பெறச் செய்வதன் மூலம், இந்த நாட்டை எப்படிபபட்ட வளமுள்ள நாடாக ஆக்க முடியும் என்பதையும் காட்டுகிறது. அப்படி காட்டுகிற சூழ்நிலையில், மத்திய அரசை உதவிக்காக நாடுகிற சூழ்நிலையில், மத்திய அரசு எந்த அளவுக்கு மந்தப்போக்கு உடைய சூழ்நிலையினையே உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை, இந்த மாமன்றமும் அறியும். இந்த நாட்டு மக்களும் அறிவார்கள். இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு என்ற பிரிவினை கேட்கிற சூழ்நிலையில், சட்டத்தின் மூலமாக பிரிவினைக் கேட்கக்கூடாது என்று வருகிற நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்தக் கொள்கையை கைவிடுகிற நேரத்தில் சொன்னார்கள். '' அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன '' என்ற கருத்தைச் சொன்னார்கள். இதையும் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அதற்கான காரணங்கள் இன்னமும் நிறைவு செய்யப்படாத நிலையில்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இந்த நேரத்திலே தெரிவித்தேன்.

(நண்பகல் 12-00)

தமிழகத்தை ஆளுகின்ற பொறுப்பினை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாடு வளம் பெற வேண்டும் என்பதற்காகவும், இந்த நாட்டை எப்படி மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவும் நம்பிக்கையோடு அரசினை அளித்திருக்கின்ற மக்களின் வாழ்வினை ஒளிமயமாக ஆக்க வேண்டும் என்பதற்காக தன்னால் இயன்ற திட்டங்களைச் தீட்டி செயல்படுகின்ற நேரத்தில் மத்திய அரசு தடையாக இருக்கின்றது என்றால் இந்த நேரத்தில் நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறென். பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட அந்தத் தென்னகம் உருவாக வேண்டும் என்ற வாய்ப்பினை மத்திய அரசு தருகின்றது அல்லது மந்தியிலே இருப்பவர்கள் தருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்காக மாவட்டத் தொழில் மையங்கள் அமைத்து சிறு தொழில்களின் மூலம் ஏறக்குறைய 43 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 33,000 பேர்களுக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு கிடைக்கின்ற திட்டத்தை இந்த அரசு உருவாக்கி இருக்கின்றது. இவ்வாறு வேலைவாய்ப்பினைப் பெருக்கி இந்த நாட்டில் மக்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்ற நிலைமையை மாற்ற

வேண்டும் என்பதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிக்காக நான் உளமாற நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராம வளர்ச்சித் தன்னிறைவுத் திட்டம் என்ற வகையில் இது வரையில் எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத திட்டமாகத் தன்னிறைவுத் திட்டத்தை புரட்சித் தலைவரின் அரசு செம்மையாக நடைமுறைப்படுத்தி இருப்பது எவ்வளவு சிறந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கிராமப் புறங்களில் குடிநீர்ப் பிரச்சினையையும், சாலை வசதி இல்லாமல் இருக்கின்ற பிரச்சினைகளையும், ஆதி திராவிட மக்களுக்கு இடுகாட்டிற்குச் செல்லக்கூடிய பாதை இல்லை என்ற பிரச்சினைகளையும் தீர்க்கின்ற வகையில் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகச் மிக சிறப்பாகச் செய்திருக்கின்றது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராம வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி குடிநீர்ப் பிரச்சினைகளைக் கவனித்த இந்த அரசின் கவனத்திற்கு ஒரு வேண்டுகோளையும் பணிவோடு வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே மீனவர்களும், ஆதி திராவிட சமுதாயத்தினரும் வாழ்கின்ற சந்திரபாடி என்ற கிராமம் இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் அங்கே போக்குவரத்துக்கு இடைஞ்சலாக ஒரு மதகு இருக்கின்றது. 5 இலட்சம் ரூபாய் செலவிலே அது அகற்றப்பட வேண்டும். இந்த நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதலாக அது ஒரு தனித் தீவு போன்று இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலைமையில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மக்கள் குடிநீர்ப்பஞ்சம் இல்லாமல் வாழவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியினைப் பொறுத்தவரையில் பல் வேறிடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயங்காமல் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொன்னபோது பதில் செல்கின்ற அரசு அலுவலர்கள் அவை சரியாக இயங்குகின்றன என்றுதான் சொல்கிறார்களே தவிர இயங்காத சூழ்நிலைகள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன-

அடுத்து, கிராமப்புற மக்களுக்காக, கிராமப்புற மகளிருக்காக பொதுக் கழிப்பறைகள் கட்டுவதற்கு 22 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டு செயல்படுத்துகின்றவகையில் ஒரு சிறப்பான திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்





கின்ற மக்கள் பொதுக் கழிப்பறைகள் இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆங்காங்கே உள்ள தோழர்களுக்கு நன்கு தெரியும். எனவே, அப்படிப்பட்ட நிலைமையில் இந்தத் திட்டம் கொண்டு வந்ததை உளமாற பாராட்டுகிறேன்.

அடித்து, சத்துணவுத் திட்டத்தை மக்கள் எந்த அளவுக்குப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும். ஆனால், அதே நேரத்தில் சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கல்விக் கூடங்கச்ளை சமையல் கூடமாக மாற்றுகிறார்களே என்டு மாற்றுக் கட்சியிலே இருப்பவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். அந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலம் எந்த அளவுக்கு எதிர்காலத்தில் குழந்தைகள் கல்வி வளர்ச்சி பெற்று சிறப்புறுவார்கள் என்பதை நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், குறை சொல்ல வேண்டும் என்பதற்காகவே இந்த அரசு போட்ட நல்ல காரியங்களை . . . . (மணியடிக்கப்பெற்றது. திரு. இல. பலராமன் பேச அழைக்கப்பட்டார்.)

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் மாற்று தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் 1983—84-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை இங்கே ஒரு ஆண்டு அறிக்கையாக இந்த அவையில் மட்டுமல்லாமல் மக்கள் மத்தியிலேயும் வைத்து இருக்கிறார்கள் என்பதை மிக்க வருத்தத்துடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே ஒரு தெளிவான கொள்கையோ அல்லது மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றைய வசதிகளைச் செய்து தருவதற்கான சூழ்நிலையோ இருக்கின்றதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூற முடியும். இது பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கிறது. ஏறத்தாழ 159.55 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறை பட்ஜெட்டாக இன்றைக்கு இதை வைத்து இருக்கிறார்கள். இது எதிர்காலத்தில், நடப்பு ஆண்டில் எங்கு கொண்டுபோய் விடும் என்ற ஒரு கேள்வியைத்தான் எழுப்ப வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறோம். 1983-ஆம் வருடம் மார்ச்சில் 89 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறையாகவும் 1983—84 மார்ச்சுக்குள் 95.53 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறையாகவும் இருக்கும். 184.53 கோடி ரூபாய் அளவுக்கு 1984-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாளில் பற்றாக்குறை இருக்கும் என்று அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். இதற்கான வரி 26 கோடி ரூபாய் அளவுக்கு போட்டிருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் அளவுக்கு சலுகையும் இன்றைக்கு போட்டிருந்தாலும் .168 கோடி ரூபாய் அளவுக்கு பற்றாக்குறை இருக்கக்கூடிய ஒரு நிலைதான் இன்றைக்கு இருக்கிறது. அந்த பற்றாக்குறையை எப்படி சரிசெய்வோம் என்று ஒரு விளக்கமும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்து இருக்க வேண்டும். ஆனால்

[திரு. இல. பலராமன்] [1983 மார்ச் 9

கூட கிடைக்காத நிலை இருக்கிறது. எங்கே அரிசி செல்கிறது ? நீங்கள் கொள் முதல் செய்த அரிசி எங்கே சென்றது ? என்ற கேள்விகள் மக்கள் மத்தியிலே எழுகின்றன.

இன்றைக்கு வறட்சியாலும் வறுமையாலும் மக்கள் வாடிக் கொண்டிருக்கிறபோது கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், இந்த நிலையைப்போக்க வேண்டும் மென்றால்தெளிவானஉணவுகொள்கையைமேற்கொள்ளவேண்டும் ஒருகோடியே17இலட்சம் குடும்ப அட்டைகளுக்குவிநியோகம்செய்வதற்கான நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேகடந்த மாதத்திலேஎன் தொகுதியிலே3 கிலோ அளவுக்குத்தான் கொடுக்க முடிந்தது. அதுவும்200, 300 கார்டுக்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள், மீதம் உள்ளவர்களுக்கு இல்லையென்று சொல்லிவிட்டார்கள்,என்ற நிலை வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி கொடுக்க முடியவில்லையென்றாலும் கேழ்வரகு, கம்பு போன்ற தானியங்களையாவது வழங்குவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தி இருக்கிறீர்களா என்றால் இல்லை. அதற்கான விளக்கமே இல்லை. நீங்கள் அரிசியைக் கேரளாவிற்கு ஏற்றினீர்கள் அது வேறு பிரச்சினை, அரிசியை தனிநபர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது வேறு பிரச்சினை. ஆனால் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசிற்கு இருக்கிற கடமை என்ற முறையில் அதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும். மத்திய அரசு 5 ஆயிரம் டன் அரிசியும், 5 ஆயிரம் டன் கோதுமையும் வழங்கியிருக்கிறது என்று நாடாளுமன்றத்திலே கூறியிருக்கிறார்கள். அதையாகிலும் ஒழுங்காகப் போடுகிறீர்களா என்ற கேள்விதான் எழுகிறது. இதையாகிலும் நல்ல முறையிலே விநியோகித்து நாட்டு மக்களை பஞ்சத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருவமழை பொய்த்துவிட்டது என்று கூறுகிறீர்கள். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக பருவமழை பொய்த்துவிட்டது என்பது நமக்கெல்லாம் தெரியும், இந்த ஆண்டு 3 ஆவது ஆண்டாகும், பொய்த்திருக்கிறது, அப்படிப் பொய்த்துவிட்ட நிலையில் என்ன செய்யப்போகிறீர்கள் என்று பார்த்தால் வட ஆற்காடு மாவட்டத்திலே மாடுகளுக்கு தீவனமே இல்லாமல் இருக்கிறது. தீவனத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? பல கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மாடுகளுக்குத் தீவனம் தேவை என்ற உணர்வோடு வெளி மாநிலங்களிலிருந்து தீவனத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள், அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. வறட்சிப் பணிகள் வேகமாக நடைபெறுகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை........



1983 மார்ச் 9]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வறட்சியால் மாடுகள் மிகவும் அவதிப்படுகின்ற சூழ்நிலையில் இருந்துகொண்டு இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வறட்சி நிலையை முன்னிட்டு பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலிருந்து கால்நடைகளுக்குத் தேவையான தீவனத்தைப் பெற ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைக் கூறினார்கள். ஏற்பாடு என்பதற்காக மட்டும் நன்றியைச் சொல்கிறேன். ஆனால் என்ன ஏற்பாடு என்பது வேறு. மாடு செத்த பிறகுதான் தீவனம் வரும் என்ற அவல நிலை இருக்கக் கூடாது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாடுகள் சாகக் கூடிய நிலையில் இப்போது இல்லை. எங்கேயாவது செத்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும். தீவனத்திற்குக் கண்டிப்பாக இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. இல. பலராமன் :** வட ஆற்காடு மாவட்டத்திலே காய்ந்துபோன கரும்பு சோகையை—மாடு அதை தின்னும் என்பது உங்களுக்குத் தெரியும். பனை ஓலையை தின்னக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் மாடு சாகுமா ? எப்போது சாகும் ? அப்போது நாங்கள் உணவைத் தருகிறோம் என்ற நிலையில் அமைச்சர் அவர்கள் பதிலைத் தருவது நியாயமல்ல........

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் அப்படி பதில் கூறவில்லை. இப்போது மாடுகள் சாகக்கூடிய நிலையில் இல்லை. அவற்றிற்கு தீவனம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. வறட்சியை முன்னிட்டு இந்த அரசு தீவனம் வாங்குவதற்கான ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறது என்று தான் நான் குறிப்பிட்டேன்

**திரு. இல. பலராமன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சிப் பணிகளுக்கான திட்டப்பணிகள் ஏதாவது வேகப்படுத்தப்படுகிறதா என்றால் இல்லையென்றுதான் கூற முடியும். தன்னிறைவுத் திட்டத்தை நிறுத்தி வைத்ததாக முதலமைச்சர் கூறினார்கள். நிதியமைச்சர் அவர்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு நிலையை சொன்னார்கள். முன்னுக்குப் பின் முரணாக, அமைச்சரவையில் நிதியமைச்சர் ஒன்றை

[திரு. இல. பலராமன்] [1983 மார்ச் 9

அவர்கள் தந்து இருக்கிறார்களா என்றால் இல்லை என்றுதான்
பொருள்படுகிறது. ஏதோ இவர்கள் மூடு மந்திரமாக இதை
மறைத்து என்ன திட்டத்தை வைத்து இருக்கிறார்கள்?
எப்படி இதைச் சரிக்கட்ட போகிறார்கள் என்ற நிலை இல்லாத,
ஒரு கொள்கை இல்லாத ஒரு அரசாக இந்த அரசு இருக்கிறது
என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்
கிறேன். இதில் விலைவாசி கட்டுப்பாட்டுக்கு சூழ்நிலை ஏதா
வது இருக்கிறதா, மக்கள் வளர்ச்சிக்கு ஏதாகிலும் நன்மைகள்
இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் பொருள்படு
கிறது. வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டிய நிலையை இந்த
அரசு அளிக்க இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று
தான் பொருள்படுகிறது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும்
அதற்கான திட்டங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும்
இல்லை. வேலைவாய்ப்புக்கான விரிவான திட்டங்கள் ஏதாகி
லும் இருக்கிறதா என்று பார்த்தால் எதுவும் தெளிவான நிலை
யில் இல்லை என்றுதான் நான் கூற முடியும். ஒட்டுமொத்தமாக
தொழில் வளர்ச்சிக்கு ஏதாவது ஆக்கபூர்வமான திட்டங்களை
இவர்கள் வைத்து இருக்கிறார்களா என்று பார்த்தால் எதுவும்
இல்லை என்றுதான் கூறமுடியும். ஆனால் ஒட்டுமொத்தமாக
இதில் ஒரு பெரிய விமர்சனத்தை, தான் செய்யும் தவறை
மறைப்பதற்கு மத்திய அரசு, மத்திய அரசு என்று ஒன்றை
கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றை கொச்சையாக கூறுவார்
கள் ''ஆடமாட்டாதவர்களுக்குக் கூடம் கோணல்'' என்ற
முறையில் நீங்கள் உங்கள் நிதிநிலை அறிக்கையில் மக்களுக்கு
என்ன செய்கிறீர்கள் என்று பார்த்தால் எதுவும் இல்லை என்று
நான் கூற முடியும். ஆடமாட்டாதவர்கள் கூடம் கோணல் என்று
கூறிக்கொண்டு இருக்கிறீர்களே தவிர நீங்கள் திட்டமிடவில்லை,
என்று கூறமுடியும்.

தனிநபருடைய வருமானம் தமிழ்நாட்டில் நாளுக்கு நாள்
குறைந்துகொண்டிருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில், கடந்த
காலங்களில் 1.88லிருந்து இன்றைக்கு 0.66 என்று அளவுக்கு
தனிநபருடைய வருமானம் குறைந்து இருக்கிறது என்று கணக்
கிட்டு இருக்கிறார்கள். தனிநபர் வாழ்க்கை வசதியை உரு
வாக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். அதற்கானத்
திட்டங்கள் ஏதாவது இதில் இருக்கிறதா என்று பார்த்தால்
எதுவும் இல்லை. அகில இந்திய ரீதியில் இன்றைக்கு பார்ப்போம்.
ஆனால் சாதாரண நிலையில் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள
வர்கள் 52 சதவீதம். இவர்கள் தமிழ்நாட்டில் அதிகமாக இருக்
கிறார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில்தான் பிச்சைக்காரர்கள்
அதிகமாக இருக்கிற நிலைமைக்கு பிச்சைக்கார நாடாக
ஆக்கிவிட்டது உங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில்
வன்மையாகச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இதில் இவர்
கள் மேம்படுவதற்கு ஏதாகிலும் திட்டங்கள் இருக்கிறதா என்று
பார்த்தால் எதுவும் இல்லை,



1983 மார்ச் 9] [திரு. இல. பலராமன்]

இந்த நிலையில் வறட்சி வேறு மிக அதிகமாக இங்கே விளையாடுகிறது. அந்த வறட்சியை சமாளித்து மக்களை வாழ்விக்க அவர்கள் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டங்கள் எதுவும் இல்லாத ஒரு ஆண்டு அறிக்கையாக இந்த அறிக்கையை வைத்து இருக்கிறீர்கள் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த வறட்சிக் காலத்தில் பெரிய ஓலம் ஒன்றை இங்கே இட்டுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு அரிசி தரவேண்டும். அதற்காக முதலமைச்சராக இருக்கக் கூடிய நான் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்று இன்றைக்கு ஒரு விளக்கம் இல்லாத, தெளிவு இல்லாத, தெளிவான கொள்கை இல்லாத ஒரு நிலையில் இன்றைக்கு முதலமைச்சர் உட்பட எல்லோரும் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு அரிசி பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அதை எப்படி சமாளிக்கப்போகிறீர்கள் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே உணவு அமைச்சராக இருக்கிறார். அவர் நவம்பர் மாதம் என்று கருதுகிறேன் குறுவையை நாங்கள் 2 இலட்சம் டன் அளவுக்கு கொள்முதல் செய்து இருக்கிறோம் என்று திட்டவட்டமாக ஒன்றை அறிவித்தார்கள். சம்பாவில் 6 இலட்சம் டன் அளவுக்கு கொள்முதல் செய்வோம் என்றும் கூறினார்கள். ஆனால் இது பத்திரிக்கை அறிக்கையாகத்தான் இருந்தது. ஆனால் உங்களைப்போல் அல்லாமல் இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு திரு. ராவ் பீரேந்திர சிங் அவர்களும் பார்லிமெண்டிலே ஒரு விளக்கத்தை அங்கே புள்ளிவிவரத்தோடு தருகிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஆனால் இன்றைக்கு வரையில் எந்த புள்ளிவிவரமாவது அவைக்குத் தந்து இருக்கிறீர்களா என்று பார்த்தால் உணவுக் கொள்கையிலே எந்தவித விளக்கமும் வரவில்லை. எவ்வளவு கொள்முதல் செய்திருக்கிறீர்கள், எவ்வளவு கையிருப்பில் இருக்கிறது, எத்தனை மாதங்களுக்கு அது வரும் என்று சொல்லாமல் ஒட்டுமொத்தமாக கூட்டுப்புள்ளியை தருகிறீர்களே தவிர மாதம் 80 ஆயிரம் டன் தேவை, 90 ஆயிரம் டன் தேவை, மதிய உணவுக்கு 15 ஆயிரம் டன் தேவை என்று ஒட்டுமொத்தமாக கூறுகிறீர்களே தவிர நிரந்தரமாக ஏதாவது செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை. பொது விநியோகத்தைப் பொறுத்தவரையில் 1 கோடி 17 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு அரிசி வழங்க வேண்டிய நிலை இருக்கிறது, அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருக்கிறீர்கள், அந்த மக்களுக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? ஒரு மாதத்திற்கு 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லி கிராமங்களிலே பார்த்தால் 1 கிலோ

கூறுகிறார், முதலமைச்சர் ஒன்றைக் கூறுகிறார். தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகிறதா? அதனால் மக்களுக்கு வேலை வாய்ப்பு இருக்குமா? என்பதையெல்லாம் யோசிக்க வேண்டும்.

அடுத்து தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தில் பல நிலைகளில் தவறு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த தவறுகள் ஏற்படும் என்று நீங்கள் ஆளும்தரப்பிலிருந்து கூறினாலும், அதிகமான தவறுகள் இல்லாத நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும். கிராமசேவக்குகள் அதற்கான பொறுப்பானவர்களாக இருந்தாலும், அவர்கள் எடுத்துச் செல்லும் அரிசி, பணம் போன்றவைகள், அவர்கள் வேறு ஒப்பந்தக்காரரிடம் விடுகிறபோது இருக்கிற பிரச்சனை என்ற பரவலான குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அவர்கள் முழுத் தொகையையும் எடுத்துச் செல்கிறார்கள். ஆகவே தேசிய வேலைவாய்ப்புத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தாத நிலை இன்றைக்கு தமிழகத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உணவு உற்பத்தியில் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தநிலையில் இருப்பது எங்களுடைய வட ஆற்காடு மாவட்டம். இந்தமாவட்டம் விவசாயத்திற்கு நிலத்தடி நீரை நம்பியிருந்தாலும், மின்சாரம் வழங்குவதில் மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் என்ன நிலையோ, அதே நிலைதான் இருக்கிறது. மேலும் அதிகமான மின்சாரத்தை இந்த மாவட்டத்திற்கு வழங்கினால் விவசாயிகள் புதிய கிணறுகளை வெட்டியாவது தங்களுடைய சுய தேவையை பூர்த்தி செய்து கொள்வார்கள். புதியதாக கிணறுகள் வெட்டுவதற்கு கடன்கள் வழங்குவதற்கான திட்டம் எதுவும் இன்றுவரையில் இல்லை என்ற நிலையை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கூட்டுறவு சங்க கடனாக இருந்தாலும் இரண்டு ஏக்கருக்குள் வைத்திருப்பவர்களுக்கு கடன் இல்லை என்ற நிலை இருக்கிறது. இரண்டு ஏக்கருக்கு கீழே வைத்திருப்பவர்களுக்கும் கடன் வழங்க வேண்டும். என் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களும் பம்ப் செட் அமைத்து விவசாயம் செய்கிறார்கள். அந்த அளவிற்கு விவசாயிகள் விவசாயத்தில் தீவிரமாக இருக்கிறார்கள். கடுமையாக உழைக்கக்கூடிய விவசாயிகள் இருக்கிற எங்கள் மாவட்டத்தில் மேலும் கிணறு வெட்ட கடன் வழங்க வேண்டும்; ஆயில் என்ஜின்கள் வாங்க கடன் வழங்க வேண்டும்; மின்சார வழங்குவதை மேலும் நீட்டித்துத் தர வேண்டும் என் கேட்டுக்கொள்கிறேன்.





இன்றைக்கு நுழைவு வரி என்று போட்டிருக்கிறீர்கள். நுழைவு வரி என்பது மிகவும் மோசமான நிலையை உருவாக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். அது லஞ்ச ஊழலுக்கு வித்திடும்; அதிகாரிகள் தவறுகளை செய்யக்கூடியவர்களாக ஆவார்கள்; அதை நீக்குவதற்கான திட்டத்தை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். இந்தியாவில் மற்ற மாநிலங்களில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினாலும் இந்த வரி மற்ற மாநிலங்களில் இல்லை என்ற நிலை தான் இன்றைக்கு தெரிகிறது. மத்திய அரசும் இதை நீக்க வேண்டுமென்று ஒரு அறிக்கையை அனுப்பியிருந்தும், நீங்கள் ஏதோ அதை நுழைப்பது என்பது உள்நோக்கம் உடையதாகக் கூட நான் கருதுகிறேன். அந்த வரியை நீக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், உணவுக் கொள்கையில் நீங்கள் நல்ல தீவிரம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த காலங்களில் பலகோடி மதிப்புள்ள பாமோலின் ஆயிலை கண்டுபிடித்தோம். அதற்கான அறிக்கையை சட்டமன்றத்தில் வைத்தோம். அது எங்கே சென்றது? எப்படி சென்றது? என்பது கூட தெரியாத நிலை. நிர்வாகத்தில் நீங்கள் மிகவும் பின்தங்கி இருக்கிறீர்கள். நிர்வாகச் சீர்கேடுகள் மிகவும் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். போக்குவரத்து கழகங்களில் பெரியார் போக்குவரத்துக் கழகமும், பல்லவன் போக்குவரத்துக் கழகமும் சேர்ந்து பல லட்சக் கணக்கான ரூபாய் அளவிற்கு டிக்கட் அச்சடித்தார்கள். வேலூர் நகரில் நாங்கள் குடியிருக்கின்ற பகுதியில் அச்சாபீசை பறிமுதல் செய்தார்கள். அதற்கான சீலை காவல்துறையினர் ஹைதராபாத் சென்று பிடித்து வந்தார்கள் என்றெல்லாம் கூறினீர்கள். அது என்ன ஆனது? இப்படி நிர்வாகச் சீர்கேடுகள் உங்கள் ஆட்சியில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-20)

காவல்துறை நிர்வாகம் இதுகாரும் நன்றாக இருக்கிறதா? காவல்துறை மிக மோசமான நிலைமையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆதிக்க வெறி மிக அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே உங்களுடைய கட்சியின் ஆதிக்கம் மட்டுமல்லாமல், உங்களுடைய அதிகாரிகள் மிக வேகமான நிலைமையில் இருக்கிறார்கள். போளூர் பகுதியிலே மச்சுவா என்ற அம்மையார் இறந்து விட்டார்கள். அவர்கள் சட்டபூர்வம் இல்லாத ஒரு நிலைமையில் அடகுக்கடை வைத்து, பல நகைகளை அடகு பிடித்து வைத்திருந்தார்கள். அந்த நகை

களை எல்லாம் காவல் துறையினர் எடுத்துச் சட்டத்திற்குப் புறம்பான நிலையில் அடகு வைக்கப்பட்டிருந்த அவைகளை —பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளை யார், யாரோ கடன் வாங்க வைத்தார்கள், கடன் வாங்குவது அசிங்கம், அது வெளியே தெரிந்தால் சங்கடம் என்ற நிலைமையில், வைத் தார்கள்.—பணத்தை திருப்பிக் கொடுத்து நகைகளைத் திருப்பிக் கேட்டால் மீட்க முடியாத நிலைமை இன்றைக்குப் போரூரிலே இருந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்டு பிடித்தார்களா என்றால் இல்லை. போலீஸ்காரர்களே பங்கு போடக்கூடிய நிலைமையிருக்கிறது. கடந்த 9 ஆம் தேதி என்று நினைக்கிறேன் அங்கே ஒரு சில அரசியல் கட்சிகள்........

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : போலீஸ்காரர்கள் பங்கு போட்டார்கள் என்று பேசுகிறார்கள். ஆதாரம் இருக்கிறதா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) ; மாண்புமிகு உறுப்பினர் அடுத்துப் பேசுகிறார். அந்த வாய்ப் பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. இல, பலராமன் ; அதற்கு ஆதாரம் இருக்கிறது. இப் பொழுது வேண்டுமென்றால் வாங்கிக்கொள்ளலாம், நமபர் வேண்டுமானால் கொடுக்கிறேன், அச்சடித்துக் கூடக் கொடுச்க முடியும். ஆதாரம் இல்லாமல் பேசுவது என்பது எங்களுடைய வழக்கம் அல்ல என்பதையும் இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

போரூர் பகுதியிலே காங்கிரஸ்காரரை, காவல் துறையினர் நிர்ப்பந்தப்படுத்தி, அராஜக நிலையில் நிர்வாணமாக்கி, தெருத் தெருவாக இழுத்துச்சென்று, கடைசியாக அவர்கள் போட்டிருக் கக்கூடிய வழக்கு பிரிவு 75 நியூசன்ஸ் கேசு என்ற நிலையில் இன்றைக்கு பிரிவு 75 சட்டப்படி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே அராஜகம் இருக் கிறது. என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

செய்யாறிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் காலமானார். அகா மரணம் அடைந்தார் என்ற நிலை இல்லாமல், கொலை செய் யப்பட்டார் என்று பிராது கொடுத்திருந்தும் எதுவும் கண்டு பிடிக்காத நிலையிருக்கிறது, இன்றயதினம் வரை யார் மீதும் வழக்குத் தொடராத நிலையிருக்கிறது,





திருவண்ணாமலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர் மண்ணாங்கட்டி கவுண்டர் என்பவர் மீது சாராயம் காய்ச்சினார் என்று பொய் வழக்கு போட் டிருக்கிறார்கள். அந்த நிலைமையையெல்லாம் பார்க்கும்போது போலீஸ் அத்துமீறல்கள் இன்றைக்கு அதிகமாக இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து, அதனைப் போக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

சர்க்கரை ஆலைகளை, நல்லமுறையில், செம்மையாக நடத்த வேண்டுமென்று நான் தொழில் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள் கிறேன்.

வேலூர் சர்க்கரை ஆலையில் பல ஊழல்கள் பல மோசடி கள் எல்லாம் நடந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் பற்றி சொல்லலாம், நேரமில்லை. அடுத்த வாய்ப்பில் விளக்குவதற்குத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்து, நேரம் வழங்கிய மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது இந்த ஆட்சியிலே நிர்வாகச் சீர்கேடுகள் நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். நான் இந்த நேரத்திலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அவரைப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், உங்களுடைய ஆட்சியிலே, அசாமிலே நடைபெறுகின்ற நிர்வாகச் சீர்கேட்டைப் போல, ஆயிரக்கணக் கான பேர்களைச் சுட்டுக்கொன்று காங்கிரஸ் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறீர்களே, அப்படிப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தியிருக்கிறிர்களே, அதுபோன்ற சட்டம்-ஒழுங்கு தமிழ் நாட்டிலே இல்லை, இந்த ஆட்சியிலே அப்படி நடைபெறாது தான் தவறு என்று சொல்கிறீர்களா ? உங்கள் காங்கிரஸ் ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டைப் போல, நிர்வாகச் சீர்கேடு களை இந்த ஆட்சி நிச்சயமாக நடத்தாது என்பதையும், அந்த வன்முறையில் ஆயிரக்கணக்கான மக்களை அடக்கி, ஒடுக்கி, சுடுகின்ற வன்முறைக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இல்லையென்பதையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முத்துக்கிருஷ்ணன் அவர்கள் ஏதோ காங்கிரஸ் ஆட்சி அசாமிலே ஆயிரக்கணக்கான பேர்களைச் சுட்டுக் கொன்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு அசாமி னுடைய பிரச்னை சரியாகத் தெரியவில்லையென்றே நான் கருதுகிறேன். அங்கே யாரும் யாரையும் சுடவில்லை. அங்கே

உள்நாட்டிலே ஒரு குழப்பம் நடந்து கொண்டிருக்கிறது. உள்நாட்டிலே வாழ்கின்ற மக்களுக்கும் வெளி மாநிலங்களிலேயிருந்து வந்து அங்கே குடியேறியிருக்கிற மக்களுக்கும் மோதல் உருவாகி, பிரச்னை உருவாகி, பலபேர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள், கொலை செய்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சி அங்கே நடைபெறவில்லை. ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றது. ஆனால் அங்கே நடைபெறுவது உள்நாட்டிலே ஏற்பட்ட குழப்பத்தின் காரணமாகத்தான், வகுப்புக் கலவரத்தின் காரணமாகத்தான்.

வெளி மாநிலத்திலேயிருந்து குடியேறியவர்கள், தொடர்ந்து அங்கே வாழ்ந்த மக்கள் இன்றைக்கு வெளியேற வேண்டுமென்ற பிரச்னையை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள். எனவே, தவறான தகவலை இந்த அவையில் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : குழம்பிய குட்டையிலே நீங்கள் மீன் பிடித்திருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், ஜனாதிபதி ஆட்சி என்றால் இப்பொழுது காங்கிரஸ் ஆட்சி என்பதுதான் அர்த்தம் என்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஏன் தெரியவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே பல்வேறு சீர் கேடுகள் நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டிய காரணத்தால்தான், இந்த அரசு உங்களுடைய ஆட்சியைப் போல அல்லாமல், மிகச் சிறந்த ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிற ஆட்சி என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் இந்த உதாரணத்தைச் சுட்டிக்காட்டினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்பொழுது மாண்புமிகு நண்பர், உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நேற்று பேசும்பொழுது, இந்த பட்ஜெட் காலாவதியான காலண்டர் என்று அவர்கள் நகைச்சுவையோடு குறிப்பிட்டாலும், இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் அவர் சொன்ன உதாரணத்தை நான் விளக்கமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காலாவதியான காலண்டர் என்று சொன்னால் திருப்பி உபயோகிக்க முடியாத காலண்டர் என்றுதான் பொருள். ஆனால் இந்த பட்ஜெட்டைப்பற்றி எதற்காக இப்படி அவர்கள் சொல்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இப்பொழுது பட்ஜெட் எஸ்டிமேட்டைத் தந்திருக்கிறார்கள். இந்த பட்





ஜெட் எஸ்டிமேட்டிலே ஒரு திட்டம் இல்லை என்றாலும்கூட, ஒரு சாதனை விடப்பட்டிருக்கிறது என்றாலும்கூட இன்னும் பல்வேறு சாதனைகளையும், பல்வேறு திட்டங்களையும் இணைப்பதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. பட்ஜெட் எஸ்டிமேட் என்று சொன்னால், அது சபையிலே வந்தவுடனேயே அதோடு எல்லாம் முடிந்து விட்டது என்று உறுப்பினரவர்கள் கருதுவது உண்மையிலேயே தவறு எது என்பதை எடுத்துச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, கிழிந்த காலண்டர், காலாவதியான காலண்டர் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் கிழிந்த காலண்டர் என்று தமிழ் நாட்டு மக்கள் உணர்ந்து கொண்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு இந்த நேரத்திலே எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'' நீரின்றி அமையாது உலகு '' என்ற பழமொழி ஒன்று உண்டு. அதற்கேற்ப தமிழ்நாட்டு மக்கள் தண்ணீர் இல்லாமல் வறட்சியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையில் உள்ள அத்தனைபேரும் தெரிவித்தார்கள். இவ்வாறு மக்கள் தண்ணீர் இல்லாமல் சிரமப்படும் இந்த நேரத்திலேயும் இந்த ஆட்சிதான் மழையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த நாட்டு மக்களுக்குப் பல்வேறு உதவிகளையும் விளம்பரம் இல்லாமல் செய்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சி என்பது ஏதோ இந்த ஆட்சியிலே மட்டும் ஏற்பட்ட ஒன்று என்பதல்ல. முன்னால் ஆண்ட அரசுகளின் போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுகூட வறட்சி ஏற்பட்ட நிலைமைகள் உண்டு. ஆனால் வறட்சியைப் போக்குவதற்காக விளம்பரம் தேடிய அரசு இந்த அரசு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழையில்லாத காரணத்தால், நீர் இல்லாததால், தமிழ் நாட்டிலுள்ள மக்கள் பல்வேறு சிரமங்களையும், துன்பங்களையும் அடையக் கூடாது என்பதால், பல்வேறு முயற்சிகளின் மூலம் இந்த அரசு அதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து, அதற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிலயிடங்களில் மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டதால் சிலயிடங்களில் அரிசியின் விலைகூட ஓரளவிற்கு உயர்ந்தாலும்கூட அதை நாம் பொறுத்துக்கொள்ளும் அளவிலே பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால்

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1983 மார்ச் 9

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், மழை இல்லாததால் இந்த நாட்டு மக்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவிற்குச் சிரமப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து பார்க்காமல் குரல் கொடுப்பதற்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. மழை இல்லாததால் அரிசியின் விலை சிறிது கூடியிருப்பதை ஒத்துக்கொண்டாலும் கூட, நான்ஒரேயொரு கேள்வியை காங்கிரஸ் உறுப்பினர்களைப் பணிவோடு கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசு சாதாரண கார்டு, கவர்களின் விலையைக் கூட உயர்த்தியிருக்கிறார்கள். மழையில்லாத காரணத்தால் அரிசியின் விலை சிறிது கூடியிருக்கலாம்; ஆனால் கார்டு கவர்களின் விலை உயர்ந்திருப்பதற்குக் காரணமாக என்ன பஞ்சம் வந்தது என்பதை மத்திய அரசைச் சேர்ந்த, குறிப்பாக காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மத்திய அரசாங்கம் பாதகமான நிலைமையை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிற்கு எந்தத் திட்டமும் சென்றுவிடக்கூடாது என்று அவர்கள் கருதுவதால் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12—30)

ரயில்வே பட்ஜெட்டை எடுத்துக் கொண்டாலும் கூட பட்ஜெட் வருவதற்கு முன்பாகவே ரயில்வே கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள். பட்ஜெட்டிலே உயர்த்துவதற்கு பதிலாக, பட்ஜெட்டிலே உயர்த்தி விட்டார்கள் என்று மக்கள் சொல்லி விடக்கூடாது என்பதற்காக ரயில்வே கட்டணத்தை ஏராளமாக கூட்டியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அளவுக்கு மத்திய அரசு தமிழ் நாட்டு மக்களிடத்திலேயும் மத்திய அரசின் மூலமாகவும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு தமிழக சர்க்காரை இன்று நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் இன்று எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டு மல்ல. இரயில்வே திட்டங்களின் மூலமாக இன்று சுதந்திர மடைந்து இத்தனை ஆண்டுகளாகியும் தமிழ் நாட்டிலே பிராட் கேஜ் ரயில்வே சாலைகள் எந்த அளவுக்கு முழுமையாக இன்னும் போடப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டுகின்றேன். ஏனென்று சொன்னால் வட இந்தியாவில் போடப்படுகின்ற ரயில்வே பாதைகள் எல்லாம் பிராட்கேஜ் பாதைகளாகப் போடப்படுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் தான் இன்று மீட்டர் கேஜ் பாதைகள் மிகுந்த கூடுதலான அளவுக்கு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச்



135991

1983 மார்ச் 9] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி பல்வேறு புறக்கணிப்புக்கள் இன்று தமிழ்நாடு அனுபவித்துக்கொண்டிருக்கிறது மத்திய அரசினால் என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை. அது மட்டுமல்ல. ஐந்தாண்டுத் திட்டங்களில் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக அதுவும் முடிந்துஇன்று 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே காலடி எடுத்துவைத்திருக்கின்றார்கள். இப்படி பல்வேறு திட்டங்களைப் போட்டும் இன்று காங்கிரஸ் அரசினரால்—மத்திய அரசினால் இந்த அரசை எந்த அளவுக்கு இந்த நாட்டை நீங்கள் முன்னேற்றியிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் நன்றாக உணர்ந்து பாருங்கள். அதுமட்டுமல்ல. உங்களுடைய ஆட்சியினுடைய சாதனைகள் எல்லாம்—காங்கிரஸ் கட்சியினுடைய சாதனைகள் எல்லாம் ரூபாயினுடைய மதிப்பை உங்கள் அரசு மத்திய அரசு சொன்னதைப் போல ஒரு ரூபாயினுடைய மதிப்பு 20.12 என்ற அளவிலே பைசாக் கணக்கிலே ரூபாயின் மதிப்பு குறைந்து இருப்பது இன்று காங்கிரஸ் ஆட்சியினுடைய மிகப்பெரிய தவறு என்பதை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்தான் ரூபாயினுடைய மதிப்பு இந்த அளவிற்குக் குறைந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டு மல்ல. இந்த பிரச்சினைகள் எல்லாம் நடைபெற்று முடிந்த இடைத்தேர்தலிலே கூட பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு செய்கின்ற சாதனைகளையெல்லாம் பழி சொல்கின்ற ரீதியிலே திருச்செந்தூரிலே பல்வேறு பிரச்சாரங்களை எடுத்து வைத்தார்கள். ஆனால் மக்கள் அதை ஏற்றுக்கொண்டார்களா என்றால் இல்லவேயில்லை. மக்கள் இந்த அரசிற்குப் பின்னால் இருக்கிறார்கள். இந்த அரசுதான்—புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசுதான் இன்று தமிழ் நாட்டிற்குத் தேவை என்பதையும் மறுமுறையும் இந்த இடைத் தேர்தல் மூலமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நல்ல பணிகளைச் செய்கின்ற இந்த அரசைப் பற்றித்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் இந்த அரசின் மீது வேண்டுமென்றே குற்றச்சாட்டுகளைக் கூறுகின்ற ஒரு பணியினை இன்று தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு தலைவர் கூட இன்று திருச்செந்தூர் தேர்தலிலே குறிப்பிட்டார்—நானா, எம்.ஜி. ஆரா, என்று ஆணவத்தோடு பேசினார். ஆனால் அவர்கள் எல்லாம் இன்று திருச்செந்தூரிலே—தமிழ்நாட்டிலே எங்கே இருக்கிறார்கள் என்றுகூட தெரியாத அளவுக்கு இன்று மக்களால் தூக்கி எரியப்படிருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே நீங்கள் எந்த பிரச்சினைகளை எடுத்துச் சொன்னாலும் மக்கள் அதை நம்புவதற்குத் தயாராகவில்லை என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1983 மார்ச் 9

அதற்கடுத்தபடியாக, என்.ஜி.ஓ.க்கள் நேற்றைய பத்திரி
கையிலே கூட என்.ஜி.ஓ. சங்கத்தைச் சேர்ந்த சிலர் அறிக்கை
விட்டிருக்கிறார்கள். 150 சங்கங்களைச் சார்ந்த நாங்கள்
இந்த தமிழக அரசை எதிர்த்து ஊர்வலம் செல்லப்போகின்
றோம். நாங்கள் நடவடிக்கைகளை எடுக்கப் போகிறோம்
என்ற அச்சுறுத்தலை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த
அரசு தான் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது இந்த
அரசு எம்.ஜி.ஆர். அரசு. எங்களுடைய அரசு தான் இன்று
என்.ஜி.ஓ.க்களுக்கு பல்வேறு காரியங்களைச் செய்தது என்
பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவ
ருடைய அரசு ஏற்பட்ட பிறகு தான் மூன்றாவது ஊதியக்
குழுக் கமிஷன் ஏற்பட்டது என்பதை தயவுசெய்து என்.ஜி.ஓக்கள்
மறந்துவிடக் கூடாது. 1—10—78-க்கு பிறகு ஓய்வுபெற்ற
என். ஜி. ஓக்களுக்கு சரெண்டர் லீவை அவர்கள் எடுத்துக்கொள்ள
லாம் என்.ஜி.ஓ க்களுக்காகப் பிறப்பித்தது இந்தத் அரசு. அதுமட்டு
மல்ல, என்.ஜி.ஓ க்களாக அதிகாரிகளைப் பொருத்தவரையிலே
ஓய்வு பெறுகின்ற வயதை 55-லிருந்து 58ஆக புரட்சித் தலைவர்
அவர்கள் அரசு 58 வயதாக உயர்த்தி ஆணையிட்டது என்
பதை இந்த நேரத்திலே என்.ஜி.ஓக்களுக்கு எடுத்துச்சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். சாதாரணமாக ஓர் அரசு ஊழியர்
ஓர் ஆண்டிலே எடுத்துக்கொள்ளக்கூடிய 15 நாட்களை கூட
20 நாட்களாக உயர்த்தியது இந்த அரசு தான்—புரட்சித்
தலைவர் அரசுதான் என்பதை என்.ஜி.ஓ க்கள் புரிந்து
கொள்ள வேண்டுகிறேன். குறைந்த பட்ச ஓய்வூதியம் இந்த
அரசு தான் மத்திய அரசைவிட கூடுதலாக வழங்கியிருக்கிறது
என்பதை புரிந்து கொள்ள வேண்டுகிறேன். ஏன்
என்று சொன்னால், தமிழ்நாடு அரசிலே குறைந்த
பட்ச ஓய்வு ஊதியம் 176 ரூபாயாக 1—10—82 முதல் இந்த
அரசு கொடுத்துக் கொண்டு வருகிறது. கேரளாவிலே 130
ரூபாய்தான் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய
அரசிலே 150 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஆகவே கேர
ளாவைவிட, மத்திய அரசை விட, தமிழகத்திலே தான் இன்று
என்.ஜி.ஓ க்களுக்கு பல்வேறு சலுகைகளை இந்த அரசு செய்து
கொண்டிருக்கிறது என்பதை அரசு ஊழியர்கள் புரிந்துகொண்டு,
இந்த அரசை எதிர்க்கின்ற சங்கங்களுக்கு நீங்கள் துணை
போகாதீர்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்
கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தைச் பொறுத்தவரையிலே,
கன்னியாகுமரி மாவட்டம் இன்றைய தினம் வறட்சியின்
காரணமாக மிகுந்த இன்னல்களை அனுபவித்துக்கொண்டு
வருகிறது. இந்த நேரத்திலே இந்த அரசு தமிழகம் பூராவும்
45.63 கோடி ரூபாய் நிதியை வறட்சிப் பணிகளுக்காக ஒதுக்கி
வேலைகளை நடத்திக்கொண்டு வருகிறது. இப்பேர்ப்பட்ட



1983 மார்ச் 9] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

வறட்சி நிவாரண நிதியில் கூட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 14 லட்சம் ரூபாய் தான் அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இனிமேல் வறட்சிப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது, குமரி மாவட்டத்திற்கு குறைந்தது ஒரு கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கி, குமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துக் கொண்டு செயலாற்ற புரட்சித் தலைவர் அரசு, அதிகமான நிதி ஒதுக்கிக்கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, நம்முடைய விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பேசுகின்றபோது, தமிழகத்திலே புதிதாக விவசாயக்கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி ஏற்படுத்தும் போது அந்த விவசாயக் கல்லூரியை குமரி மாவட்டத்திலே ஏற்படுத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே இந்தச் சபையின் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீவிர கால்நடைத் திட்டம். இந்தத் தீவிர கால்நடைத் திட்டத்தை குமரி மாவட்டத்திலே உள்ள கால்நடைத்துறை மூலமாக இந்த நிதி ஆண்டிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து, குமரி மாவட்டத்திலே உள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலைத்தான் நம்பி இருக்கிறார்கள். வேறு எந்தத் தொழிலும் அவர்களுக்கு இல்லை. ஆகவே, தமிழ்நாட்டை இதுவரை பல்வேறு அரசுகள் ஆண்டாலும்கூட, தொழில்துறையிலே பின்தங்கிய மாவட்டமாக குமரி மாவட்டம் இருக்கிறது. பல்வேறு தாலூகாக்கள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றன. எனவே புரட்சித் தலைவர் அரசு குறிப்பாக தோவாலைத் தாலூக்காவை, தொழில் துறையில் பின்தங்கிய தாலூக்காவாகதொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டுமென்று என்னுடைய மாவட்டத்தின் மக்கள் சார்பாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் ரப்பர் வாரியம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ரப்பர் வாரியம் ஏற்படுத்தியமைக்காக மாவட்ட மக்களின் சார்பிலே தமிழக அரசுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1983 மார்ச் 9

கடைசியாக, இந்த பட்ஜெட்டில் 49—வது பக்கத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலேயும், அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்திலேயும் சிறுசிறு சாதிச் சம்பவங்கள் எழுந்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் பணிவோடு எடுத்துச்சொல்கிற கருத்துக்கள் எல்லாம், தமிழகத்திலே சிற்சில இடங்களிலே ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்ற நிலையை எல்லாம் நாம் கண்டு கொண்டிருக்கிறோம். நேற்று கூட குமரி மாவட்டத்திலே ஒரு பஸ் கொளுத்தப்பட்டது என்று இன்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. இதுபோன்ற சம்பவங்களை நாம் கண்டிப்பாக தடுத்து நிறுத்தவேண்டும். இதுபோன்ற ஜாதிப் பிரச்சினைகளை, சண்டைகளை தடுத்து நிறுத்துவதற்காக வட இந்திய மாநிலங்களிலே சிலவற்றில் மதமாற்றத் தடைச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய தமிழகத்திலேயும் ஒரு மதத்தை விட்டு மற்ற மதத்திற்குச் செல்கின்ற அந்தத் தடையை, மத மாற்றத் தடைச் சட்டத்தை இந்த அரசு விரைவிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த 1983—84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் தெரிவிக்க விழைகிறேன். ஏற்கனவே எங்களுடைய கட்சியின் கருத்துக்கள் சிலவற்றை எங்களுடைய தோழர் ரமணி அவர்கள் நேற்று ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். அதனுடைய தொடர்ச்சியாக நான் சில கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். சற்று நேரத்திற்கு முன்னாலே இந்த அவையிலே ஒரு நிழற்சண்டை நடந்தது. அதற்குள்ளே போகவேண்டாம் என்ற முறையிலே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது முத்துக்கிருஷ்ணன் அவர்கள் மத்திய சர்க்கார் எந்த நிலையில் எப்படி எப்படி எல்லாம் நிலைகளை எடுத்து இருக்கிறது என்பது பற்றிச் சொன்னார்கள். சாதாரணமாக ஒரு மரம் தோப்பாகாது என்று சொல்வார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், 1981ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.



1983 மார்ச் 9] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

(பிற்பகல் 12-40)

ஆரம்பத்தில் என்ன சொன்னீர்கள், மத்திய அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக விலைவாசிகள் ஏறுகின்றன. அதனால் தமிழகத்திற்கு சோதனை ஏற்படுகிறது என்று சொன்னீர்கள். அந்த சத்தம் 1981-லே குறைந்து, 1982-லே மெலிந்து, இப்போது 83-84ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் காணவே இல்லை. திரு. முத்துகிருஷ்ணன் எடுத்துச் சொல்லிய உணர்வு நல்ல உணர்வு. ஆனால் அவர் மட்டும் சொல்லிவிட்டால் போதுமா ? அரசும் அதைச் சொல்லி வலியுறுத்த வேண்டும். திடீர் திடீரென்று நிர்வாக உத்தரவுகள் போட்டு விலையை மத்திய அரசாங்கம் ஏற்றுகிறது. 50 பைசா இருந்த கவர் இன்றைக்கு 55 பைசா ஆக்கப்பட்டு இருக்கிறது. ரயில்வே டிக்கட் ஏறியிருக்கிறது. தந்திக் கட்டணம் 3 ரூபாயில் இருந்து 3-50 என்று ஆகியிருக்கிறது. அதனால் தமிழகத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்படவில்லையா ? தமிழக அரசுக்கு அதனால் அதிக செலவு இல்லையா ? அதைப்பற்றி இந்த பட்ஜெட்டில் ஒரு வரி கூட போடவில்லையே ஏன் ? அதற்கு நான் ஒரு உதாரணம் சொன்னால் அதைத் தப்பாக நினைக்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஒரு சாதாரண பழமொழி சொல்வார்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகியது என்று. அது சரியாக இருக்காது என்றால், உள்ளதும் போச்சே நொள்ளைக்கண்ணா, அதுவும் சரியாக இருக்காது என்றால், பெரியார் பாஷையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால் இந்த பட்ஜெட் ஒரு 'வெங்காய பட்ஜெட். வெங்காயத்தை உரிக்க உரிக்க தோல் தான் வந்து கொண்டு இருக்கும். அதன் உள்ளே ஒன்றும் இருக்காது. அதைப் போல இந்த பட்ஜெட் இருக்கிறது.

இந்த பண வீக்கம் எப்படி திட்டங்களை பாதிக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். சேர்வலாறு அணை கட்டுவதென ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டபோது அதற்காக மதிப்பிடப்பட்ட தொகை 9 கோடி. ஆனால் அந்தத் திட்டம் 1971-ல் போடப்பட்ட காரணத்தால், அப்போதிருந்த நிலையில் அது போடப்பட்டது—இப்போது நிறைவேற்றப்பட வருகின்ற நேரத்தில் 42 கோடி என்று ஆகிவிட்டது. ஆகவே, இந்தப் பணவீக்கம் என்பது அரசாங்கத்தின் நிதிநிலையையே சீரழித்து விடும். ஆகவே, அந்த நிலையை இங்கே சட்டமன்றத்தில் வற்புறுத்தி சொல்லவேண்டாமா ? ஏன் சொல்லவில்லை ? இப்படி மேலும் மேலும் மக்களின் தலையில் பணவீக்கம் விலைவாசி ஏற்றத்தால் ஏற்படுவதைக் கண்டித்து இந்த நிதிநிலை அறிக்கையில் ஆரம்பத்தில், முகவுரையில் சொல்ல வேண்டாமா ? சொல்லவில்லையே ஏன் ? இந்தக் கேள்விகளைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தின் மூலம் எடுத்துக் காட்ட விரும்புகிறது.

[திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1983 மார்ச் 9

இப்போது டீசல் போன்ற பொருள்களுக்கு விலையேற்றப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் ? மண்ணெண்ணெய் விலை குறைவாக இருந்தது, அதனால் டீசலில் மண்ணெண்ணெய்யைக் கலந்து விற்றுவிடுகிறார்கள், கலப்படம் செய்கிறார்கள். ஆகவே, மண்ணெண்ணெய் விலையை ஏற்றுகிறோம் என்று சொல்லி ஏற்றியிருக்கிறார்கள். மின்சாரத் தட்டுப்பாடு இருக்கின்ற இந்த நேரத்தில் ஏழை மக்கள் இந்த மண்ணெண்ணெய் விளக்கைத்தான் இரவு நேரங்களில் நம்பியிருக்கிறார்கள். அந்த ஏழைகள் பயன்படுத்தக்கூடிய மண்ணெண்ணெய்க்கு விலையை ஏற்றி இருக்கிறார்களே, இது நியாயமா ?

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் சொன்னார் என்று கருதுகிறேன். எதற்கெடுத்தாலும் இரட்டை விலை ? சர்க்கரைக்கு இரட்டை விலை, மண்ணெண்ணெய்க்கு இரட்டை விலை, அரிசிக்கும் இரட்டை விலை வருமோ என்னவோ தெரியவில்லை, இப்படிப்பட்ட முறையில் இரட்டை விலைக் கொள்கையை மத்திய அரசு கடைபிடிப்பதை நாம் இந்த நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டி, கண்டிக்காதது வேதனைக்குரிய விஷயமாகும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். (குறுக்கீடு) அரிசிக்கு இரட்டை விலை வெளியே இருந்தாலும் அரசாங்கமே இன்னும் அரிசிக்கு இரட்டை விலையை அறிவிக்கவில்லை என்பதை அப்படிக் குறிப்பிட்டேன். அங்கே அப்படிப்பட்ட நிலைமை. இங்கேயும் 26 கோடிக்கு வரி போட்டுள்ளார்கள் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில். இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கை வைக்கிறபோது அறிஞர் அண்ணாதுரை அவர்கள் கூறிய கருத்துக்களைக் கோட் செய்து இருக்கிறார்கள். அதாவது தரித்திரப்பட்டவர்களிடத்தில் கை வைக்காதே, வசதி படைத்தவர்களிடமிருந்து எடு, தரித்திரப்பட்டவர்களைத் தட்டிக்கொடு— என்று அண்ணாதுரை அவர்கள் கூறிய பொன்மொழிகளை நிதி அமைச்சர் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு நீங்கள் போட்டுள்ளீர்களே ' நுழைவு வரி ' அதன் மூலம் யார் பாதிக்கப்படப் போகிறார்கள்? கிட்டத்தட்ட 13 பொருள்களுக்குப் போட்டு இருக்கிறீர்கள். இதன் மூலமாக நாம் உண்மையிலேயே கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிற மக்களை நாம் தட்டிக்கொடுக்கிறோமா ? துணியைப் பொறுத்தவரையில், பணக்காரர்கள் தான் உபயோகிப்பார்களா? ஏழைகள் உபயோகிக்கவில்லையா ? துணிகட்டாது கோமணம் கட்டிக்கொண்டு போக வேண்டுமா ? பணக்காரர்களுக்கு வரி போட்டாலும் பரவாயில்லை, அவர்கள் அதைத் தாங்கிக்கொள்வார்கள். ஆனால் இப்படி ஏழைகள் உபயோகிக்கிற பொருள்களுக்கு ' நுழைவு வரி ' போட்டிருக்கிறீர்களே அதனால் யார் பாதிக்கப்படப் போகிறார்கள், அதை வாங்கி உபயோகிக்கிற ஏழை எளிய பாட்டாளி மக்கள் தான்



1983 மார்ச் 9] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

பாதிக்கப்படுவார்கள். பணக்காரர்களுக்கு இதைப்பற்றி கவலையில்லை. ஆனால் உண்மையிலே பாதிக்கப்படுவது ஏழை எளிய மக்கள் இல்லையா ? அந்த மாதிரியாகத்தான் டீசல் விலையை ஏற்றியிருக்கிறீர்கள், எண்ணெய் விலையை ஏற்றியிருக்கிறீர்கள். இது எங்கே போய் முடியும் ? டவுன் பஸ்ஸில் போகின்றவன் தலையில்தான் போய் முடியும். ஏற்கெனவே வரியை கூட்டி இருக்கிறீர்கள். அதை யார் தலையில் வைப்பார்கள் ? போக்குவரத்துத் துறை அமைச்சர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார் பெட்ரோல் விலை ஏறி விட்டது, டீசல் விலை ஏறிவிட்டது, நஷ்டம் வருகிறது என்று. இந்த நேரத்தில் விலை உயர்வும், வரி உயர்வும் டவுன் பஸ்ஸில் போகும் மக்கள் கட்டணத்தை உயர்த்தச்செய்யும் என்பதில் சந்தேகமில்லை. மின்சாரக் கட்டணம் உயரும், பஸ் கட்டணம் உயரும் என்ற நிலைமை ஏற்பட்டால் இப்படி எல்லாமே உயருகின்ற ஒரு அபாயகரமான நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே 26 கோடி ரூபாய்க்கு வரி போட்டுவிட்டு, ஒரு கோடி ரூபாய்க்கான வரியை குறைத்திருக்கிறார்கள். ஒரு கோடி ரூபாய் குறைத்தது போதாது. ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற ஐட்டம் இன்னும் எது எது என்று பார்த்து, அதை எல்லாம் முழுமையாக வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்போது இல்லாவிட்டாலும் இறுதியில் நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றும்போது வாபஸ் பெறுவதாக அறிவிப்பதுதான் சிறப்பாக இருக்கும்.

மருந்துகளுக்குக் கூட வரி போடப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. அதைப்போல வாகன வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. நடுத்தர மக்கள் பயன்படுத்துகிற ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்றவைகளுக்கு கால் ஆண்டுக்கு வரி 10 ரூபாய் என்றிருந்ததை இப்போது 15 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள். அப்படியானால் 50 சதவீதம் வரி ஏற்றப்பட்டிருப்பது சரிதானா? அது நடுத்தர மக்களை பாதிக்காதா ? ஆகவே, இந்த வரியை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சரக்கு வாகன வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த வரி உயர்வு சரக்குகள்மேல்தான் ஏற்றப்படும். அதுவும் ஏழை எளிய மக்களையும் நடுத்தர மக்களையும்தான் பாதிக்கும். ஆகவே, அதையும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு வழங்குவதை எடுத்துக் கொண்டால் ஒரு கோடியே 17 இலட்சம் கார்டுகளுக்கு நாம் நியாயவிலையில் அரிசி மற்றுள்ள பொருள்கள் வழங்கவேண்டியிருக்கிறது ; வழங்க கடமைப்பட்டி

ருக்கிறோம். ஆனால் அதற்கு வேண்டிய அரிசி இருப்பில் இல்லை; முந்தைய ஆண்டிலும் இதைச் சொல்லியிருக்கிறீர்கள். போன வருஷத்திலும் சொல்லியிருக்கிறீர்கள் ; இந்த ஆண்டும் அதையே சொல்லியிருப்பதால் வருத்தமாக இருக்கிறது.

ஏற்கெனவே அரிசிக்கும் தட்டுப்பாடு இருக்கிறது. இங்கே வறட்சி என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். மத்திய அரசு காலா காலத்தில் தமிழ்நாட்டுக்கு செய்ய வேண்டிய உதவியைச் செய்யவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். அவசரமாக இந்த உதவியைச் செய்ய எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒரு முடிவெடுப்பதுதான் சிறந்ததாக இருக்கும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். மீண்டும் அதை நினைவு படுத்துகிறோம்.

உணவு கேட்டு, முதலமைச்சர் உண்ணாவிரதம் இருந்த வுடனே அங்கே இருந்து தகவல் வருகிறது. '' உடனே புறப்பட்டு வாருங்கள் '' என்று. வாருங்கள் என்று கூப்பிட்டால் உடனே போக வேண்டாமா ? அவர்களே காலம் கடந்துதான் கூப்பிடு கிறார்கள். நமக்கு தேவை, அதனால் உடனே நாம்தான் போக வேண்டும். முதலமைச்சர் வெள்ளிக்கிழமை உண்ணாவிரதம் இருக்கிறார். உடனே வரச்சொல்கிறார்கள், செவ்வாய்க்கிழமை தான் முதலமைச்சர் போகிறார். காலாகாலத்தில் போய் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தித்தான் நாம் பெறவேண்டியதை பெற வேண்டும். அவர்கள் '' கல்யாண வீட்டிலேயே காலைக் கட்டிக் கொண்டு அழுவார்கள் '' இளவு வந்துவிட்டால் கேட்க வேண்டுமா ? ஆகையால் நாம்தான் மேலும், மேலும் வற்புறுத்தி தமிழக மக்களின் தேவையை எடுத்துச் சொல்லிப் பெறவேண்டும். ஆதிலே நாம் பின்தங்கி இருக்கிறோம்.

தமிழ்நாட்டிலே இந்த வறட்சி இப்போது வந்ததல்ல. இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இருக்கிறது. மூன்று வருஷ பட்ஜெட்டி லும் இந்த வறட்சியைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். எனவே, வறட்சி வரும் என்பது ஆரம்பத்திலேயே தெரியும். தெரிந் திருந்தும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. பாதிக் கப்படுகிறவர்கள் இந்த நாட்டு மக்கள். இந்த நாட்டு மக்களை கஷ்டத்திலிருந்து காப்பாற்ற காலாகாலத்தில் நாம் போய் வற்புறுத்தி வாங்க வேண்டுமா இல்லையா ? பலமுறை வற் புறுத்தினால்தான் கிடைக்கும். ஒரு பழமொழி சொல்வார்கள்.

'' ஆடி கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்
பாடி கறக்கிற மாட்டை பாடிக்கறக்க வேண்டும்
அடித்து கறக்கிற மாட்டை அடித்துதான் கறக்க வேண்டும்''



(பிற்பகல் 12.50)

அப்படி ஒரு நிலை எடுக்காததினால்தான் இந்த நிலை. மேற்கு வங்காளத்திலே ஏற்பட்ட வறட்சியை போக்குவதற்காக அவர்கள் டெல்லிக்குப் போய் மாறி மாறி வற்புறுத்தியதன் காரணமாகத்தான் தற்போது ஓரளவிற்கு, பூராவுமாக இல்லா விட்டாலும் கூட, ஓரளவிற்கு தேவையான நிதியை 3 மாதங் களுக்கு முன்னாடி, அந்த அரசு வாங்கிக்கொண்டு வந்தது. அந்த முறையில் நாம் அங்கே சென்றிருக்கிறோமா ?..........

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தோழர் சொரணம் அவர்கள் பேசும்போது, அடித்து கறக்கிற மாட்டை அடித்துக் கறக்க வேண்டும் என்று சொல்லும்போது, அவருடைய சவுண்ட் கொஞ்சம் குறைந்துவிட்டது அந்த இடத்திலே. அதைக் கொஞ்சம் வேகமாகச் சொல்லியிருக்கலாம். (சிரிப்பு)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: வேகமாகச் சொன் னால் வேகமாகவே போய்விடக்கூடாது. அப்படிச் சொன்னா லாவது காதிலே ஏறாதா என்று நினைத்துச் சொன்னேன். வேறு விவகாரம் ஒன்றும் இல்லை.

அடுத்தாற்போல் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்றெல்லாம் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். உண்மையிலேயே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அது முடியுமா ? சாத்தியமா என்பதைப்பற்றியெல்லாம் எந்த வழியிலாவது இதிலே சொல்லப்பட்டிக்கிறதா ? அல்லது எப்படி செய்யப் போகிறீர்கள் என்பதற்கு ஏதாவது விளக்கம் இருக்கிறதா ? இல்லை. அதனால் இதைப் பற்றி விவாதிப்பதிலும் பிரயோ ஜனம் இல்லை. கிட்டத்தட்ட 60 லட்சம் பேர் தமிழகத்தில் வறுமை கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள். ஒரு குடும்பத் திற்கு ஒருவர் வீதம் வேலை கொடுக்க வேண்டும் என்று சொன்னா லும் குறைந்தபட்சமாக கணக்கிட்டாலும், இந்த 15 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு 15 ஆயிரம் பேருக்குக்கூட கொடுக்கமுடியாதே. அப்படி இருக்கும்போது எதற்காக இந்த ஒதுக்கீடு. அல்லது இந்த 15 கோடியை, எப்படி அவர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்பதை ஆய்வு நடத்துவதற்காக, ஏதாவது கமிட்டி ஒன்று போட்டு, அதற்காகச் செலவிடப் போகிறீர்களா ? இவைகளைப் பற்றியெல்லாம் சற்றுத் தெளிவாகச் சொன்னால் பரவாயில்லை. நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை, அவர்கள் கடைசியில் பதிலுரை அளிக்கும்போது, இதைப்பற்றி தெளிவாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சொன்னால் அது சற்றுப் பிரயோஜனமாக இருக்கும்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1983 மார்ச் 9

ஆனால் இவைகளின் மூலமாகவெல்லாம் மக்களை பூராவும் பாதுகாத்து விட முடியும் என்று நாங்கள் நம்பவில்லை. ஏற்கெனவே எங்களுடைய தோழர் ரமணி அவர்கள் பேசும் போது சொன்னார்கள். நிலச்சீர்த்திருத்தத்தை எப்படி அமுல்படுத்த வேண்டும் என்று மகிலானோபிஸ் கமிட்டியிலே தொடர்ந்து சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நில சீர்த்திருத்தத்தை, மாநில அரசுதான் அதை முன்னின்று நடத்த வேண்டும் என்று சொல்லியாகிவிட்டது. ஆனால் நாம் அதிலே எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். ஒரே ஒரு சட்டத் திருத்தம் இந்த அவையிலே வந்தது. பினாமி ஒழிப்புச் சட்டம் என்ற பெயரால், அதை எல்லாம் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுதான் அங்கே அனுமதிக்காக அனுப்பிவைத்தோம். என்னவாயிற்று ? அங்கேயே கொஞ்சகாலம் கிடப்பிலே கிடந்தது. பிறகு திரும்ப வந்துவிட்டது. இங்கே வந்து கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு மேலே அல்லது இன்னும் சொல்லப் போனால் 1½ ஆண்டுக்காலம் கூட ஆகிவிட்டது. ஆனால் அப்படி திரும்பி வந்த பேப்பர் என்னவாயிற்று ?

தமிழக அரசுக்கு உண்மையிலேயே இதில் அதிக அளவுக்கு நாட்டம் இருந்து இருக்குமேயானால், அதிலே ஏதாவது திருத்தம் வந்திருந்தால், அதை திருத்தி இந்த அவையிலே திரும்பக் கொண்டு வந்து வைத்து, உடனடியாக அதனை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு, நிறைவேற்றி, அதற்கு கையெழுத் திட வேண்டும் என்று திருப்பி அனுப்பியிருக்கலாமே. அதையா வது குறைந்த பட்சம் செய்திருக்கலாம் அல்லவா ? தமிழகத்தி னுடைய மக்களில் பெரும்பாலான மக்கள் இன்றைக்கு விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு தற்போது என்ன நிலை ?

இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கே கூட ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தது. கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு கிடைத்த விலை 175. இந்த ஆண்டு கிடைக் கிற விலை 155. அதற்கு ஒரு வேடிக்கையான காரணத்தைச் சொல்கிறார்கள் நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். கரும்பினுடைய விலையினால், சர்க்கரையினுடைய விலை வெளிமார்க்கட்டிலே குறைந்து போயிற்று, அதனால் மத்திய அரசாங்கம் அதிகம் கொடுக்க வேண்டாம் என்று சொல் கிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் 135 தான் கரும்பிற்காக கொடுக்க வேண்டும் என்று சொன்னதை மாற்றி, நாங்கள் தான் 155 ஆக கொடுத்திருக்கிறோம் என்று கூறியுள்ளார்கள்.



1983 மார்ச் 9] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

சென்ற ஆண்டு இருந்த விலையை விட இந்த ஆண்டு விலை வாசி ஏறியிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கரும்பை உற்பத்தி செய்வதற்கான இடுபொருள்களின் விலை களும் ஏறியிருக்கின்ற சூழ்நிலையில் —அரசாங்கமே அதை ஒப்புக் கொள்கிறது—எங்களுடைய கட்சி தோழர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, ஒரு சாதாரண கருவே மரத்தின் விறகின் விலை ஒரு டன்னுக்கு 300 ரூ., 350 ரூ., இருக்கும்போது கரும்புக்கு இப்படி விலை இருப்பது சரியா ? கரும்பு என்று சொல்லும்போதே இனிக்கும் என்று சொல்வார்களே, பெயர் தான் இனிக்கிறதே தவிர, காரியத்தில் ஒன்றும் இல்லை. பெயர் சொன்னாலே இனிக்கும். அந்தக் கரும்புக்கு ஒரு டன்னுக்கு என்ன விலை 155. ஆனால் சென்ற ஆண்டு 175 ரூ. விலை. சென்ற ஆண்டை விட இடுபொருள்களின் விலை ஏறியிருக்கிறது. தெரியும்.

ஆனால் உங்களைப் பொருத்தமட்டில், விவசாயிகளுடைய நண்பராக நடிக்கிறீர்களே தவிர, விவசாயிகள் உண்மையாக பாதிக்கப்படுகிறபோது முதலாளிகள் இதில் பாதிக்கப்படுகிறார் களா என்று பார்க்கிறீர்களே தவிர, விவசாயிகளைப் பற்றி உண்மையில் கவலைப்படுவது கிடையாது. அவைகளைப் பரிசிலிக்கிறோம், பரிசீலிக்கிறோம் என்று சொல்லுகிறோமே தவிர வேறு எதுவும் இல்லை. இதில் நீங்கள் யார் பக்கம் நிற்கிறீர்கள். நடத்த முடியாது என்று சொன்னால் விட்டு விட்டு போகட்டும். ஆலைகள் 10, 12 ஆலைகள் தானே, நட்டம் வந்தாலும் கூட அரசாங்கமே ஏற்று நடத்திவிடலாம். பல்லா யிரக் கணக்கில்...... (குறுக்கீடு) நட்டம் ஏற்பட்டாலும் பரவா யில்லை. 10, 12 ஆலைகள் தானே, அதை அரசு ஏற்று நடத்த லாம். அப்போதுதான் சரியாக இருக்க முடியும்.

அதைப்போலவே உணவு வினியோகத்திலே என்ன நிலைமை இருக்கிறது. முதலிலே 1 லட்சத்து 17 ஆயிரம் கார்டுகளுக்கும் அரிசி கொடுக்கிறோம் என்று சொல்லி கொடுத்துக் கொண்டிருந் தோம், நம்முடைய ஸ்டாக் குறைந்தது. மத்திய சர்க்காரிட மிருந்து பெறப்பட்டவை—காலையில் சொன்னது மாதிரி, சோளப்பொறி அளவுதானே தவிர, வேறு ஒன்றும் வரவில்லை. இப்போது என்ன செய்தோம். ஆயிரம் ரூபாய்க்கு கீழே வரு மானம் உள்ளவர்களுக்கு மட்டும் அரிசி கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த அடிப்படை யிலே பலபேருக்கு அரிசி வினியோகம் கிடைப்பது இல்லை.

இப்போது அது எங்கே போய் நிற்கிறது ? பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை, ஆனால் 500 ரூபாய்க்கு குறைந்த வரு மானம் உள்ளவர்களுக்குக் மட்டும் கொடுக்கலாமா என்று கணக்கிடப்பட்டு வருகின்றது. ஆகவே ஆயிரம் என்பது 500 ஆக ஆகி பிறகு அதற்கும் கீழே குறைந்து கடைசியில் அரிசியே

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1983 மார்ச் 9
(பிற்பகல் 1—00)

அதோடு நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்குவதற்கு தனிப்பட்ட நீர் வரவு குழாய்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டு வருகிறது என்பதையும், கழிவு நீர் அகற்றுவதற்கும் குடிநீர் வழங்குவதற்கும் 97.15 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இதன் மூலம் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் இன்னல்களை போக்குவதற்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டி இருப்பினும் அரசு தயங்காது என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்பாக குறிப்பிட்டு இருப்பதாலும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்வு வளம் பெறுவதை மையமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதையும் நான் பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்.

நமது நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து 20 ஆண்டு காலமாக காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலும், அதற்கு பின்னால் 7 ஆண்டு காலம் தி.மு.க. ஆட்சியிலும் நிரந்தரமாக மின்சாரம் கிடைப்பதற்கு திட்டங்கள் தீட்டப்படவில்லை என்பதையும் அடிக்கடி இயற்கையின் சதியால் மின் தட்டுப்பாடு சரி செய்யப்படாமல் இருக்கிறது என்பதையும் அதை தவிர்ப்பதற்கு இதுவரையில் நிரந்தரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் கூறிக் கொள்வதோடு இன்றைய மின் தட்டுப்பாட்டுக்கு ஏதோ இந்த அரசு மட்டும் தான் காரணம் என்று பேசப்பட்டு வரும் மாயையை நான் கண்டிப்பதோடு தொடர்ந்து இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையில் மாநிலத்தின் 6 வது ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 30 சதவீதத்திற்கு மேல் மின் உற்பத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த நிதி ஆண்டில் மின் உற்பத்திக்காக 272.42 கோடி ரூபாய் அளவுக்கு செலவிட மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்து இருக்கிறது. இதன் மூலம் எதிர் காலத்தில் நிரந்தரமாக மின் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு தவிர்க்க இயலும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கவும் தயாராகவும் இருக்கிறேன். இதுவரை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத தன்னிறைவு திட்டம் தமிழகத்தில் 1980—81 ஆம் ஆண்டில் கிராமங்களில் தொடங்கப்பட்டு அதன் மூலம் பள்ளிக்கட்டிடங்கள், குடிநீர் திட்டங்கள், கிராம மருந்தகங்கள், தாய் சேய் நல விடுதிகள், பாலர் பள்ளிக்கூடங்கள், பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளதோடு கிராம சாலைகளும் சிறப்பாக போடப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டின் இறுதிக்குள் கிராமங்களில் தன்னிறைவு திட்டப்பணி முழுமையாக நிறைவேறும் என்பதையும் இந்த மாமன்றத்துக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் இதுவரை புறக்கணிக்கப்பட்ட கிராமங்கள் மேம்பாடு அடைந்து வளர்ச்சிப்பெற்று வருகிறது என்பதையும் இந்த திட்டம் 146 பேரூராட்சிகளுக்கும் நீட்டிக்கப்பட்டு அதற்கு 56 கோடி



1983 மார்ச் 9] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் வரும் நிதி ஆண்டில் இதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த தன்னிறைவு திட்டத்தின் மூலம் ஆண்டு ஆண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த கிராமங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் வளர்ச்சி பெற்று இருக்கிறது என்பதையும் கூறி இந்த நிதிநிலை அறிக்கையை பாராட்டி வரவேற்கிறேன்.

வாழ்க்கையில் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள 6 முதல் 14 வயதுள்ள சிறார்கள் புரட்சித் தலைவர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டு மத்திய சத்துணவுத் திட்டத்தின் காரணமாக 2.63 லட்சம் மாணவர்கள் நடப்பு நிதி ஆண்டில் பள்ளிகளில் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையோடு கூறிக் கொள்கிறேன். இதன் காரணமாக 1,250 உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர் பதவிகள், 150 தமிழ்ப் பண்டிதர் பதவிகள், 100 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள், 200 மேல்நிலைப்பள்ளிகளில் பி.எட் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் இதனால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும், கல்வியின் தரம் உயர்வடைவதற்கும் கல்வித் துறைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது இதை பாராட்டி வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டம் நெல் களஞ்சியமாக இருக்கும். இன்று இயற்கையின் சதியால் தஞ்சை மாவட்டம் வரலாறு காணாத அளவுக்கு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் தஞ்சை மாவட்டம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக அறிவித்து உடனடியாக துயர் துடைப்பு பணிகளை போர்க்கால நடவடிக்கை போல விரைந்து செயல்படவேண்டும் என்றும் நிலவரி வஜா செய்ய வேண்டும் என்றும் கூட்டுறவு கடன் வசூல் முதலியவற்றை ஒத்திவைத்து விடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு பிறகு உலக தமிழ் மாநாடு கண்ட தஞ்சை தரணியிலே தமிழ் பல்கலைக்கழகம் கண்டு தரணி போற்றும் இந்த தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் இவைகளை எல்லாம் உலகத்திற்கு மீண்டும் பரப்ப வழி கண்ட புரட்சித் தலைவர் அவர்கள் தஞ்சை மாவட்ட மக்களின் நீண்ட நெடு நாளைய கோரிக்கையான தஞ்சையில் விவசாய கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று இந்த ஆண்டில் ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையை மனமாற பாராட்டி வரவேற்கிறேன்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1983 மார்ச் 9

இல்லை என்று கையை விரிக்கின்ற நிலைமைக்குப் போய் விடுவார்களோ என்று நினைக்கவேண்டிய நிலைமை இருக்கின்றது. ஏற்கெனவே மழை குறைவு காரணமாகவும், வறட்சி காரணமாகவும் உற்பத்தி குறைந்திருக்கின்றது என்பது நமக்குத் தெரியும். ஆகவே உற்பத்தி செய்த விவசாயிக்கு சற்று கூடுதலாக விலை நிர்ணயித்தால் என்ன? அப்படிக் கூடுதலாகக் கொடுப்பதிலே என்ன கஷ்டம் வந்துவிடப்போகிறது? இங்கே இருந்து ஆந்திராவிலே போய் வாங்கிக்கொண்டு வரவில்லையா? அதற்கு அதிகமாகச் செலவு ஆகவில்லையா? ஆகவே அதையெல்லாம் விட்டுவிட்டு இங்கே இருக்கின்ற தமிழக விவசாயிக்கு பயன் ஏற்படுகின்ற வகையில் அவர்களுக்கு கூட 25 ரூபாய் கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுக்காமல் வியாபாரிகளிடம் போய் அவர்கள் கொள்முதல் செய்ததில் 50 சதவிகித மூட்டையைக் கொடு என்று ஏன் அவர்களிடம்போய் கையேந்தி நிற்க வேண்டும்? அரசே மானியம் கொடுத்து எல்லா நெல்லையும் அரசே கொள்முதல் செய்து அட்டையின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் அரிசி நியாய விலையில் கொடுப்பதுதான் சரியாக இருக்கும். அப்போதுதான் தமிழக அரசு ஏழை எளிய மக்களையும், நடுத்தர மக்களையும் பாதுகாக்கின்ற வகையில் நடவடிக்கை எடுத்ததாக இருக்கும். எனவே அப்படிப்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசான அண்ணாவின் அரசு சார்பில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1983—84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத்திலேயே குறிப்பாக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள அத்தனைபேரும் மனம் உவந்து பாராட்டக்கூடிய மனிதாபிமானத்தின் அடிப்படையினை மனதில் வைத்துக்கொண்டு ஏறத்தாழ 65 இலட்சம் குழந்தைகளுக்கும், 2 இலட்சம் முதியோர்களுக்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்துகொண்டு ஒரு வேளை உணவாவது கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கின்ற அந்தக் குழந்தைகள் பயன் அடைகின்ற வகையில் சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசான அண்ணாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. ஆனால் ஏனோதானோ என்று காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் சிலர்குறை சொல்லலாம். இன்று பயனடைந்து வருகிற, ஒரு வேளை உணவாவது கிடைக்கின்றதே என்று திருப்தி அடைகின்ற அந்த இலட்சோபலட்சம் இதயங்களின் தாபத்திற்கு ஆளாக வேண்டாம் என்று இந்த மாமன்றத்தின் மூலம் நான் எச்சரித்துக்



1983 மார்ச் 9] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தை இவ்வளவு சிறப்பாகச் செயல்படுத்துகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 134 கோடி ரூபாய் ஏழை எளிய மக்களின் குழந்தைகளின் நல்வாழ்வுக்குப் பயன்படுகின்றது என்பதை மிகவும் பெருமையோடு கூறிக்கொண்டு மனப்பூர்வமாக இந்த நிதிநிலை அறிக்கையினை நான் வரவேற்கின்றேன்.

தமிழகத்திலே உள்ள இலட்சக்கணக்கான குடும்பங்களில் வாழ்பவர்களின் நிலைமையினை மனதில் கொண்டு குடும்பத்தில் வாழ்கின்ற ஒருவருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் அதன்மூலம் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து அந்தத் திட்டத்திற்காக இந்த வரவுசெலவுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் மகிழ்ச்சிகரமானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை யாரும் நினைத்துக்கூட பார்க்காத வகையில் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது வரவேற்கத்தக்கது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைக் கொண்டு வந்த இந்த வரவு-செலவுத் திட்டத்தை முழு திருப்தியோடு நான் வரவேற்கிறேன். எப்படி இதனைச் செயல்படுத்துவது என்று திட்டம் தீட்டி விரைவிலே செயல்படுத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றது. வீட்டுக்கு ஒருவருக்கு எங்கே வேலை என்று சந்து முனையிலே சிந்து பாடுகின்றவர்களுக்கு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்துள்ள இந்தத் திட்டம் முத்தாய்ப்பாக அமையும் என்பதைக் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் புரட்சித் தலைவர் அவர்களால் தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் படிப்படியாக இந்த அரசால் நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராமப் பகுதிகளிலும், நகரப்பகுதிகளிலும் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலே இருந்து ஆயிரக்கணக்கான துளைக் கிணறுகளை அமைத்துள்ளது என்பதையும் சமுதாயக் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தோடு மற்ற துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்காகவும் சேர்த்து 45.63 கோடி ரூபாய் அரசு செலவிட்டுள்ளது. தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும், அதாவது வறட்சியால் பாதிக்கப்பட்ட எங்கள் மாவட்டத்திற்கு மட்டும் 5,000 வடிமுனை குழாய் கிணறுகளை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற வகையிலே இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. தி. கா. நல்லப்பன்] [1983 மார்ச் 9

சோடும் வாதிட்டு தண்ணீர் விட்டிருப்போமானால் தஞ்சாவூரில்
ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சி நிலையை நாம் தவிர்த்திருக்கக்
முடியும். நீண்ட நெடு நாட்களாக இருக்கக்கூடிய சேது சமுத்
திரத் திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையிலாவது சேர்க்கப்
பட்டிருக்கும் என்று எதிர்ப்பார்த்தோம். அது இந்த அறிக்கையிலே
இல்லாதது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். 1981–82 ஆம்
ஆண்டில் சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய 32 கிலோ மீட்டர்
களுக்கு 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக வரியை உயர்த்தி
இருக்கிறோம். இன்றையதினம் வெளியேயிருந்து நகரத்திற்குள்
நுழையக் கூடிய பண்டங்களுக்கு புதியதாக நுழைவு வரி என்று
போட்டிருக்கிறோம். இப்படி போட்டிருக்கிற இந்த நுழைவு
வரி சாதாரண ஏழை, எளிய மக்களை மிகவும் பாதிக்கும்
என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று இந்த ஆண்டு அறிக்கை
யில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 1 கோடியே 17
லட்சம் குடும்பகார்டுகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள்.
வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று வைத்துக்கொண்டால் ஒரு
கோடி பேர்களுக்கு நாம் வேலை கொடுக்கவேண்டிய சூழ்நிலை
ஏற்படும். ஒரு கோடி பேர்களுக்கு எந்த முறையில் வேலை
கொடுக்க போகிறோம்? என்னென்ன வேலை கொடுக்கப்போகி
றோம்? படித்தவர்களுக்கு என்ன வேலை? படிக்காதவர்
களுக்கு என்ன வேலை? என்ற விபரங்கள் இல்லாமல்; வீட்டிற்கு
ஒருவருக்கு வேலை என்று இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்
பட்டிருக்கிறது.

இன்று தமிழகத்தில் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது.
அரிசியை பொறுத்தவரையில் மத்திய அரசோடு பேசி, அது
பயனளிக்கவில்லை என்ற சூழ்நிலையில், உண்ணாவிரதம் இருந்து
இன்றைய தினம் ஒரு குறிப்பிட்ட அளவு வந்திருக்கிறது. அரிசியை
பொறுத்தவரையில், ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் சொர
ணம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, விளைகிற இடத்தில்
அரிசி ஆலை அதிபர்களை மட்டும் நம்பியிருக்காமல், நாமே
விவசாயிகளிடம் சென்று, குறிப்பிட்ட அளவிற்கு மானியமாகவோ,
அல்லது ஓரளவிற்கு நன்கொடையாகவோ அவர்களுக்கு கொடுத்து
நெல் வாங்கக்கூடிய சூழ்நிலை இருந்திருக்குமானால், இன்றைய
தினம் ஓரளவிற்கு உணவுப் பிரச்னையை சமாளித்திருக்கலாம்
என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதிய வரிகளைப் போடுகிற போது மத்திய அரசு ரெயில்வே
கட்டணத்தையும், சரக்குக் கட்டணத்தையும் உயர்த்தி இருக்
கிறது. நாமும் லாரிகள் மற்றும் ஊர்திகளின் மீது அதிகமான
வரிகளை விதித்து இருக்கிறோம். டீசல், பெட்ரோல் விலையும்,
ஊர்திகளின் உபரிப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிற சூழ்



1983 மார்ச் 9] [திரு. தி. கா. நல்லப்பன்]

நிலையில், பேருந்துகளின் சீட்டுகளுக்கு விதிக்கப்படுகிற வரியும்
உயர்ந்திருக்கிற சூழ்நிலையில் நிச்சயமாக ஏழை, எளிய மக்கள்
நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

புதிய வரிகள் போடப்பட்டுள்ள சர்க்கரை, துணி வகைகள்,
புகையிலை, பெட்ரோல் பொருள்கள், வனஸ்பதி, மருந்து
பொருள்கள், நிலக்கரி, மின்சாரப் பொருள்கள் இவை யாவும்
சாதாரண ஏழை, எளிய மக்கள் நடுத்தர மக்கள் அன்றாடம் வாங்க
கூடிய, உபயோகிக்கக்கூடிய பொருள்களாக இருக்கின்றன. அந்த
பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. விதிக்கப்
பட்டிருக்கக்கூடிய வரிகளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்
தயவுசெய்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கு 134 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு
ஏறக்குறைய 65 லட்சம் குழந்தைகளுக்கு சத்துணவு
வழங்கப்படுவதாகக் கூறினார்கள். அதைப் பொறுத்த வரையில்
எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. இருப்பினும் ஒதுக்கப்
படுகிற அந்த நிதிக்கு வழி எங்கே? வேறு எந்த, எந்த இனங்
களிலிருந்து செலவு செய்யப்படுகிறது அல்லது, அதற்கு
ஒதுக்கப்படுகிற அந்த நிதியின் வரவு–செலவு எப்படி
என்பது பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட
வில்லையென்பதைப் பார்க்கின்றபொழுது வருத்தமாக இருக்
கிறது.

மேலும், அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்கள்
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசு அந்தக் கோரிக்கை
களுக்குச் செவி சாய்க்க வேண்டுமென்று பல பேராட்டங்களை
நடத்தியிருக்கிறார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில்
அது சம்பந்தப்பட்ட வரையில், எந்த விதமான அறிவிப்பும்
இல்லை.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை வீட்
டுக்கு ஒருவருக்கு வேலை என்ற அறிவிப்பு இருந்தாலும், வேலை
யில்லாமல் திண்டாட்டத்தில் இருக்கிற இளைஞர்களுக்கு, குறிப்
பாக, கிராமப்புறத்திலே, நகரப்புறத்திலே இருக்கக்கூடிய இளை
ஞர்களுக்கு எந்த, எந்தத் துறையிலே வேலை கொடுக்கப் போகி
றோம்? வறுமைக் கோட்டிலே இருக்கிற அந்த மக்களை எப்படி
முன்னுக்குக் கொண்டு வரப்போகிறோம் என்பதைப்பற்றி இந்த
அறிக்கையிலே சுட்டிக்காட்டவில்லையென்பதை நான் தெரிவித்
துக்கொள்கிறேன்.

மேலும் காவல் துறையைப்பொறுத்தவரையில் எங்களது மாவட்
டத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு இடங்களில், பல்வேறு
அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, வழக்கு தொடுக்கச்
செல்கின்றவர்கள் பேரிலேயே வழக்குத் தொடரக் கூடிய ஒரு
சூழ்நிலையிருக்கிறது.

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1983 மார்ச் 9

என்னுடைய தொகுதிகளில் கீழ்கண்ட திட்டங்களை நிறை வேற்றித்தருமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன். பேரா ஊரணித் தொகுதியில் தன்னிறைவுத் திட்டத்தில் தொடங்கப் பட்ட நிலையில் உள்ள சில குடிநீர் திட்டங்களை விரைவுபடுத்தி நிறைவேற்றித்தர வேண்டும். பல கிராமங்களில் திட்டமிடப் பட்டு செயல்படாமல் உள்ள குடிநீர் திட்டங்களை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தில் விட் டுப்போன கிராமங்களுக்கும் குடிநீர் திட்டங்களை செயல் படுத்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத் தில் கல்லணை கால்வாய் கோட்டத்தில் கிளை ஆறுகளான திரு வப்பாடி வாய்க்கால், அம்மணிசத்திரம் வாய்க்கால், சேவாத்திரம் வாய்க்கால், சரிசபையில் வாய்க்கால், காணிவாசல் வாய்க்கால் வீரக்குடி வாய்க்கால், அலிவலம் வாய்க்கால், புதுப்பட்டினம் வாய்க்கால், ராஜாமடை வாய்க்கால் போன்ற பல கிளை ஆறு களில் கடைமடை பேராவூரணி தொகுதியில் உள்ள சேவத்திரம் திட்டத்தில் முடிவு அடைவதால் இந்த வாய்க்கால் அனைத்தை யும் தூர் வாரி இதிலே அமைக்கும் சிறுகோட்டத்தின் மூலம் ரிவர்ட்மெண்டு மதகுகளை பழுதுபார்த்து கொடுக்குமாறு கேட் டுக் கொள்கிறேன்.

கடும் வறட்சியால் வேலையில்லாமல் அவதியுறும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கிற முறையிலே பேரா ஊரணித் தொகுதியிலே உள்ள ஏரிகளையும் குளங்களையும் ஆழப் படுத்தி மராமத்துச் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கி றேன். வேலையில்லாமல் அவதியுறும் விவசாயத் தொழிலாளர் களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய திட் டங்களைத் தொடங்கி நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த பல ஆண்டுகளாக முடிவுறாமல் இருக்கும் உப்பு விடுதி, வாட்டாத்திகோட்டை சாலையின் குறுக்கே அக்கினி யாற்றில் பாலம் கட்டிக்கொடுக்க இந்த இரண்டாவது திட்டத் திலே எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட் டுக் கொள்கிறேன். திருச்சிற்றம்பலத்திலேயுள்ள கால்நடை கிளை நிலயத்தை மருந்தகமாக நிறைவேற்றித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இடையாற்றில் ஒரு மருந்தகம ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அலி வளத்தில் கால்நடை கிளை நிலயத்தை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிக்காடு பிர்க்காவில் இரண்டாம் புலிக்காட்டிலும் குர்த்தி பிர்க்காவில் அரிமளத்தி லும் சார்பதிவாளர் அலுவலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். பேராவூரணியிலே முன்சீப் கோர்ட்டும் சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டும் ஏற்படுத்தித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன். பெருமகளூரில் அரசுக்கு பொதுமக்க ளால் கொடுக்கப்பட்ட இடத்தில் இந்த நிதியாண்டிலே அரசு மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுக்கவேண்டு



1983 மார்ச் 9] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

மென்று கேட்டுக் கொள்கிறேன். களத்தூர், ஆவணம், பைங் கால், ஏலாதிகரம்பை, உடையநாடு, மல்லிப்பட்டணம் ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டடங் களைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒண்டிகுளம், மணக்காடு, விளாங்குளம், பள்ளி கொண்டான் ஆகிய இடங்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பள் ளத்தூர், குருவிக்கரம்பை, திருச்சிற்றம்பலம், பெருமகளூர் ஆகிய இடங்களில் பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேராவூரணித் தொகுதியிலே திருச்சிற்றம்பலம், பெருமகளூர், மல்லிப் பட்டணம் ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. தி. கா. நல்லப்பன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்பேரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உகந்ததாக இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை யல்ல. இது ஒரு முதலாளித்துவ நிதி நிலை அறிக்கை என்று கூறினால் அது மிகையாகாது. ஏற்கெனவே மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற அரசு ஏறக்குறைய 2,100 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளைப் போட்டு தபால், தந்தி, டெலிபோன், ரயில் கட்டணங்களை உயர்த்தி விதித்து இருக்கக்கூடிய இந்த சமயத் தில் நம் மாநில அரசும் புதிய வரிகளை 26 கோடி ரூபாய்க்கு விதித்து இருக்கிறது. குறிப்பாக சென்ற ஆண்டையும் இந்த ஆண்டையும் கணக்கிட்டு கடைசியாக பற்றாக்குறையாக இருக்கக்கூடிய 184.55கோடி ரூபாய்க்கு மேற்கொண்டு என்ன செய்வதுஎன்று கணக்கிட்டால் அதுவும் புதிய வரிகளாக வருமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. சென்ற ஆண்டு பருவ மழை தவறியிருக்கிறது. அதைப்போன்று இந்த ஆண்டும் பருவமழை தவறியிருக்கிறது. பருவ மழை, வறட்சி ஏதோ திடீரென்று ஏற்பட்டவையல்ல, பருவ மழை தவறியிருப்பினும் குறிப்பிட்ட காலத்திலே விவசாயத்திற்கு இல்லாமல் குடிநீர் கொடுப்பதற்காக திட்டமிட்டு இருப்போமானால் குறிப்பாக சென்னை நகரத்திலே ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் விட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் காவிரி நதி நீரைப் பொறுத்த வரையிலும் 1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு முடிவுற்றாலும், முடி வுற்றதற்குப் பின்பு ஒரு சுமூகமான முடிவுக்கு வரமுடியாத சூழ் நிலையில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஒரு ஒப்பந்தத்தின் அடிப் படையில் தஞ்சாவூருக்கு மத்திய அரசோடும், கர்நாடக அர

[திரு. தி. கா. நல்லப்பன்] [1983 மார்ச் 9

காவல் துறையைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான நிலைகளும் சுட்டிக்காட்டப்படவில்லையென்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுமையும் இன்றையதினம் வறட்சியாக இருக்கிற இந்தச் சூழ்நிலையில் காவேரிப் பிரச்னையானாலும் சரி, அல்லது பாண்டியாறு புன்னம்புழா பிரச்னையானாலும் சரி, அண்டை மாநிலங்களோடு பேசித் தீர்த்து வறட்சியிலிருந்து தமிழ்நாட்டிற்கு நிரந்தர பரிகாரம் காண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த நிதிநிலை அறிக்கை சாதாரண ஏழை, எளியவர்களைப் பாதிக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை என்று சொல்லி அமர்கிறேன். நன்றி.

* திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை வரவேற்று சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தமிழக அரசு

'' கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு ''

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஒப்ப, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் டாக்டர் நாவலர் அவர்களும், நாட்டினுடைய நலனைக் கருதி, இந்த நல்லதொரு நிதிநிலை அறிக்கையினை அளித்திருப்பதைப் பாராட்டி வரவேற்கின்றேன்.

'' விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி ''

என்ற குறளுக்கொப்ப, தமிழகம் வறட்சியால் பலமாகத் தாக்கப்பட்டு, குடிநீர்ப் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை, போன்ற இயற்கையின் சீற்றங்களை ஒருபுறம் நாம் தாங்கிக் கொண்டிருக்கிறோம். மறுபுறம் இந்தச் சங்கடங்களிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற முயல வேண்டிய மத்திய அரசு அரசியல் ரீதியாகப் பழி வாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் நம்முடைய அரசு செய்ய வேண்டிய கடமைகளை, செய்யவேண்டிய நேரத்திலே, முனைப்பாகச் செய்துகொண்டிருப்பதை நான் உளமாரப் பாராட்டுகிறேன். மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பெரிய இணக்கமான உறவு ஏற்பட, தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறுநேராவண்ணம் போதிய அதிகாரங்கள்கூடிய தன்னாட்சி உரிமையைப் பெறவேண்டிய நிலையைத் தமிழக அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே கூறியிருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.



1983 மார்ச் 9] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

மத்திய மாநில பொது நிதிநிலை உறவுபற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை நம்முடைய தமிழக அரசுக்கும் மற்றமற்ற மாநில அரசுகளுக்கும் வந்திருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–68 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் குறித்து உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

''மத்திய-மாநில அரசுகளிடையே நிதி உறவுகளின் தன்மையை ஆய்ந்து அதன் சீரமைப்புக்கான ஆலோசனைகள் வழங்க ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நிதிக் குழு அமைக்கப்படுகிறது; நிதிக் குழுவின் பரிவுரைகளையொட்டி, மத்திய அரசு வரி வருவாயில் மாநிலங்களுக்குக் கிடைக்கும் பங்குத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது உண்மைதான் என்றாலும், இந்தக் குழுவின் ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக திட்டநிதி இருந்து வருவதால், மத்திய அரசையே, மாநிலங்கள் நிதி வேண்டிப் பெரிதும் நம்பியிருக்கும் நிலையைக் குறைத்திடும் வழிவகைகளை அவை காண முடியவில்லை. நிதிக்குழுக்கள், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையே அமைக்கப்படுவதால், மாநில அரசுகள் இடைக்காலத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளைச் சமாளிக்கும் ஆற்றல் உள்ளவையாக இல்லை.'' என்று கூறியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1–20)

எனவேதான், நம்முடைய தமிழக அரசும் மாநில மத்திய நிதி ஆதாரங்களை மாற்ற வேண்டும், தற்போதுள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவை திருத்தப்பட வேண்டுமென்ற முறையில் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மற்றொரு இடத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"Most of the elastic taxes are levied by the Centre and the States have to depend upon only on inelastic taxes என்று 1958-59 ஆம் ஆண்டு பட்ஜெட் உரைமீது நடந்த விவாதத்திலே கூறியிருக்கிறார்கள்.

அதேபோலவே, பி.சி. ராய் அவர்களும்,

"Budgeting in the States "is growing increasingly difficult in view of this increasing dependance on the Centre and the increasing uncertainty about the amounts which are likely to be received in the area of dependance."

என்று மத்திய அரசினுடைய ஆதிக்கத்தை மிக வலுவானமுறையில் அந்த நிதித்துறை பெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1983 மார்ச் 9

கிறார்கள். எனவேதான், நம்முடைய தமிழக அரசும், மத்திய
மாநில அரசுகளின் நிதி ஆதாரங்களைப் பெருக்கவும், மாற்றிய
மைக்கவும் முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்கம் டாக்ஸ், எக்சைஸ் டாக்ஸ் என்பவற்றில் சர்சார்ஜ்
என்று வரிவிகிதத்தை அமைத்து, அதன் மூலமாக வருகின்ற வரு
மானத்தை மாநிலங்கள் பெற முடியாத சூழ்நிலையை மத்திய
அரசு இப்பொழுது ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இந்த வரி
விதிப்பில் மாற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும்
ஒதுக்கப்பட வேண்டிய நிதி ஆதாரங்கள் ஒதுக்கப்படுவதற்கான
வழிவகைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

தமிழ்நாட்டில் வறட்சியால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டி
ருக்கிறார்கள். இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போது
மானதாக இல்லையென்றும், வருகின்ற நிர்ப்பந்தங்கள், சங்கடங்
களைப்போக்க கூடுதலாக நிதிஒதுக்கீடு செய்யும்படியும் மாண்புமிகு
நிதியமைச்சரவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும்
வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால் அந்த மாவட்டம் முழு
மையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, துரித நிவாரண
நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்
தின் மூலம் 65 இலட்சம் குழந்தைகள் நல்ல முறையில் சத்துண
வைப் பெறுகின்றனர். இதற்கென்று ஒரு முறையான நிதி ஆதா
ரத்தைக் காண வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். சினிமாக்
கொட்டகைகளிலே விற்கப்படும் டிக்கட்டுகளில் சர்சார்ஜ் என்று
போட்டு, அதன் மூலம் வரும் நிதி ஆதாரத்தைக் கூடுதலாகப்
பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது. என்பதை நான்
எடுத்துக் கூறி, இதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சரவர்கள்
பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வளர்ச்சியும், தன்னிறைவுத் திட்டமும் என்று எடுத்துக்
கொண்டால் நம்முடைய தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க
நிகழ்ச்சியாக இத்திட்டங்கள் இருக்கின்றன. இந்தத் தன்னிறைவுத்
திட்டத்தின் மூலமாகப் பல்லாயிரக்கணக்கான கிராமங்கள்
குடி நீர் வசதியும், சாலை வசதியும் பெறுகின்ற வாய்ப்பை ஒரு
குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டுமென்று செய்து கொண்
டிருக்கிறோம். அதைப்போன்றே, கடந்த ஆண்டு டவுன் பஞ்சா
யத்துக்களுக்கும், நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவு
படுத்தி, நகரங்களில் வாழ்கின்றவர்களும் அந்தப் பலனை அடையும்
வாய்ப்பை நல்கியிருக்கிறார்கள்.



1983 மார்ச் 9] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தைப்ப
இங்கே நம்முடைய மாற்றுக் கட்சியினர் பெரும் குறையாக கூ
கொண்டிருக்கிறார்கள். இந்நல்ல திட்டத்தை நான் வரவே
கிறேன். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்க
15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தாலும்கூட, தேவைக்கேற்
வசதிக்கேற்ப அதில் மாற்றம் செய்வதற்கு நம்முடைய நாவல
அவர்கள் முன் வர வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டு
கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பற்றி எடுத்துக்கொண்டால், பொ
வாக தமிழகத்தைப் பொறுத்தவரையில், திராவிட இயக்க
இங்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் மத்திய அ
சாங்கத்தின் இன்வெஸ்ட்மென்ட் தமிழகத்தில் (Centra
Investment in Tamil Nadu) செய்யப்படவில்லை. அந்த அளவிற்
மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழகத்தை அவர்க
புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தி
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் பேரறிஞ
அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சி மாநகரத்திலே எந்தவிதமான
தொழிற்சாலையும் தற்போது இல்லை. அந்த காஞ்சி மாநகரத்
திலே ஒரு பெரிய தொழிற்பேட்டையை ஆரம்பிக்க வேண்டும்.
அந்தப் பகுதியைப் பின் தங்கிய பகுதியாக அறிவித்தால் மேலும்
தொழில்கள் வளர்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதால் அதற்
கும் அருள்கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு போக்குவரத்துக் கழகத்தை
அமைத்துவரும் இவ்வரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த
காஞ்சி மாநகரத்தைக் கொண்டிருக்கின்ற செங்கல்பட்டு மாவட்
டத்தையும், வடார்க்காடு மாவட்டத்தையும் இணைத்து ஒரு
போக்குவரத்து கழகத்தினை வேலூரில் அமைத்து இருப்பது
தரும நியாயமில்லை. வடாற்காடு மாவட்டம் ஏற்கெனவே பெரி
தாக இருக்கும் மாவட்டம், அதோடு மற்றொரு பெரிய மாவட்
டத்தையும் சேர்க்காமல் இருக்க வேண்டும்.

வடாற்காடு மாவட்டம் பெரியதாக இருக்கும் மாவட்டம்.
அதே போல செங்கற்பட்டு மாவட்டமும் ஒரு பெரியதான மாவட்
டம். இந்த இரண்டு பெரிய மாவட்டங்களையும் இணைத்து
ஒரு பெரிய போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்து இருப்பது நியாய
மானதுதானா என்பதை போக்குவரத்துத் துறை அமைச்சர்
அவர்கள் அருள் கூர்ந்து சிந்திக்க வேண்டுகிறேன். நம்மை ஆளாக்கி
விட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்த
வேண்டுமென்றால், அந்த மாவட்டத்திற்கென தனியாக ஒரு

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1983 மார்ச் 9

மாவட்ட தலைநகரும் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பூமியுமான காஞ்சிபுரத்தில் First class legistrate Court and Co-operative Tribunal ஆகிய கோர்ட்டுகள் தொடங்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

''அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை''

என்ற குறளுக்கொப்ப தமிழ் மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் துணையும் ஆசியும் பெற்றுள்ளார்கள் என்று கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. 10—3—1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*



## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*170. அண்ணா பொறியியல் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].*

### ஆ அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

போக்கு வரத்துக் கழகத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் பணிவோடு அந்த மாவட்டத்தின் சார்பில் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டம் சென்னைக்கு மிக அருகாமையில் இருக்கின்ற மாவட்டம். செங்கையில் இருக்கிற, காஞ்சிபுரத்தில் இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களுக்கு சி.சி.ஏ-ம், எச்.ஆர்.சி.ஏ-வும் (C.C.A. and H.R.C.A.) அவர்களுக்கு தரப்படவில்லை. அவர்கள் அந்த நகர ஈட்டுப்படியைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். ஆகையால் அந்தப் பகுதியிலே இருக்கிற அரசு ஊழியர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுகிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அந்த ஈட்டுப்படியை அந்த பகுதியிலிருக்கும் அரசு ஊழியர்களுக்கு கொடுப்பதற்கு ஆவன செய்யும்படி விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அதே போல தமிழகத்தில் பல்வேறு பெருந்தலைவர்கள் சார்பில் பல மாவட்டங்களை ஆரம்பித்துள்ள இந்நல்லரசு இந்திய துணைக் கண்டத்திற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வழிகாட்டியாக திகழ்கிறார்கள்.

அதைப்போலவே நம்மை ஆளாக்கிவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலே அண்ணா மாவட்டம் என்று ஒரு மாவட்டத்தை ஆரம்பித்துக் கொடுக்க அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பாசன ஏரி சாதாரண ஏரிகள் P.W.D. ஏரிகளானாலும் சரி, பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து அந்த ஏரிகளை ஆழப்படுத்தவும், இவ்வேரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அரசு கிட்டத்தட்ட 5½ லட்சம், 6 லட்சம் கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல முறையில் பல்வேறு திட்டங்களை தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக அந்த நெசவாளர் பெருங்குடி மக்களை கூட்டுறவுத் துறையிலே 67 சதவிகிதம் கொண்டுவர வேண்டுமென்று நம்முடைய அரசு வேகமாக செயல்பட்டு வருகிறது. ஆகவே, அரசுக்கு நெசவாளர்கள் சார்பில் என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய விவசாயிகளுக்கு மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகள் என்ற ஒரு அமைப்பு இருப்பதைப்போல நம்முடைய நெசவாளர்களுக்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு மத்திய வங்கி மாவட்ட அளவில் அமைக்க நம்முடைய அரசு ஆராய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே பல்வேறு சீர்திருத்த திட்டங்களை நம்முடைய அரசு செய்து வருகிறது. அதிலே இந்தியா முழுவதற்கு



வழிகாட்டியாகத் திகழ கூடிய அளவிற்கு சிறப்பான பணிகளை ஆற்றிவரும் அந்தக் கூட்டுறவுத் துறை மேலும் நல்லமுறையில் பணியாற்ற மேலும் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சங்கங்களை ஏற்படுத்துவதற்கும் மற்ற கூட்டுறவு சங்கங்களை அரசு அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதிலே குறிப்பாக கன்சூமர்ஸ் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி (Consumers Co-operative society) என்ற பெயரில் நகரத்தில் மட்டும்தான் அந்தக் கூட்டுறவுத் சங்கங்கள் இருக்கின்றன. அது போன்ற கூட்டுறவுச் சங்கங்களை கிராமங்களிலேயும், புறநகர் பகுதிகளிலேயும் அமைத்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் வசதிகளைப் பெறுவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுகிறேன்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் என்று கைத்தறி நெசவாளர்
களுக்கு ஏற்கெனவே இருப்பதைப்போல தமிழகத்திலே இருக்கிற
அனைத்து மாவட்ட கூட்டுறவு அச்சகங்களுக்கும்
சேர்த்து (Apex Co operative Printing Press) ஒன்றை ஆரம்
பித்தால் அதன் மூலம் அந்தத் துறை மேலும் வளர
வாய்ப்பு இருக்கிறது. வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் காஞ்சி
புரத்தில் இருக்கின்ற ஏழை மக்களுக்கு நல்ல வீட்டுவசதி தரும்
படி கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கிற அரசு ஊழியர்
களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டு வசதி வாரிய வீடுகள் போது
மானதாக இல்லை. அவர்களுக்குப் போதுமான குடியிருப்பு வசதி
களை கூடுதலாக செய்தால் நலமாக இருக்கும்.

தமிழகத்தில் சுற்றுலாத் துறையில், நல்ல முறையில் நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு சிறப்பான பணிகள் நடந்து வருகின்
றன. இந்தச் சுற்றுலாத் துறையில் காஞ்சிபுரமும், ஒரு வர
லாற்று சிறப்பு மிக்க முக்கியமான பகுதியாக இருக்கிற கார
ணத்தால் காஞ்சிபுரம் நகரத்தில் ஒரு சுற்றுலா அலுவலகம்
அமைத்து காஞ்சிபுரத்தில் Guided Tourist Service
ஒரு அமைப்பினை, வட மாநிலங்களில் நடத்துகின்ற மாதிரி
ஓர் அமைப்பினை, நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.
அந்த பகுதியில் சுற்றுலா வாரியத்தின் சார்பில் ஒரு விருந்தினர்
மாளிகையைக் கட்ட ஏற்பாடு செய்தால் அது நிச்சயம் சுற்று
லாத் துறை வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்
படுவதாக இருக்கும்.

சிரமமான பொருளாதார நிலையிலும் முக்கியமாக சமு
கத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில்
மண்ணெண்ணெய் விளக்கு, சோப்புகள் போன்றவற்
பட்டு
றிற்கு வரி சலுகைகள் அளித்திருப்பதை வரவேற்கிறேன்.

இணைப்பு.

(1 ம் பக்கத்திலுள்ள உடுகுறியிட்ட வினா எண்.325-க்கான விடையைக் காண்க.)

உலக வங்கியின் (அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றம்) உதவியுடன் செயல் படுத்தப் பட்டு வரும் திட்டங்களின் விவரங்கள் வருமாறு —

| திட்டம். | அனைத்து நாடுகள் வளர்ச்சி மன்றத்திடம் கடன் பெறத் தக்கத் தொகை (ரூபாய்கோடியில்.) |
|---|---|
| (1) | (2) |
| 1. சென்னை நகர் பகுதி வளர்ச்சித் திட்டம் (நிலை 1). | 21.60 |
| 2. சென்னை நகர் பகுதி வளர்ச்சித் திட்டம் (நிலை 2). | 35.28 |
| 3. பெரியாறு வைகை பாசனத் திட்டம் | 20.70 |
| 4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம். | 27.00 |
| 5. வேளாண்மை வளர்ச்சிப் பணியைச்சீரமைப் பதும் வலுப்படுத்துவதும்; பயிற்சியளித்தல்—பார்வையிடல் ஏற்பாடு. | 25.20 |

நிதியுதவியை மத்திய அரசு முன்னதாகவே வழங்குவதில்லை. திட்டத்தைச் செயற்படுத்தும் அமைப்புகள் வரவு-செலவுத்திட் டத்தில் மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ள தொகைக் கேற்ப திட்டத்திற்குச் செலவு செய்கின்றன. திட்டத்தைச் செயற்படுத் தும் அதிகாரிகள் மேற்படி செலவிற்கான உதவித் தொகையைக் கோரி மத்திய அரசுக்கு/உலக வங்கிக்குக் கோரிக்கைப் பட்டியல் களை அனுப்புகின்றனர். அவற்றின் அடிப்படையில் உதவித் தொகையை மத்திய அரசுக்கு உலக வங்கி வழங்குகின்றது. மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெறப்படுகின்ற நிதி உதவியில் 30 சதவீதத்தை அதனுடைய வரவு-செலவு திட்டத் திற்குப் பயன் படுத்திக் கொண்டு மீதமுள்ள 70 சதவீதத்தை அதன் கூடுதல் நிதி உதவியின் ஒரு பகுதியாக தமிழக அரசிற்கு அளிக்கிறது. மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெறும் தொகையை முழுமையாக மாநில அரசுக்கு உலக வங்கி விதிக் கும் நிபந்தனைகளின் அடிப்படையில் தர வேண்டும் என்று பல் வேறு சமயங்களில் தமிழக அரசு வற்புறுத்தி வந்துள்ளது.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-1.
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-13.
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajentha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1. Jain Book Agency, New Delhi.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghaleyam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

© TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE [illegible]

வெளியீடு 26-11-1983]
(Issued 16-11-1983

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## [illegible] வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை மார்ச் 10, 1988—தொகுதி XLIV எண் 2

Thursday 10th March 1983—Volume XLIV No. 2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George
Madras-600009

(Price Rs. 3-50 Paise
[illegible] 3-50 காசுகள்)

## உள்ளடக்கம்.

**10-3-1983**


பக்கங்கள்.

**1. வினாக்கள்-விடைகள் :**

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 129—163

**2. தகவல் கோரல் :**

(அ) அமைச்சர்கள் வினாக்களுக்கு விடையளித்தல் 163—164

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 164—167

(இ) படிவங்களை தமிழில் அளிப்பது .. 167

**3. ஒத்திவைப்புத் தீர்மானம் :**

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தீ விபத்து 168—176

**4. அறிவிப்புகள் :**

(அ) பேரவை அலுவல் .. .. .. 177—180

(ஆ) மேலவைத் தலைவர் செய்தி—சட்ட முன்வடிவுகள். 181

(இ) முன்பண மானியக் கோரிக்கைகள்—1983-84 183—184

(ஈ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி)—சட்ட முன்வடிவு, 1983. 200

**5. கவன ஈர்ப்பு :**

கோபிச்செட்டிபாளையம் நகராட்சி குடிநீர் வழங்கல். 181—183

**6. முன்பண மானியக் கோரிக்கைகள் 1983-84.** 185—199


M. 2 A 9—1

பக்கங்கள்

7. அரசினர் சட்ட முன்வடிவு :

நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி)--சட்டமுன்வடிவு—1983. 200

8. வரவு-செலவுத் திட்டம் 1983-84 பொது விவாதம் (தொடர்ச்சி) : 200—263

திரு. ப. சுந்தரம் .. .. .. .. 200—204
திரு. சி. கோபால் .. .. .. 205—210
திரு. எஸ். இராசாராமன் .. .. 210—214
திரு. க. இரா. சின்னராசு .. .. 214—217
திரு. ரா. கிருஷ்ணன் .. .. .. 217—229
திரு. எஸ். என். இராமசாமி .. .. 299—232
திரு. க. பாரமலை .. .. .. 232—239
திரு. இரா. சண்முகம் .. .. .. 239—244
திரு. து. இராசரத்தினம் .. .. .. 245—249
திரு. ஏ. டி. கருப்பையா .. .. .. 249—253
திரு. எஸ். டி. உகம்சந்த் .. .. .. 253—258
திரு. டி. வெங்கடரெட்டி .. .. .. 258—263

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 263—265

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1983 மார்ச் 10

மாசி 26, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

" மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் "

உலகம் பழிக்கும் தீய ஒழுக்கத்தை விட்டு விட்டால், மொட்டை அடித்தலும், சடைமுடி வளர்த்தலும் ஆகிய புறக் கோலங்கள் தேவைப்படா.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய தொகை

*வினா எண். 345—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய தொகை (30-9-1981 முடிய) எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ரூபாய் 31.2 இலட்சமாகும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நெய்வேலி நிலக்கரி கார்ப்பரேஷனுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய தொகை 31 இலட்சத்திற்கு மேல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதனால் மின்சார வாரியத்திற்கு பழுப்பு நிலக்கரி சப்ளை செய்வதில் ஏதேனும் தடங்கல்கள் இருக்கின்றனவா ? அப்படி இருந்தால் அதனால் தற்போது மின் சார வாரியத்திற்கு இடையூறுகள் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் நமக்கு நிலக்கரி தருவதில்லை. ஆகவே எந்தத் தடையும் ஏற்படுவதில்லை.

**சென்னை எருக்கஞ்சேரியில் பேசின் பிரிட்ஜ் அனல் மின்நிலையத் தொழிலாளர்களுக்காக கட்டப்படும் வீடுகள்.**

*வினா எண். 346—திரு. கு. ரமணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கொருக்குப்பேட்டை எருக்கஞ்சேரியில் பேசின் பிரிட்ஜ் அனல் மின்நிலையத் தொழிலாளர்களுக்கு 800 வீடுகளைக் கட்டும் திட்டம் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்று வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இவ்வளவு தாமதத்துக்கான காரணம் என்ன ?

(இ) திட்டம் முடிந்து வீடுகள் எப்பொழுது கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ) 1978 ஆம் ஆண்டு வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தம் ஏரைஸ் அண்டு ஏரைஸ் (M/s Aries and Aries) என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் இன்னும் இந்நிறுவனத்தால் வீடுகள் கட்டிமுடிக்கப்பெறவில்லை.

(ஆ) ஒப்பந்தக்காரர்கள் தேவையான அளவு விரைவாக வேலையைச் செய்யாததோடு, ஒப்புக் கொண்ட தொகையைவிட மிக அதிகத் தொகையையும், ஏற்றுக்கொள்ள முடியாத சலுகைகளையும் கேட்டு வேலையை பாதியிலேயே நிறுத்தி விட்டார்கள்

(இ) ஏரைஸ் அண்டு ஏரைஸ் நிறுவனத்தோடு ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக ரத்து செய்துவிட்டு எஞ்சியுள்ள வேலையை மற்றொரு ஒப்பந்தக்காரரை வைத்து நிறைவேற்ற மின் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுமார் 5 ஆண்டுகளாக 700 வீடுகள் மின் வாரிய ஊழியர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள், அவற்றுக்காக கட்டிடங்கள் கட்டுவதற்கு என்று ஆரம்பித்து இப்போது எலும்புக்கூடுகள் மட்டும் உருவாக்கப்பட்டு அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படாமல் இவ்வளவு காலம் அது கட்டப்படாமல் இருப்பதற்கு அந்த ஒப்பந்தக்காரர்கள் தான் அதற்குக் காரணம், அவர்கள் அதைக்



செய்யவில்லை என்று சொன்னால், மின் வாரியத்தினுடைய ஒரு திறமையற்ற போக்குதானே இதற்கு அடிப்படை என்பதை அறிய விரும்புகிறேன். இல்லாவிட்டால் ஒரு ஒப்பந்தக்காரர் நினைத்தால் ஒரு திட்டத்தையே அழித்துவிடும்படியான அவருடைய போக்கை எப்படி இந்த மின் வாரியம் அனுமதிக்க முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த விதிகளின்படி சில சங்கடங்கள் வருகின்றன. சீக்கிரத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக மின் வாரியம் எவ்வளவோ நடவடிக்கைகள் எடுத்தும் கால தாமதம் ஆகிறது. கடைசியாக அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து மின் வாரியம் உத்தரவிட்டது. ஆனால் ஒப்பந்த விதிகளின்படி அவர்கள் நடுவர் மன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். இருப்பினும் வேறு ஒப்பந்தக்காரரை வைத்து வேலையை விரைவில் முடிக்க வேண்டுமென்பதற்காக திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் என்பவருக்கும், டான்சி மெட்ராஸ் அவர்களுக்கு மர வேலைகளுக்கும் இப்போது வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை இன்னும் 9 மாதங்களில் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே இதேபோன்று பேசின்பிரிட்ஜ் பாலத்திற்கு அருகில் எருக்கஞ்சேரி ஹைரோட்டுக்கு அருகில் இதே மின் வாரியத்திற்காக மாடி வீடுகள் சூப்பர்வைசர்களுக்காக கட்டப்பட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது—நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அமைச்சராக இருந்தார்கள்—அவருடைய காலத்திலே அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இது வரையில் அந்த வீடுகள் கட்டப்படாமல் அப்படியே இருக்கின்றது. அதற்கான காரணம் என்ன ? இப்போது கூட அங்கே காவலர்கள் போடப்பட்டு மின்சார வாரியத்தினுடைய பணம் வீணாக்கப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா ? அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்று மின்சார வாரியம் மற்றும் பொதுப் பணித்துறை போன்ற அரசு நிறுவனங்களில் காண்ட்ராக்ட் எடுத்து, அந்த வேலைகளை குறித்த காலத்தில் முடிக்காதது மட்டுமல்ல, காலதாமதப்படுத்தி அந்தத் திட்டத்தின் நோக்கத்

தையே நிறைவேற்றவிடாமல் இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தும் கான்ட்ராக்டர்களுக்கு, அதன்பிறகு அரசாங்க நிறுவனங்கள் எதிலும் கான்ட்ராக்ட் கொடுக்கக் கூடாது என்ற விதிமுறையை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிலர் இப்படிக் காலதாமதம் செய்கிறார்கள் என்பதால் கான்ட்ராக்டர்கள் எல்லோருமே தவறு செய்கிறார்கள் என்று கருதுவது சரியல்ல.

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, சில விதிகளின் காரணமாக கான்ட்ராக்ட் வேலைகளில் சிக்கல் ஏற்பட்டு அதனால், பணிகள் காலதாமதமாகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைகளை சிக்கல் இல்லாத முறையில் திருத்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த கான்ட்ராக்ட்டுகளுக்கு ஒரு ஸ்டான்டர்ட் பார்ம் இருக்கிறது. அதிலே உள்ளே புகுந்து கொண்டு திறமையாக வாதாடுவதற்கு வழக்கறிஞர்கள் உள்ளதால் நமக்கு சில சிரமங்கள் ஏற்படுகின்றனவே தவிர வேறு அல்ல. கூடுமானவரையில் நல்ல ஒப்பந்தக்காரர்களைப் பார்த்து, விரைவில் வேலையை முடிப்பது தான் சரியானதாக இருக்கும்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தக்காரர்கள் நல்லவர்களாக இருந்தால் காலதாமதம் ஏற்படாது. உடனுக்குடன் வேலை நடக்கும் என்று சொல்கிறார்கள். மிக மிக அத்தியாவசியமான காரியங்களை தொழிலாளர்களுக்கு வீடு கட்டுதல் போன்ற வேலைகளை—வாரியத்தில் உள்ள சில அமைப்புகளை உருவாக்குவதற்கான வேலைகளை மின் வாரியத்தில் உள்ள ஊழியர்களைக் கொண்டே, வாரியத்தின் நேரடிப் பார்வையிலேயே, வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே தொழிலாளர்களை வைத்துத் செய்வதற்கு முயற்சி செய்து இந்த கான்ட்ராக்டர்களை வைத்து இத்தகைய பணிகளைச் செய்ய நம்புவதைவிட—பயன் உள்ளதாக இருக்கும் என்பதால், அந்த முறையில் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 347 மற்றும் 348 மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.



திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படி திடீரென்று அறிவிப்புக் கொடுக்கிறீர்களே, தங்களுக்கு எப்போது இது வந்தது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எனக்கு இப்போதுதான் வந்தது.

### தந்தை பெரியார் அவர்களுக்கு வைக்கத்தில் சிலை அமைக்கும் திட்டம்

*வினா எண். 349—திரு. எம். சின்னசாமி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைக்கம் வீரர் தந்தை பெரியார் அவர்களுக்கு வைக்கத்தில் சிலை வைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் கேரள அரசு அதற்கு அனுமதியளித்து உள்ளதா ?

(இ) சிலை எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இரு அரசுகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர், என்று முக்கால் நூற்றாண்டுகாலம் வாழ்ந்து வந்த தந்தை பெரியார் அவர்களுக்கு தமிழக அரசு கேரள மாநிலத்தில் உள்ள வைக்கம் என்ற ஊரில் சிலை வைப்பதற்கான முயற்சிகள் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளத்தில் உள்ள வைக்கம் என்பது போல், தந்தை பெரியாரின் நினைவாக தமிழகத்திலே உள்ள ஏதாவது ஒரு முக்கிய நகரத்திற்கு 'தமிழகத்து வைக்கம்' என்ற பெயர் சூட்டுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வைக்கத்திலே சிலை வைப்பது பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதற்கு பதில்சொல்வார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, வைக்கம் வீரர் தந்தை பெரியார் அவர்களுக்கு கேரளத்தில் சிலை வைப்பதற்காகும் செலவு எவ்வளவு ? அதற்கான நில ஆர்ஜிதப் பணிகள் முடிந்து விட்டனவா ? யாராவது இனாமாக நிலம் கொடுக்க முன்வந்துள்ளனரா ? கேரள அரசு இதற்கு ஒத்துழைப்பாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, முதலில் வைக்கத்திலே பெரியாருடைய சிலையை மட்டும் நிறுவலாம் என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, வைக்கத்திலே உள்ள நகராட்சித் தலைவர் மற்றும் நகரத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் சிலையை மாத்திரம் வைக்காமல், அங்கே ஒரு நூலகம், குழந்தைகள் பூங்கா மற்றும் மாநாடு மண்டபம், போன்று அமைக்கலாம் என்று தெரிவித்தார்கள். கேரள அரசே அதற்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுத்து, அந்த நிலத்திர்கு இருக்கிற கிரயத் தொகையை அந்த அரசே ஏற்றுக் கொண்டால் நாம் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்தோம். அதை யொட்டி, இப்போது கேரள மாநில அரசு 91 செண்ட் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருப்பதாக வைக்கவும் நகராட்சித் தலைவரிடமிருந்து நமக்குத் தகவல் வந்து இருக்கிறது. அது அதிகாரபூர்வமான தகவலா என்று கேட்டு அந்த மாநில அரசுக்கு நாம் கடிதம் எழுதியிருக்கிறோம். அவர்களிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை. இப்படி 91 செண்ட் நிலம் ஆர்ஜிதம் செய்து தருகின்ற அந்த இடத்தில் ஒரு குழந்தைகள் பூங்காவும், ஒரு நூலக கட்டிடமும், ஒரு மாநாடு மண்டபம் இணைந்த கட்டிடமும் அமைப்பதற்கு சுமார் 11.5 இலட்சம் ரூபாய்ச் செலவில் திட்டமிடப்பட்டு, சில திட்டங்களை தமிழக அரசு தலைமைப் பொறியாளர் மூலம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

(முற் பகல் 9—10)

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய சிலை அமைக்கப்பட இருக்கின்ற இடத்தில் நூலகம் அமைக்க இருப்பதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அங்கே அமைக்கப்பட இருக்கிற அந்த நூலகத்தில் பெரியார் கொள்கைகளைப் பரப்புவதில் அவருடைய முக்கிய சீடராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்களும் வைக்கப்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, நூலகம் என்றாலே எல்லா நூல்களும் அங்கே இடம் பெறும் என்றுதான் பொருள்.



திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் வீரராக இருந்த நேரம், அவர் காங்கிரஸ் கட்சியிலே பணிபுரிந்த நேரம் அங்கே இருந்த காங்கிரஸ் பெருமக்கள் அந்த வைக்கத்திலே ஆதி திராவிட மக்கள் நுழையக் கூடாது என்று தடுத்த காரணத்தால் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருந்த அந்த வாழ்க்கையை இப்போது தமிழ் நாட்டில் இருக்கிற புதிய தலைமுறையினர் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அந்த வாழ்க்கை பற்றிய வரலாறுகளையும் அதற்கு முன்னதாக உள்ள நிலைமைகளையும் இன்றைக்கு இந்த பேரவையில் இருக்கின்ற இளம் உறுப்பினர்கள் கூட அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அந்த வரலாறுகளையெல்லாம் விளக்குகின்ற நூல்களையும் அந்தநூலகத்தில் வைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். ஏம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிற திட்டங்களில் ஒன்றாக பெரியார் பொன்மொழிகள் என்ற நூலை வெளியிட்டிருக்கிறது. இப்போது பெரியார் வாழ்க்கை வரலாறு தயாரிக்கப்பட்டுவருகிறது. அவர்களுடைய வாழ்க்கை வரலாறு தயாரிக்கப்பட்டு, அவர்களுடைய பொன்மொழிகள், நாட்டுத் தொண்டு, சமூக நீதித் தொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகள் எல்லாம் அதிலே இடம் பெற்று, அரசின் சார்பில், அது நூலாக வெளியிடப்படுகின்ற நேரத்தில், தந்தைபெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை எல்லோரும் நன்றாகத் தெரிந்து கொள்ளும் வகையில் அது முழுமையாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, 1922 ஆம் ஆண்டு வைக்கம் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற காந்தியடிகள், மற்றும் சத்தியாகிரகத்தில் ஈடுபட்ட பல தலைவர்களுடைய நினைவுச் சின்னங்களையும் தந்தை பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிற அந்த இடத்தில் வைக்க கேரள அரசு முயற்சி செய்வதாக ஒரு பேச்சு வருகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இப்போது கேரள அரசு 5 இலட்சம் ரூபாய் இதற்காக நில ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கியிருக்கிற செய்தி கிடைக்கிற நேரத்தில் அவர்கள் ஒரு நிபந்தனையையும் விதித்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அது அதிகாரபூர்வமானதா என்று அரசுக்குத் தெரியவில்லை. அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து தந்தை பெரியார் சிலையோடு உத்தமர் காந்தியடிகள் சிலையை

யும் நினைவுச்சின்னமாக வைக்க வேண்டும்; வைக்கம் சத்தியாகிரகத்தை நினைவுபடுத்துகிற வகையில் அந்தச் சின்னங்கள் அமைந்தால் சிறப்பாக இருக்கும் என்று கேரள அரசு கருதுவதாக ஒரு தகவல் வைக்கம் நகராட்சித் தலைவரிடமிருந்து கிடைத்திருக்கிறது. அப்படி செய்ய விரும்பினால் அதையும் தமிழக அரசு பரிசீலிக்கும் என்று நாம் அந்த நகராட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவித்திருக்கிறோம். கேரள அரசிடமிருந்து அதிகாரபூர்வமான தகவல் இன்னும் நமக்கு வரவில்லை.

**திரு. மா. சின்னராசு :** தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும் அவர்கள் ஜாதி துவேஷங்களை அகற்றுவதற்காக எடுத்துரைத்த கருத்துக்களையும் இந்தியாவின் மற்ற மாநிலத்திலுள்ளவர்கள் தெரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். நம்மைவிட அவர்கள்தான் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதால் தந்தை பெரியாருடைய கொள்கைகளையும் கருத்துக்களையும் மற்ற மாநில மொழிகளில் மொழிபெயர்த்து வழங்க மத்திய அரசின் மூலம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் போராட்டம் நடத்திய 'வைக்கத்தில்' சிலை வைப்பதற்கான முயற்சியை எடுத்தே 4 ஆண்டு காலம் நாம் அந்த முயற்சிக்கான காலத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறோம். ஆக வைக்கத்திலே சிலை வைப்பதற்கே இவ்வளவு காலம் ஆகிறது என்றால், இந்தியா முழுவதும் அதைப் பிரச்சாரம் செய்வதற்கு மத்திய அரசை இதிலே ஈடுபடுத்த வேண்டுமானால் எவ்வளவு காலம் ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இருந்தாலும், மத்திய அரசுக்கு நாம் நம்முடைய தந்தைபெரியருடைய இலட்சியத்தைப் பற்றி முன்பே தெரிவித்திருக்கிறோம். நூற்றாண்டு விழாவையொட்டி தபால்தலை வெளியிட்டபோது, தந்தை பெரியார் அவர்களுடைய வரலாற்றை தெரிவித்து, இந்தியா முழுவதும் அவர்களுடைய கருத்துக்களைப் பரப்ப வேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம்.

**திரு. என். இட்டப்பா:** தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுக்கு வைக்கத்திலே சிலை வைப்பதையொட்டி, நூலகம் போன்ற அமைப்புகளை உருவாக்குவதற்காக போடப்படுகிற மொத்தச் செலவினத்திலே தமிழக அரசு செலவிட உத்தேசித்திருக்கிற தொகையினையும், கேரள அரசு தரயிருக்கிற தொகையினையும் முறையாக அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே அந்தத் தொகையை அறிவித்திருக்கிறேன். அதை முறையாகத்தான் அறிவித்திருக்கிறேன் என்று கருதுகிறேன். தமிழக அரசு 11½ இலட்சம் ரூபாய்க்கு அங்கே நூலகம் மண்டபமும், குழந்தைகள் பூங்காவும் சிலையும அமைக்க செலவிட திட்டமிட்டிருக்கிறது. கேரள அரசு அந்த நிலத்தை கையகப்படுத்துவதற்காக 5 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுக்கு சிலை வைப்பதை விட, தொடர்ந்து அவர் வாழ்நாள் பூராவும் வற்புறுத்தி வந்த கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய முறையிலே தற்போது ஜாதிகளின் பெயர்களை தெருக்களுக்கு மாற்றிக் கொண்டு வருவதைப் போல பல தனியார் பள்ளிகள், கல்லூரிகள் போன்ற நிறுவனங்களுக்கு ஜாதிகளின் பெயர் இருப்பதை, அப்படி பெயர் வைக்கக்கூடாது என்றும், பொதுவாக எந்த ஜாதி உணர்வும் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆரம்பக் காலத்திலேயே உருவாகாமல் இருப்பதற்காக, இந்த அரசு அவைகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க திட்டம் இட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய நூற்றாண்டு விழாவில் அரசு எடுத்த முடிவுகளிலே ஒன்றுதான், ஜாதி பெயர்களை குறிக்கிற தெருக்களை எல்லாம், அந்த ஜாதிப் பெயர்கள் நீக்கப்படவேண்டும் என்று ஒரு முடிவு எடுத்து அதை அமுல் படுத்த ஆரம்பித்தோம். அப்படி அமுல்படுத்துகிறபோது, சில இடங்களில் ஜாதிகளின் பெயர்கள் தொடர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டு, அவையெல்லாம் கூட தந்தை பெரியாருடைய சீடர்களாலே விமர்சிக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். ஆகவே, ஜாதி பெயர்களை ஒழிப்பதில் தெருக்களின் பெயர்களில் இருக்கிற ஜாதியை ஒழிப்பதற்கே இவ்வளவு சங்கடங்கள் இருக்கிற நிலைமையிலே, ஜாதியை வைத்துக் கொண்டு அரசியலில் அல்லது வாழ்க்கையில், அல்லது மற்ற தொழில்களில் லாபங்கள் சம்பாதிக்க வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொள்கிற இந்தக் காலத்தில், ஜாதியை ஒழிக்க வேண்டுமானால் எல்லோரும் சேர்ந்து முயற்சித்தால் தான் முடியும். தந்தை பெரியாருடைய காலத்திலிருந்து அதற்காகத்தான் பாடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

[1983 மார்ச் 10

கோவனூர் கிராமம் அருள்மிகு வரதராசப் பெருமாள் ஆலயத்துக்குச் சொந்தமான மரங்கள்.

*வினா எண். 350—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டம் 142, கோவனூர் கிராமம் அருள்மிகு வரதராசப்பெருமாள் ஆலயத்துக்குச் சொந்தமான மரங்கள் களவாடப்பட்டது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் குற்றவாளிகள் யார்?

(இ) எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாணபுமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) — (இ) :
கோவனூர் அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்குச்
சொந்தமான ஏழு வேப்ப மரங்களை மேற்கண்ட ஆலய
அறங்காவலர் திரு. லோ கலியமூர்த்தி என்பவர் வெட்டியதாக
புகார் வந்ததின் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு முடி
வில் பணிநீக்கம் செய்யப்பட்டார். மேற்படி மரங்களின் மதிப்பு
ரூ. 500 என கணக்கிடப்பட்டு, மேற்படி தொகையை வசூலிக்
கும் பொருட்டு உதவி ஆணையரால் தண்ட நடவடிக்கைக்கான
உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

திரு செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டம், கோவனூர்
கிராமம், அருள்மிகு வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்குச்
சொந்தமான் 7 வேப்ப மரங்களை அறங்காவலராக இருந்த திரு.
கலியமூர்த்தி என்பவர் மற்றவர்களோடு சேர்ந்து வெட்டியிருப்
பதாகச் செய்தி. ஆகவே, சம்பந்தப்பட்ட அறங்காவலர் கலிய
மூர்த்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுத்த மாதிரி, அவரோடு
சேர்ந்திருந்த மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா?
அவர்கள் யார் யார் என்பதையும் அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறங்காவலர்தான் இதிலே ஈடுபட்டதாக இங்கே என்னிடத்திலே உள்ள தகவலில் இருக்கிறது. அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவரோடு மற்ற யார் யார் இதிலே சம்பந்தப்பட்டார்கள் என்ற விவரங்கள் இப்போது இல்லை.



1983 மார்ச் 10]

திரு செ. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அறங்காவலர் மீது காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து, குற்ற இயல் நீதிமன்றத்தில் அவர் விசாரிக்கப்பட்டாரா? அந்த விசாரணையின் அடிப்படையில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏதாவது தண்டனை வழங்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இங்கே தகவல் இல்லை. அவர் அறங்காவலராக இருந்த காரணத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். துணை ஆணையரால் அதற்குள்ள அந்தக் கட்டணத்தை தண்டத்தீர்வையாக அவர்களிடத்திலிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி அவர் தரவில்லை என்றால் ரெவின்யூ ரெக்கவரி ஆக்டின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற அறிவுரையும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தர்ம ஸ்தாபனங்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கின்றபோது இறை அச்சப்பாடு உள்ளவர்களை அறங்காவலர்களாக நியமித்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் வராது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? இப்படிப்பட்ட தவறு செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்கும் என்ற அச்சம் உள்ளத்திலே உள்ளவர்கள் நியமிக்கப்பட்டால் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அவப் பெயர் வராது, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அதனால் நல்ல பெயர் வரும், எனவே இறை அச்சம் உள்ளவர்களை நியமிப்பதற்கு ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் தவறு செய்வார்கள், யார் தவறு செய்ய மாட்டார்கள் என்பதைக் கணிப்பதற்கு இன்னும் மனித சமுதாயத்தில் அளவுகோல் கருவிகளைக் கண்டுபிடிக்கவில்லை, யார் எந்த நேரத்தில் தவறு செய்வார்கள், யார் எந்த நேரத்தில் தவறு செய்ய மாட்டார்கள் என்பதை எல்லாம் நிர்ணயிக்க முடியவில்லை. அப்படி ஆராய ஆரம்பித்தால் யாரும் மிஞ்ச மாட்டார்கள். எனவே அந்தச் சூழ்நிலையில் நல்லவர்கள் என்றுதான் போடுகிறோம். கடைசியில்

அவர்கள் தவறு செய்கின்றபோது கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து அவர்களைத் திருத்த முயற்சிக்கிறோம். திருந்தவில்லை என்றால் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஆண்டவன் திருத்தவேண்டும், இல்லை என்றால் இயற்கை திருத்த வேண்டும், இல்லை என்றால் மக்களாவது திருத்தவேண்டும்.

தமிழ்நாட்டில் வண்ண தொலைக்காட்சி நிகழ்சசிகளை ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யும் திட்டம்.

*வினா எண். 351—திரு. செ. செம்மலை : திரு. சி. கணேசன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் வண்ண தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு உதவியாக தொலைக்காட்சி நிலையத்தில் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யும்படி தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்** (அ) அண்டு (ஆ): சென்னைக்கு வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஊர்தி ஒன்றினை வழங்கவேண்டும் எனக்கேட்டு மத்திய செய்தி ஒளிபரப்புத்துறை அமைச்சருக்கு நேர்முகக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேலும் இதைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு எழுதியுள்ளார்கள். மத்திய அரசிடமிருந்து வேண்டுகோளைப் பரிசீலிப்பதாகப் பதில் வந்துள்ளது.

**திரு செ. செம்மலை** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஷியாட்-82-ன் போது இந்தியாவிற்கு கிடைத்த 5 கலர் ப்ராட்காஸ்டிங் யூனிட்டுகளில் ஒன்றை சென்னையில் நிறுவ வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் இங்கே அமைக்காமல் மற்ற இதைவிட சிறிய நகரங்களில் அமைத்துள்ளதாகத் தெரிகின்றது. இங்கே அதை அமைக்க மறுபதற்கான என்ன காரணங்களை மத்திய அரசு சொன்னது உடனடியாக சென்னை நகரில் ஆரம்பிப்பதற்கு துரிதமாக மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதற்காக நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிய விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி, வண்ண தொலைக்காட்சி ஒளிபரப்புக் காட்சிகளுக்காக அமைக்கப்படும் 5 ஓ.பி. வேன் என்று அழைக்கப்படுகின்ற அந்த ஒளிபரப்பு ஊர்திகளை இந்திய அரசு வாங்கியது. அவ்வாறு வாங்கியதற்குப் பிறகு அவற்றை டெல்லி, பம்பாய், கல்கத்தா, ஸ்ரீநகர், அமீர்தசரஸ் ஆகிய 5 நிலையங்களுக்கு வழங்கப்போவதாகச் செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்தவுடன் தமிழக அரசு விழித்துக்கொண்டு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அப்படி வண்ண ஒளிபரப்புக் காட்சிக்கான அந்த ஊர்திகளை நீங்கள் வழங்குவதானால் முறையாக சென்னைக்கும் அந்த ஊர்தி வழங்கப்பட்டாக வேண்டும் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் அந்தப் பகுதிகள் எல்லாம் எல்லை ஓரத்தில் இருக்கின்ற காரணத்தால் மற்ற நாடுகளிலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற வண்ண ஒளிபரப்புக் காட்சிகளை மக்கள் பார்க்க நேரிடுகின்றது என்ற காரணத்தைச் சொன்னார்கள். அதே காரணம் தமிழகத்திற்கும் இருக்கின்றது என்று நாம் சொன்னோம். தமிழகத்தில் நம்முடைய ஒளிபரப்பினைப் பார்ப்பதைவிட இலங்கை ஒளிபரப்புக் காட்சியைத்தான் மக்கள் அதிகம் பார்க்கிறார்கள். ஆகவே நீங்கள் சொல்கிற காரணம் அங்கே எந்த அளவுக்குப் பொருந்துமோ அதைவிட தமிழகத்திற்கு அதிகம் பொருந்தும் என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே முன்னாலே இருந்த மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. சால்வே அவர்கள் சென்னைக்கு வந்திருந்த போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டு சேரா நாடுகளின் உச்சகட்டத் தலைவர்கள் மாநாடு முடிந்ததற்குப் பிறகு தமிழகத்தினுடைய வேண்டுகோள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது சால்வே அவர்கள் அந்தத் துறையின் அமைச்சராக இல்லையென்றாலும் முன்னாலே இருந்த அமைச்சர் கொடுத்த வாக்குறுதியை புதிதாகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நமது அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. எனவே இந்த மாநாடு முடிந்ததற்குப் பிறகு மீண்டும் நாம் கதவைத் தட்ட ஆரம்பிப்போம்.

**திரு. செ. செம்மலை** : தலைவர் அவர்களே, கொடைக்கானலில் ஆரம்பிக்கப்படயிருக்கும் ரிலே ஸ்டேஷனின் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது ? அது எப்போது செயல்படத் தொடங்கும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : இது மூலக் கேள்விக்குத் தொடர்பான கேள்வி அல்ல. தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரமான தகவல்களைத் தர முடியும். ஆனாலும் எனக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறேன். நாம்

இடத்தை அவர்களுக்கு தந்துவிட்டோம். இப்போது அவர்கள் கட்டுமானப் பணியை ஆரம்பித்தாக வேண்டும். அதற்கிடையே நமக்குக் கிடைத்திருக்கின்ற தகவல் அதற்கு வேண்டிய இயந்திரங்களை தபால் துறை தயாரித்துத் தரவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த இயந்திரம் எப்போது கிடைக்கும் என்று தெரியவில்லை. அந்த இயந்திரம் மிக விரைவில் கிடைத்து அந்த ஒளிபரப்பு நிலையத்தை அவர்கள் விரைவில் அமைக்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

### விவசாய உயர் மட்டக்குழுவை திருத்தியமைக்கும் திட்டம்.

*வினா எண். 352—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு அரசு விவசாய உயர் மட்டக் குழுவை திருத்தியமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): விவசாய உயர்மட்டக்குழுவை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் அண்மையில், உயர்மட்டக் குழுவின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை தலைவர் நீங்கலாக பதினான்கு என்று இருந்ததை பத்தொன்பதாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், விவசாய உயர்மட்டக் குழுவை திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இல்லை என்று சொன்னார்கள். அந்த உயர்மட்டக் குழுவில் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கிற அரசியல் கட்சிகள் அத்தனைக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வில்லை. ஆகவே அதை திருத்தியமைத்து அத்தனை கட்சிகளுக்கும் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இந்த உயர்மட்டக் குழுவில் எல்லா விவசாயக் சங்கங்கள் சார்பாகவும் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், திரு. நாராயணசாமி நாயுடு தலைமையில் உள்ள விவசாயச்



சங்கத்தின் சார்பாகவும் பிரதிநிதிகள் இல்லை. மற்றவர்களும் இதில் அவர்களுடைய பிரதிநிதிகளை அனுப்ப வெண்டுமென்ற வகையில் அவர்கள் விரும்புவார்களானால் உயர்மட்டக் குழுவின் தலைவருக்கு எழுதி அந்த உயர்மட்டக் குழுவே அதைப்பற்றிப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கும்.

திரு. இல. பலராமன் : பதினான்கு உறுப்பினராக இருந்ததை பத்தொன்பதாக உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இடையில் இதை உயர்த்தவேண்டியதற்கான காரணம் என்ன ? அந்தக் குழுவினுடைய அறிக்கைகள் ஏதாவது அரசுக்கு வந்ததா ? அவை எந்தளவிற்கு பரிசீலிக்கப்பட்டன? அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

—

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : திரு ஆண்டித் தேவர் அவர்களுக்கு குறிப்பிட்டது போல், சில விவசாயச் சங்கங்கள் தங்கள் பிரதிநிதிகளைச் சேர்க்க வேண்டும் என்று எடுத்துச் சொன்ன கருத்தின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை பத்தொன்பதாக உயர்த்தப்பட்டது. பொதுவாக வேளாண் துறையில் விவசாயிகளின் பல்வேறு பிரச்னைகள் பற்றி இந்தக் குழு ஆங்காங்கு சுற்றுப்பயணம் செய்து அதன் மூலமாக அறிக்கைகள் அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அவைகளின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டடிருக்கின்றன. அதைப்பற்றி தனியாகக் கேட்டால் விவரமாக சொல்ல இயலும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இன்று வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடங்கலாக இருக்கிற பிரதானமான அம்சங்கள் விவசாயக் கடன்கள், விவசாய விளை பொருள்களுக்குள்ள விலை. இவை சம்பந்தமான பரிந்துரைகளை அந்தக் குழு சீக்கிரமாக அனுப்ப வேண்டும். நான் ஏற்கனவே சொன்னது போல் விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்குத் தடையாக இருக்கிற அந்த இரண்டு அம்சங்கள் பற்றி—விளைபொருள்களுக்கான விலை, கடன் சம்பந்தமாக — ஏதாவது பரிந்துரைகள் செய்திருக்கிறதா ? அப்படி செய்திருந்தால் அதன் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? அப்படி இல்லை என்றால் இவ்வளவு நாட்களுக்குள்ளாக இந்த இரண்டு அம்சங்கள் பற்றியுள்ள பரிந்துரைகளை அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று ஏதாவது கட்டளையை இந்த அரசு அனுப்பியிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இந்தக் குழுவின் பணிகளாக நாம் குறிப்பிட்டிருப்பது, கடன்கள், வட்டி விகிதம், உதவி, விவசாயத் தொழில் முன்னேற்றம், விவசாயக் கால்நடைகள் பாதுகாப்பு, விவசாயத் தொழில் செய்யும்போது ஏற்படும் விபத்துக்கு நிவாரணம், பயிர் பாதுகாப்பு, இடுபொருள், தேவைப்

[1983 மார்ச் 10]

நடவடிக்கை எடுக்காமல் இருப்பதினால், மக்கள் மத்தியிலே, இந்தமாதிரி கமிஷன்கள், கமிட்டிகள் போடுவதெல்லாம், அவரசத்தை மட்டுப்படுத்துவதற்கு என்ற முறையில் இதுவும் இருக்கக் கூடாது என்ற வகையில், இவைகள் அன்றாட முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தினால் உடனடியாக, இந்த உயர்மட்டக் குழுவிற்கு ஒரு டாப் பிரியாரிடியைக் கொடுத்து அதனுடைய சிபார்சுகளைக் கேட்டு, அமுலாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, வேளாண் துறை தொடர்பாக அரசு எடுத்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகள், இந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான். ஆகவே, இன்னும் இருக்கக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இந்தக் குழு எத்தகைய பரிந்துரைகளைச் செய்கிறதோ, அவைகளை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

### செங்கற்பட்டு மாவட்டத்தில் இயங்கிவரும் மார்க்கெட் கமிட்டிகள்.

*வினா எண். 353—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் எங்கு எங்கு மார்க்கெட் கமிட்டிகள் இயங்குகின்றன ?

(ஆ) மதுராந்தகத்தில் மார்க்கெட் கமிட்டி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செங்கல்பட்டு மாவட்ட விற்பனைக் குழு ஒன்று இயங்கி வருகிறது.

(ஆ) மதுராந்தகத்தில் விற்பனைக்குழு ஒன்று அமைக்க பிரேரணை ஏதும் பரிசீலனையில் இல்லை. அங்கு ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் ஒன்று இயங்கி வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தாலுகா விவசாயிகளைப் பெரிதும் கொண்டுள்ள ஒரு பெரிய தாலுகா. அங்கே ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை வரும் ஆண்டிலாவது அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1983 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அங்கே ஏற்கெனவே இருக்கிறது. மாவட்ட விற்பனைக் குழு காஞ்சீபுரத்திலே இருக்கிறது.

### திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்

* வினா எண். 354—திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) நகராட்சிகளின் நிதி விசாரணைக் குழுவும் மற்றும் பேரூராட்சிகளின் நிதி ஆதாரக் குழுவும் தற்பொழுதுள்ள பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு நகராட்சியாக மாற்றப்படவிருக்கும் பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூபாய் ஐந்து இலட்சமாக இருக்க வேண்டுமென பரிந்துரை செய்துள்ளதை அடிப்படையாகக் கொண்டு, பேரூராட்சிகளை மூன்றாம் நிலை நகராட்சிகளாக மாற்றுவதற்கும் நகராட்சிகளை மேல் நிலைகளுக்கு மாற்றுவதற்கும் குறைந்தபட்ச ஆண்டு வருமானம் எவ்வளவு இருக்கவேண்டுமென்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது. இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டதும் திருத்துறைப்பூண்டியை நகராட்சியாக்குவது சம்பந்தமாக அரசு பரிசீலனை செய்து தக்க முடிவெடுக்கும்.

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம் 1977-ஆம் ஆண்டு செயற்குறிப்புகேட்டு மாவட்டஆட்சிதலைவர் அவர்கள் மூலமாக சிபாரிசு செய்யப்பட்டு உள்ளது. 1978-ஆம் ஆண்டு அந்த ஒரு ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் வருமானம் வந்ததாகவும் அங்கு 20 ஆயிரத்திற்கு மேல் மக்கள் தொகை இருப்பதாகவும் ஒரு சிபாரிசு செய்யப்பட்டது. இந்த ஆட்சியை முன்னால் கலைத்தபோதே இது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரையில் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன் ?

படும் கருவிகள், மின்சாரம், வரி வசூல், இவற்றைப்பற்றி யெல்லாம் பரிந்துரைக்க வேண்டுமென்று அரசு கேட்டிருக்கிறது. அவை தொடர்பாக அவர்கள் அறிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். தனிக்கேள்வி போட்டால் அந்த விவரங்களைக் குறிப்பிட முடியும்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** இந்த விவசாய உயர்மட்டக் குழு போல் லாண்ட் இம்ப்ருவ்மென்ட் போர்ட் என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் தான் சேர்மனாக இருக்கிறார்கள். இந்த இரண்டையும் இணைத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இரண்டுக்கும் உள்ள பணிகள் வெவ்வேறு.

(முற்பகல் 9-30)

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய உயர்மட்டக் குழுவிலே உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே, திரு நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய சங்கத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாய சங்கப் பிரிவிற்கும் இன்றையதினம் இந்த உயர்மட்டக் குழுவில் அங்கம் வகிப்பதற்கு அரசு ஏதாவது முடிவெடுத்திருக்கிறதா ? அவர்களுக்கு ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறதா ? அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வில்லையா ? அவர்கள் ஏன் இதிலே இணையவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, அழைத்தோம் ; வரவில்லை,. ஏன் வரவில்லை என்பதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் 9 அம்சக் கோரிக்கைகளை உயர் மட்டக் குழுவிலே வைத்து நிறைவேற்றவில்லை என்றும், இந்த உயர்மட்ட குழுவிலே எந்த மட்டத்திலும் விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட வில்லை என்ற கருத்து அவர்களுக்கு இருக்கிறது. அதேபோல், விவசாயிகளுக்கு கரும்புக்கான விலையை, நெல்லுக்கான விலையை ஏற்றவில்லை என்ற கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இருக்கின்ற காரணத்தினால், அவைகளை



யெல்லாம் இந்த விவசாய உயர்மட்டக் குழு பரிசீலனை செய்யாததினால், அதிலே கலந்துகொள்ள வில்லை. ஆகவே, இவைகளை யெல்லாம் பரிசீலனை செய்து, இதிலே கலந்துகொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, குழுவிற்கே அவர்கள் வரவில்லை என்றால், கோரிக்கைகளை எப்படி நிறைவேற்றுவது ? குதிரை ஓடியதற்குப் பிறகு, லாயத்தைப் பூட்டுவதுபோல் இருக்கிறது. குழுவிலே கலந்துகொள்ளதபோது, எப்படி அந்த கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவது. அண்மையிலேகூட, நாம் கூட்டிய கரும்பு விவசாயிகள் குழுக் கூட்டத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலந்து கொண்டார்கள். ஆகவே, உயர்மட்டக் குழுவிலே கலந்து கொண்டு, பிரச்னைகளைப் பற்றி எடுத்துக் சொன்னால், அவைகளுக்கு பரிகாரம் காண முடியும்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உயர்மட்டக் குழு அமைக்கபபட்டதிலிருந்து, இன்றுவரை என்னென்ன பரிந்துரைகளை அது அரசுக்கு கொடுத்திருக்கிறது ? அவைகளில் எவை எவைகளை அரசு ஏற்றுக்கொண்டு, அமுல் நடத்தி இருக்கிறது ? உதாரணமாக, நெல்லுக்கும், கரும்புக்கும் விலை நிர்ணயம் ரூ. 140 இருக்க வேண்டும் என்று அந்தக் குழு சிபார்சு செய்ததாக எனக்கு ஞாபகம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியை ஒட்டிக கேளுங்கள்.

**திரு. என். பழனிவேல் :** குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 140 என்று அவர்கள் சிபார்சு செய்து அரசுக்கு அனுப்பியதாக அறிகிறேன். அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டதா ? அல்லது நிராகரித்து விட்டதா ? என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** துணைத் தலைவ அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசர அவசியமான விஷயங்களை பரிசீலனை செய்து விவசாயிகளுக்கு உடனடியாக ஒரு பரிகாரம் காண வேண்டுமென்ற முறையில்தான், அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு உயர்மட்டக் குழுவை நியமித்திருக்கிறது என்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால், ஆண்டுகள் பல ஆகியும், நீண்ட நெடுங் காலமாக அதனுடைய முடிவைத் தெரிவிக்காமல், அதன் பேரில்

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த விதிமுறைகளின் அடிப்படையில் பேரூராட்சியின் பொதுக்கணக்கின் ஆண்டு வருமானம் கடந்த 3 ஆண்டுகளில் 2 இலட்சத்திற்கு மேலும், மற்றைய கணக்குகளின் ஆண்டு வருமானம் 3 இலட்சத்திற்கு மேலும் மக்கள் தொகை 20 ஆயிரத்திற்கு மேலும் இருக்க வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. இந்த திருத்துறைப்பூண்டி பேரூராட்சியைப் பொறுத்த அளவில் 20 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அதேபோல் வருமானம் இருக்கிறது. ஆனால் ஊராட்சி மன்ற தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டிய நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு இருந்த காரணத்தினால் இதுபோன்ற பிரச்சினைகளை ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆனால் இப்போது ஊராட்சி மன்றத் தேர்தல்களைப் பொறுத்த அளவில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கின்ற காரணத்தினால் இவைகளை பரிசீலனை செய்து உடனடியாக முடிவு எடுக்கலாம் என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கின்றது.

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள, திருத்துறைப்பூண்டி பேரூராட்சி என்பது பெரும் பகுதி பின்தங்கிய பகுதி. இப்போது சாக்கடை வசதி அதிகமாக அங்கே இல்லை. இப்படிப்பட்ட அந்த நகரத்தை ஒரு நல்ல வளர்ச்சி பொருந்தியதாக ஆக்க வேண்டும் என்றால் அதை நகராட்சியாக மாற்றினால் அரசாங்கத்தின் மானியம் கிடைக்கும். இதை கணக்கில் எடுத்துக் கொண்டு இவ்வளவு தகுதி இருக்கக் கூடிய அந்த திருத்துறைப்பூண்டி பேரூராட்சியை இப்போதாவது உடனடியாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நகராட்சியாக மாற்ற முடியும் என்ற வாக்குறுதியை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு வெகு சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கும்.

## சென்னை அண்ணாசாலைக்கு மாற்றுச்சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 355—திரு து. புருஷோத்தமன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாசாலைக்கு மாற்றுச்சாலையாக கிண்டியிலிருந்து பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் புதிய சாலை அமைக்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?



மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) பணிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இப்புதிய சாலையின் நீளம் 11.7 கிலோ மீட்டர் ஆகும். இதுவரை 7.12 கி.மீ. நீளத்திற்கு சாலை மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி தற்போது தமிழ்நாடு கட்டுமான கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. கத்திப்பாரா அருகே வட்டவடிவமான தீவு அமைக்கும் பணி முடிந்து விட்டது.

## ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடவிரும்பிய வேட்பாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை

* வினா எண். 356— திரு எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் 1982-ல் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்ட ஊராட்சி, ஒன்றிய, பேரூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட விரும்பிய வேட்பாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ?

(ஆ) அது திருப்பிக் கொடுக்கப்படுமா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : (அ) அரசிடம் இது பற்றிய முழு தகவல்கள் இல்லை.

(ஆ) மற்றும் (இ) வசூலிக்கப்பட்ட தொகை உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும் என்று 23-8-1982 நாளிட்ட அரசு கடிதம் எண். 59271/ந.தேத/82-1, ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித்துறை மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றைய அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நடக்கவிருந்த ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி தேர்தல்கள் நிறுத்தப்புட்டுவிட்டன. ஒரு ஆண்டுக்கு பின்னால் அது பற்றிய தகவல்கள் கேட்கிறபோது கூட அமைச்சர் அவர்கள் முழு தகவல்கள் வரவில்லை என்று கூறுகிறார்கள். தேர்தல் நடக்கவில்லை என்று, என்று அறிவித்தார்களோ அன்றே வாங்கிய தொகைகளை திருப்பிக் கொடுக்க அரசு உத்தரவிட்டதா ? ஏன் 3, 4 மாதங்களுக்கு ஊராட்சி ஒன்றியங்

கள் இவ்வளவு பெரிய தொகையை வைத்து இருந்தார்கள். கேட்கிறபோது அரசு ஆணை வரவில்லை என்று கூறுகிறார்கள். அதற்கு பின்னால் தான் இந்த கேள்வியே போடப்பட்டது. வசூலிக்கப்பட்ட தொகையை திருப்பிக் கொடுக்க அரசு ஆணைப்போட்ட தேதிக்கும், அந்த தேர்தல்கள் நிறுத்தப் பட்ட தேதிக்கும் எவ்வளவு காலம் இடையில் இருந்தது? ஏன் இதை உடனடியாக திருப்பிக் கொடுக்க காலதாமதம் ஏற் பட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேட்பாளராக ஊராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகிற ஒவ்வொருவரும் கட்டின தொகைகள் பற்றி ஏறத்தாழ 8 மாவட்டங்களிலிருந்து குறிப்புகள் வந்திருக் கின்றன. இன்னும் 7 மாவட்டங்களிலிருந்து குறிப்புகள் வரவில்லை. அதே நேரத்தில் இந்த தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதற்காக கடந்த 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசு பிறப்பித்த கட்டளையின் அடிப்படையில் அதற்காக வேட்பாளர்கள் தங்களுடைய தொகைகளை கட்டினார்கள். அதற்கு பின்னால் இந்த தேர்தல்களைப் பொறுத்த அளவில் ஒதுக்கீடுகளை எதிர்த்து ஒதுக்கீடுகள் செய்த முறைகள் சரியில்லை என்று தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் வழக்குகள் போட்டு அதனுடைய தீர்ப்புக்காக நாம் எதிர்நோக்கவேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டது. தீர்ப்புகள் கிடைத்ததற்கு பின்னால் தான் உயர்நீதி மன்றம் என்ன என்ன ஆணைகள் பிறப்பித்தார்கள். என்ன என்ன மோடலிடீஸ் அண்டு கைய்டு லைன்ஸ் கொடுத்தார்களோ அதன் அடிப்படையில் தான் அந்த பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. அதில் தான் காலதாமமே தவிர அரசாங்கம் இந்தக் காலதாமதத்தை ஏற் படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு எஸ். ஆண்டித்தேவர். துணைத் தலைவர் அவர்களே, 8 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தான் தகவல்களை அனுப்பி யிருக்கிறார்கள். இன்னும் 7 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த சாதாரண தகவலைக்கூட ஒரு ஆண்டு ஆகியும் அனுப்ப வில்லை என்று அமைச்சர் இங்கே சொல்கிற நிலையை ஏற் படுத்திய அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? சட்ட மன்றத்தின் கேள்விக்கே இந்த நிலை என்றால் சாதாரணமாக அவர்களிடமிருந்து வேறு எந்தத் தகவலைக் கேட்டாலும் என்ன நிலை ஏற்படும் என்பதைப் பார்க்கவேண்டும், அமைச்சர் அவர்கள் இந்த பதிலை இங்கே சொல்ல வேண்டிய இக்கட்டான நிலையை ஏற்படுத்திய அந்த அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, ஆணை பிறப்பித்த தேதி 23—8—1982. அதற்குப் பின்னாலே மார்ச் மாதத்திலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். நீங்கள் கேள்வி 2 மாதத்திற்கு முன்பே கேட்டிருக்கிறீர்கள். இந்த பதிலை 2 மாதத்திற்கு முன்னாலே அனுப்பிவைத்திருக் கிறார்கள். அதனால்தான் பதில் அப்படி வந்திருக்கிறதே தவிர உண்மையிலேயே குறுகிய காலக் கேள்வி புதிதாகப் போட்டால் தகுந்த தகவலைப் பெற்றுத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னையிலிருந்து கன்னியாகுமரிவரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையைச் சீர்படுத்தும் திட்டம்.

*வினா எண். 357—திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை பலகோடி ரூபாய் செலவில் சீர்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) மத்திய அரசின் உதவி என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) கிழக்குகடற்கரை சாலையின் சில பகுதிகளின் மேம்பாட்டு வேலைகளை செயல் படுத்த மத்திய அரசு ஆறாவது திட்டத்தில் உள்மாநில பொரு ளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் ரூ. 3 கோடி செலவில் மேற்கொள்ள அனுமதி அளித்துள்ளது.

(ஆ) மத்திய அரசின் ஒப்புதல், நாகப்பட்டிணத்திலிருந்து கன்னியாகுமரிவரை சில பகுதிகளில் சாலைகளை மேம்படுத்து வதற்காகவும், பாலங்கள் கட்டுவதற்கும் தரப்பட்டுள்ளது.

(இ) இத் திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 1.50 கோடி கடனாகக் கொடுத்து உதவும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்த மட்டில் 3 கோடி ரூபாய் செலவிட அனுமதித்துள்ளதாக சொன் னார்கள். அது எப்போது போடப்பட்ட எஸ்டிமேட்? இப் போது உள்ள விலைவாசிகள் ஏற்றத்தில் அது போதுமானதா? அது ஒருவழிப் பாதைக்காக போடப்பட்ட எஸ்டிமேட்டா அல்லது இருவழிப் பாதைக்காக போடப்பட்ட எஸ்டிமேட்டா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : கிழக்குக் கடற்கரை சாலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சாலையாக இருப்பதாலும் 6 மாவட்டங்களைக் கடந்து அந்த சாலை செல்லக்கூடிய நிலை இருப்பதாலும் போர்க்கால அடிப்படையில் அந்தச் சாலையை, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த சாலையாக அது இருக்கின்ற காரணத்தினால், நாம் இந்தக் காரணங்களை எல்லாம் மத்திய அரசுக்கு எடுத்துசசொல்லி உடனடியாகத்தான் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டோம். 773 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த சாலை ஒருவழிச் சாலையாக அமைக்கப் பட்டால் 52 கோடி ரூபாயும் இருவழிச் சாலையாக அமைத்தால் 80 கோடி ரூபாயும் செலவாகும் என்று மதிப்பீடுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஏற்கனவே 4 கோடி ரூபாய் செலவிலே 38 பாலங்களைக் கட்டியிருக்கிறோம். அந்த 38 பாலங்களையும் இணைக்கின்ற சாலைகளை நாம் அமைத்தாகவேண்டும். அதற்காகதான் கடந்த நவம்பர் மாதம் முன்பு இருந்த போக்குவரத்து அமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லிய நேரத்திலே அவர்கள் 3 கோடி ரூபாய் கடன் உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதிலே ஒன்றரை கோடி ரூபாயைக் கொடுக்க மத்திய அரசு முன்வந்திருக்கிறது, பாக்கி இருப்பதை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த ஆண்டு 3 கோடி ரூபாய்க்கான சாலைப் பணிகளை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இருவழிச் சாலைக்கு 80 கோடி ரூபாய் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாதியை கடனாக மத்திய அரசு தருவதாகச் சொல்கிறார்கள், இவ்வளவு முக்கியமான இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு கருமித்தனமான முறையில் 3 கோடி, 4 கோடி என்று சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசிடம் மேலும் அழுத்தமாகச் சொல்வதற்கு சர்வகட்சிகளைச் சேர்ந்தவர்கள் அடங்கிய ஒரு தூதுகோஷ்டி சென்று வலியுறுத்தக் கூடிய முறையிலே அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த சாலையினுடைய முக்கியத்துவத்தைப் பற்றி ஏற்கெனவே சொன்னேன். இந்த சாலை முழுவதுமாக மத்திய அரசினுடைய நிதியின் மூலமாகவே செய்யவேண்டுமென்று நாம் கேட்டுக்கொண்டோம். ஏனென்றால் அது இந்தியா முழுவதற்குமான மிகப்பெரிய சாலையாக அமையப்போகிறது என்கிற காரணத்திற்காகத்தான் அதனுடைய முக்கியத்துவத்தை நாம் எடுத்துச் சொன்னோம். ஆனால் அந்த முக்கியத்துவம் குறித்து நாம் எடுத்துக் கொள்கிற முயற்சிகளையும், முக்கியத்துவத்தைச் சொல்கிற முறையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. போர்க்கால அடிப்படையிலே அந்தச் சாலை உதவும் என்று நாம் சொன்னோம்.





ஆனால் அவர்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏற்றுக் கொள்வதாக முதலில்லே சொல்லிவிட்டு, பொருளாதார பன்னிலை மாநிலத் திட்டம் என்கிற திட்டத்தின் அடிப்படையிலே இந்தத் திட்டத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்த நிதியுதவி என்பது 3 கோடி ரூபாய் என்று ஒரு ஆண்டிற்குச் செலவழித்தால் ஏறத்தாழ இன்னும் 15 ஆண்டுகாலம் ஆனால்தான் இந்த சாலை முடிவடையும் என்று நாம் எதிர்ப்பார்க்கிறோம். ஆகவே எவ்வளவு விரைவாக மத்திய அரசு நமக்கு உதவி செய்கிறதோ அவ்வளவு விரைவாக இந்த காரியங்களை நாம் முடிக்க முடியும். அதே நேரத்தில் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு போய் ஒரு குழுவாகச் சென்று நாம் எடுத்துச்சொல்லலாம் என்று சொன்னார்கள். ஏற்கெனவே அமைச்சர்கள் மத்தியிலே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருக்கிறது. அதற்கே இவ்வளவுதான் என்று சொன்னால் அனைத்துக்கட்சித் தலைவர்கள் போனால் எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கிழக்குக் கடற்கரைச் சாலை போட வேண்டுமென்று திட்டமிடப்பட்டபோதுதான் மேற்கு கடற்கரைச் சாலையும் அமைக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டதாக அறிகிறேன். ஆனால், மேற்கு கடற்கரைச் சாலை போட்டு முடித்தாகிவிட்டது என்றும் தெரிகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் 3 கோடி, $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஆகும் என்று குறிப்பிடுகிறார்கள். மேற்குக் கடற்கரைச் சாலையை முடித்தவர்கள் எந்த அடிப்படையிலே முடித்திருக்கக்கூடும் என்பதை ஆராய்ந்து, கிழக்குக் கடற்கரைச் சாலை மிக முக்கியமான சாலை என்பதால், சீக்கிரமாக முடிக்க வேண்டும். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்புகூட இதுகுறித்து ஒரு கேள்வியைக் கேட்டபோது அந்த ஆண்டு $1\frac{1}{4}$ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இந்த சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளூர நினைத்துக்கொண்டிருப்பதைப்போல, இந்த கிழக்குக் கடற்கரைச் சாலை ஆறு மாவட்டங்களை இணைக்கிற சாலையாக இருக்கிற காரணத்தால் அதற்காக வாதாடி, போராடி பெற நமது அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோம். மேற்கு கடற்கரைச் சாலை எப்போது போடப்பட்டது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது போட்டிருந்தாலும் போட்டிருக்கலாம். இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையைப் பொறுத்த வரை

யில் நாம் நிதிகளை எவ்வளவு சீக்கிரமாக பெற வேண்டும் என்பதிலே அதிகமான நாட்டம் செலுத்துகிறோம். ஆனால், கொடுக்கிற நிதியைக் கூட கடனாக, 25 ஆண்டுகளில் தவணை முறையிலே செலுத்துகிற கடனாகத்தான் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மானியமாகக் கொடுத்தால்தான் இதனை அரசு உடனடியாக எடுத்து முடிக்க முடியும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 358, 359, 360 மற்றும் 361 ஆகியவைகள் அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு உண்டு என்கிற அளவில் ஒரு அமைச்சர் வரவில்லை என்றால் வேறு அமைச்சர் அதற்கு பதில் சொல்வது கடந்த காலங்களில் இருந்த நடைமுறை. ஆகவே, அதையாகிலும் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு துணைத் தலைவர் அவர்கள் உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—50)

திரு. பாபுஜனார்த்தனன் : துணைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு ஒரு வருஷ காலத்திற்குப் பிறகு பதில் வருகின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, கேள்விகள் வருகின்ற பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் சொன்னதைப் போல வேறு அமைச்சர்கள் பதில் சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அலுவல் ஆய்வுக்குழுவிலே அதுபற்றிப் பேசி, முடிவெடுக்கச் சொல்லலாம்.

தூத்துக்குடி அண்ணா நகர் கதர் நெசவாளர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்கும் திட்டம்.

*வினா எண். 362—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அண்ணா நகர் கதர் நெசவாளர்களுக்கு நெசவாளர் காலனி கட்டிக்கொடுக்கும் செயல் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும் ?



மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) தூத்துக்குடியில் உள்ள கதர் நெசவாளர்களில் 20 நபருக்கு வீடு கட்டித்தர தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

(ஆ) நெசவாளர்களுக்குத் தேவையான செலவினத்தின் ஒரு பகுதியை அரசு மானியமாக வழங்குகிறது. மேற்கொண்டு நிதித் தேவையின் பொருட்டு, வங்கிகளிடமிருந்து கடன் வசதி பெற தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், நெசவாளருக்கு உதவுகிறது. இவ்வாறு அரசு மானியம் மற்றும் வங்கிக் கடனுதவியுடன் நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அனைத்து முயற்சிகளும் எடுத்து வருகிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூத்துக்குடியில் மட்டும் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதுபோன்று தமிழகம் முழுவதிலும் இருக்கக் கூடிய கதர் நூற்புத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா ? இதில் மானியத் தொகை எவ்வளவு ? தூத்துக்குடியில் உள்ள இந்தக் கதர் கிராமத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய அளவில் அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டக் காலத்தில் 2,000 கதர் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தர அரசு முடிவெடுத்திருக்கிறது. இதிலே மானியமாக ரூபாய் 1,000 ஒவ்வொரு வீட்டுக்கும் அரசு கொடுக்கிறது. தூத்துக்குடியைப் பொறுத்தமட்டில் இன்னும் வேலைவாய்ப்பு கொடுக்கும் வகையில், நூற்பிலிருந்து நெய்யும் வரை உள்ள தொழில்கள், தச்சு, கொல்லுப் பட்டறைகள் காம்பிளக்ஸ் பார்ம் போன்ற தொழில்கள் அடங்கிய கதர் காம்பிளக்ஸ் என்று சொல்லக்கூடியது—தற்போது திருப்பூரில் மட்டும் இருந்து வருகிறது—அப்படிப்பட்ட காம்பிளக்ஸ்ஸைத் தூத்துக்குடியில் அமைக்க இடங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இடம் தேர்ந்தெடுத்தவுடன் ரூபாய் 20 இலட்சம் செலவில் அப்படிப்பட்ட காம்பிளக்ஸ் உருவாக்கி, ஏறக்குறைய ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வாரியம் ஆய்ந்துகொண்டிருக்கிறது.

[1983 மார்ச் 10

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழக்கூடிய தொகுதி. ஆகவே, அங்கே கதர் கிராம நூற்பு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் உணர்வைப் புரிந்து, அது பின்தங்கிய பகுதியாக, ஆதி திராவிட மக்கள் அங்கு அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, இரண்டு கிராமிய நூற்பு நிலையங்கள் அமைப்பதற்கான முயற்சியை இந்த வாரியம் எடுத்து வருகிறது என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகம்மது : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி கதர் நெசவாளர் குடும்பங்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியம் ரூபாய் 1,000 என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கட்டுமானப் பொருள்களின் விலை அதிகமான அளவு ஏறியிருக்கக்கூடிய நிலையிலே, இத் தொகையை அதிகமாக்கி, உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர் பெருமக்கள் அதிகமாக இருக்கக்கூடிய எந்தத் தொகுதியாக இருந்தாலும், அந்தத் தொகுதியை ஆராய்ந்து, அங்கே இருக்கக் கூடிய நெசவாளர் பெருமக்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்குத் தேவைப்படும் தொகையில், ரூபாய் 1,000 அரசு சார்பாக மானியமாகக் கொடுக்கப்படுகிறது என்றுதான் கூறினேனே தவிர, வங்கிகளிடமிருந்து எவ்வளவு அதிகபட்சம் கடன் நெசவாளர்களுக்கு வாங்க முடியுமோ, அதை வாங்கிக் கொடுக்கின்ற பணியை வாரியம் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் கதர் நெசவாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். அங்கே கதர் நெசவாளர்களுக்கு வீடு கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் வீடு கட்டும் முயற்சி எடுக்கப்படவில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர், கும்பகோணம், சேலம், திருப்பூர், திண்டுக்கல், நாமக்கல், விழுப்புரம், கோயில்பட்டி, புதுக்கோட்டை, கரூர் ஆகிய



1983 மார்ச் 10]

இடங்களில் இப்பொழுது கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதிலே 2,000 வீடுகளில், 500 வீடுகளை 1981—82-இல் கட்டுவதற்கு அரசு அனுமதித்து அதற்கான மானியத் தொகையாக 5 இலட்சம் ரூபாயையும் அரசு கொடுத்திருக்கிறது. 1982—83-ஆம் ஆண்டிலே 500 வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து 5 இலட்சம் ரூபாய் மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொரு வீடும் 7,500 ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு முடிவெடுத்திருக்கிறது. இதில், 5,000 ரூபாய் வங்கிகளிடமிருந்தும், 1,500 ரூபாய் நெசவாளர்களிடத்திலிருந்தும் பெறப்பட்டு, 1,000 ரூபாய் அரசு மானியமாகக் கொடுத்து, இப்படி 7,500 ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரையில் நெசவாளர் வீடுகள் 341 கட்டப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது பல்வேறு ஊர்களில் வீடுகள் கட்டப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் அய்யம்பேட்டை அதிகமாக நெசவாளர்கள் வாழும் நகரமாக இருக்கிறது. அந்த நகரத்திலே வாழுகின்ற நெசவாளர்களுக்கும் வீடு கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்கெங்கு கதர் நெசவாளர்கள் அதிகபட்சமாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தஞ்சை மாவட்டத்திலும் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் கதர் நெசவாளர் குடும்பத்திற்கு 7,500 ரூபாயில் வீடு கட்டப்படுவதாகவும் அதில் 1,000 ரூபாய் மானியமாகக் கொடுக்கப்படுவதாகவும், 1,500 ரூபாயை அந்த நெசவாளர்களே போட வேண்டுமென்றும் சொன்னார்கள். அந்த ஏழை நெசவாளர்களால் 1,500 ரூபாய் போட முடியாது. ஆகவே அதைப்பற்றி பரிசீலனை செய்து அதையும் மானியமாகவோ அல்லது வங்கிகளிலிருந்து 5,000 ரூபாய் கடனாக வாங்குவதைப்போல் இந்த 1,500 ரூபாயையும் வாங்குவதற்கோ அல்லது அரசே கடனாகக் கொடுப்பதற்கோ ஏற்பாடு செய்து, அந்த ஏழை நெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இதற்கு முன்னால் அளித்த பதிலில் சொல்லியிருக்கிறேன். எந்த அளவிற்கு வங்கிகள் முன் வந்து உதவுகின்றனவோ வாய்ப்புகள் இருக்கின்றனவோ அதற்கேற்ற வகையில் இந்த வாரியம் முயற்சி செய்து வருகிறது. 1,500 ரூபாயைக் கட்ட முடியவில்லை என்றால் அதையும் வாங்கிக் கொடுப்பதற்கும் வாரியம் முயற்சியெடுத்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கதர் நெசவாளர்களுக்கு காலனி கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் கோயில்பட்டியில் வீடுகள் கட்டிக்கொண்டு வருவதாகச் சொன்னார்கள். கோயில்பட்டியில் எந்த ஊரிலே அல்லது எந்த இடத்திலே இந்தப் பணி துவங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், 1,000 ரூபாய் மானியமாகக் கொடுப்பதாகவும், 1,500 ரூபாயை அவர்கள் தங்கள் சொந்த நிதியாகப் போட வேண்டுமென்றும், வங்கியிலிருந்தே 5,000 ரூபாய் கடனாகப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அந்த வகையில் வீடுகள் கட்டிக் கொடுப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த 5,000 ரூபாய்க் கடனை அவர்கள் மாதாமாதம் எவ்வளவு ரூபாய் தவணையாகக் கொடுக்க வேண்டும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறிப்பிலே கோயில்பட்டி என்றுதான் இருக்கிறதே தவிர எந்த இடத்தில் அந்தக் கட்டுமான வேலைகள் நடக்கின்றன என்பதற்கான விவரம் இல்லை. மேலும், இந்தத் தவணைகளை அந்த நெசவாளர்கள் நீண்ட காலத் தவணையாகக் கட்டுவதற்கு முடிவெடுத்திருக்கிறது. நெசவாளர்களுக்கு அலுப்போ சலிப்போ ஏற்படாமல் கட்டக்கூடிய வகையிலேதான் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விழுப்புரத்தைப்பற்றிச் சொன்னார்கள். அங்கே எத்தனை வீடுகள் சேங்க்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன ? அவையெல்லாம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ? மேலும் ஊருக்கு ஊர் வித்தியாசமான முறையில் கடன் தொகை வழங்கப்படுகிறதா அல்லது குறிப்பிட்ட முறைப்படி எல்லா இடங்களுக்கும் யூனிபார்மாக அந்த வீடுகள் கட்டும் திட்டத்திற்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இது தூத்துக்குடி பற்றிய கேள்வியாக இருப்பதால் அதுபற்றிய குறிப்புகள் மட்டும்தான் இருக்கின்றன. எங்கெங்கு வேலைகள் நடைபெறுகின்றன என்று மேலெழுந்தவாரியாகத்தான் இருக்கிறது. அதில்தான் விழுப்புரம் என்று இருக்கிறது. எவ்வளவு வீடுகள் என்பதற்குத் தனிக். கேள்வி கேட்க வேண்டும். அதிலே அந்தந்த ஊர்களிலே இருக்கின்ற இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், சிண்டிகேட் பேங்க், கனரா பேங்க், ஸ்டேட் பேங்க் போன்ற வங்கிகள், எந்தெந்த ஊர்களில் எந்தெந்த வங்கிகள் இருக்கின்றனவோ அதற்கேற்ப அவர்களை அணுகி கடன் பொறுவதற்கான முயற்சியை வாரியம் எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## சென்னை சாஸ்திரி நகரில் உழைக்கும் மகளிர் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 363—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்காக அடையாறு சாஸ்திரி நகரில் 'உழைக்கும் மகளிர் விடுதி' ஒன்றும் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 11·90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

(முற்பகல் 10-00)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னையில் சாஸ்திரி நகரில் உழைக்கும் மகளிர் விடுதி கட்டப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது தவிர மேலும் ஏதாவது உழைக்கும் மகளிர் விடுதிகட்ட இருக்கிறதா ? எவ்வளவு ரூபாய் மதிப்பில் கட்டப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

[1983 மார்ச் 10

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னையைப் பொறுத்தவரைக்கும் உழைக்கும் பெண்கள் விடுதி ஒன்றும், கிண்டியில் ஒன்றும் நடத்தப்படுகின்றன. இங்கே சாஸ்திரி நகரில் உழைக்கும் பெண்கள் விடுதி ஒன்று கட்டுவதற்கான ஏற்பாடுகளை இன்றைக்கு மத்திய அரசும் மாநில அரசும் மானிய முறையில் மேற்கொண்டு வருகின்றன என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சாஸ்திரி நகரில் கட்டிய பிறகு தனியார் நிறுவனங்கள் கட்டுவதற்கு முன்வருவார்களேயானால் அதற்குக் கார்ப்பரேஷன் உதவியாக இருந்து அதற்கேற்றவாறு மைய அரசும் மாநில அரசும் மானியத்தைப் பெற்று கட்டுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, உழைக்கும் மகளிர் விடுதி கட்டுவதன் நோக்கம் என்ன ? இந்த விடுதியில் திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாதவர்கள், யார் வேண்டுமானாலும் தங்கலாமா ? மாவட்ட அளவில் இது கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உழைக்கும் பெண்கள் விடுதி கட்டுவதற்கான நோக்கம் என்னவென்றால் பெண்களுக்கு முதலில் பாதுகாப்புத் தேவை. அந்தப் பாதுகாப்பை முன்னிட்டுத்தான் அவர்களுக்கு இங்கு கட்டப்பட்டுள்ளது. திருமணம் ஆகாத பெண்களும், திருமணம் ஆன பெண்களும் இவ்விடுதியிலே தங்கி, அரசு அலுவலகங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் தங்களுடைய பணிகளை ஆற்றி வருகிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆலங்குளம் தொகுதியிலுள்ள இராசபாண்டி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்கும் திட்டம்

*வினா எண். 364—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியிலுள்ள இராசபாண்டி என்ற கிராமத்திற்கு பாலர் பள்ளி வேண்டும் என்று கேட்டு இராசபாண்டி மகளிர் மன்றம் அரசுக்கு ஏதாவது வேண்டுகோள் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1983 மார்ச் 10]

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டம் ஆலங்குளம் தொகுதியிலுள்ள இராசபாண்டி கிராமத்தில் குழந்தைகள் நல மையம் ஒன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆலங்குளம் தொகுதி இராசபாண்டி கிராம மக்கள் கேட்டுள்ள பாலர் பள்ளி அந்தப் பகுதியிலே நடைபெற்று வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் ஆனால் பக்கத்திலே உள்ள கிராமத்துக்கு ஒரு பாலர் பள்ளி தேவை என்று அந்த மக்கள் கேட்டிருக்கிறார்கள் ஆகவே இது போன்று கிராம மக்கள் கேட்டுள்ள பாலர் பள்ளியை உடனடியாக கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் 4343 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கிவருகின்றன. இப்பொழுது முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 27,840 மையங்கள் இயங்கிவருகின்றன. இராசபாண்டி என்ற இடத்திலும் இன்றைக்கு அந்த பாலர் பள்ளி குழந்தைகள், முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அங்கு சத்துணவு மையம் ஒன்று இயங்கிவருகிறது. பக்கத்தில் இருக்கின்ற இடத்தைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே அதிகமான குழந்தைகள் இரண்டு வயது முதல் 4 வயதான குழந்தைகள் அதிகமாகக் காணப்பட்டால் அவர்களுக்காக அங்கு மையம் ஒன்று ஏற்படுத்துவதுபற்றி அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**திரு. என். வரதராஜன் :** [illegible] பேரவைத் தலைவரவர்களே, இந்த பாலர் பள்ளியை ஏற்படுத்துவதற்கு அரசு என்ன கொள்கை வைத்திருக்கிறது? உழைக்கக் கூடிய தொழிலாளிகள், விவசாயிகள் நிறைந்திருக்கக் கூடிய பகுதிகளிலே இதை ஆரம்பிக்கக் கூடிய கொள்கையை அரசு வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பாலர் பள்ளியை அமைப்பதற்கான முக்கிய நோக்கமே குழந்தைகளுக்குப் போதிய அளவு சத்துணவு கிடைக்காததுதான். இதனால்தான் சத்துணவு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலும், அவர்கள் அடிப்

படையான கல்வியைப் பெறவேண்டுமென்ற காரணத்தினால் தான்—உதாரணமாக நகரங்களிலே நாம் பார்க்கிறோம் அங்கு நர்சரி பள்ளி என்று வைத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கிராமங்களில் வாழ்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு அடிப்படை யாக அந்த இரண்டு வயது குழந்தைகளும் படிக்கவேண்டு மென்ற எண்ணத்தில் அவர்களுக்கு ஒரு நல்ல பழக்கவழக்கத்தை ஏற்படுத்தவேண்டும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டு மென்ற எண்ணத்தினால்தான் இன்றைக்கு இந்த சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏழை குழந்தை களிடம் 2 முதல் 4 வயது வரைஉள்ள குழந்தைகளுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கிராமங்களில் சத்துணவு மையத்தின் மூலமாக மாண வர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். ஆனால் சத்துணவு மையங்களில் தட்டுக்கள்தான் கொடுக்கப்படுகின்றன. புத்தகங்கள் கொடுக்க வில்லை. ஆசிரியர்களும் இல்லை. இப்படி உண்மைக்குப் புறம் பான தகவலை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வது சரியானது தானா? இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை இந்த அரசு என்றைக்கும் சொல்லாது. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் குழந்தைகளுக்குச் சாப்பிடுவதற்கு தட்டுக்கள் கொடுக் கிறோம். படிப்பதற்குத் தேவையான கல்வி உபகரணங்களையும் கொடுத்து வருகிறோம். குழந்தைகள் படித்துக் கொண்டு வருகிறார்கள். நானே ஒரு தடவை நேரில் பார்வையிட்டு இருக் கிறேன். இப்படிச் செல்லும்போது, பெரியவர்கள் வந்தால் குழந்தைகள் எழுந்து நின்று எப்படி அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று எல்லாம் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கல்வியை அவர்கள் நல்லமுறையிலே படிக்கின்றார்கள். நான் அந்தக் குழந்தை களிடமிருந்து தெரிந்த விஷயத்தைத்தான் இந்த மன்றத் திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

**திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமங்களில் உள்ள பெரிய பெரிய இடங் களில்தான் இந்தச் சத்துணவு மையங்கள் கட்டப்படுகின்றன. அதையொட்டி 2, 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குழந்தைகள் எல்லாம் 50, 60 குழந்தைகள் மட்டும் இருப்பதால், சத்துணவு



மையங்கள் இல்லாத காரணத்தால்—தாய்மார்கள் அந்தச் சோற்றுக்காக, அந்தக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு போக முடியாமல் உள்ளனர். அப்படிச் சில கிராமங்கள் இருக் கின்றன. அதையும் பரிசீலனை செய்து எல்லா கிராமங்களிலும் இருக்கின்ற ஏழைக் குழந்தைகளுக்கு இந்த உணவு அளிக்க வழிவகைகளைச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும், அப்படிச் செய்வார்களா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் எங்கு அதிகமாகக் காணப்படுகிறார்களோ—அதாவது ஒரு மையத்திற்கு 100 குழந்தைகள் வீதம்—அந்த இடங்களில் சத்துணவு மையத்தை கட்ட இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் குழந்தைகள் அதிகமாக இருந்தால் கண்டிப்பாக அந்த இடத்திலே ஒரு மையத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பா களை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) அமைச்சர்கள் வினாக்களுக்கு விடை யளித்தல்,

**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளிலே கேள்வி நேரம் மிக முக்கியமானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தங்களுடைய தொகுதிகளிலேயும், தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு பணிகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்படுகின்ற ஐயப்பாடுகளை எடுத்துச்சொல்லி, அதன் மூலமாக அரசுத் தரப்பிலேயிருந்து பல்வேறு விளக்கங்களைப் பெறுவதற் கான நல்ல நேரம். ஆனால் பொதுவாகவே கேள்வி நேரத்திலே ஒவ்வொரு நாளும் யாராவது ஒரு அமைச்சர் வராமல் இருக்கிறார் கள். இன்றைக்குக்கூட 2 அமைச்சர்கள் வரவில்லை. இது ஒருபுறம் இருக்க, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பல் வேறு இலாகாக்களைத் தன்னகத்தே வைத்துக்கொண்டிருக் கிறார்கள். சென்ற முறை கவர்னர் அவர்கள் உரைக்குப் பின்னாலே அவர்கள் ஒரு கேள்விக்குக் கூட பதில் சொல்ல

வில்லை என்று நான் கருதுகிறேன். இப்போது நிதி நிலை
அறிக்கையின் மீது விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.
10 நாட்களாகி விட்டன. பல்வேறு முக்கிய இலாகாக்கள்
அவர்கள் கைவசம் இருக்கின்ற காரணத்தாலே
பல்வேறு முக்கியமான செய்திகளை நாமும் நாட்டு
மக்களும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.
நல்ல அறிவிப்புகளை அவர்கள் கேள்வி நேரத்திலே கொடுக்
கலாம். ஆகையினாலே, தாங்கள் ஒரு ஏற்பாடு செய்து, முதல்
அமைச்சர் கேள்வி நேரத்திலே பதில் சொல்வதற்கு
ஏற்பாடு செய்தால் தமிழகம் நன்றியுடையதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
கள் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வந்ததாக நான் அறிகிறேன். ஆகவே இதற்கான நட
வடிக்கைகளை எடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன்.

## (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
நம்முடைய வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே பணிபுரிகின்ற
உதவிப் பேராசிரியர்கள், ஆராய்ச்சித் துறையிலே ஈடுபட்டு
இருக்கக்கூடியவர்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக போ
ராட்டத்தில் ஈடுபடப் போவதாகச் சொன்னார்கள். நாங்கள்
ஏற்கனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்பு
கொடுத்து இருக்கிறோம். இதுவரையில் இந்த மன்றத்திலே
அதைக் கொண்டு வராததன் காரணமாக, இன்றைக்கு அவர்கள்
கோவையிலேயும் மதுரையிலேயும் போராட்டத்திலே அவர்கள்
தொடர் உண்ணாவிரதமோ அல்லது கிளர்ச்சியிலோ ஈடுபட்டு
இருக்கிறார்கள். அதனால் வேளாண்மைப் பல்கலைக் ஈடுபட்டு
திலே பயிலுகின்ற மாணவர்களுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்
கிறது. அது மட்டுமல்லாமல் அந்தக் கோரிக்கை தீர்க்கப்
படாமல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேளாண்மைத் துறை
யைப் பற்றித் தீர்மானம் கொடுத்து இருக்கிறீர்கள். அது வரும்
வரையிலும் பொறுத்து இருப்பது நல்லது. எல்லாப்பிரச்சினையும்
முறையாக எடுத்துக்கொள்ளப்பெறும். ஒவ்வொரு கட்சியிலே
யிருந்தும் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.
உங்களுடைய கட்சியிலே உள்ள, 4, 5 பேர்கள் கூட கையெழுத்துப்
போட்டு இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்
கிறார்கள். இவை எல்லாம் ஆய்வு செய்யப்பெற்று முறையாக
எடுத்துக்கொள்ளப்பெறும். (குறுக்கீடு) இன்றைக்கு தூத்துக்குடி
அனல் மின் நிலையம் பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்தை
எடுத்துக்கொள்ள இருக்கிறோம். அமைச்சர் அவர்களும் அதற்குப்
பதிலளிக்க இருக்கிறார்கள்.





(முற்பகல் 10–10)

**திரு. பாபு ஜனார்த்தனன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது அளிக்கப்படுகின்ற பதில்கள் கடந்த ஒரு
வருஷத்திற்கு முன்பாகப் போட்ட கேள்விகளுக்கான பதில்
களாகும். நேற்றைய தினம் தொழில் அமைச்சர் அளித்த
ஒரு கேள்விக்கான பதில் ஒரு ஆண்டுக்கு முன்பாக அனுப்பப்
பட்டதாகும். இப்படி காலம் கடந்து இங்கே பதில்கள் அளிக்கப்
படுகின்ற காரணத்தால், அந்தக் கேள்வி எந்த அடிப்படையில்
எழுப்பப்பட்டது என்கிற தொடர்ச்சிஎங்களுக்கு விட்டுப்போகிறது
ஆகவே, உடனுக்குடன் கேள்விகளுக்கான பதில்களை இந்த
அவை முன் அளிக்க ஆவன செய்யப்படுமா ? மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே வந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்க
வேண்டும் என்பது அல்ல. அமைச்சர்களிடையே கூட்டுப்
பொறுப்பு இருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் சம்பந்தப்
பட்ட துறைகளுக்கு மற்ற அமைச்சர்கள் பதில் சொன்னால்
கூடப் போதும். ஆகவே, அந்த வகையில் ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
கள் கொடுக்கும் கேள்விகளுக்கு 45 நாட்களுக்குள் துறைகளிட
மிருந்து பதில்கள் வந்துவிட வேண்டும் என்று விதி இருக்கிறது.
ஆகவே, அந்த 45 நாட்களுக்குள் பதில்கள் அனுப்புவதற்கான
நடவடிக்கைகளை அமைச்சர்கள் மேற்கொள்ள வேண்டும்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
நேற்றைய தினம் நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழுவில் அதிக
மான அளவிற்குக் கேள்விகளை தினமும் எடுத்துக்கொள்ளாமல்
15 கேள்விகள் எடுத்துக்கொண்டால் போதும் என்று முடிவு
எடுக்கப்பட்டது. அப்படி எடுத்துக்கொள்ளப்பட்ட 15 கேள்வி
களில், 4–5 கேள்விகளுக்கு, அமைச்சர் அவையில் இல்லாத
காரணத்தால், பதில் சொல்ல வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது
இன்று கூட இரண்டு கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படவில்லை.
ஆகவே, அவைமுன் வரக்கூடிய கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட
துறை அமைச்சர் அவையில் இல்லையென்று சொன்னால்,
அமைச்சர்களிடையே கூட்டுப் பொறுப்பு இருப்பதால், வேறு
அமைச்சர் அந்தக் கேள்விகளுக்கான விடையை அளிக்கலாம்.
நாங்களும் அந்தக் கேள்வி வரப்போகிறது என்பதால் துணை
வினாக்கள் எழுப்பத் தயாராக இருப்போம். ஆகவே, அவைமுன்
கொண்டு வரப்பட்ட அத்தனை வினாக்களுக்கும் அது 15
என்று முடிவுப்படி இருக்கலாம். அன்றே பதில் அளிக்க ஏற்பாடு
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு நல்ல யோசனை தான். ஒரு அமைச்சர் இல்லையென்று சொன்னால், வேறு ஒரு அமைச்சர் அந்தக் கேள்விக்கான பதில்களை அளிக்கலாம். அதிலே தவறு இல்லை. இருப்பினும், தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் அது எந்த அளவிற்குச் சரியாக வரும் என்பதை நான் கலந்தாலோசித்து முடிவு சொல்கிறேன். சட்டங்களைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட ஒரு அமைச்சருக்கு பதிலாக, சட்ட அமைச்சர் அதை முன்மொழிந்து, விவாதத்திற்குக் கூட பதில் அளிக்கலாம். ஆனால் வினாக்களைப் பொறுத்த வரையில், மற்ற இலாக்காக்கள் பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் விவரங்களை அறிந்து பதில் சொல்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. அவையின் முன் கொண்டு வரப்படுகிற, நிகழ்ச்சி நிரலில் உள்ள கேள்விகளுக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களே அவையில் இருந்து பதில்கள் தருவது பொருத்தமுடையதாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர்கள் அந்த நேரங்களில் அவையில் இருந்து பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே, கேள்விகளுக்கான பதில்களை 45 நாட்களுக்குள் துறைகள் அனுப்பிவிடவேண்டும் என்கிற விதியையும் அமைச்சர்கள் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 213(2)(ஏ)ன் நம்முடைய சட்ட மன்றப் பேரவை விதி 181, ஆகிய இரண்டு விதிகள் மீறப்பட்டு இருக்கிறது என்றும், என்னுடைய உரிமை பறிக்கப் பட்டு இருக்கிறது என்றும், * * *
கூறி நான் ஒரு உரிமை மீறல் பிரச்னை தந்து இருக்கிறேன். அதைக் கொடுத்து நான்கு நாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த உரிமை மீறல் பிரச்னை என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதிகாரிகள் அவை முன் வந்து பதில் அளிக்க முடியாது என்பதால், அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நாடு முழுவதும் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்னும் பஞ்ச நிவாரண வேலைகள் துவக்கப்படவில்லை என்பதால், கிட்டத்தட்ட 10,000 பேர் ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் மனு கொடுத்தும் இன்னும் வேலை ஒன்றும் நடக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 10,000 பேர் ஊர்வலம் போவதைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தீர்கள், சொல்லி விட்டீர்கள். கவனஈர்ப்பு வரும்போது மற்ற விவரங்களைச் சொல்லிக்கொள்ளலாம், உட்காருங்கள்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, கடந்த 5 நாட்களாக பட்ஜெட் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சர் ஊரில் இருக்கிறாரா, இல்லையா ? இருந்தால் ஏன் அவைக்கு வரவில்லை ? ஒருநாள் கூட இங்கே வரவில்லையே என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் ஊரில் தான் இருக்கிறார். பல பணிகளைக் கவனிக்கிறார், அவைக்கு வருவார்.

(இ) படிவங்களைத் தமிழில் அளிப்பது.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, நம்முடைய அரசு எல்லாச் செயல்களையும் தமிழில் கொண்டு வருவதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. ஆனால், என் போன்றவர்கள் வெட்டுத் தீர்மானங்களும், கேள்விகளும் கொடுப்பதற்கான 'ஃபாரம்' தமிழில் இல்லை; பெரும்பாலும் ஆங்கிலத்தில் இருக்கிறது. அதனால் அந்த பாரத்தில் என்னைப் போன்றவர்கள் பூர்த்தி செய்து கொடுப்பது சிக்கலாக இருக்கிறது ஆகவே, தமிழில் பாரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாரம் தமிழில் இருக்கிறது. கேட்டால் கொடுப்பார்கள். இல்லை என்றால் அலுவலகத்தில் சொல்லி, தமிழில் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்,

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, கே. ஆர். சுந்தரம், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, என். வரதராஜன், தி. கா. நல்லப்பன், மு. அப்பாதுரை, செ. சிவசாமி, செ. இராமலிங்கம், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன் ஆகியோர் ''8—3—1983 அன்று தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் எண்ணெய் குழாய் தீப் பிடித்ததாலும், பல இலட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளதாலும் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களை மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, 8-ந்தேதி யன்று தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஆயில் குழாய் தீப் பிடித்திருக்கிறது. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனிலிருந்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு 'ஃபர்னஸ் ஆயில்' சேகரித்தும் ஆயில் டாங்கர் பொருத்தும் இடத்தில் பைப் லைனில் ஏற்பட்ட லீக்கேஜ் காரணமாக அந்த பைப்பிலே தீப்பிடித்து, ஏறத்தாழ பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, பம்பு ஹவுஸும் பைப் லைனும் கூட முழுமையாக எரிந்துவிட்டன என்ற தகவல் மிகவும் கவலையளிக்கக்கூடியதாக இருக்கிறது.

அங்கே பிடிக்கப்பட்ட தீயை அணைப்பதற்கு இரண்டு மணி நேரம் கடுமையாகப் போராடிய பிறகுதான் தீயை அணைக்க முடிந்திருக்கிறது என்பது மிகவும் கவனிக்க வேண்டிய, கண்காணிக்க வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால், தூத்துக்குடி இப்போது வளர்ந்துவரும் ஒரு இன்டஸ்ட்ரியல் காம்பிளக்ஸ் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். அங்கே தீ விபத்து ஏற்பட்டதால் கோடிக்கணக்கான ரூபாய் சேதத்தை ஏற்படுத்தும் வகையிலே மிகப் பெரும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் கவலையோடு பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைப்பற்றி இங்கே பேசக்கூடிய இந்த நேரத்தில் இதை ஒரு சாதாரணப் பிரச்னையாகப் பார்க்கக் கூடாது. ஒரு மிகப் பெரிய பிரச்னையாக இதைப் பார்க்க வேண்டும். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் மின்சாரத் தட்டுப்பாட்டால் இன்றைக்கு தமிழ்நாடு மிகக் கவலையோடு இருக்கிறது. இந்த





நேரத்தில் தமிழ்நாட்டுக்குத் தேவையான ஹைடல் பவர் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, தூத்துக்குடி போன்ற அனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தைக் கொண்டுதான் ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 10-20)

இன்று ஏற்பட்டிருக்கும் மின் வெட்டைத் தவிர்க்க முடியாதா என்று தமிழகம் ஏங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், மின்சார இலாகாவினுடைய சில தவறுகளின் காரணமாக, கவனக் குறைவின் காரணமாக ஏற்பட்டிருக்கும் ஒரு மிகப் பெரிய விபத்துதான் இது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைச் சொல்லக் கூடிய நேரத்திலே மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில், இது ஒரு புதிய விஷயமும் அல்ல என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1980—81 ஆம் வருஷத்திற்கு, Comptroller and Auditor-General of India யுடைய ரிப்போர்ட்டிலே 148, 149-வது பக்கங்களிலே மின்சார இலாகாவினுடைய மெத்தனத்தின் காரணமாக, காலாகாலத்திலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாக, அதாவது மெயின்டெனென்ஸ் போன்ற நடவடிக்கைகளை, காலாகாலத்தில் நடத்தாததன் காரணமாக, டிரான்ஸ்பார்மர்கள் பராமரிக்கப்படாததன் காரணமாக அதேபோல மெயின்டெனென்ஸுக்கான டெண்டர்கள், காலாகாலத்தில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக, எப்படி மின் இழப்பு தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருப்பதோடு மட்டுமல்லாமல், எவ்வளவு லட்சக்கணக்கான அளவில் நட்டம் தமிழகத்திற்கு இன்று ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறது. 1978—79-லே சேலம் மாவட்டத்தில் கெட்டுவிட்ட 8 டிரான்ஸ் பார்மர்கள், 81 ஆம் ஆண்டிற்குப் பிறகு பழுது பார்க்கப் படவேயில்லை என்பதையும் அந்த ஆடிட் ரிப்போர்ட்டிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

எதற்காக இவைகளையெல்லாம் சுட்டிக் காட்டினேன் என்றால், இப்படி பல விஷயங்களில் முன்னதாக அனுபவம் பெற்றதற்குப் பிறகும், எந்த முறையிலே மெயின்டெனென்ஸ் செய்ய வேண்டுமோ, அந்த முறையிலே மெயின்டெனன்ஸ் செய்வதற்கு மின்சார வாரியம் தவறியிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத்தான், தற்போது தூத்துக்குடியிலே— பைப்லைனிலே ஏற்பட்டிருக்கிற லீக்கேஜை அடைக்க வேண்டிய நேரத்திலே அடைக்காததன் விளைவாக இவ்வளவு மிகப் பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த விபத்தின் விளைவாக, ஒரு பம்பு ஹவுஸ் பூராவுமே எரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். ஒரு சில நாட்களுக்கு முன்னாலே இந்த அவையிலேயே நான் சொன்னேன். மின்சார இலாகா 1981-லே கோதையாற்றிலேயும், குச்சி ஆற்றிலே சில இடத்திலேயும் மெயின்டெனென்ஸ்.... (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோதை ஆற்றிற்கும், தூத்துக்குடிக்கும் என்ன சம்பந்தம்? தூத்துக்குடி மின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் எனக்கே சந்தேகம் வந்து விடும் போல் இருக்கிறது விபத்து எங்கே நடைபெற்றது என்று. எனவே கன்னியாகுமரியை விட்டு சற்று வெளியே வந்து, சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எதற்கு அதைச் சுட்டிக்காட்டினேன் என்றால், ஒரு எக்ஸாம்பிளாகத்தான் சுட்டிக்காட்டினேன். காலாகாலத்திலே செய்ய வேண்டிய பராமரிப்பு வேலைகளை மின்சார இலாகா தொடர்ந்து செய்யத் தவறியிருக்கிறது என்பதை, முன்னாலே நடைபெற்ற உதாரணங்களிலேயிருந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குச்சியாற்றிலே, அந்த அணைக்கட்டுப் பகுதியிலே போடப்பட்டிருந்த ஷிப்ட் டியூட்டியை நிறுத்திவிட்டதன் காரணமாக அங்கே 25 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள டிரான்ஸ்பார்மர் எரிந்து போனது. இப்படி இந்த விபத்துக்களை மின்சார இலாகா ஒரு நிரந்தர feature ஆக ஆக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விபத்தைப் பொறுத்த வரையில், நம்முடைய மின்சார இலாகா சற்று முன்னதாகவே அந்த பைப் லைன்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய லீக்கேஜ்களை அடைத்திருப்பார்களேயானால், இப்படிப்பட்ட மிகப் பெரிய விபத்தை தவிர்த்திருக்க முடியும். ஆனால் சரியான சமயத்தில் அந்த லீக்கேஜை அடைக்கத் தவறியதன் காரணமாகத்தான், தூத்துக்குடி தெர்மல் பிராஜக்டில் இப்படிப்பட்ட ஒரு பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும், ஆகவே, இந்த அவையிலே மின்சார இலாகாவினுடைய ஓமிஷன்களையும், அந்த இலாகாவிலே மெயின்டெனென்ஸைப் பொறுத்த வரையில் இருக்கக் கூடிய நெக்லிஜென்ஸையும், இன்னும் விரிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டியது மிக முக்கியமான தேவையாகும் என்று கூறி, ஆகவே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்குமாறு தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இது போன்ற 2 மிகப் பெரிய விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. சென்ற ஆண்டிலே கூட அங்கேயிருந்த 3 வது யூனிட் தீ பிடித்து எரிந்து, மிகப் பெரிய சேதாரம் ஏற்பட்டது. இங்கே நம்முடைய



மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தூத்துக்குடி அனல் மின் திட்டம் நம்முடைய நாட்டிலே இருக்கக் கூடிய பொறியியல் வல்லுநர்களை வைத்து உருவாக்கப்பட்ட ஒரு திட்டம். ஆகவே, அதனை நாம் ஒரு சோதனை நிலையமாக (டெஸ்டிங் யூனிட்டாக) எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூட இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, நான் மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாக, இந்தப் பேரவையின் மூலமாக தெரிவித்துக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்த தூத்துக்குடி அனல் மின் திட்டத்தை நிர்மாணிக்கிற காலத்தில், அதிலேயிருந்த தொழிலாளர்களுடைய சங்கத்தின் பொதுச் செயலாளராக நான் ஓர் ஆண்டுக்காலம் பணியாற்றியிருக்கிறேன்.

அப்போது இந்தத் திட்டம் உருவாக்கப்படுகின்ற நேரத்தில் பல்வேறு கான்ட்ராக்டர்கள் அதாவது ஒப்பந்தக்காரர்கள் செய்யக்கூடிய தவறுகளின் காரணமாக மிகப் பெரிய இந்தத் இத்திட்டத்தில் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும் என்பதை எல்லாம் தெள்ளத் தெளிவாக அன்றைக்குக் கூறி இருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின் இரண்டு முறை சென்று பார்வையிட்டிருக்கிறேன். ஆனால் அன்றைக்கு இந்த நிறுவனம் உருவாக்கப்படுகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட தவறுகளும், சீர்கேடுகளும், அதிகாரிகளின் தில்லுமுல்லுகளும் நடக்கின்றன என்று சுட்டிக் காட்டினோமோ அந்தத் தவறுகள்தான் இன்றைக்கு இந்த மின் வாரியம் முழுமையாக உற்பத்தியினைச் செய்வதற்குத் தடங்கலாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்திலே கூட அரசாங்கத்தினுடைய பொது நிறுவனங்கள் குழு அங்கே சென்று பார்வையிட்டது. அப்போது அங்கே இருந்த நிர்வாக இன்ஜினியரிடத்திலே கேட்டபோது இது ஆண்டுக்காண்டு நடைபெறுகின்ற பணிதானே ஒழிய இங்கே எந்தவிதமான இயந்திரக் கோளாறும் இல்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இதே மன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே இன்றைக்கு பழுது ஏற்பட்டு இருக்கின்றது என்று சொன்னார்கள்.

அதுமட்டுமல்லாமல் அங்கே கோடிக்கணக்கான ரூபாய் பெருமானம் உள்ள அரசாங்கத்தின் பொருட்கள் களவு செய்யப்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டை நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். இன்றைக்கு தூத்துக்குடி தமிழகத்தில் மிகப் பெரிய ஒரு தொழில் நகரம். ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கடற்கரைப் பகுதியில் மூலதனம் போடப்பட்டு துறைமுகம், ஸ்பிக், இன்னும் ஹெவி வாட்டர் பிராஜக்ட் போன்ற நவீன தொழில்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடத்தில் எரிவாயு விபத்து ஏற்பட்டு, தீ விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இது

சாதாரணப் பிரச்சினை அல்ல. இன்னும் சற்று கவனக்குறைவாக அங்கேயுள்ள அதிகாரிகள் இருந்திருப்பார்களேயானால் அந்த விபத்து இன்னும் பல கோடிக்கணக்கான ரூபாய் சேதாரத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இருக்கின்ற அதிகாரிகள் செய்யக்கூடிய தவறுகளின் காரணமாக குறிப்பாக தமிழகத்தில் உள்ள மின்சார வாரியத்தினுடைய ஒட்டு மொத்தமான கவனக் குறைவு காரணமாக இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. இன்றைக்குத் தமிழகத்தில் மிகப் பெரிய மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்றது. தமிழகத்தின் மின்சாரப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யக்கூடிய மிகப் பெரிய பொறுப்பிலே தூத்துக்குடி அனல் மின் நிலையம் இன்றைக்கு இருக்கின்றது. அந்த நிலையத்திலே தீ விபத்து ஏற்பட்டிருக்கின்றது. இதனால் தமிழகத்து மக்களுக்கு நாளைக்கு மின்சாரம் கிடைக்குமா என்ற சந்தேகம் கூட ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலைமைகளை எல்லாம் முழுமையாக விவாதிப்பதற்காகவும் மின்சார வாரியத்தில் இருக்கக் கூடிய பல்வேறு தவறுகளைக் களைவதற்காகவும், அப்படிப் பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்காகவும் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி பற்றாக்குறை காரணமாக ஆயில் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து குழாய் மூலம் ஆயில் கொண்டுவரப்படுகின்றது. அப்படி குழாய் மூலம் கொண்டுவரப்பட்ட அந்த ஆயிலில் லீக் ஏற்பட்டு 8–3–1983 அன்று மிகப்பெரிய தீ விபத்து எற்பட்டிருக்கின்றது. சென்ற ஆண்டுகூட இதே போன்று தீ விபத்து தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் ஏற்பட்டிருக்கிறது. எனவே அங்கே இருக்கின்ற பொறியாளர்களால் உரிய காலத்தில் அனல் மின் நிலையத்தில் இருக்கின்ற பாகங்களைப் புதுப்பிக்க இயலவில்லை. அதற்குக் காரணம் பெல் நிறுவனம் போன்ற நிறுவனங்கள் எங்களுக்கு உபரி பாகங்களை உடனடியாகச் சப்ளை செய்யவில்லை என்ற குறைபாட்டை அவர்கள் சொல்கிறார்கள். இதுகுறித்து திருவரம்பூர் பெல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஸ்ரீதர் அவர்களைக் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள், மின்சார வாரியத்திலிருந்து எங்களுக்கு வரவேண்டிய ஏராளமான பாக்கித்தொகை இருந்தாலும் ஏறத்தாழ 90 சதவீதம் பாகங்களை நாங்கள் அனுப்பி இருக்கிறோம். எனவே அந்த மின்சார வாரியத்திலேதான் குறைபாடு இருக்கின்றது என்று பெல் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். இப்படி ஒருவரை ஒருவர் குற்றம் சொல்வதில்தான் நிர்வாகம் போய்க்கொண்டிருக்கிறதே தவிர உரிய காலத்தில்



இந்தக் குழாய்களை ரீப்ளேஸ் செய்திருந்தால், அவற்றைப் புதுப்பித்திருந்தால் இப்படிப்பட்ட விபத்து அங்கே ஏற்பட்டிருக்காது. மேலும் தீ விபத்து ஏற்பட்டபோது நம்முடைய தீயணைப்புத் துறையால் தீயை அணைக்க முடியாமல் போய் ஸ்பிக் நிறுவனம் மற்றும் சனநீர் துறை ஆகியவற்றின் உதவியுடன் தீயினை அணைத்திருக்கிறார்கள். இப்படி அடிக்கடி மின்சார வாரியத்தின் தவறான நிர்வாகத்தின் காரணத்தால் மிகப் பெரிய விபத்துக்கள் ஏற்படுகின்றன.

(முற்பகல் 10-30)

இதனால் பொதுமக்களும், உற்பத்தியாகும் பொருள்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அண்மையில் கூட 7—3—1983 அன்று ரிசர்வ் பாங்கு கவர்னர் டாக்டர் மன் மோகன் சிங் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். மாநிலத்தில் இருக்கிற மின்சார வாரியம் மிகவும் மோசமான விதத்தில் செயல்படுவதாகவும் அதிகமான அரசியல் தலையீடு இதற்கு முக்கிய காரணம் என்றும் கூறியிருக்கிறார்கள். இந்த நிறுவனம் அரசு நிதி உதவியை எதிர்பார்த்து செயல்படுவதால் அது அரசியல் ஆதிக்கத்திற்கு ஆட்படவேண்டியுள்ளது. நவீனமான நிர்வாக உத்திகளை கடைபிடிக்கமுடியாத சங்கட நிலை இன்றைய தினம் இருக்கிறது. இப்படிப்பட்ட மின்சார வாரிய நிறுவனத்தின் தலைவராக அல்லது இயக்குநராக நியமிக்கப்படுகிறவர்கள் போதுமான அளவுக்கு அனுபவமும் தொழில்நுட்ப அறிவும் இல்லாதவர்களாக நியமிக்கப்படுவதால் அவற்றின் செயல்பாடு மிகவும் கவலை தரும் நிலையில் இருக்கிறது. சுதந்திரமான நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழு தரும் பட்டியலிருந்து மின்சார வாரிய இயக்குநர்களை நியமிக்கவேண்டும். மிக உயர்ந்த பதவிகளுக்கு விரைவில் ஓய்வுபெறும் அதிகாரிகளை நியமிக்கக்கூடாது என்கிற கருத்தை ரிசர்வ் பாங்க் கவர்னர் கூடச் சொல்லியிருக்கிறார்கள். எனவே மின்சார வாரியத்தில் இன்றையதினம் இருக்கிற குறைபாடுகள் இப்படிப்பட்ட தீ விபத்துகளுக்கு காரணம். இதனால் தூத்துக்குடி மற்றும் தமிழகம் முழுவதும் இந்த அனல் மின்நிலையத்தை நம்பியுள்ள பகுதிகளில் மிகப்பெரிய பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்த பதட்ட நிலையைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் அருகில் 8—3—1983 அன்று நடந்த தீ விபத்து—ஒரு பொது நிறுவனத்தில் ஏற்படக்கூடிய மிகப் பெரிய விபத்தை தவிர்க்கக்கூடிய

[திரு. இல. பலராமன்] [1983 மார்ச் 10

ஒரு நிலையில் இருந்தது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மின்சாரப் பற்றாக் குறை என்பது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. நீர் மின் நிலையங்கள் அனைத்தும் வறண்டு அனல் மின் நிலையத்தை நம்பியிருக்கக்கூடிய நிலையில் தூத்துக்குடி மின் நிலையம் எரிந்துவிடுமோ என்று மின்சாரத்தை பயன்படுத்தக்கூடிய பொதுமக்கள் எல்லாம் ஐயப்படக்கூடிய நிலைக்கு இன்றைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஏதோ இன்றைக்கு மட்டும் ஏற்பட்ட நிலை அல்லாமல் இது வரிசையாக தீ விபத்து மற்றும் ஓடாத நிலை இவை எல்லாம் குறிப்பாக தூத்துக்குடி அனல் மின் நிலயைத்தில் ஏற்பட்டு கொண்டிருக்கக் கூடிய நிலை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இந்த அவையும் அறியும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். கடந்த முறை கூட பெல் நிறுவனத்தினால் கொடுக்கப்பட்ட இயந்திரங்களைச் சரியாக ஓட்ட முடியவில்லை என்ற ஒரு குறைபாட்டை பொறியாளர்கள் அங்கே பணிபுரிபவர்கள் எல்லாம் கூறி அதை அமைச்சர் அவர்கள்கூட முழுமையாக ஏற்றுக் கொண்டு இந்த அவையில் கூட அதுபற்றிக் கூறினார்கள். ஆனால் அது அந்த நிறுவனத்திற்கு சென்ற 2 நாட்களில் ஓடக்கூடிய நிலையை நாம் அனுபவ பூர்வமாக பார்த்தோம். இது ஏதோ பொறியார்கள் அங்கே அதிகமாக இருக்கிறார்கள் என்ற ஐயத்தையும் வாரியத் திற்கு பெரும் நஷ்டத்தையும் ஏற்படுத்தி தமிழக மக்களை மின்சாரத்திலிருந்து விடுபட வைத்து இருளாக ஆக்கவேண்டும் என்ற உணர்வோடு அவர்கள் இயங்குகிறார்கள் என்ற ஐயம் பொதுக்கள் மத்தியிலும் இந்த அவைக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரவேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன். மேலும் இதுபோன்று ஒரு அனல் மின்நிலையம் இயங்காமல் நாசப்படுத்தப்படுமோ என்ற ஒரு ஐய உணர்வும் ஏற் பட்டு கொண்டிருக்கிறது. இதற்கு எண்ணெய் கசிவுதான் காரணமா அல்லது சதியா என்று எண்ணக்கூடிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தீவிரமாக விசாரிக்கவேண்டும். அந்த வாரியம் நல்ல முறையில் செயல்படாத நிலையில் இன்றைக்கு இருக்கிறது என்ற கருத்து பொதுமக்கள் மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வாரியம் தேவையா என்றுகூட பொதுமக்கள் மத்தியில் இன்றைக்கு கேட்கக்கூடிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இந்த அவையை ஒத்தி வைத்து இதைப் பெரிய விவாதமாக விவாதிக்கவேண்டும். மின் சாரம் தேவை. மேலும் இருக்கக்கூடிய மின்சார நிலையங்கள் நிறைவாக மின்சாரத்தை வழங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க இதுபோன்ற அனல் மின் நிலையங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு இந்த அவையை ஒத்திவைத்து இதை விரிவாக விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 10]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து உரையாற்றிய எதிர்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மின்வாரிய நிதிநிலை அறிக்கைமீது விவாதம் நடந்தால் எந்த அளவுக்கு பலனுள்ள கருத்துக்களைத் தருவார்களோ அந்த அளவுக்கு எனக்குப் பல கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். அதற்காக முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தூத்துக்குடியிலே ஏற்பட்டுவிட்ட தீ விபத்தைப் பொறுத்தவரையில் அதை விபத்து என்று நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். விபத்து என்கிறபோது அது எதிர்-பாராமல் ஏற்படுகிற ஒன்று என்பது தானாகவே விளங்கும். இந்தியன் ஆயில் நிறுவனத்திலிருந்து எண்ணெயைக் கொண்டு வருகிற குழாயில் அந்த எண்ணெயை ஏற்றுகிற நிலையத்திற்கு அருகில் இவ்விபத்து ஏற்பட்டிருக்கிறது. அந்த விபத்தை சுமார் 10—30 மணி அளவில் கண்டவுடனே தூத்துக்குடி அனல்மின் நிலையத்திலே இருந்த தீ அணைப்பு வண்டிகள், அதேபோல் துறைமுகம், ஸ்பிக் நிறுவனம் ஆகியவற்றின் நிலையங்களைச் சேர்ந்த தீயணைப்பு வண்டிகள் ஆகியவற்றை வைத்து சுமார் $1\frac{1}{2}$ மணி நேரத்திலே அந்தத் தீயை அணைத்தனர். அதோடு மட்டுமல்லாமல் தீ பரவாமல் இருக்கவேண்டு மென்பதற்காக அந்த எண்ணெய் குழாயில் 200 மீட்டருக்கு முன்னாலேயே துண்டித்து தீ பிடித்த பகுதியைத் தனிமைப் படுத்தினர். அதன் விளைவாக அந்த தீ பரவாமல் தடுப்பதற்கு தக்க நேரத்திலே தகுந்த நடவடிக்கை எடுத்ததற்காக நாம் அவர்களை மனமார தீ அணைப்புத் துறையினராக இருந்தாலும், பொறியாளர்களாக இருந்தாலும் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். எந்தக் காரணத்தினாலே தீ பிடித்தது என்பது இன்னும் புலனாய்விலே உள்ளது. எண்ணெய் கசிவினால் ஏற்பட்டதா, அல்லது யாரேனும் பீடி, சிகரெட் துண்டுகளைப் போட்டனரா அல்லது மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் சொன்னதைப்போல் ஏதேனும் சதி இருக்கிறதா இவைகளைப் பற்றியெல்லாம் நாம் இப்போதே முடிவுக்கு வந்துவிட முடியாது. அதைப் புலனாய்வு செய்து என்ன காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்பதைப் பிறகு தான் நாம் கண்காணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இதனால் மிகப் பெருத்த சேதம் அடைத்துவிட்டது என்று நாம் நினைக்கத் தேவையில்லை. ஏனென்றால் நல்லவேளையாக பெரும் சேதம் ஒன்றும் ஏற்பட்டுவிட வில்லை. அந்த எண்ணெய் குழாய்களுக்கும் எண்ணெய் ஏற்றுகிற நிலையத்திலே அந்தக் கட்டடத்திற்கும் ஏற்பட்ட சேதம், சுமாராக 2 லட்சம் ரூபாய் என்று இப்போது மதிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே பெருத்த சேதம் ஒன்றும் இல்லை. இருந்தாலும் அந்த இடம் மிகவும் முக்கியமான இடம் என்பதை நாம் மறுத்துவிடுவதற்கு இல்லை. ஒரு சிறு பொறியானாலும்

[பேரவைத் தலைவர்] [1983 மார்ச் 10

| | |
|---|---|
| 24—3—1983 வியாழக்கிழமை | எண் 5. முத்திரைத்தாள்கள் நிர்வாகம்.<br>எண் 6. பத்திரப்பதிவு.<br>எண் 10. பால் வழங்கு திட்டங்கள்.<br>எண் 48. ஊரகத் தொழில்கள்.<br>எண் 56. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 25—3—1983 வெள்ளிக்கிழமை | எண் 1. நிலவரித் துறை.<br>எண் 41. இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>எண் 46. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். |
| 26—3—1983 சனிக்கிழமை | எண் 12. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.<br>எண் 25. சின்கோனா.<br>எண் 45. காட்டுவளத் துறை.<br>எண் 47. செய்தி, சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல்.<br>எண் 55. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. |
| 27—3—1983 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 28—3—1983 திங்கட்கிழமை | காலை—எண் 33. வீட்டுவசதி.<br>எண் 34. நகர்ப்புற வளர்ச்சி.<br>மாலை—எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| 29—3—1983 செவ்வாய்க்கிழமை | எண் 15. காவல் துறை. |
| 30—3—1983 புதன்கிழமை | எண் 16. தீயணைப்புப் பணிகள். |
| 31—3—1983 வியாழக்கிழமை | எண் 31. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.<br>எண் 44. எழுதுபொருள் அச்சுத் துறை. |
| 1—4—1983 வெள்ளிக்கிழமை | தூய வெள்ளிக்கிழமை விடுமுறை. |



1983 மார்ச் 10] [பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| 2—4—1983 சனிக்கிழமை | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 3—4—1983 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை |
| 4—4—1983 திங்கட்கிழமை | எண் 13. நீதி நிர்வாகம்.<br>எண் 14. சிறைச்சாலைகள்<br>எண் 23. கூட்டுறவு. |
| 5—4—1983 செவ்வாய்க்கிழமை | எண் 3. மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள் நிர்வாகம்.<br>எண் 40. சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்தும்.<br>எண் 54. சாலைப் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 6—4—1983 புதன்கிழமை | எண் 32. பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். |
| 7—4—1983 வியாழக்கிழமை | எண் 24. தொழில்கள்.<br>எண் 50. தொழில் வளர்ச்சி செலவு மூலதனச் செலவு. |
| 8—4—1983 வெள்ளிக்கிழமை | எண் 27. கதர்த் தொழில்.<br>எண் 37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.<br>எண் 38. பொதுப்பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும்.<br>எண் 52. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 9—4—1983 சனிக்கிழமை | எண் 22. கால்நடை வளர்ப்பு.<br>எண் 30. சமூக நலன். |
| 10—4—1983 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை |

[திரு. ச. இராமச்சந்திரன்] [1983 மார்ச் 10

அது பெருந்தீயாக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் புறக்கணித்து விடுவதற்கு இல்லை. ஆகவே இது சம்பந்தமாக தீவிரமாக விசாரித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தூத்துக்குடி மின் நிலையம் இயங்குவதைபற்றியும் பராமரிப்புப் பணிகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு சொன்னார்கள். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் டிரான்ஸ்பார்மர்களைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் அந்தவிவரங்களுக்கு எல்லாம் இப்போது போகத் தயாராக இல்லை. இருந்தாலும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் கடந்த 10 நாட்களாக மிகச் சிறந்த முறையிலே அதாவது சுமார் 540 மெகாவாட் அளவுக்கு இயங்கி வருகிறது, நாள் ஒன்றுக்கு 1 கோடியே 11 லட்சம் யூனிட்டுகள் என்ற அளவிற்கு மிகச் சிறந்த முறையிலே 630 மெகாவாட் உற்பத்தித் திறன் என்றால் 540, 550 மெகாவாட் என்ற அளவுக்குச்சிறந்த முறையிலே இப்போது இயங்கி வருகிறது என்பதையும் நான் அண்மையிலே டெல்லி சென்றபொது மத்திய மின்சாரத் துறையைச் சேர்ந்த மத்திய சர்க்கார் அதிகாரிகள்கூட தூத்துக்குடி அனல் மின் நிலையம் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது என்பதைப் பாராட்டி என்னிடத்திலே நேரிலேயே தெரிவித்தார்கள். ஆகவே எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு நாம் பாராட்டு தெரிவிக்கிற நேரத்திலே தூத்துக்குடி அனல் மின்நிலையத்தைச் சேர்ந்த பொறியாளர்களும் தொழிலாளர்களும் அதே வகையிலே அந்த மின் நிலையத்தைத் தொடர்ந்து இயக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தூத்துக்குடி அனல் மின்நிலையத்தைப் பொறுத்துத்தான் மின்வசதி அமைந்து இருக்கிறது. இந்த தீ விபத்தினால் மின் உற்பத்தி எந்த விதத்திலும் தடைப்படவில்லை என்பதையும் ஆகவே நம்மைப் பொறுத்தவரையிலும் மிகப் பெரும் பிரச்சினையாக எழவில்லை என்ற காரணத்தினாலேயும் அவையை ஒத்திவைத்துத்தான் விவாதிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே அவையை ஒத்திவைக்கும் தீர்மானம் தேவையில்லை என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மின்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.



1983 மார்ச் 10]

## 4. அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

நேற்று (9-3-1983) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 15-3-1983 செவ்வாய்க்கிழமை | எண் 17. கல்வி—பேரவை காலை, மாலை இருவேளையிலும் கூடும். |
| 16-3-1983 புதன்கிழமை | எண். 26. கைத்தறியும், நெசவுத் தொழிலும். |
| 17-3-1983 வியாழக்கிழமை | ஏற்கனவே அறிவித்தபடி. |
| 18-3-1983 வெள்ளிக்கிழமை | ஏற்கனவே அறிவித்தபடி. |
| 19-3-1983 சனிக்கிழமை. | ஏற்கனவே அறிவித்தபடி. |
| 20-3-1983 ஞாயிற்றுக்கிழமை | விடுமுறை. |
| 21-3-1983 திங்கட்கிழமை | எண். 18. மருத்துவம். |
| 22-3-1983 செவ்வாய்க்கிழமை | எண். 19. பொதுச் சுகாதாரம். |
| | 21-3-1983 திங்களன்று பேரவை காலை, மாலை இருவேளையும் கூடும். |
| 23-3-1983 புதன்கிழமை | எண். 21. மீனளம். எண். 35. நுகர்பொருள் வழங்கல். |

[1983 மார்ச் 10

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பெரியார் மாவட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் மின்வெட்டு காரணமாக தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தொடர்ந்து மின் வசதி கிடைக்காததால் நீரேற்றம் பணியில் தடங்கல் ஏற்பட்டு நீர் வழங்கும் பணியில் இடைவெளி இரண்டு நாட்களுக்கு மேலும் ஏற்பட்டுள்ளது. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குத் தலைமை நீரேற்று நிலையத்திற்கு அருகில் உள்ள துணை மின் நிலையத்திலிருந்து தனி மின்பாதை அமைக்க ரூ. 1.30 இலட்சம் செலவில் திட்டம் அரசினரால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியும் மேற்கொள்ளப்பட்டு 15—3—1983 அளவில் முடிவடைய இருக்கிறது. இதற்குப்பின் கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகம் செய்வதில், கணிசமான முன்னேற்றம் இருக்குமென அரசிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அப்படிப்பட்ட 5 நாளைக்கு ஒரு முறை அல்லது 4 நாளைக்கு ஒரு முறை என்ற நிலை இருக்காது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் இல்லாத பட்சத்தில் 15 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, கோபிசெட்டிப்பாளையம் நகரத்திற்கு 54 மணி நேரத்திற்கு ஒருமுறை தான் தண்ணீர் கிடைக்கிறது. மின்சாரத் தட்டுப் பாட்டின் காரணமாக, 5 நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு ஜெனரேட்டர் வைப்பதற்கு, நகராட்சியிடம் நிதியில்லாத காரணத்தால், அரசு முழுமானியமாகக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் ஏறத்தாழ 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் இருக்கின்றன. அவைகளிலே எந்தெந்த நகராட்சிகள் அல்லது, நகரியங்களில் போதுமான பண வசதி இருக்கிறதோ, அந்தப் பணத்தையே ஏற்பாடாக வைத்துக் கொண்டு, குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக உடனடியாக ஜெனரேட்டர்களை வாங்கிக்கொள்ளலாம் என்கின்ற அனுமதிக்கு ஏற்கனவே அரசாங்கத்தின் மூலமாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. கோபிசெட்டிப்பாளையத்தைப் பொறுத்த அளவில் அது பற்றாக்குறை நகராட்சி. அதன் காரணமாகத்தான் இன்று கோபிசெட்டிப்பாளையத்திலிருந்து அங்கே இருக்கக்கூடிய ஆணையாளர் அவர்கள் தங்களுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்கிற கருத்துருவைத் தெரிவித்துள்ளார்கள்.



1983 மார்ச் 10] [திரு. ப. குழந்தைவேலு]

ஆனால் எவ்வளவு மானியம், எவ்வளவு கடன் என்று கொடுப்பது என்பது பற்றி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக அந்தப் பணத்தைக் கொடுக்க முடியுமோ அவ்வாறு கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50.)

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதிருக்கின்ற குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் நகராட்சி 50 சதவீதம், மானியம் 50 சதவீதம் என்று போட்டு குழாய்க் கிணறுகளை அமைக்கின்ற நிலைமையைப் போக்கி அந்தநகராட்சிக்கு நிதி நிலைமை இல்லாதிருப்பதால் 40 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு அரசே முழு மானியத் தொகையையும் வழங்குவதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, வறட்சி நிவாரணத் திட்டத்தின் அடிப்படையில் வேண்டுமானால், இப்பொழுது மத்திய அரசாங்கம் குழுவை அமைத்து, அந்தக் குழு பார்வையிட்டுச் சென்றிருக்கிறது. அவர்கள் குறித்த நேரத்தில் அறிக்கை கொடுக்கவிருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் எவ்வளவு பணத்தை மாநில அரசுக்கு, தமிழகத்திற்கு ஒதுக்குகிறார்களோ அதன் அடிப்படையிலே நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளுக்கு அதற்குத் தகுந்தாற்போல் நிதி ஒதுக்கப்படும் அந்த நேரத்தில் இது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1983—84.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1983—84 ஆம் ஆண்டு செலவிற்கான முன் பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India, I Sundarlal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving into the Tamil Nadu Legislative Assembly of the demands for advance grants during the year 1983-84.

| | |
|---|---|
| 11—4—1983 திங்கட்கிழமை | எண் 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். எண் 11. மாவட்ட நிர்வாகம். |
| 12—4—1983 செவ்வாய்க்கிழமை | எண் 2. மாநில ஆயத் தீர்வைத் துறை. எண் 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். |
| 13—4—1983 புதன்கிழமை | எண் 7. மாநிலச் சட்டமன்றம். எண் 8. தேர்தல்கள். |
| | விவாதமின்றி வாக்கெடுப்புக்கு விடப்படுபவை. |
| | எண் 42. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும். எண் 43. பல்வகை. எண் 57. பல்வகை மூலதனச் செலவு. எண் 58. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். |
| | 2. நிதி ஒதுக்க சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். |
| 14—4—1983 வியாழக்கிழமை. | வருடப்பிறப்பு—விடுமுறை. |
| 15—4—1983 வெள்ளிக்கிழமை | நிதிஒதுக்கச் சட்டமுன்வடிவு—ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும். |

தேவையிருப்பின் பேரவை 16—4—1983, சனிக்கிழமையன்றும் கூடி அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்து நிறைவேற்றும்.

1982—83ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள், ஆளுநர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று பேரவைக்கு அளிக்கப்படும். அதன்மீது விவாதம் தேவை இருப்பின் வசதிப்படி ஒரு நாள் மாலை பேரவை கூடி விவாதித்து அதற்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றும்.



(ஆ) மேலவைத் தலைவர் செய்தி—சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 19/1983.)

2. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1983).

3. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1983).

4. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1983).

5. 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 23/1983).

6. 1983 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1983).

7. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாப்பளித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 15/1983).

5. கவன ஈர்ப்பு.

கோபிச்செட்டிபாளையம் நகராட்சி குடிநீர் வழங்கல்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியார் மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் நகராட்சியில் 5 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்குவதால் பொதுமக்கள் அடையும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

6. முன் பண மானியக் கோரிக்கைகள் 1983—84.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1983—84 ஆம் ஆண்டிற்கான முன் பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 10—3—1983 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் இரண்டாவது பத்தியில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 1983—84 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுகளுக்காக மொத்தமாக ரூபாய் முன்னூற்று நாற்பத்திரண்டு கோடியே ஐந்து இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்திற்கு மேற்படாத தொகை அரசுக்கு முன் பணமாக வழங்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.



நிறைவேற்றப்பெற்ற முன்பண மானியக் கோரிக்கைகள் 1983—84.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | A. வருவாய்க் கணக்கில் செலவு. | |
| கோரிக்கை. | 1—நிலவரித் துறை .. .. | 1,31,57 |
| அதே | 2—மாநில ஆயத் தீர்வைத்துறை | 43,50 |
| அதே | 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம். | 38,90 |

**வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.**

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். | 1,73,09 |
| ஷை | 5—முத்திரைத் தாள்கள்— நிர்வாகம். | 16,41 |
| ஷை | 6—பத்திரப் பதிவு ... ... | 82,23 |
| ஷை | 7—மாநிலச் சட்ட மன்றம் ... | 22,13 |
| கோரிக்கை | 8—தேர்தல்கள் ... ... | 6,02 |
| ஷை | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 3,69,15 |
| | 10—பால் வழங்கு திட்டங்கள்.. | 19,88 |
| ஷை | 11—மாவட்ட நிர்வாகம் .. | 4,73,46 |
| ஷை | 12—தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய - அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். | 46,46 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 13—நீதி நிர்வாகம் .. .. | 1,85,38 |
| ஷை | 14—சிறைச்சாலைகள் .. | 1,18,52 |
| ஷை | 15—காவல் துறை .. .. | 12,70,51 |
| ஷை | 16—தியணைப்புப் பணிகள் .. | 94,13 |
| கோரிக்கை | 17—கல்வி .. .. .. | 59,29,40 |
| ஷை | 18—மருத்துவம் .. .. | 15,17,31 |
| ஷை | 19—பொதுச் சுகாதாரம் .. | 18,76,74 |
| ஷை | 20—வேளாண்மை .. .. | 12,45,99 |
| ஷை | 21—மீன்வளம் .. .. | 85,45 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 22—கால்நடை வளர்ப்பு .. | 3,52,69 |
| டிட்டோ | 23—கூட்டுறவு .. .. | 1,67,19 |
| டிட்டோ | 24—தொழில்கள் .. .. | 39,62 |
| டிட்டோ | 25—சின்கோனா .. .. | 45,96 |



| | | |
|---|---|---|
| கோரிக்கை | 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும். | 1,17,72 |
| டிட்டோ | 27—கதர்த் தொழில் .. | 36,49 |
| டிட்டோ | 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 23,36,86 |
| டிட்டோ | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். .. | 1,64,71 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 30—சமூக நலன் ... ... | 9,89,81 |
| டி. | 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 7,40,95 |
| | 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 1,70,38 |
| டி. | 33—வீட்டு வசதி ... .. | 2,72,41 |
| கோரிக்கை | 34—நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 4,58,00 |
| டி. | 35—நுகர்பொருள் வழங்கல் .. | 13,46,76 |
| டி. | 36—பாசனம் ... ... .. | 6,85,96 |
| டி. | 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள். | 85,90 |

A.—வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| ாரிக்கை | 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும். | 2,52,34 |
| ஷ்டி | 39—சாலைகளும் பாலங்களும் .. | 11,25,80 |
| ஷ்டி | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 69,54 |



| | | |
|---|---|---|
| ாரிக்கை | 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. | 2,87 |
| ஷ்டி | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் .. | 5,97,64 |
| | 43—பல்வகை | 13,47,63 |
| ஷ்டி | 44—எழுது பொருள் அச்சுத் துறை. .. | 1,87,15 |
| ஷ்டி | 45—காட்டு வளத் துறை .. | 1,69,93 |

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| கோரிக்கை | 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 3,73,01 |
| ஷை | 47—செய்தி சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல். | 41,48 |
| ஷை | 48—ஊரகத் தொழில்கள் .. | 1,31,04 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு. | 2,60,56,07 |



| | | |
|---|---|---|
| கோரிக்கை | 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 92,74 |
| ஷை | 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 3,32,02 |
| ஷை | 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 10,66,62 |
| ஷை | 52—பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 6,74,4 |

**B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.**

| | | (ரூபாய் ஆயிரத்தில்). |
|---|---|---|
| கோரிக்கை. | 53—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 4,60,46 |
| ௸ | 54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 26,54 |
| ௸ | 55—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 2,67,37 |
| ௸ | 56—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 68,37 |



| | | |
|---|---|---|
| கோரிக்கை. | 57—பல்வகை மூலதனச் செலவு. | 2,18,55 |
| | மொத்தம்—பி. மூலதனக் கணக்கு .. | 32,07,07 |

**C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.**

| | | |
|---|---|---|
| கோரிக்கை. | 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 49,42,45 |
| | பெரு மொத்தம் .. | 3,42,05,59 |

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

*(ஈ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) —சட்ட முன் வடிவு, 1983*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 7. அரசினர் சட்ட முன்வடிவு.

*நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி)—சட்ட முன் வடிவு, 1983.*

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 8. வரவு-செலவுத் திட்டம் 1983-84—பொது விவாதம்—(தொடர்ச்சி).

***திரு ப. சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். நேற்று இங்கே பேசிய மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. விஸ்வநாதன் அவர்கள் இங்கே திருச்செந்தூரிலே ஏதோ நடந்துவிட்டது அதனால்தான் இந்த நிதி நிலை அறிக்கையின்மீது கோபங்கொண்டு பிரதான எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த பட்ஜெட் ட அழுகை பட்ஜெட் என்று சொன்னார்கள் என்று கூறினார்கள். ஆனால் அதே நேரத்திலே அவர்கள் பேசும் போது மக்கள் அழுகிறார்கள்.



அதோடு சேர்ந்து நாங்களும் அழுகிறோம் என்று குறிப்பிட்டுப் பேசினார்கள். மக்கள் அழுகிறார்கள் என்றால் மக்களுடைய அழுகையைத் துடைக்க வேண்டுமே தவிர, மக்களின் கண்ணீரைப் போக்க வேண்டுமே தவிர, மக்களோடு சேர்ந்து கொண்டு அவர்களும் அழுகிறார்கள் என்றால் அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நோயாளி மருத்துவரிடம் வருகிறார். மருத்துவர் நோயாளியைப் குணப் படுத்த வேண்டுமே தவிர, மருத்துவரும் நோயாளியுடன் சேர்ந்து அவதிப்படுவது என்பது ஒத்துவராதது. அதேபோல் மக்களுடன் சேர்ந்து அழாமல் மக்கள் கண்ணீர் துடைக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இங்கே பருவ மழை பொய்த்த காரணத்தினால் வறட்சி தாண்டவமாடுகிறது. தமிழகத்திலே வடாற்காடு மாவட்டத்திலே பாதிக்கப்படுகிற வறட்சியால் வேலை இல்லாமல்—வறட்சியால் ஆடு மாடுகளுக்குத் தீவனம் இல்லை—மின்சாரம் இல்லை—குடிநீர் இல்லை—உணவு இல்லை. இந்த வறட்சி இங்கே இருக்கின்ற நேரத்திலே வடாற்காடு மாவட்டத்தை இன்னும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்படாதது ஏன்? வறட்சி என்று அறிவித்தால்தான் அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்குப் பல நன்மைகள் கிடைக்கும்—அதாவது வறட்சி என்று அறிந்தால்தான் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வரி, கடன்கள், மின்சாரக் கட்டணங்கள், கட்டுவது இவைகளிலிருந்து ஒத்திவைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, வடாற்காடு மாவட்டத்தை உடனடியாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்திலே இவ்வளவு வறட்சி இருக்கும்போது மின் கட்டணம் கட்டவில்லை என்று மின் இணைப்பு துண்டிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு அவ்வாறு செய்வது நியாயந்தானா என்று கேட்க ஆசைப் படுகிறேன். இங்கு விலைவாசி ஏறியிருக்கின்ற இந்த நேரத்திலே 26 கோடி ரூபாய் நுழைவுக் கட்டணமாக இந்தப் புது வரிகள் போட்டு இருக்கின்ற காரணத்தால் பல ஊழல் ஏற்படும். மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாமலிருக்க வரிகள உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)*

அதேபோல இங்கே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று 15 கோடி ரூபாய் சொல்லப்பட்டிருக்கின்றது. அது எந்த வகையில் கொடுக்கப்படும்? வேலைவாய்ப்பு மூலமாகக் கொடுக்கப் படுமா, நேரடியாகக் கொடுக்கப்படுமா? வீட்டுக்கு ஒருவருக்கு படித்தவருக்குக் கொடுக்கப்படுமா? படிக்காதவர்களுக்கு கொடுக்கப்படுமா, எப்படி வேலை கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[திரு. ப. சுந்தரம்] [1983 மார்ச் 10

திருப்பத்தூர் தொகுதியில் தொழில் வளம் இல்லாமல்
மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏற்கனவே ஒரு சந்தனத் தொழிற்
சாலை ஏற்படுத்த வேண்டு மென்று 1977–ல் சட்டமன்ற உறுப்
பினராக இருந்தபோது கேட்டிருந்தேன். அந்தத் தொழிற்
சாலையை திருப்பத்தூரில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருந்
தேன். அந்த சந்தனத் தொழிற்சாலை இப்பொழுது பக்கத்துத்
தொகுதிக்குப் போய் இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.
அங்கு ஏற்படுத்துவதால் போக்குவரத்துச் செலவு அதிகமாக
இருக்கும். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் இங்கே கேள்வி
கேட்கின்ற நேரத்திலே சொன்னார்கள்—அந்தத் தொழில்
இலாபகரமாக இருக்காது, நஷ்டமாக இருக்கும் என்று பதிலளித்
தார்கள். இதுபோன்ற சூழ்நிலையில் ஏழை எளிய மக்களுக்கும்
மலை வாழ் மக்களுக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை
உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்:
ஜவ்வாது மலை, ஏலகிரி மலையில் இருக்கக்கூடிய சந்தன மரங்
களைக் கொண்டு அந்த மலைப் பகுதியிலே அந்த மலைப்பகுதியின்
அடிவாரங்களிலே உள்ள மலைவாழ் மக்களுக்கு அந்த தொழிற்
சாலையை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மலைவாழ் மக்க
ளுக்கு வேலை கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்த தொழிற்
சாலையை திருப்பத்தூர் பகுதியிலே, ஜவ்வாது, ஏலகிரி மலை
அடிவாரத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். அதுபோல ஜோலார்பேட்டையின் அருகே,
சிட்கோ மூலமாக ஒரு தொழிற் பேட்டையை ஆரம்பிக்க
வேண்டு மென்று சொல்லி அதற்கான வரைபடங்களும் போடப்
பட்டு அது எந்த நிலைமையில் இருக்கிறது என்றும் தெரியவில்லை.
அந்தப் பகுதியிலே வேலையில்லாத பிரச்சினை தாண்டவம்
ஆடுகின்ற காரணத்தால், பேரறிஞர் அண்ணா அவர்கள்
குறிப்பிட்டதை போல "சாலை ஓரத்தில் வேலையற்றவர்கள்"
என்ற நிலைமை ஏற்பட்ட காரணத்தால் திருப்பத்தூர்
பகுதிகளிலே வேலையில்லாமல் பல உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

(முற்பகல் 11–00.)

அரசாங்கத்தின் பணம் வீணாக்கப்பட்டன.
மக்கள் அவதிப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. அதனால்
நிலையைப் போக்குவதற்காக இதுபோன்ற தொழிற்சாலை ய
உடனடியாக திருப்பத்தூர் பகுதியிலே ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல்தான் நீண்ட நாட்களாக நான் பேசும்
போது எல்லாம் கூட குறிப்பிட்டு இருக்கிறேன். எனக்கு முன்பு
இங்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு லத்திப்
அவர்களும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எங்கள் திருப்பத்தூர்
பகுதி நிலத்தடி நீரை நம்பி இருக்கிற பகுதி. அப்படி நிலத்தடி



1983 மார்ச் 10] [திரு. ப. சுந்தரம்]

நீரை நம்பி இருக்கிற காரணத்தால் இதுபோன்று வறட்சி ஏற்படுகின்ற காலங்களில் இப்போது கூட சர்க்கரை ஆலைகளிலே கரும்பு சப்ளை செய்வதற்காக பதிவு செய்யப்பட்டது. குறித்த காலத்திலே அதை வெட்டி எடுக்காத காரணத்தால் இது போன்ற வறட்சிக் காலங்களில் அந்த கரும்புகள் காய்ந்து போய்விட்டன. அதனால் தான் சொல்கிறேன், நாங்கள் நிலத்தடி நீரை நம்பி இருக்கிறோம். 1974–ஆம் ஆண்டு வாணியம்பாடி தாலுக்காவில், ஆண்டியப்பனூர் என்ற இடத்திற்கு அருகே ஒரு அணை கட்டவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பொறியாளர்கள் பார்வையிட்டும், அந்தத் திட்டம் இன்னும் நடைபெறவில்லை. 1980–81-ஆம் ஆண்டிலே கூட இதுபோன்ற குறிப்புப் புத்தகத்திலேகூட, 85 ஆம் ஆண்டுக்குள் அந்த அணை கட்டி முடிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அது கட்டி முடிக்கப்படுமா அல்லது கைவிடப்படுமா என்பதை திட்டவட்டமாக இந்த அரசு அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் என்னுடைய தொகுதி மக்களுக்காக இந்த சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, ஆண்டியப்பனூர் அணை வந்துவிட்டது, அதற்காக நன்றி என்றுகூட பேசியிருக்கிறேன். ஆனால் நீங்கள் அப்படி பேசியும்கூட இன்னும் ஏன் அந்த வேலைகள் நடக்கவில்லை என்று மக்கள் என்னைக் கேட்கிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன். அந்த அணையைக் கட்டிமுடிக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிக் கட்டி முடிக்கப்படவில்லை என்றால், அந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்றாவது இந்தச்சபையிலே அறிவிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோல்தான் ,இன்னும் எருக்கம்பாறை என்ற இடத்திலே ஒரு பெரிய ஏரியைக் கட்டவேண்டுமென்று கேட்டிருந்தோம். அதுவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் நாட்றாம்பள்ளித் தொகுதியிலே கூட புள்ளூர் என்ற இடத்திலே அணை கட்டவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பொறியாளர்கள் வந்து பார்வையிட்டும் கூட அது ஏனோ இன்னும் நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அணையைக் கட்டிவிட்டார்கள் என்று கூட நோட்டீஸ் அச்சடித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இருக்கிறார்கள். அதையும் உடனடியாக செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற சூழ்நிலைகளைச் சொல்லுகின்ற நேரத்திலே என்னுடைய தொகுதி, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் தொகுதி என்பதால் புறக்கணிக்கிறார்களோ என்றுகூட மக்கள் சந்தேகப் படுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல்

என் தொகுதியிலே வேலாநகர் என்று கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே ஏறக்குறைய 250 வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே 2 லட்சத்திற்கு மேல் பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த 2 லட்சம் பேரும் விலைவாசியின் காரணமாக ஏற்கனவே இருந்த கூலியைவிட தற்போது அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத் திருக்கிறார்கள். அதை உடனடியாக பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக இந்த நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்றால், கம்ப ராமாயணத்தில் வருகின்ற சுந்தர காண்டமாக இல்லாமல், அரிச்சந்திர புராணத்தில் வருகின்ற மயான காண்டமாக இருக்கிறது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

திரு. சி. கோபால் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவைமுன் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற 1983–84-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டுகொண்டு இருக்கும் ஒரு அரசு, ஆண்டுதோறும் தன்னுடைய திட்டங்களை வரையறுத்து, அதனை நிதிநிலை அறிக்கையின் மூலமாக இந்த மாமன்றத்தின் முன் சமர்ப்பிப்பது என்பது ஒரு மரபாக இருந்து கொண்டு இருக்கிறது. அதைப் போலவே, இத்தனை ஆண்டுகளாகஆண்டு கொண்டிருந்தவர்கள் இந்த மாமன்றத்திலே நிதி நிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கின்ற போதெல்லாம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அதனைப் பாராட்டியதாக வரலாறு கிடையாது. மனம் திறந்து முழுமை யாகப் பாராட்டியதாக வரலாறு கிடையாது. அந்த வகையில் தான் இன்று மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களுக்கு பல திட்டங்கள் தீட்டி, அதை நடைமுறைப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு இருந்தபோதிலும், அதனைப் பாராட் டவோ, வரவேற்கவோ மாற்றுக் கட்சியினருக்கு மனம் இல்லை யென்று சொன்னாலும் கூட, வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கும் பொதுமக்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இங்கே எடுத்துச் சொல்வது என்னுடைய தலையாய கடமையெனக் கருதுகிறேன்.





1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிதி நிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்ற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கலைஞர் கருணாநிதி முதல், இன்றைக்கு இந்த மாமன்றத்தில் உள்ள அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வளர, ' வரிகளைப் போட்டு ஏழை களை துன்புறுத்தாதீர்கள் என்று பேசிய நேரத்தில், காங்கிரஸ் கட்சியின் சார்பில் இருந்தவர்கள் வரிகள் போடாமல் ஆட்சி நடத்த முடியாது என்பது நீங்கள் இங்கே வந்தால் தான் தெரியும் என்று சொன்னது உண்டு. ஆனால் 1967-க்குப் பின்னாலே 1970–71-ஆம் ஆண்டிலே இந்த மாமன்றத்தின் முன் நிதி நிலை அறிக்கை வைத்தபோது 100 கோடி ரூபாய்க்கு வரி விதித்த கொடுமையை இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, 1970–71-லே வரி போட்டால் தான் ஆட்சி நடத்த முடியும் என்று சொன்னவர்கள், இன்றைக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களுக்கு வளமான வாழ்வு தரவேண்டும் என்ற அடிப் படையில் இந்த அரசு திட்டங்களைத் தீட்டி, அவர்கள் வாழ்வில் வறுமைதாண்டவம் ஆடக்கூடாது என்ற அடிப்படையில் காரியங் களைச் செய்து இருக்கிற இந்த அரசைப் பாராட்டாமல், பணக் காரர்களை பாதிக்கும் வகையில் ஏதோ ஒரு 26 கோடி ரூபாய்க்கு இந்த அரசு வரி போடுகின்ற நேரத்தில், அந்தப் பணக்காரர் களுக்குச் சாதகமான முறையில், வக்காலத்து வாங்கும் வகையில், இந்த நாட்டிலே அவர்கள் அதே நிலையில் வாழ வேண்டும் என்ற நினைப்பில், இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்கத் தயங்கு கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பணக்காரர்களிடத்தில் குவிந்து கிடக்கும் பணத்தை எடுத்து ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்கவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை அடிப்படையாக வைத்துத்தான், பணக்காரர்களை பாதிக்கும் வகையில், அவர்கள் உபயோகிக்கும் பொருள்களை பாதிக்கும் வகையில், இங்கே வரி போடப்பட்டு இருக்கிறது. ஆனால், இதற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய தேசீய காங்கிரஸ்ஸும் கூக்குரல் இடுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிந்து வைத்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டு கிறேன்.

இயற்கையிலேயே பருவ மழை பொய்த்துவிட்ட நிலையில் தமிழகத்திலே கடுமையான வறட்சி இருப்பதைக்கூட பொருட் படுத்தாமல்—மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று, யானை கட்டிப் போரடித்த தென் மதுரை களமெல்லாம் கருகி காய்ந்துவிட்ட நேரத்திலும், கருநாடக அரசு தகுந்த நேரத்தில் தண்ணீர் விடாத நேரத்திலும், அதைப்பற்றி மத்திய அரசு கட்டிக் கேட்காமல் மாற்றாந்தாய் மனப்பான்மை நோக்கோடு

அந்தப் பிரச்னைக்குத் தீர்வை தள்ளிப் போடுகிற நேரத்திலும் எளியவர்கள் வரவேற்கத் தகுந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த அவை முன் வைத்து இருக்கிறார்கள் என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

1970–71-ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய சித்தன் அவர்கள் இந்த மாமன்றத்திலே பேசும்போது வரி போடாமல் ஒருவர் ஆட்சி நடத்துகிறார் என்று சொன்னால் அது ஒரு நல்ல அரசு இல்லை என்று கூறிய கருத்துக்களை அவர்களுக்கே இன்றைக்கு நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஏதோ பெரியகுளம் தேர்தல் நடந்த நேரத்தில் தமிழக மக்கள் டெபாசிட் வாங்கும் அளவிற்குக் கூட நமக்கு ஆதரவு தரவில்லை என்று சொல்லி ,மதிப்பிற்குரிய மோகனரங்கம் அவர்களின் நாடாளுமன்றப் பதவியைப் பறித்தவர்கள், திருச்செந்தூர் தேர்தலில் கூட தமிழக மக்கள் நமக்கு டெபாசிட் கிடைக்க வழி செய்யவில்லையே என்கிற மன வேதனையோடு புரட்சித் தலைவர் ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள் . . . . .

திரு. எல். இளையபெருமாள் : மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் திரு. மோகனரங்கம் நாடாளுமன்றப் பதவி போனது பற்றிச் சொன்னார்கள். அதற்குக் காரணம், அவர் இரண்டு பதவிகளில் இருந்தார் என்பது தான். அதாவதுஅரசுப் பணி என்ற முறையில் தமிழ் நாடு சிறப்புப் பிரதிநிதியாகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார் என்பதுதான். இரண்டு பதவிகளில் ஒருவர் இருக்கக் கூடாது என்பதால் தான் அந்த நிலை ஏற்பட்டது. அரசியல் சட்ட முறைப்படி அது செய்யப் பட்டது. தேர்தல் முடிவுகளுக்கும், அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10.)

திரு. சி. கோபால் : மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் ஹாஜாசெரீப் அவர்களுக்கு வந்தபோது உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது குறிப்பிட்டது சரியான விவரம் அல்ல. ஏனென்றால், நண்பர் ஹாஜாசெரீப் அவர்களைப் பொறுத்த விஷயத்தில் சட்டசபை மட்டுமல்ல ;





கோர்ட்டு மூலம் நடவடிக்கை இருக்கிறது. கோர்ட் தீர்ப்புக்கு அரசாங்கமும் காத்துக் கொண்டிருக்கிறது, உறுப்பினரும் காத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே சட்டத்திற்கு கட்டுப்பட மறந்துவிட்டு யாரும் கருத்துச் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : இந்த விவகாரம் வழக்கு மன்றத்தில் இருப்பதால் அதைப்பற்றி பேச வேண்டாம்.

திரு. சி. கோபால் ; வழக்கு மன்றத்தில் இருந்தாலும் கூட, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கவர்னர் மூலம் கேட்டுக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் வறட்சி கடுமையாக இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் வறட்சி நிலையை சமாளிக்க ஏறத்தாழ 80,000 டன் அரிசி வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டபோது அவர்கள் 5,000 டன் அரிசிதான் கொடுக்கின்றார்கள், இந்த நேரத்தில் நான் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் நான்கு நாட்களுக்கு முன்னால் இந்த மாமன்றத்திலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார். இந்திய நாட்டின் வடகோடியிலே இருக்கின்ற டெல்லியிலே கூட்டு சேரா நாடுகளின் மாநாடு நடக்கிறது ; அதற்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தலைமை ஏற்கிறார். ஆகவே, அவர்களை இந்த மாமன்றத்திலே வாழ்த்த வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டார்கள்.

அப்படிக் கேட்ட அவர்களைக் நான் கேட்கிறேன். தமிழ் நாட்டிலே வறட்சி நிலை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாதா ? மக்கள் அரிசி கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா ? 20 அம்சத் திட்டத்தில் ஒன்றான கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்ய அரிசி இல்லை என்பது உங்களுக்குத் தெரியவில்லையா ? அந்த வகையிலே இந்த மாமன்றத்தின் மூலம் தமிழ்நாடு கேட்ட அரிசியைக் கொடுங்கள் என்று சொல்லுகின்ற துணிவு உங்களுக்கு ஏன் வரவில்லை ?

டெல்லியிலே இருக்கின்ற பிரதம அமைச்சரை இந்த மாமன்றத்திலே பாராட்டுங்கள் என்று கேட்கிறீர்கள். ஆனால் தமிழ் நாட்டுக்கு அரிசி வழங்க நீங்கள் இந்த மாமன்றத்தின் மூலம் ஒரு தீர்மானம் கொண்டு வாருங்கள், நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்லுகின்ற நிலைமை இல்லை ; நீங்களே கேட்கின்ற நிலைமையும் இல்லை. அதற்கு என்ன காரணம்? திருச்செந்தூர், பெரியகுளம் தேர்தல் முடிவுகள்தான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[1983 மார்ச் 10

திரு. கே. கல்லன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். பெரியகுளம் தேர்தலிலும், திருச்செந்தூர் தேர்தலிலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவு தில்லு முல்லுகளைச் செய்தார்கள் என்பதை நாடறியும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

திரு. மி. வின்சென்ட் : தவறான தகவலைச் சொல்லு கிறார். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். (குறுக்கீடுகள்).

திரு. சி. கோபால் : அன்றைக்கு * *

பேசினார்கள். அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கி றேன்....

திரு. என். இட்டப்பா : மாற்றுத் தலைவரவர்களே, * * பேசினார் என்று ஆளும்கட்சி உறுப்பினர் குறிப்பிடுவது முறைதானா ? அதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : தரக்குறைவு என்பது 'அன்பார்லிமென்டரி' அல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாற்றுத் தலைவர் அவர்களே, சபை நடக்கிறது ; பேரவைத் தலைவர் இருக்கிறார் ; ஓர் உறுப்பினர் பேசுகிறார். அதைத் தலைவர் அனுமதிக்கிறார்.***

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : சபாநாயகர் அவர்களைப் பற்றிக் கூறிய கருத் துக்களையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க ஆணை யிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தலைவரின் அனுமதியோடு, தரத்தோடுதான் நாம் அனைவரும் பேசுகிறோம். தரத்தை விட்டு கீழே இறங்கி னால்தான் தரக்குறைவு என்று சொல்ல முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, * * என்று சொல்வது இந்த அவையை அவமதிப்பதாகாதா என்று கேட்க விரும்புகிறேன். ?

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1983 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தரக்குறைவு என்ற வார்த்தையை பொறுத்த மட்டில் அது ஒன்றும் 'பார்லிமெண்டரி வேர்டு' அல்ல என்று சொல்ல முடியாது; என்றாலும், இந்த அவை யிலுள்ள ஓர் உறுப்பினரைச் சுட்டிக் சொல்லும்போதுதான் பிரச்சினை எழுகிறது. இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் இன் னொருவரை சுட்டிக்காட்டிக் கொண்டே போனால், என்ன நிலை ஏற்படும் ? எனவே, அதுபோல ஒரு உறுப்பினரைச் சுட்டிக்காட்டி சொல்வது சரியாக இராது.

நிதிநிலை அறிக்கையின் மீது விவாதித்து கருத்துக்களைச் சொன்னால், அது எனக்குப் பயன்படும் வகையில் இருக்கும். இந்த அவையிலே நாம் அனைவரும் ஒருவரை ஒருவர் மதித்து கருத்துக்களை வழங்குவதுதான் நல்லது. எனவே, ஓர் உறுப் பினரை சுட்டி சொன்ன வார்த்தைகளை எடுத்துவிடலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எம். எஸ். மாணிக்கம்) : அப்பகுதி அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். எடுத்துவிடலாம் என்று உத்தரவு இடுகிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, இந்த மாமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது, இந்த நிதிநிலை அறிக்கையினை குறை கூறி பேசினார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே ஒன்றை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

1970-71 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த மாமன்றத்திலே வைத்த போது, அந்த நிதிநிலை அறிக்கையிலே ஏறத்தாழ முதல் பக்கத்திலேயிருந்து 13 பக்கங்கள் வரை மத்திய அரசு, மாநில அரசுக்கு இழைத்து வருகிற அநீதிகளைப் பற்றி ஒரு நீண்ட பட்டியலை அளிக்கும் விதமாக இருந்தது. (மணியடிக்கப் பெற்றது) குறுக்கீடுகள் காரணமாக என்னால் முழு விவரங் களையும் சொல்ல முடியவில்லை சற்று நேரம் அனுமதி கொடுக்க வேண்டும்.

அந்த நிதிநிலை அறிக்கையிலே, சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மொத்த பக்கங்களில் மூன்றில் ஒரு பகுதி பக்கங்கள் கிட்டத்தட்ட 13 பக்கங்கள், மத்திய அரசு, மாநில அரசுக்கு இழைத்து வருகின்ற அநீதிகளைப் பற்றி எடுத்துச் சொல்வதற்குப் பயன் படுத்தி உள்ளார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் இன்று, தமிழக மக்கள் பெரும் வறட்சியில் அடிபட்டு ஏங்கிக்கிடக்கும்

நிலையில், நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், அங்கேயிருந்து அரிசி அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டு உண்ணாவிரதம் இருக்கும் நிலையில்—டெல்லியில் உள்ள அரசு அனுப்பி வைத்திருக்கிறதே, 'யானைப்பசிக்கு சோளப் பொறி' என்கிற வகையில், அதைத் தட்டிக் கேட்கக் கூட, தைரியம் இல்லாத நிலையில் ஏன் இருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்று, நான் கேட்பது இருக்கட்டும், பொதுமக்கள் சிந்திக்க மாட்டார்களா அதைப் பற்றி என்கிற கேள்வியை நான் கணையாக வைக்க விரும்புகிறேன்.

இன்று ஆண்டுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, வறட்சி நிலையை தமிழகத்திலிருந்து போக்குவதற்காக சுமார் ரூபாய் 45.63 கோடி வரை செலவழித்துள்ளதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப் பட்டுள்ள குறுகிய, நடுத்தரக் காலக் கடன்களில் ஏறத்தாழ 64 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டி, இந்த அரசு நலிந்த பிரிவினர்களுக்கு அவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக, பல நன்மைகளைச் செய்வதற்காகவே வாழ்ந்துக் கொண்டிருக்கும் அரசு என்பதை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

கைத்தறி நெசவாளர்களுக்கு, தறி முதலாளிகளின் பிடிகளினின்றும் அவர்களை விடுவிக்க வேண்டும் என்று இந்த அரசு எடுத்துக் கொண்ட கொள்கையின் காரணமாக, 54 கைத்தறி நெசவாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 2,000 நிதி அளிக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் உளமாற வாழ்த்தி வரவேற்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) அந்த வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை பல வண்ணப் பூக்கலெளலாம் பூத்துக் குலுங்குகின்ற ஒரு பூஞ்சோலையாகவே இருக்கிறது என்கிற என்னுடைய கருத்தினைச் சொல்லி, இதனை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். இராசாராமன் : மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த பட்ஜெட், குறிப்பாக பற்றாக்குறை பட்ஜெட்டாகவும், கட்டை வண்டி பட்ஜெட்டாகவும் தான் இருந்து கொண்டிருக்கின்றது.





(முற்பகல் 11.20)

தண்ணீர் பற்றாக்குறை தமிழகம் எங்கும் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. மின்சார பற்றாக்குறை இன்றைய தினம் தமிழகம் எங்கும் கடந்த 6 மாத காலமாக நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அரிசிப் பற்றாக்குறையும் இருப்பதாக அரசே தெரிவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த பட்ஜெட்டில் தொழில் துறையினைப் பற்றி எந்தவிதமான திட்டமும் திட்டவட்டமாகக் கூறப்படவில்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆயிரக்கணக்கான பேர் தொழில் துவங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற ஆட்சியினை நினைத்துப் பார்க்கின்றபோது தொழில்களைத் துவங்கினால் எந்த அளவுக்கு நல்ல முறையிலே செயல் படமுடியும் என்ற ஐயப்பாடு, மூலதனம் செய்கின்றவர்களிடத்திலே ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் தமிழகத்தில் தொழில் செய்வதற்குத் தயங்குகிறார்கள்.

1967-க்கு முன்பு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது எந்த அளவுக்கு தொழிலிலே தமிழகம் முன்னணியில் இருந்தது என்பதைத் தமிழகமே அறியும். அதனை இங்கே இருக்கின்ற உறுப்பினர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் நன்கு உணர்வார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரயில் இங்கே மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் பிறக்கின்ற குழந்தைகளுக்கும், வாழ்கின்ற மக்களுக்கும் வேலை வாய்ப்பினைத் தொழில் துறையின் மூலம் உண்டாக்குவதற்கு இந்த அரசு தயாராக இல்லை. தமிழகத்தில் இன்றையதினம் வேலைவாய்ப்பு இல்லாமல் ஏறத்தாழ இலட்சக் கணக்கான படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும், வேலை வாய்ப்பு இல்லாமல் வாடிக்கொண்டிருக்கிறார்கள். என்பதை இந்த அரசு நன்கு உணரும். இருந்தாலும் தமிழகத்திலே உள்ள நிலைமைகளை வைத்து ஏதாவது தொழில்களைத் துவங்குவதற்கு இந்த அரசு முன்வந்திருக்கின்றதா என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் தமிழகத்தில் எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதை அனைவரும் உணருகிறோம். ஆனால் வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்று இந்த பட்ஜெட்டிலே கூறி இருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய திட்டத்தில் இதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை திட்டக் கமிட்டி அறிவித்திருக்கிறார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதனை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உற்று நோக்க வேண்டும். இதற்கான எந்த விதமான திட்டவட்டமான அறிக்கையும் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை நான் குற்றச்சாட்டாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நுழைவு வரி

[திரு. எஸ். இராசாராமன்] [1983 மார்ச் 10

என்று இந்த பட்ஜெட்டிலே போட்டிருக்கிறார்கள். குறிப்பாக இங்கே இருக்கின்ற சாதாரண ஏழை எளியவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பசியால் வாடி பசியைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் வெற்றிலைப் பாக்கைப் போட்டுக் கொண்டு புகையிலையையும் போடுவது என்பது தமிழகத்தில் வழக்கமாக இருக்கின்றது. அந்தப் புகையிலைக்குக் கூட இன்றைக்கு நுழைவு வரி விதித்திருக்கிறார்களே என்று நினைக்கின்ற போது இந்த பட்ஜெட் எப்படி ஏழைகளுக்கு உகந்த பட்ஜெட்டாக இருக்கும் என்ற குற்றச்சாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தினை 134 கோடி ரூபாயில் நிறைவேறுவதாக இந்த அரசு கூறி இருக்கின்றது. நாங்கள் சத்துணவுத் திட்டத்தை எதிர்க்கவில்லை. எங்களுடைய அன்புத் தலைவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்திலேயே மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தோம். அந்த மதிய உணவுத் திட்டத்தோடு நிறுத்திவிடவில்லை, அதோடு மதிய உணவு சாப்பிடுகின்ற அத்தனை மாணவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலே புத்தகங்கள் வழங்கப்பட்டன. ஆனால், இன்றைய தினம் சத்துணவு போடுகின்ற குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் குழந்தைகளுக்கு இலவசமாகச் சத்துணவு போடுவதாக மட்டும் பெருமைப் படமுடியாது. பழைய காலத்தைப் போன்று இன்று தமிழகத்தில் மாணவர்கள் மரத்தடியிலே இருந்து படித்துக் கொண்டிருக்கிற காட்சியினை நாம் கண்ணாலே கண்டு கொண்டிருக்கிறோம். உதாரணமாக அய்யம்பேட்டை பேரூராட்சியில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளிக்கு நான் சென்றிருந்தபோது அங்கே உள்ள மாணவர்கள் மரத்தடியில் இருந்துகொண்டு படித்துக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர்களும் மரத்தின் அடியிலிருந்து பாடம் கற்பித்துக் கொண்டு இருந்தார்கள். ஏன் இந்த நிலை என்ற கேட்டால் அங்கே இருக்கின்ற 2 வகுப்பு அறைகள் விழக்கூடிய அபாய நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நான் சென்று பார்க்கும் போது அந்த 2 கட்டிடங்களும் விழுகின்ற அளவில் இருக்கின்ற காரணத்தால் அதற்கு முட்டுக் கொடுத்து நிறுத்தி அங்கே பள்ளிக்கூடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப் போல் பல்வேறு இடங்களில் பள்ளிக் கட்டிடங்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. பல்வேறு பள்ளிகளில் புதிதாக பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அவைகள் எல்லாம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வெறும் சத்துணவு போட்டு வீராப்பு பேசாமல் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களையும் இலவச



1983 மார்ச் 10] [திரு. எஸ். இராசாராமன்]

உடையையும் கொடுக்கவேண்டும். இடிந்த கட்டிடங்களை எடுத்துவிட்டு புதிதாக கட்டிடங்களை கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்றைய தினம் தமிழ்நாட்டின் நெற் களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் இருக்கிறது என்று அரசே ஒத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக, அப்படி நெல் களஞ்சியமாக இருக்கும் தஞ்சை மாவட்டத்தில் இன்று வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இந்த வறட்சி அந்த மாவட்டம் முழுவதும் பரவியிருக்கிறது என்று இந்த அரசு உணர வேண்டும். பல ஆண்டு காலமாக தஞ்சை மாவட்டம் அடுத்த மாவட்டங்களில் பஞ்சம் ஏற்படும்போது தஞ்சம் கொடுத்து உதவும் மாவட்டமாக இருந்தது. ஆனால், இன்று தஞ்சை மாவட்டமே பஞ்சத்தால் சூழப்பட்டிருக்கிறது குறிப்பாக மற்ற மாவட்டங்களில், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பஞ்சம் வருகின்ற காலத்தில் தஞ்சை மாவட்டம் அந்த பஞ்சத்தைப் போக்கும் . ஆனால், இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லை. பயிர்கள் அங்கே விளைவிக்கப்படவில்லை. குறிப்பாக குறுவையில் சரியாக அனைத்து நிலங்களிலும் பயிர் செய்யவில்லை. தாளடி பயிர் நிச்சயமாக அங்கே யாரும் சாகுபடி செய்யாத காரணத்தினால் தஞ்சை மாவட்டமே இன்றைய தினம் பஞ்ச நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சை மாவட்டத்தோடு நின்று விடாது. இது காட்டுத்தீ போல் தமிழகம் பூராவும் பரவும் என்பதை நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

தஞ்சை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக உடனடியாக அறிவிக்க வேண்டும். குறிப்பாக தமிழகத்தில் தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால் அங்குள்ள விவசாய கூலிகள் வேலை இல்லாமல் இருக்கிற காரணத்தால் அவர்கள் பஞ்சைப் பராரிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டத்தை நீங்கள் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். தஞ்சை மாவட்டம் விவசாய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால் 6 மாதத்திற்கு விவசாயம் செய்ய முடிகிறது. மீதி 6 மாதத்திற்கு அவர்கள் திண்ணையில் உட்கார்ந்து ஏதாவது கதைகள் பேசக்கூடிய நிலைமைகள் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் தொழில் செய்வதற்கு, தொழில் துறையில் முன்னேறுவதற்கு தஞ்சை மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்தால் தான் தொழில் துவங்குபவர்கள் அனைவரும் அங்கு தொழில் துவங்க முன்வருவார்கள் என்று

களைத் துவக்குவதிலே காலத் தாழ்வை ஏற்படுத்துகிறது என்பதை இந்த மாமன்றமும் அரசும் நன்றாக அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, இன்றைக்கு இருக்கிற வறட்சி நிலையை
மனதிலே கொண்டு, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்
அவர்கள் அரிசி கோரி பலமுறை மத்திய அரசை வற்புறுத்திக்
கேட்டும் சரியானபடி தராத காரணத்தால், 5 கோடி மக்களின்
நலனை காப்பாற்றுகிற வகையில் ஒருநாள் உண்ணாவிரதம்
இருந்தார்கள். உண்ணாவிரதம் இருந்த பிறகு மத்திய அரசு,
தருகிறோம் வாருங்கள் என்று அழைத்துப்பேசியது. மாதம்
ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் அரிசியும், 40 ஆயிரம் டன் கோதுமை
யும் தமிழகத்திற்கு கொடுக்கவேண்டும் கேட்டோம். இன்றைக்கு
மத்திய அரசு கொடுப்பதாகச்சொல்லியிருப்பது ஐந்து ஆயிரம் டன்
அரிசியும், 4 ஆயிரம் டன் கோதுமையும் தான். கேட்பது 80
ஆயிரம் டன் ஆனால் கொடுப்பது 5 ஆயிரம் டன் என்றால்
இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இங்கே இருக்கிற காங்கிரஸ்
கட்சி உறுப்பினர்களும், மற்றவர்களும் இப்போது கொடுக்க
விருப்பது மிகக் குறைவாக இருக்கிறது, நாங்கள் இதை எடுத்துச்
சொல்லி அதிகமாகத் தமிழகத்திற்கு வாங்கித்தருகிறோம் என்ற
பாணியில் பேசுவார்களானால், உண்மையிலேயே தமிழகத்தின்
நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி கொள்ள
லாம். ஆனால் எதற்கெடுத்தாலும் மத்திய அரசை கேட்கிறீர்
களே என்று மாநில அரசைப் பார்த்து கேட்கிறார்கள். இந்த
மாநிலத்தில் இன்று போடப்பட்டிருக்கிற ஒன்றிரண்டு வரிகளை
வைத்து பேசினார்கள். 26 கோடிக்கு வரிகளைப் போட்டு
அதிலே ஒரு கோடி ரூபாய்க்கு வரிச்சலுகை தந்திருக்கிறார்கள்
என்று பேசினார்கள். வரி போடவேண்டிய சூழ்நிலை இன்றைக்கு
இருப்பதால் வரிகளை போட்டிருக்கிறார்கள் காங்கிரஸ் கட்சி
அன்பர்களைப் பார்த்து கேட்கிறேன், மத்திய அரசாங்கம் பட்
ஜெட்டிலே எத்தனை ஆயிரம் கோடிகளுக்கு வரிகளைப் போட்டு
இருக்கிறார்கள்? ரெயில்வே முதற்கொண்டு எல்லாவற்றிற்கும்
வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் ஏன் நீங்கள்
கேட்கவில்லை? வெறும் 26 கோடிகளுக்கு சாதாரண வரிகளைப்
போட்டு, அதிலும் ஒரு கோடி அளவிற்கு வரிச்சலுகை அளித்
திருக்கிற இந்த மாநில அரசின் நிதிநிலை அறிக்கையைப் பற்றி
மிகவும் குறைத்து பேசுகிறீர்கள். வரிகள் போடப்படுவதால்
மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு,
மக்களை பாதுகாக்கிற வகையில், பெரும்பாலானவற்றில் வரிகளை
தவிர்த்து, ஒரு சிலவற்றில் மட்டும் வரிகள் போட்டிருப்பதை
பாராட்ட மனமில்லாமல் ஏசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த
பட்ஜெட் ரூ. 159.55 கோடி பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்
கிறது. பற்றாக்குறையை ஈடுகட்ட வேண்டுமென்றால் எந்த
பொருள் மீதாவது வரியைப் போட வேண்டுமே என்று நினைத்து.





பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தாலும், இன்றைக்கு மக்களை
எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்ற அடிப்படையில் மிகக்
குறைவாகவே இந்த அரசு வரிகளைப் போட்டிருக்கிறது. இங்கே
போட்டிருக்கிற வரிகளைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்
திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள்
மாண்புமிகு நாவலரைப் பார்த்து கேட்டார்கள். போடுவதைப்
போல போட்டு, சில நேரம் வரும், சில நண்பர்கள் வருவார்கள்,
வந்து அவர்கள் அணுகுகிறபோது எடுத்து விடுகிறேன் என்று
சொல்லுவார் என்று அவருக்கே உரித்தான பாணியில் சொன்
னார்கள். அவர்கள் ஏழு ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டு
நிதி நிலை அறிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அதுபோல
தான் உங்கள் காலத்தில் போட்ட வரிகளுக்கு, போடுவதைப்
போல போட்டு பிறகு அணுகுகிற போது எடுத்துவிடுகிற பாணி
உங்களுக்குத் தான் பொருந்துமே தவிர, இந்த அண்ணா திரா
விட முன்னேற்றக் கழக அரசிற்கு அது பொருந்தாது என்பதைத்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, பட்டுக்கு வரி போடப்பட்டு பின்னால் வாபஸ் வாங்
கப்பட்டது என்பதைத் தான் துரைமுருகன் அவர்கள் எடுத்துச்
சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது கூட ரெயில்வே பட்
ஜெட்டைப் பொறுத்தவரையில் 488 கோடி ரூபாய் வரி போட்டு,
எல்லோரும் கேட்டுக்கொண்டதன் காரணமாக 57 கோடி குறைத்
தார்கள். ஆக போட்டு குறைப்பது என்பது திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சியிலே தொடர்ந்து நடைபெற்று இருந்ததை,
அந்த அமைச்சரவையிலும் நான் இருந்ததால் எடுத்துச் சொல்ல
முடியும். ஆகவே போட்டதைக் குறைப்பதற்கு இப்படி ஒரு
காரணம் கற்பிப்பதாக இருந்தால், நிச்சயமாக நீங்கள் தெரிந்து
கொள்ள போகிறீர்கள்; அதுமாதிரி எதுவும் நடைபெறப் போவ
தில்லை என்பதன் மூலமாகவாவது நீங்கள் தெரிந்து கொள்ள
முடியும்.

(முற்பகல் 11–40)

திரு. ரா. கிருஷ்ணன்: ஒரே ஒரு விஷயம். இப்பொழுது
மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ரெயில்வே
பட்ஜெட்டில் கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்கள். ரெயில்வே
பொறுத்தவரையிலே, சாதாரண மக்கள் எல்லாம் பயணம் செய்
கிறார்கள். குறிப்பாக மாணவர்கள் சீசன் டிக்கட் கட்டணத்
தைக் குறைத்திருப்பதுதான் ரெயில்வே பட்ஜெட்டில் வரி குறைத்
திருப்பதன் சாராம்சம். ஆனால், பட்டைப் பயன்படுத்துவது
யார்?

தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம் என்ற காரணத்தினால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவ வேண்டும் என்று தஞ்சை மாவட்ட அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பாக கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மட்டும் அல்ல. அரிசி பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். டெல்லியில் இருக்கிற அரசு தமிழகத்திற்கு சரியாக அரிசி கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழக அரசின் அறிக்கைப்படி இன்னும் 3 மாதத்திற்கு அரிசி கையிருப்பு இருப்பதாக கூறிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற தமிழகத்திற்கு இப்போது டெல்லி 5 ஆயிரம் டன் அரிசியையும், 5 ஆயிரம் டன் கோதுமையையும் மத்திய அரசு கொடுத்து இருக்கிறது. அப்படி கொடுக்கப்பட்டிருப்பதை தமிழகத்தில் இருக்கின்ற அதிகாரிகளும் மற்றவர்களும் சரியாக பயன்படுத்த வேண்டும். அப்படி சரியாக பயன்படுத்தினால், மத்திய அரசு இன்னும் அரிசி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதை தாறுமாறாக தகாத வழியில் பயன்படுத்தினால் நிச்சயமாக மத்திய அரசு தலையிட காரணமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய இந்த நியாயமான பிரச்சினைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–30)

**திரு. க. இரா. சின்னராசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மார்ச் ஐந்தாம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இங்கே அளித்துள்ளார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு நாட்டினுடைய நிலையை நன்றாக அறிந்து, நாட்டிலே உள்ள மக்களுடைய பிரச்சினைகளை வரையறுத்து இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை, இந்த நாட்டிலே இருக்கிற ஏழை மக்களும் நடுத்தர மக்களும் எந்த வகையிலும் பாதிக்கப்படாத வண்ணம் மிக உன்னிப்பாக கவனத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையை, இந்த நாட்டிலே இருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப, 3 ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்த மாநிலத்தில் இருக்கிற வறட்சி நிலைமைகளைக் கருத்திலே கொண்டு வறட்சியின் காரணமாக மக்கள்





பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆகவே, சில வரிகளை மாத்திரம் கொடுத்து இருக்கிற நிதிநிலை அறிக்கையை உண்மையிலேயே மக்கள் பாராட்டுவார்கள். மக்கள் பாதிக்கப்படாத வண்ணம் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை பற்றி அச்சப்படத் தேவையில்லை. தண்ணீர் பற்றாக்குறை மின் பற்றாக்குறை, அரிசி பற்றாக்குறை என்று தமிழகம் முழுவதும் நிலவிக் கொண்டிருக்கிறது. எதிர்க் கட்சித் தரப்பிலே பேசிக்கொண்டிருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் இந்த பட்ஜெட்டிலே என்ன இருக்கிறது, இதை எப்படி ஏற்றுக் கொள்வது என்றெல்லாம் பேசுகிறார்கள். இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப முறையான வகையிலே மக்களைப் பாதிக்காத வண்ணம் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை அவர்களுக்குப் பாராட்ட மனம் இல்லை. இருந்தாலும் எதிர்க்கட்சியிலிருந்து எடுத்து வைக்கப்படுகிற கருத்துக்கள் எல்லாம் இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் இல்லை. என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி நிலைமையிலே மக்களைப் பாதிக்காத வண்ணம் நடவடிக்கைகள் எடுப்பது அரசினுடைய கடமை என்ற காரணத்தினாலே அந்த முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன இருக்கிறது ? தொழில் வளம் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கிறார்கள். தொழில் வளத்தைப் பற்றி எடுத்துக் கொண்டால் மத்திய அரசுக்கு மாநில அரசு 1981 ஆம் ஆண்டும் 1982 ஆம் ஆண்டும் 188 விண்ணப்பங்களையும் 95 விண்ணப்பங்களையும் அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசிலே இருக்கிறவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த மாநிலத்திலே தொழில்கள் துவங்கப்பட வேண்டும், தொழில் வளர்ச்சி பெருக்கப்படவேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கிற இந்த அவையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆக இருக்கிற அத்தனை பேர்களும் தொழில் துறையிலே ஒன்றுமே கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மத்தியிலே ஆளுங்கட்சியாக இருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேட்கிறேன், உங்கள் அமைச்சரிடத்திலே அங்கே சொல்லி அதிகமான தொழில்களைத் தரவேண்டுமென்ற கூக்குரலை பாராளுமன்றத்திலே கிளப்ப வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இருப்பது தமிழகம்தான் நீங்கள் ஏதோ வேறு மாநிலத்திலிருந்து தமிழக சட்டமன்றத்திற்கு வந்ததைப் போல பேசிக்கொண்டிருக்கிறீர்கள். இங்கே நாம் அனைவரும் தமிழக மக்களின் நல்வாழ்வைக் கருத்திலே கொண்டுதான், வாதாடிக் கொண்டிருக்கிறோம். இந்த நாட்டிலே உள்ள நிலைமைகளை வைத்துத்தான் திட்டங்களை வகுக்க முடியும் என்பதை நாம் அறிந்து இருக்கிறோம். எங்கே தொழில், எங்கே தொழில் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். தொழில்களைத் துவக்கவேண்டுமென்றுதான் மாநில அரசு ஒழுங்காக [illegible] செய்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு சில [illegible] காரணங்களை [illegible] வைத்து தமிழகத்திலே தொழில்

[1983 மார்ச் 10

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. கி. கோபால்) : மாண்புமிகு உறுப்பினருக்கு அடுத்துப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்பொழுது தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இதுபோன்று அவர் நிதிநிலை அறிக்கையிலே பேசும் பொழுது இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், ஒன்றைமட்டும் நான் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கும், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் சொல்லிக் கொள்வேன். இந்த அரசு எந்த நேரத்திலும், எந்த வகையிலே யார் வந்து சந்தித்தாலும் சந்திப்பதற்குத் தயங்காது. ஆனால், நீங்கள் நினைக்கின்றபடி இந்த அரசு நடந்துகொள்ளாது என்பதை மட்டும் உங்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தைப் பற்றி இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரூபாய் 134 கோடி செலவிலே 65 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குகின்ற இந்தத் திட்டத்தை எங்கே, எப்படி பாராட்டினாலும், இதிலேயிருக்கிற சில நெளிவு சுளிவுகளை இங்கே எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எடுத்துச் சொல்லியிருந்தால் உண்மையிலே பாராட்டியிருக்கலாம். இன்றைக்கு இந்த 65 இலட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள் என்று சொன்னால், அந்தக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலே சோறு போடாவிட்டால், வீட்டிலே பட்டினியாகவா இருப்பார்கள்? அங்கேயும் ஏதாவது ஒன்றை அவர்கள் சாப்பிட்டுத்தானே தீர வேண்டும். ஆகவே, சத்துணவுபோடுவதன் காரணமாக அரிசி பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டதாக ஒரு கணக்கை நீங்கள் போட்டுப் பேசுவது சரியாக இருக்காது. எப்படியும் இந்த 65 இலட்சம் குழந்தைகள் சாப்பிட்டுத் தானே தீரவேண்டும். அந்த அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த இந்தச் சத்துணவுத் திட்டத்தை நாட்டு மக்கள் வெகுவாக வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அதோடு, இந்தச் சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சம்பளம் மிகக் குறைவான சம்பளம். மாண்புமிகு நிதி அமைச்சரை நான் கேட்டுக் கொள்வேன். பால சேவிகாக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சம்பளம் மிகக் குறைவான சம்பளம். அதோடு ஆயாக்களுக்கு ரூ. 30, ரூ. 60 என்று அளிக்கப்படுவதை மாற்றி, ஆயாக்களுக்கு மாதம் ரூ. 100 சம்பளம் கொடுத்தாகவேண்டும்.

அடுத்து, பால சேவிகாக்களுக்கு, ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குள்ள தகுதியை வழங்கி, அவர்களுக்கு மாதம் இரண்டு நாள் விடுமுறை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி அமருகிறேன். வணக்கம்.



1983 மார்ச் 10]

*திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். தமிழகத்தில் இன்றைக்கு நிலவுகிற வறட்சி, உணவு நிலைமை, மின்சார பற்றாக்குறை, இவைபற்றி நிதிநிலை அறிக்கையில் கவலையோடு குறிப்பிடப்பட்டிருப்பது உண்மை தான். ஆனால், இந்த அரசுக்கு ஒரு தொலை நோக்குப் பார்வை இல்லையென்பதுதான் எனது குற்றச்சாட்டு. வருமுன் காப்பது மந்திரிக்கு அழகு என்பது வாக்கு. நம்மைப் பொறுத்தவரையில் அது இல்லையென்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லக் கூடிய தஞ்சாவூருக்குக் கர்நாடக மாநிலம் போதுமான அளவுக்குத் தண்ணீர் அனுப்பாததன் காரணமாக, வறட்சி ஏற்பட்டு விட்டது. அதைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு முதலமைச்சர் பேசினார். கர்நாடகத்திற்கு போய் குண்டுராவுக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்தால் தமிழகத்திற்குப் போதுமான தண்ணீர் கிடைக்கும் என்று பேசினார். ஆனால், பொதுவாக, மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய ஒரு நட்புறவு அரசியலாக்கப்பட்டு, இன்றைக்குத் தமிழக மக்கள் பாதிக்கப்படக் கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் எங்களது குற்றச்சாட்டு.

அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே 1973-74 போன்ற ஆண்டுகளில் குடிநீர்ப் பஞ்சம் ஏராளமாக இருந்தது. அப்பொழுதே ஒரு தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும். சென்னைக்குக் குடிநீருக்குப் பல திட்டங்கள் சொன்னார்கள். வீராணம் என்றார்கள். கட்டளைக் கால்வாய் என்றார்கள், கிருஷ்ணா என்றார்கள், இப்படிப்பட்ட திட்டங்களை அமுல்படுத்தாததன் காரணமாக, இன்றைக்குக் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் நிலைமை.

வறட்சியைப் பொறுத்த வரையிலே மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டிய அந்த அறிக்கை தாமதமாக அனுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, முதல்வர் அவர்களே, பத்திரிகைகளுக்குச் செய்தி சொல்லும் போது 8—2—1983 அண்ணா பத்திரிகையிலே வந்திருக்கிறது—தலைமைச் செயலாளர் உடல் நலம் இல்லாமல் இருந்ததன் காரணமாகத் தாமதம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் கேட்க விருப்புவது, மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டிய தகவல், அந்த அறிக்கைத் தலைமைச் செயலாளர் இருந்துதான் அனுப்பவேண்டுமா? வேறு யாரும் அனுப்பக்கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1983 மார்ச் 10

வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரையில்
அவைகளைத் துரிதமாகவும், முழுமையாகவும் செய்ய வேண்டு
மென்றால் நிச்சயமாக அரசு ஊழியர்களின் ஒத்துழைப்பு
வேண்டும். ஆனால், இன்றைக்கு அரசு ஊழியர்களைப்
பொறுத்த வரையில் 140 சங்கங்கள் ஒன்றுபட்ட ஒரு அமைப்பு
தங்களுடைய மன அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்.
அதைப்பற்றி இந்த அரசு கவலை கொள்ளவில்லை. வருகின்ற
4-ஆம் தேதிக்குப் பிறகு நேரடி நடவடிக்கையில் இறங்கப் போவ
தாக அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த அரசு
அதைப்பற்றி பேசாமல் இருப்பது நல்லது அல்ல என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, நமது முதலமைச்
சரவர்களே சொல்லியிருக்கிறார்கள். 1980ஆம் ஆண்டிலே மத்
திய அரசு தமிழ்நாட்டிற்கு கேட்ட அரிசி 1,91,000 டன். ஆனால்
93,000 டன் தந்திருக்கிறார்கள். 1981ஆம் ஆண்டில் கேட்டது
11,26,000 டன்; ஒதுக்கியது 6,10,000 டன்; வந்தது 4,08,000
டன், 1982 மே மாதம் வரையில் கேட்டது 5 இலட்சம் டன்;
ஒதுக்கியது 95,000 டன்; வந்தது 61,000 டன். 1982ஆம் ஆண்டு
ஜூன் மாதத்திற்குப் பிறகு, கேட்டது 1 இலட்சம்; 80,000 டன்
களாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். ஆனால் இதுவரையில்
ஒரு மணி அரிசிகூட தரவில்லை. இதைச் சொல்லித்தான் முத
லமைச்சரவர்கள் ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.
உண்ணாவிரதம் இருந்தது உண்மையிலேயே வெற்றி என்று
சொல்லப்பட்டது. கை மேல் கிடைத்த பலன் என்றும் சொல்லப்
பட்டது. ஆனால் முதலமைச்சரவர்கள் டெல்லிக்குப் போனார்
கள், பிரதம அமைச்சரைச் சந்தித்தார்; உணவுத் துறை அமைச்
சரைச் சந்தித்தார். இவர்களைச் சந்தித்த முதலமைச்சர் நிருபர்
களிடத்தில் சொல்லுகின்ற நேரத்தில் என்ன சொல்லுகிறார் என்
றால், மத்திய அரசுக்கும் சங்கடங்கள் உள்ளன; நம்மைப்போல
மற்ற மாநிலங்களையும் அவர்கள் கவனிக்க வேண்டிய நிலையில்
இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே
உள்ள மத்திய அரசின் தவறான போக்கைச் சுட்டிக்காட்ட வேண்
டிய ஒரு முதலமைச்சர், டெல்லிக்குச் சென்று பிரதம அமைச்ச
ரையும், உணவுத் துறை அமைச்சரையும் சந்தித்ததற்குப் பிறகு
தலைகீழாக மாறியிருக்கிறார். இதன் விளைவாக 80,000 டன்
அரிசியும், 40,000 டன் கோதுமையும் கேட்டுள்ள நேரத்தில்,
மத்திய அரசு ஒதுக்குகிற உணவு தானியமோ 5,000 டன் மட்டும்
தான். இவ்வாறு 5,000 டன் ஒதுக்கியிருப்பதைப்பற்றி மாநில
அரசு எதுவும் சொல்லவில்ல; அரசாங்க ரீதியாக எதுவும் சொல்ல
வில்லை. இதன் மர்மம் என்ன என்பதைத்தான் நான் கேட்க
விரும்புகிறேன். கேட்டதோ 80,000 டன். இன்றைக்குக் கடும்
வறட்சி இருக்கின்ற இப்படிப்பட்ட சூழ்நிலையில் [illegible]



1983 மார்ச் 10] [திரு. ரா. கிருஷ்ணன்]

அளவிற்கு ஒதுக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்ட பிறகும் தமிழக
அரசின் சார்பாக இதுவரையில் எதுவும் கேட்காமல் இருப்பது
மிகவும் வேதனைக்குரியது என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்
படுகிறேன்.

உண்ணாவிரதத்தை முடித்தவுடன் நிருபர்களிடம் பேசிய
போது முதலமைச்சர் சொன்னார். இதுபற்றி 10—2—83 ஆம்
தேதிய ''அண்ணா'' பத்திரிகையில் வந்த செய்தியைச் சொல்கி
றேன். ''திருச்செந்தூர் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இருக்கும்
நாளில் அரிசிக்காக டெல்லி போக வேண்டிய நிலை ஏற்பட்டால்
டெல்லிக்குதான். திருச்செந்தூர் முக்கியமல்ல. அரிசிதான்
முக்கியம். அரிசி பிரச்சினை தீரும் வரை நான் திருச்செந்தூர்
செல்வதாக இல்லை''. என்று சொல்லியிருக்கிறார். அரிசிப்
பிரச்சினை இதுவரையில் தீர்ந்திருக்கிறதா? சொன்ன வீராப்பு
என்னவாயிற்று? பேசிய வீராப்பு என்னவாயிற்று என்று கேட்க
விரும்புகிறேன். திருச்செந்தூருக்குப் போவதும், போகாததும்,
பிரச்சாரம் செய்வதும், செய்யாததும் அவரவர்கள் கட்சி
யினுடைய உரிமை. ஆகவே, அதை விட்டு விடுங்கள். ஆனால்
அங்கு நடந்தமுறை எப்படியிருக்கிறது?

1977 ஆம் ஆண்டு என்று நான் நினைக்கிறேன். அப்பொழுது
முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், தனியார்களுடைய
விருந்தினர் மாளிகைகயில் அமைச்சர்கள் தங்கக் கூடாது என்று
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட வறட்சி
யான நிலைமையிருக்கிறது. ஏற்கெனவே பல கோடி ரூபாய்களை
அரசு மூலதனமாகப் போட்ட அந்த ஸ்பிக் நிறுவனம் பயங்கர
மான நஷ்டத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்
தின் விருந்தினர் மாளிகை அமைச்சர்களுக்குக் குத்தகை. 3,000
தொழிலாளர்களை வீட்டுக்கனுப்பியுள்ள தாரங்கதாரா விருந்
தினர் மாளிகையும் அமைச்சர்களுக்குக் குத்தகை. சிமெண்ட்
இப்பொழுது விலை ஏறியிருக்கிறது. அந்த சிமெண்டைத் தயா
ரிக்கின்ற தாழையூத்து இந்தியா சிமெண்ட் விருந்தனர் மாளிகை
முதல் அமைச்சருக்குக் குத்தகை. இது என்ன முறை என்று கேட்க
விரும்புகிறேன்.

ஆகவே, நான் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட காரி
யங்கள், அபரிமிதமான இலாபம் சம்பாதிக்கத்தான் அந்த நிறு
வனங்களுக்குப் பக்க பலமாக இருக்கும். அவர்கள் செய்யக்கூடிய
தவறுகளை நீங்கள் எப்படிக் கண்டிக்க முடியும் என்பதுதான்
கேள்வி. ஏற்கெனவே, ஸ்பிக் நிறுவனத்தில் பல கோடி ரூபாய்கள்
அரசாங்கத்தால் போடப்பட்டு, அதில் இலாபம் 'இல்லை
என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சீர்கேடான நிலையில்
அந்த நிறுவனம் இருக்கிறது. நன்றிக் கடனாக 40 இலட்சத்தில்
செயற்கை முத்து வளர்ப்புத் திட்டம் ஸ்பிக் நிறுவனத்திடம்
ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

[1983 மார்ச் 10

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகிற போது முதலமைச்சரவர்கள் அந்தப் பத்திரிகையிலே சொன்னதை சுட்டிக்காட்டி, வீராப்பு என்னவாயிற்று என்ற கடுமையான வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். முதல்வரவர்கள் பத்திரிகையிலே சொன்னது—2 தடவை வேட்பாளர்களை அறிமுகப்படுத்த மாண்புமிகு முதல்வரவர்கள் அங்கே போய் பேசுவதாக இருந்தது. அதுபற்றி பத்திரிகை நிறுவனங்கள் கேட்டபோது 'நான் ஏன் அங்கு செல்லவில்லையென்றால் அதை விட தமிழ் நாட்டிற்கு அரிசி பெறவேண்டுமென்ற பிரச்சினை மிகவும் முக்கியமாக இருந்தது தான். அதனால்தான் வேட்பாளரை அறிமுகப்படுத்தும் கூட்டத்திற்குக் கூட போகாமல் இங்கே உண்ணாவிரதம் இருக்கிறேன். தேர்தலா? தமிழ்நாட்டிற்கு அரிசியா என்றால் எனக்கு அரிசிதான் முக்கியம் என்று பத்திரிகையாளர்களிடம் சொன்னார். அந்த வீராப்பைப் பேச்சிலே மட்டுமல்லாமல் முதலமைச்சரவர்கள் செயலிலே காட்டியதால்தான், டில்லியும் அழைத்துப் பேசியது. அரிசியும் வந்திருக்கிறது.

உறுப்பினரவர்கள் அமைச்சரவர்கள் தனியார் விடுதியிலே தங்கியதைப்பற்றி சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்கி இருந்தபோது, எங்கெங்கு தங்கியிருந்தார்களோ அதற்கான செலவை வாடகை போன்றவற்றை கட்சியின் சார்பில் செலுத்தப்பட்டிருக்கிறது. இடம் இல்லாத காரணத்தால் நாங்கள் மட்டுமல்லாமல் எல்லா கட்சியைச் சார்ந்தவர்களும் தங்கியிருந்தார்கள். அமைச்சர்கள் பொறுப்பிலே இருந்தாலும் அதற்கான வாடகைக் கட்டணம் அந்தந்த நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : அரிசிப் பிரச்சினை தீரும் வரை தான் திருச்செந்தூர் செல்வதில்லை என்று அண்ணா பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு).



1983 மார்ச் 10]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : எந்தப் பத்திரிகையில் வந்திருந்தாலும் அது தவறு. வேட்பாளரை அறிமுகப்படுத்தும் கூட்டம் இரண்டு முறை தடைப்பட்டு அதைத் தள்ளி வைத்தார்கள். நான் ஏன் செல்லவில்லை என்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு அரிசி தேவைப்படுகிறது. அதைப் பெற வேண்டுமென்பதற்காக என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அதன் பிறகு தான் நாவலர் அவர்கள் கலந்து கொண்டார். முதல்வர் அவர்கள் போகாமல் இருந்தார்கள். அதைத்தான் பத்திரிகையாளர்களும் சுட்டிக்காட்டினார்கள்.

திரு. ரா. கிருஷ்ணன் : நான் கேட்க விரும்புவது ஏற்கனவே தாழையூத்து பக்கத்திலுள்ள திருநெல்வேலியில் ஒரு சர்கியூட் அவுசும், தூத்துக்குடியில் ஒரு கெஸ்ட் அவுசும், திருச்செந்தூரில் பல விடுதிகளும் இருக்கின்றன. அதனாலே .... (குறுக்கீடு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. சி. கோபால்) : மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்குரிய விளக்கத்தை தந்து விட்டார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அரசு சுற்றுலா விடுதியிலே ஏன் தங்கவில்லையென்றால் அமைச்சரவர்கள் தங்கியிருக்கிறபோது அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அரசு அலுவல்களை கவனிக்க நேரிடும் போது, தொலை பேசி போன்றவற்றை உபயோகிக்கும் போது, அரசுக்குச் சொந்தமான விடுதிகளில் தங்குகிறபொழுது அரசு அதை இனாமாக ஏற்றுக்கொள்ளும். தேர்தல் நேரத்திற்காக பணியாற்றுகிற பொழுது அதை உபயோகப்படுத்தக் கூடாது என்ற காரணத்தினால் தனியார் நிறுவனங்களில் தங்கியிருந்தார்கள். அதில் தங்கியிருக்கிற பொழுது அதற்கு ஆகிற செலவுகளை எல்லாம் அந்தக் கட்சியின் சார்பில்—அனைத்திந்திய அண்ணா தி. மு. க. சார்பில் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் கட்சியில் இருக்கிற தலைவர்களுக்கெல்லாம் முதல்வர் அவர்கள் உத்தரவை இட்டிருக்கிறார்கள். எனவே எங்கே தங்கி இருந்தாலும், தங்கி இருக்கின்றபொழுது ஏதாவது சலுகைகளை அளிக்கும் என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : ஒன்று நான் கேட்க விரும்புவது ஏற்கனவே இந்த மத்திய அரசாங்கம் சண்டித்தனம் செய்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி, இதை தீர்ப்பதற்கு தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு பேச்சுவார்த்தை நடத்துவது, இந்த அவையும் மேலவையும் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவது, கூட்டாக நட

வடிக்கை எடுத்து நிறைவேற்றுவது, என்கிற ஆலோசனை கூறப் பட்டது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ? இந்த நேரத்திலே அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை செய்யலாம் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

அதுமட்டுமல்ல ரேஷன் கடைகளிலே அறிக்கையில் 20 கிலோ அரிசி அதிகபட்சம் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனால் நிலத்துக்குத்தான் உச்சவரம்பு என்று சொல்வார்கள் நிலத் துக்கு உச்சவரம்பை அமல் படுத்த முடியாத அரசாங்கம், இந்த 20 கிலோ அரிசி உச்சவரம்பு என கொண்டு வந்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அரிசி 2 கிலோ மட்டும் சீராகப் போடுங்கள். ஆனால் தகராறு செய்யும் ஊரிலே 4 கிலோ போடுங்கள் என்பது சர்குலர். அப்படி யானால் தகராறு செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கம் விரும்புகிறதா ? அதுதான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு வெளி மார்க்கெட்டிலே இருக்கின்ற அரிசிக்கும், ரேஷன் கடை களிலே இருக்கின்ற அரிசிக்கும் விலை மிக அதிகமான அளவிலே வித்தியாசங்கள் இருப்பதாலேதான் ரேஷன் கடை அரிசி தேவைப் படுகிறது. ஆகவே மத்திய அரசாங்கத்திலேயிருந்து வற்புறுத்தி யாவது வாங்கி இந்த சாதாரண மக்கள், பாதிக்கப்பட்டு இருக்கக் கூடிய மக்களுக்கு அரிசி விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டம். அதைப் பொறுத்தவரையில் அதற்கான செலவுகளுக்கு தணிக்கை என்பதே கிடையாது என்று பத்திரிகையிலே இருந்து வரக்கூடிய செய்தி. அதைப்பற்றி விளக்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அது மட்டுமல்லாமல், சத்துணவுக் கூடத்தில் நடக்கின்ற சில முறைகேடுகளைப் பற்றி ....

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எப்படி இதற்கு தணிக்கை இல்லா மல் இருக்கக்கூடும் ? அரசாங்கத்தின் சார்பிலே செலவழிக்கப் படுகின்ற ஒன்று. பட்ஜெட்டிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இங்கே வந்து நிறைவேற்றப்படுகின்ற ஒன்று. சென்ற ஆண்டு 112 கோடி ரூபாயாக இருந்த ஒன்று. இந்த வருடம் 134 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே முறைப்படி செலவழிக்கப்பட்டு, அதனுடைய வவுச்சர்கள், மற்றவைகள் எல் லாம் அக்கவுன்ட்டன்ட்-ஜெனரல் பார்த்து, அதற்குப் பிறகு அக்கவுன்ட்ஸ் கமிட்டிக்கும் வருகின்ற சூழ்நிலை இருக்கின்றது. மற்ற இனங்களுக்கு எப்படி செலவழிக்கப்படுகிறதோ அதைப்



போல்தான் சத்துணவுத் திட்டத்திற்கும் செலவழிக்கப்படுகிறதே ஒழிய, அதை தனியாக வைத்து, தனிக் கணக்காக வைத்து, தணிக்கைக்கு உட்படாமல் இருக்கின்ற கணக்கு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** ஏற்கனவே இந்த சத்துணவுக் கூடங் களில் நடக்கக்கூடிய சில தவறுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. ஏற்கனவே ஒன்றிரண்டு இடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உண்மை தான். ஆனால் இப்போது எக்கச்சக்கமான முறைகேடுகள் நடை பெறுகின்றன. அதைக் கண்டுகொள்வதற்கோ, தட்டிக் கேட்ப தற்கோ அல்லது அதைத் திருத்துவதற்கோ எந்த ஏற்பாடும் இந்த அரசாங்கம் செய்யவில்லை. மேய விட்டாச்சா என்பது தான் என்னுடைய கேள்வி. அது மட்டுமல்லாமல் இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நன்கொடை வசூல் செய்யப்படுகிறது. நன்கொடை வசூல் செய்வது என்பது அநியாயம், தேவையற்றது, அது கூடாது என்பதுதான் என்னு டைய வேண்டுகோள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாடு ஓட்டல் சங்கம் 10 இலட்ச ரூபாய் நன்கொடை தந்திருக்கிறது. அந்த விழாவில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, நாட்டுக்குத் தொண்டாற் றும் வகையில் சிறப்பாக செயலாற்றுபவர்கள் இங்கே கூடியிருக்கி றீர்கள், 10 இலட்ச ரூபாயை சத்துணவுத் திட்டத்திற்காக நன் கொடையாக வழங்கி இருக்கிறீர்கள். அதற்காக நன்றி. பணத்தை சேர்த்து வைப்பவர்கள் பாவம் செய்பவர்கள் என நமது எஸ். டி. எஸ். கூறினார். ஆனால் பிறரை ஏமாற்றி, அநியாயமாகவும் பணம் சேர்ப்பது தான் பாவம். ஆனால் நீங்களோ உங்கள் திறமையைப் பயன்படுத்தி, சம்பாதித்து நல் உணர்வோடு இந்த நிதியைத் தந்திருக்கிறீர்கள் என்று சொல் கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு 20 பைசா இட்டிலி 30 பைசா. $2\frac{1}{2}$ ரூபாய் சாப்பாடு 3 ரூபாய். 50 பைசா காபி 75 பைசா. இப்படி ஏற்றுவதுதான் திறமையா ? நீங்கள் அவர்களுக்கு அளிக்கக்கூடிய நற்சான்றிதழா ? இப்படி அவர்கள் விலையேற்றும்போது நீங்கள் அதைத் தடுக்க முடியுமா ? 10 இலட்சம் கொடுத்த உடனே, விலையை ஏற்றி இந்த நாட்டு மக்களை அநியாயமாக கசக்கிப் பிழிகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன பரிகாரம் ? நான் கேட்கவிரும்புவது, பொதுவாகவே நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறளைப் பயன்படுத்துவார்கள். 'வேலோடு நின்றான் இடு என்றது போலும், கோலோடு நின்றான் இரவு' என்பது குறள். ஒரு அரசாங்கம் பிச்சை எடுத்தாலும் கூட, பிச்சை எடுப்பதுபோல் தான் இருக்கும். அது பயங்கரமான ஆயுதத்தை வைத்துக் கொண்டு நடுரோட்டிலே வரக்கூடிய வழிப்போக்கனை வழிப்பறி செய்வது போலாகும் என்பதுதான் இந்தக்

குறளினுடைய அர்த்தம் என்று நான் புரிந்துகொள்கிறேன். ஆகவே இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை நன்கொடை என்ற பெயரால் செய்கின்ற போது, நன்கொடை கொடுக்கக் கூடியவர்களை எப்படித் தட்டிக் கேட்க முடியும், அவர்கள் செய்யக் கூடிய தவறுகளை எப்படி நீங்கள் கேட்கமுடியும் என்பதுதான் என்னுடைய கேள்வி.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு செய்கின்றபோது அதை தயவுசெய்து மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து பத்திரிகை உரிமைகள் பறிப்புச் சட்டம். இது பீகாரிலே ஒரு பெரிய அமளியை ஏற்படுத்திவிட்டது. அதனுடைய முன்னோடி என்ற பெயர் நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்கு இருக்கிற உரிமை. ஆனால் அது தொடர்ந்து இருக்க வேண்டுமா அல்லது அழிக்கப்பட வேண்டுமா என்று இந்த மன்றத்திலே ஒரு சர்ச்சை வந்தது. அப்படி வந்தபோது, ஒரு குழுவை அமைக்கிறோம். அந்தக் குழு ஒரு மாதத்திற்குள்ளாக அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று இந்த மன்றத்திலே முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் நிலைமை என்ன ? அதை தொடர்ச்சியாக செயல்படுத்துவதற்கோ அல்லது குழுவைக் கூட்டுவதற்கோ, பரிசீலனை செய்வதற்கோ உயர்நீதி மன்றத்தில் எந்தத் தடையும் கிடையாது.

(நண்பகல் 12-00.)

ஆனால் முதல் அறிமுகக் கூட்டம் மட்டும்தான் 5 மாதங்களுக்கு முன்னால் நடந்தது. அதற்குப் பிறகு அந்தக் குழு கூடவே இல்லை. இந்த மன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ? ஒரு மாத காலத்திற்குள் அந்தக் குழு அறிக்கை சமர்ப்பிக்கும் என்பது தான். அந்த வாக்குறுதி இன்றைக்குக் காற்றில் விடப்பட்டிருக்கிறதே, அது ஏன் என்பது தான் என்னுடைய கேள்வி.

இன்றைக்கு இந்த அரசாங்கம் போட்டிருக்கின்ற வரியைப் பற்றிச் சொல்கிறபோது ஆளும் கட்சி உறுப்பினர் கோபால் அவர்கள் சொன்னார்கள், பணக்காரர்கள் மீது தானே வரி போட்டு இருக்கிறோம், இதை எதற்காக எதிர்க்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், ஏழைகள் துணி உடுக்கவில்லை, பணக்காரர்கள் தான் உபயோகிக்கிறார்களா ? ஏற்கனவே மத்திய அரசாங்கம் போட்டிருக்கின்ற வரிப் பளுவை நாம் தாங்க முடியாமல் இருக்கிறோம் என்று சொல்கிறபோது, இந்த அரசாங்கம் இன்றைக்குப் போட்டிருக்கிற "நுழைவு வரி" காரணமாக மேலும் கடுமையான பாதிப்பு ஏற்படும். ஆகவே, தயவு செய்து அதை ரிவ்யூ செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.



மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் 2,500 கோடி ரூபாய்க்குப் போட்டிருக்கிறார்கள். இது மக்களை பாதிக்கும் என்று மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அந்த மத்திய அரசு பட்ஜெட் குறித்து கருத்து சொல்ல வேண்டாமா ? மத்திய அரசு வரி போடுகின்ற காரணத்தால் மாநிலத்தில் உள்ள மக்கள் பாதிக்கப்படவில்லையா ? அப்படி பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அதைப் பற்றிக் கேள்வி கேட்கும் உரிமை உங்களுக்கு இல்லையா? தார்மீகக் கடமை இல்லையா ? அதை ஏன் நீங்கள் இதுவரையில் செய்யவில்லை என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

நேற்றையதினம் பேசிய உறுப்பினர் ஜி. விஸ்வநாதன் அவர்கள் தி.மு.கழகம் மாநிலத்தில் 'சைலன்ஸ் என்றும், மத்தியில் 'சரண்டர்' என்றும் சொன்னார்கள். உங்களுடைய நிலை என்ன ? மாநிலத்திலே சைலன்ஸ். கருநாடக மாநிலத்தில் சப்போர்ட். மத்திய அரசாங்கத்திலே 'அன்கண்டிஷனல் சரண்டர்'. ஆனால் மத்திய அரசாங்கம் செய்யக்கூடிய ஒவ்வொரு காரியங்களுக்கும் , ஒவ்வொரு அடக்குமுறை சட்டங்கள் கொண்டு வரும் நேரத்திலும், இந்த மாநிலத்தின் நிலை என்ன என்பதை இந்த அரசு யோசித்துப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வணிகர்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் 'நுழைவு வரி' என்று 25 கோடி அளவிற்குப் போட்டு இருக்கிறீர்கள். இது சுற்றி வளைத்து மக்கள் மீது போடப்படும் வரிதான். வணிகர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள் ? மக்களுடைய கோபத்தை நீங்கள் பொருட்படுத்தவில்லை. வணிகர்களின் கோபத்தைப் பற்றி நீங்கள் அக்கறைப்படுகிறீர்கள். இப்போது லாரி மீது 'ப்ரைட் சார்ஜஸ்' வரி என்று போட்டு இருக்கிறீர்கள். அதே மாதிரி 'சினிமா ஸ்லைட்' காட்டுவதற்கு 90 பைசா என்று போட்டு இருக்கிறீர்கள். ஒரு சாதாரண வாட்ச் கடைக்காரர் ஒரு சினிமா ஸ்லைட் போட வேண்டும் என்று சொன்னால் கூட இந்த அளவிற்கு செலவு செய்ய வேண்டும். இதை தயவு செய்து குறைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். வாசுதேவநல்லூரில் உள்ளார் அணைத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு இலாபகரமான திட்டமாக இருக்கும் என்று பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. அதை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். செண்பகவதி அணைக்குப் பணம் ஒதுக்கப்பட்டும் கட்டப்

படவில்லை. அதையும் பரிசீலிக்க வேண்டும். வாசுதேவநல்லூர், சிவகிரி, ராயகிரி, விஸ்வநாதபேரி ஆகிய இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு அது கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதையும் செய்து தர வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் 50 படுக்கைகள் ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. சிவகிரி ஒரு தாலூக்கா மையம். அங்கே ஆஸ்பிடல் கிடையாது. தாலுக்கா மையத்தில் ஒரு ஆஸ்பிடல் அமைத்து அங்கே படுக்கை வசதிகள் செய்து தரவேண்டும் என்று அரசாங்கம் கொள்கை முடிவு எடுத்து இருந்தாலும், சிவகிரியில் அது நிறைவேற்றப்படவில்லை என்பதால், அதை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். புளியங்குடி ஒரு நகராட்சி. அங்கேயும் இது வரையிலும் மருத்துவமனை கிடையாது. வாசுதேவநல்லூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தது. அந்தக் கட்டிடங்கள் இடிந்து 10 ஆண்டு காலம் ஆகியும் அது கட்டப்படவில்லை. அது மிகவும் வருந்தத்தக்கது.

அப்படியானால் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லக் கூடியதைப் பார்க்கும் போது என்னைப் போன்றவர்கள் இருக்கக் கூடிய சில தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றனவா என்பது நான் கேட்கக்கூடிய கேள்வி.

அதுமட்டுமல்ல. ஆதிதிராவிடர் நலம் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 'தாட்கோ' என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. தாட்கோ என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய ஒரு நிறுவனம்; ஆனால் இந்த அரசு வந்தபிறகு அந்த தாட்கோ நிறுவனத்தின்மூலமாக வீடு கட்டிக் கொடுப்பது தவிர மற்ற வேலைகள் நடக்கின்றன; வீடு மட்டும் கட்டுவதில்லை; அதைப் பொறுத்தவரை துக்ளக் பத்திரிகையில் அரிசனங்கள் பெயரைச் சொல்லி தமிழக அரசு செய்யும் பொய், பித்தலாட்டம், மோசடி வேலை என்று செய்தி வந்திருக்கிறது. ஆனால் இந்த அரசு இதுவரையில் அதுபற்றி ஒரு மறுப்பும் சொல்லவில்லை என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : 'பொய்' என்ற வார்த்தையை அவையில் பயன்படுத்துவதில்லை; உண்மைக்கு மாறாக என்று மாற்றிச் சொல்லலாம்.



**திரு. ரா. கிருஷ்ணன்** : திருத்தணி சர்க்கரை ஆலையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். போன வருஷமும் இதைப் பற்றிச் சொன்னார்கள்; இந்த வருஷமும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வாசுதேவநல்லூர் சர்க்கரை ஆலை என்பது நீண்ட காலப் பிரச்சினை. மத்திய அரசு ஒப்புதல் அளித்து 1977–78 நிதிநிலை அறிக்கையில் கூட அது குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடைசியில் அந்த சர்க்கரை ஆலை போய்விட்டது. சென்ற ஆண்டுகூட நான் இதுபற்றி கேட்கும்போது பெரிய அளவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது; இருந்தாலும் ஒரு 'மினி பிளான்ட' யாவது நிறுவலாம் என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அந்த ஏற்பாடு இல்லையே! ஆகவே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, மற்ற ஏற்பாடுகளாக இருந்தாலும் சரி, என்னைப் போன்றவர்கள் இருக்கின்ற சில தொகுதிகள் ஒதுக்கப்படுகின்றனவா அல்லது வேண்டுமென்றே ஓரவஞ்சனையாக செய்யப்படுகின்றனவா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு கடுமையாக வரி போடும் நிலைமை இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நான் நிச்சயமாக ஆதரிக்க முடியாது என்பது மட்டுமல்ல; வரி இல்லாமல் கட்டிக் கொள்வது அரைஞாண் மட்டும்தான்; ஆகையால் இந்த நிதிநிலை அறிக்கையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லி முடிக்கிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நான் சார்ந்திருக்கின்ற காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்வதற்கு அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே தமிழ்நாட்டிலே பருவ மழை இல்லாத காரணத்தால் பல மாவட்டங்களிலே குடிநீர் பஞ்சம் ஏற்பட்டிருப்பதோடு விவசாயத்திற்கும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் சத்துணவுத் திட்டத்திற்கு பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் தண்ணீர் வழங்குவதற்கு இந்த அரசு எந்தவிதமான திட்டத்தையும் இங்கே செயல்படுத்தவில்லை.

[திரு. எஸ். என். இராமசாமி] [1983 மார்ச் 10

மேலும் கடந்த ஆண்டு 22 கோடி ரூபாய் கழிவறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டிலே அந்த 22 கோடி ரூபாய் தான் சேர்க்கப்பட்டுள்ளது. இது போன ஆண்டு ஒதுக்கீடு செய்த 22 கோடி ரூபாயா அல்லது இந்த ஆண்டிலே கூடுதலாக கழிவறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 22 கோடி ரூபாயா என்பது பற்றி விளக்கமாகக் கொடுக்கப்படவில்லை. அதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

நிலத்தடிநீர் உபயோகத்திற்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நிலத்தடி நீரை உயர்த்தும் திட்டம் ஏதும் இந்த குறிப்பிலே சேர்க்கப்படவில்லை. ஏற்கெனவே தமிழ்நாட்டிலே நிலத்தடி நீர் மூலம்தான் விவசாயிகள் அதிகமாகப் பயன் பெறும் வாய்ப்பு இருக்கிறது. இந்த நிலையில் அந்த நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு அரசு சரியான ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினால் அது மக்களுக்கு நல்ல வாய்ப்பாக அமையும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(பிற்பகல் 12-10)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

கடந்த நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள 22 கோடி ரூபாய் செலவில் கால்நடை மருத்துவமனை நிலை உயர்த்தும் வகைகள், இந்த ஆண்டிலும் அதே 22 கோடி ரூபாய்க்கே சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டிலே சேர்க்கப்பட்டுள்ள அந்த கால்நடை மருத்துவமனை உயர்த்தும் நிலை பணிகளுக்காக அந்தப் பணம் செலவழிக்கப்பட்டதா அல்லது அதுவே இந்த ஆண்டிலும் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றி இங்கே விளக்கம் தரவில்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை முன்னுக்குப் பின் முரண்பட்டிருப்பதாக காட்சித் தருகிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், அங்கே வறட்சி ஏற்பட்டதன் காரணமாக, அங்கே கிணறுகளை ஆழப் படுத்தக் கோரி, நெல்லை வறட்சி நிவாரணப் பணி பொறியாளரிடத்திலே கம்பிரஷர் என்ஜின் ஒன்று கொடுக்க வேண்டும் என்று 1½ ஆண்டுக் காலமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய பகுதியிலே மழை இல்லாததினாலே கிணறுகளிலே தண்ணீர் வெகு கீழாகச் சென்று விட்டதன் காரணமாக, அந்த கம்பிரஷர் மெஷினைக் கொண்டு வந்து ஆழப்படுத்தினால், ஓரளவிற்கு விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்கும் என்ற வகையில், அந்த மெஷின் கட்டாயம் வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆனால் அந்தப் பொறியாளர் அவர்கள் அந்த மெஷின் கிடைக்காது என்றும் ஏற்கெனவே இருக்கிற மெஷின்களை வைத்துத்தான் ஆழமாக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள்.



1983 மார்ச் 10] [திரு எஸ். என். இராமசாமி]

ஆனால் திருச்செந்தூரிலே சட்டமன்றத் தேர்தல் நடைபெற்ற போது,தெருத் தெருவாக அந்த கம்பிஷர் மெஷினைக் கொண்டு வந்து போட்டு ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டினார்கள். ஒரு மெஷின் கிடைக்காது என்று சொன்னவர்கள், கிட்டத்தட்ட 15 மெஷின்களுக்கு மேல் கொண்டு வந்து போட்டு, இந்த இடைத் தேர்தலுக்காக, தெருத் தெருவாக கிணறுகளைத் தோண்டிய அநியாயங்கள் நடைபெற்றன, ஆனால் அங்கே தோண்டப்பட்ட ஆழ் குழாய் கிணறுகளில் ஒரு கிணற்றில்கூட தண்ணீர் நல்ல தண்ணீராக, குடிப்பதற்காக பயன்படவில்லை. எல்லாமே உப்புத் தண்ணீராகப் போய் அங்கே செலவழிக்கப்பட்ட தொகை அனைத்துமே, வீண் செலவாகக் காட்சி அளிக்கிறது. விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்காக, பாசனத்திற்கு பயன்படுத்துவதற்காக கேட்கப்பட்ட போது ஒரு மெஷின் கூட கொடுக்கப்படாத போது, கிடைக்காதபோது அந்த திருச்செந்தூர் தொகுதிக்குமட்டும் எங்கேயிருந்து 15 மெஷின்களை கொண்டு வந்தார்கள் என்று புரியவில்லை.

மேலும் இதுபோன்ற இடைத்தேர்தல் வந்தால்தான் மக்களுக்காக நல்லது செய்யவேண்டும் என்று சொல்கிற அரசாங்கம், அங்கே அவசியம் இல்லாத ஊர்களுக்கு எல்லாம் ஆழ் குழாய் கிணறுகளைப் போட்டு, அவை குடிப்பதற்கு பயன்படாத நிலையில் தெருக்களிலே தண்ணீர் அதிகமாக கொட்டி தேங்கிக் கிடக்கின்ற வகையில் செய்யப்பட்டிருக்கிறது. குடிப்பதற்கு ஆகாத அந்த தண்ணீரை மக்கள் எடுத்து ஆடு மாடுகளுக்குக்கூட கொடுக்க முடியாத வகையில் அந்த தண்ணீர் சீர் கெட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நியாயவிலைக் கடைகளை எடுத்துக் கொண்டால் எனது தொகுதியில் இருக்கும் நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில், பல கடைகளுக்கு நான் சென்று பார்த்தேன். அப்போது ஒரு அம்மையார் 8 கிலோ அரிசி வாங்கி வைத்திருந்தார்கள். அவர்கள் குறைவாக இருக்கும்போல் இருக்கிறது என்று சொன்னதால் அதை நிறுத்து பார்த்தபோது 6 கிலோ 400 கிராம் அரிசிதான் இருந்தது. கிட்டத்தட்ட 60 பெண்கள் அங்கே நின்றிருந்தார்கள். சேந்தமங்கலம் என்ற கிராமத்திலே இருந்த நியாயவிலைக்கடைகளிலே இந்தச் செயல்கள் நடைபெற்றன. 8 கிலோ அரிசியை நிறுத்துப் பார்த்த போது 6 கிலோ 400 கிராம் எடைதான் அதிலே நிறுக்கப்பட்டது. இது போன்று நியாயம் இல்லாமல் நடைபெறுகின்ற நியாயவிலைக் கடைகளில் கடுமையான சட்டத்தின் மூலம் ஒழுங்காக அரிசியை வினியோகம் செய்வதற்கு அரசு ஆணைகள் பிறப்பிக்கவேண்டும்.

அடுத்து தாம்பிரபரணி ஆற்றின் மூலம் சாத்தான்குளம் தொகுதிக்கு ஒரு குடிநீர் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் இரண்டு ஆண்டுக்காலமாக வலியுறுத்தி வரு

[திரு க. பாரமலை] [1983 மார்ச் 10

கின்றது. அரிசி விலை இன்றைக்கு படி 9 ரூபாயைத் தாண்டி 10 ரூபாயை எட்டிக்கொண்டிருக்கின்றது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். இது எந்த நிலைமையில் போய் நிற்குமோ என்று ஏழை எளிய மக்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு எல்லாம் விடிவு காலம் வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் மத்திய அரசின் அறிவிப்பு இன்னும் நம்மை மிகவும் கவலை கொள்ளச் செய்கின்றது.

(பிற்பகல் 12-20)

80 ஆயிரம் மெட்ரிக் டன் அரிசியும், 80 ஆயிரம் மெட்ரிக் டன் கோதுமையும் கொடுக்கவேண்டும் என்று கேட்டு நமது அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து டெல்லிக்கு சென்று பேச்சு வார்த்தைகளை நடத்திய பிறகு இன்றைக்கு 5 ஆயிரம் டன் அரிசியும் 5 ஆயிரம் டன் கோதுமையும் கொடுக்கிறோம்என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமாதத்திற்காக மொத்தமாகவா என்று கூட தெளிவாக சொல்லப்படவில்லை. இதை நினைத்துப்பார்க்கும் போது நாட்டில் இருக்கின்ற அரிசிப் பற்றாக்குறையான சூழ்நிலையில் தமிழகம் என்ன ஆகுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் நிச்சயமாக இன்னும் இரண்டொரு மாதங்களில் தமிழ்நாட்டில் பட்டினி சாவு ஏற்படக்கூடிய அபாய சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசும் இதை உணரவேண்டும். மாநில அரசும் உணர்ந்து அதற்குரிய நடவடிக்கைகளை அவசரமாக எடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் பொதுவிநியோக முறையில் கூட்டுறவுநிறுவனங்கள் மூலம் கொடுக்கப்படுகின்ற அரிசி, கோதுமை, சீனி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியமான பண்டங்கள் ஒழுங்காக வினியோகிக்கப்படுவது இல்லை. ஒரு கார்டுக்கு 20 கிலோ அரிசி என்று சொல்கிறார்கள். என்னுடைய பகுதியான மானாமதுரையில் ஒரு குடும்ப கார்டுக்கு 5 கிலோ அரிசி கூட சரியாக கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. நிச்சயமாக சீனி, அரிசி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியமான பண்டங்களை இன்றைக்கு சரியான முறையில் வினியோகம் செய்யப்படவில்லை. இந்த சூழ்நிலையில் அரிசியின் விலை ஏறிக்கொண்டு போகிறது. இந்த அரிசியின் தேவையை எப்படி சமாளிக்கப்போகிறார்கள் என்று நினைக்கும்போது ஒரு அச்சம் ஏற்படுகிறது. ஆகவே மிக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் இந்த பொது வினியோகத்தை சீராக ஏற்படுத்தி கிராமப்புறங்களில் அரிசி போன்ற அத்தியாவசிய பொருள்கள் சரியாக நியாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 10] (திரு க பாரமலை)

இன்றைக்கு வறட்சியால் இராமநாதபுரம் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. வறட்சிக்காக அரசு ஒதுக்கியிருக்கும் தொகை 45.63 கோடி ரூபாய். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் அது போதாது, அது சரியான தொகை இல்லை. ஏற்கெனவே கவர்னர் உரையின்போது அரசு அறிவித்து இருக்கிறது 190 கோடி ரூபாய்க்கு அதிகமாக தோராயமாக மதிப்பீட்டு மத்திய அரசை நாங்கள் கேட்டுகொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு எந்த அளவுக்கு அவர்கள் தங்கள் நிதி உதவியை கொடுக்கப்போகிறார்கள், இந்த நிலையில் இந்த வறட்சி நிவாரண வேலைகளை முனைப்பாக செய்வதற்கு அரசு என்ன திட்டங்களை வைத்து இருக்கிறது என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்படி வறட்சி நிவாரண வேலைகளை நாம் செய்கின்றபோது அரசு குடிநீர் திட்டங்களுக்கு நீர்பாசன திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அப்படிப்பட்ட திட்டங்கள் செம்மையாக நிரந்தரமான திட்டங்களாக ஆக்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் மத்திய அரசிடமிருந்து பெறவேண்டும். அதோடு மாநில அரசும் தனக்குள்ள நிதி ஆதாரங்களை வைத்து முனைப்பாக செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் குறிப்பாக கண்மாய்களை ஆழ்படுத்த வேண்டும், வரத்துக்கால் வாய்களை சீரமைக்கும் வேலைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அந்த வகையில் என்னுடைய பகுதியிலுள்ள நாட்டாண்டி ஓடை, சீமைக்கால்வாய் போன்ற பெரிய திட்டங்களை செயல்படுத்தினால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆகவே இந்த திட்டங்களை அமுல் நடத்துவதற்கு அரசு உதவி செய்யவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த டியூப் போர் வெல் என்று சொல்கின்ற சமுதாயக் கிணறுகளை எங்கள் பகுதியில் அமைத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுடன் அந்தத் திட்டங்களை பல ஒன்றியங்களில் நிறுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்ததன் காரணமாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குப் பிறகும், இன்றைக்கு நிலவும் வறட்சியை அடிப்படையாக வைத்து அதைத் தொடர்ந்து நிறைவேற்ற மத்திய அரசு ஒப்புக்கொள்ள தமிழ்நாடு அரசு வற்புறுத்த வேண்டும். அப்படி அவர்கள் செய்யவில்லை என்றால், தமிழ்நாடு தனக்குள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு அதைச் செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவு வேலைகள் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. ஆனாலும், திட்ட வேலைகள் முனைப்பாக என் பகுதியில் சிறப்பாக செயல்பட்டு வந்தது. ஆனால், சிமெண்டு பற்றாக்குறை காரணமாக ஓரிரு மாதங்களுக்கு சிமெண்டு சப்ளை செய்ய

[திரு எஸ். என். இராமசாமி] [1983 மார்ச் 10

கிறோம். சுத்தமல்லி என்ற பகுதியிலிருந்து சாத்தான்குளம் பகுதிக்கு ஒரு கால்வாயை வெட்டிக்கொடுத்து அந்தப்பகுதியில் உள்ள மானாவாரி குளங்களை மழைக்காலங்களில் நிரப்பச் செய்வதற்கும், அந்தப்பகுதியில் உள்ள மக்கள் அந்தக் கால்வாயின் மூலம் பயன்பெறும் வகையில் தண்ணீரை திருப்பி, தண்ணீர் கொடுக்கப்படுமேயானால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயம் செய்வதற்கும், குடிதண்ணீர் எடுப்பதற்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். ஆகவே, சுத்தமல்லி பகுதிக்கு தாம்பிரபரணி ஆற்றிலிருந்து ஒரு பிரிவுக் கால்வாயை வெட்டி தர ஏற்பாடு செய்து, அங்கேயுள்ள மக்கள் விவசாயம் செய்ய உதவ வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். வறட்சி காரணமாக அந்தப் பகுதிக்கு தண்ணீர் கிடைப்பதற்கு கஷ்டமாக இருக்கிறது. இன்னும் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 2 மெஷின்கள் தேவை என்று சொன்னோம்.

இப்போது அங்கே ஒரு மெஷின்தான் வேலை செய்துகொண்டிருக்கின்றது. இன்னும் இரண்டு மெஷின்கள் அந்தப் பகுதிக்கு கொடுத்தால் 3 மெஷின்களைக் கொண்டு அந்த கிராம மக்கள் நல்லமுறையிலே கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்று சொல்லி இந்த பட்ஜெட் பொதுமக்களுடைய நலனுக்காக உதவக்கூடிய வகையில் தயாரிக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த மாமன்றத்திலே சொல்லப்பட்ட அந்தக் கால்வாய்ப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து சாத்தான்குளம் பகுதி பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கே கட்டாயம் இதைச் செய்து கொடுக்கவேண்டும்என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

*திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, 1983—84-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதைப் போன்று மழையின்மை காரணமாக உணவுப்பற்றாக்குறை, குடிநீர்ப் பற்றாக்குறை, மின் பற்றாக்குறை போன்றவைகள் ஏற்பட்டு தமிழ்நாட்டு மக்கள் அல்லலுக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இந்த வரவு செலவுத் திட்டத்தை விவாதித்துக்கொண்டிருக்கிறோம். வரலாறு காணாத இப்படிப்பட்ட வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நமக்கு ஒரு பெரிய நன்மை கிடைக்கும் என்று மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட மக்களுடைய எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்காத நிலைமையில் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை இருக்கின்றது என்பதை மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1983 மார்ச் 10] [திரு க. பாரமலை]

ஆனால் வரவு செலவு அறிக்கையில் ஏதோ சில திட்டங்கள்
அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இராமநாதபுரம் மாவள்
டம் கோல்வார்பட்டி நீர்தேக்க திட்டம் உள்பட ஆறு
புதிய நடுத்தரப் பாசனத்திட்டங்கள் கிட்டத்தட்ட 32 கோடி
ரூபாய் செலவில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்காக உண்
மையிலேயே சந்தோஷப்படுகிறேன். அடுத்து கொடைக்கானலில்
மகளிர் பல்கலைக் கழகம் தொடங்க ரூபாய் 50 இலட்சம்
நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதற்காகவும் மகிழ்ச்சியடைகிறேன் வரிவிலக்கைப்
பொறுத்தவரையில் ஏழைகள் அதிகமாகப் பயன்படுத்துகின்ற,
மண்ணெண்ணெய் விளக்குகள் அவற்றின் உதிரிப் பாகங்கள்
வெள்ளிக்கொளுசு, சலவைச் சோப்புக்கள் பருத்திக்கொட்டைப்
பொட்டு, போன்ற ஏழைகள், விவசாயிகள் உபயோகப்படுத்தும்
பண்டங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதற்காக நான்
அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே
நேரத்தில் ஏழைகள் பயன்படுத்துகின்ற சர்க்கரை, துணி வகைகள்,
மருந்து வகைகள், மருந்துப் பொருட்கள், காகிதம் போன்ற
வற்றிற்கு நுழைவு வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நுழைவு
வரிவிதிப்பிற்குக் காரணம் சொல்கின்றபோது இவ்வரிவிதிப்பு
பொருள் நுழைவு இடத்தில் வசூல் செய்யப்படாமல், வணி
கர்கள் அனுப்பும் விவர அறிக்கையின் அடிப்படையில் வசூல்
அடிப்படையில் வசூல் செய்யப்படும் என்றும் இதனால் ஏழைகள்
பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது இது
ஒருதவறான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். நகரங்களிலும் ஏழைகள் வாழ்கின்றார்கள் என்பதை
மனதில் கொள்ளவேண்டும். மேலும் நகரங்களில் உள்ள மக்கள்
தான் வாங்குகிறார்கள் என்ற சித்தாந்தத்தை நாம் ஒப்புக்கொள்ள
முடியாது. ஏனெனில் ஆங்காங்கே கிராமங்களில் உள்ள ஏழை
எளிய மக்கள் நகர்புறங்களுக்கு வந்து துணி போன்ற பொருட்
களை வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அடுத்து வியாபாரம்
செய்பவர்கள் பொருட்களின் அடக்க விலையினை அடிப்படை
யாக வைத்துத்தான் லாபத்தைப் சம்பாதிக்கிறார்கள் என்றும்
ஆகையால் ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் கருது
வது தவறான கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
எனவே இந்தக் துணி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின்
மீது விதிக்கப்பட்டுள்ள நுழைவு வரியினை வாபஸ் பெறவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு உணவு நிலைமையினை எடுத்துக்கொண்
டால் ஒரு மிகப் பெரிய பயங்கரமான நிலைமை நாட்டிலே
இருந்துகொண்டிருக்கின்றது. இன்றைக்கு நாடு முழுவதும்
வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால்
அத்தியாவசியப் பண்டங்களின் விலை மிக அதிகமாக அதாவது
நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றது
என்று சொல்வார்களே அதுபோன்று வளர்ந்துகொண்டிருக்

வில்லை. அதனால், வேலைகள் ஸ்தம்பித்து இருந்தன. இன்றைக்கு வேலைகள் சிலயிடங்களில் அரைகுறையாக இருக்கின்றன. 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் நிச்சயமாக வேலைகளை முடிக்க முடியாது என்று அங்குள்ள அதிகாரிகளை கலந்து பேசியபோது தெரிய வந்தது. ஆகவே, நான் அரசை பணிவோடு கேட்டுக்கொள்வது 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் என்று இருப்பதை 1983 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் என்று நீட்டித்து மே மாதம் வரை அந்த வேலைகளை நடக்க அனுமதிக்க வேண்டும். அதேபோல் அதில் பணிபுரியும் அதிகாரிகளும் தொடர்ந்து அதில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்திலே மாவட்டக் கலெக்டரை மாற்றியிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திலே யாரை கலெக்டராக வைத்துக் கொள்ள வேண்டும், யாரைப் போடவேண்டுமென்பதிலே அரசிற்கு உள்ள உரிமையை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால். முனைப்பான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறபோது நிதி ஒதுக்கீட்டை செலவழிப்பதை 31 ஆம் தேதிக்குள் முடிக்கவேண்டுமென்று திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே மத்திய அரசிலிருந்து வறட்சியைப் பார்வையிடுவதற்காக மத்தியக் குழு வந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து புள்ளிவிவரங்களை அந்தக் குழுவிடம் சமர்ப்பித்த மறுநாளே மாவட்ட கலெக்டரை மாற்றுவதற்கு இந்த அரசு எப்படி முடிவு எடுத்தது என்று புரியவில்லை. சாதாரணமாக ஒரு கலெக்டரை மாற்றுவதைப்பற்றி பொதுமக்களுக்கு அக்கறை அதிகம் கிடையாது. ஆனால், இந்த நேரத்திலே மாற்றுவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை குறித்து பொது மக்கள் மத்தியிலே ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இந்த சந்தர்ப்பங்களிலே, எப்படி தேர்தல் நேரங்களிலே அதிகாரிகளை மாற்றக்கூடாது என்ற ஒரு சம்பிரதாயம் இருக்கிறதோ அதைப்போல் மார்ச் மாதத்திலே மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பிலே அல்லது மாநிலத்தின் தலைமைப் பொறுப்பிலே உள்ள அதிகாரிகளை மாற்றுவது கூடாது என்ற ஒரு சம்பிரதாயத்தை இந்த அரசு மேற்கொண்டாக வேண்டும், அப்படிச் செய்தால், சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டிலே பல தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தும் பணியில் முழு மூச்சோடு ஈடுபட்டு வருகிறது என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே மானாமதுரை சிப்காட் ஒன்று. மானாமதுரை சிப்காட்டிலே பல இடங்கள் ஒதுக்கப்பட்டு மின் சப்ளை இல்லாத காரணத்தினால் சிறு தொழில்கள் துவங்கப்படாமல் இருக்கிறது. மின் சப்ளை கொடுத்தால் தொழில்கள் துவங்கப்பட்டு அதன் மூலமாக ஆயிரக்



கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்
கூடிய நிலை இருக்கிறது. அங்கே பல தொழில்களைத் துவங்கு
வதற்குத் தயாராக இருக்கிற தொழிற்சாலைகளுக்கு உடனடி
யாக மின் இணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கெனவே, 1981 ஆம் ஆண்டு அக்டோபர்
திங்கள் 3-ஆம் நாள் அன்று ஜி.ஓ., எம்.எஸ்., நம்பர். 1364
என்ற அரசு உத்திரவு இருக்கிறது. அந்த உத்திரவின்கீழ் சிப்
காட் இண்டஸ்ட்ரிகளுக்கு எல்லாம் எந்தவிதமான தடையுமின்றி
எப்படிப்பட்ட மின் கட்டுப்பாடுகள் இருந்தாலும்கூட உடனடி
யாக மின்சாரம் கொடுக்கப்படும் என்று அரசு வாக்குறுதி அளித்
திருக்கிறது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில்
அங்கே சிப்காட் இண்டஸ்ட்ரிகளுக்கு உடனடியாக மின் இணைப்
புக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டம் தொழில் ரீதியாக பின்
தங்கிய மாவட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த
மாவட்டத்திலே தொழில்களைத் துவங்குவதற்குப் பல தொழில்
கள் தயாராக இருக்கின்றன, பலர் காத்துக்கொண்டிருக்கிறார்கள்,
அவர்கள் எல்லாம் அதற்காக மின் இணைப்புக்கான முன்பணம்
கூட கட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மின் இணைப்
புக் கொடுத்தால் வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்த நேரத்தில்
பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.
ஆகவே, அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்
திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பெரியார்-வைகை கால்வாயை நவீனப்படுத்துகின்ற
திட்டத்தின்கீழ் அடுத்த கட்டப் பணியைத் துவங்க இருப்பதாக
இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான்
அதைப்பாராட்டுகிறேன். அந்த இரண்டாம் கட்டப் பணிக்காக
அரசு 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்
கிறது. அதை நான் பாராட்டுகிறேன். பெரியாறு-வைகை,
ஆயக்கட்டு சீரமைக்கப்படுவதால் கிடைக்கிற தண்ணீரைப் புதிய
விஸ்தரிப்புகளுக்குக் கொடுக்காமல் ஏற்கெனவே வைகை ஆயக்
கட்டில் தண்ணீர் பெற்று வருகின்ற பகுதிகளுக்குப் போதுமான
அளவுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய உத்திரவாதம் கொடுக்கக்
கூடிய முறையிலே அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பு செய்யவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தொழில் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்த
வரையில் காகிதம் தயாரித்தல், காகித கூழ்தொழில் நுட்பவியல்
போன்ற தொழில்களைப் பற்றிய பாட முறையைப் புதிதாகத்
துவக்குவதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.
என்னுடைய பகுதியிலே பல புதிய தொழில்கள்

காகிதத் தொழிலில்வந்துகொண்டிருக்கின்றன. காகிதத் தயாரிப்பு, காகித கூழ் தொழில் நுட்பவியல் போன்றவற்றை துவக்குவதற்குச் சரியான இடம் எங்கள் பகுதியிலே இருக்கிற காரணத்தினாலே அதை எங்கள் பகுதியிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்புவனம் மருத்துவ மனையிலே ஒரு மாவட்ட மருத்துவ மனை கட்டக்கூடிய அளவுக்கு இட வசதிகள் இருக்கின்றன, தண்ணீர் வசதியும் இருக்கிறது. நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்து நேரிலே பார்த்தார்கள். அங்கே 14 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையைக் கட்ட வேண்டுமென்று கடந்த 3 ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்தக் கோரிக்கையைப் பரிவோடு கனிவோடு கவனித்து அடுத்த ஆண்டிலாவது அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் ஆதாரங்களை ஆய்வு செய்து குடிநீர் தேவைகளின் அடிப்படையில் கிராமங்களை முறைப்படுத்துகின்ற அந்த முயற்சியில் பல தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற அனுபவங்களை அடிப்படையாக வைத்து அந்த கிராமங்களின் பகுப்பை புதிதாக மேற்கொண்டு தேவையிருக்கின்ற அந்த இடங்களில் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியிலுள்ள சில பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நான் சட்டசபைக்கு வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பாக பல்வேறு பகுதிகளுக்குச் சென்றுவிட்டு வந்தேன். அங்கே குடிநீர்ப்பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறது. மானம்பாக்கி, வேலூர், வேலூர் ஒத்தவீடு, அதிகரை, நத்தபிறக்கி ஆகிய கிராமங்களிலே உள்ள மக்கள் மானம்பாக்கி கண்மாயிலே உள்ள ஒரு சிறிய கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கியூவிலே வெயிலிலே நின்று கொண்டு அங்கே தண்ணீர் ஊற ஊற எடுத்துக்கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த இடத்திலே பெரிய ஆழ்கிணறு போட்டு குழாய்கள் மூலமாக அந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்குத் தண்ணீர் வழங்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே கொன்னகுளம், சூரக்குளம், மணக்குளம், குலையனூர், தம்பிக்கிலான், பெரியதம்பிக்கிலான் போன்ற கிராமங்களிலே உள்ள மக்கள் மணக்குளத்தில் உள்ள ஒரு சிறிய கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். தண்ணீருக்காக அவர்கள் 3 முதல் 5 கிலோ மீட்டர் வரை நடந்து சென்று எடுக்கவேண்டியிருக்கிறது. பெண்கள் வேறு வேலைக்குச்





செல்ல முடியாமல் தண்ணீர் எடுப்பதையே தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள். அந்த இடத்திலே பெரிய ஆழ்குழாய் கிணறு அமைத்து அங்கிருந்து குழாய்கள் மூலமாக தண்ணீர் அந்தக் கிராமங்களிலுள்ள மக்களுக்குக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—30)

கடைசியாக இன்றைக்கு 83—84 ஆம் ஆண்டு சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ், 1.80 இலட்சம் ஆதி திராவிடர்களுக்கு பயனளிக்கக்கூடிய வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக, 119.56கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 1982—83ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய 105.85 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு விட்டதா? இன்றைக்கு 119.56 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதை செலவழிப்பதற்கு என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி இந்த அறிக்கையில் விரிவாக எதுவும் சொல்லப்படவில்லை. அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் விரிவாக சொல்லுவார்கள் என்று நம்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விழைகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது இந்த அரசு பொறுப்பேற்றுதற்குப் பின்னால் கொடுத்த வாக்குறுதிகளை சரியான முறையில் நிறைவேற்றவில்லை, அவைகளை காற்றிலே பறக்கவிட்டு விட்டார்கள் என்ற கூற்றை எடுத்து வைத்தார்கள். அதன்மூலம் இந்த மாமன்றத்துக்கு தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்று தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், மாநில அரசு மத்திய தொகுப்பிற்கு அரிசி கொடுக்கவில்லை என்ற தவறான கூற்றை மத்திய அமைச்சரவையில் இருந்தவர்கள் வெளியிலே சொல்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதத்தை முடித்துவிட்டு மாலை 5—00 மணிக்கு திரளாக இரண்டு இருந்த பொதுமக்களிடம், உண்மை நிலையை எடுத்துத் தெரிவித்தார்கள். எந்தெந்த ஆண்டு மத்திய அரசிற்கு மாநில அரசு அரிசி கொடுத்திருக்கிறது என்பதை எடுத்து விளக்கி, இப்படி கொடுத்திருக்கிற அரசை கொடுக்கவில்லை என்று கூறி அதன்மூலமாக ஒரு தவறான எண்ணத்தை மக்களிடத்திலே பரப்புகிறார்கள் என்ற உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் அந்த உண்ணாவிரதத்தைத்தான் மேற்கொண்டதாக மேலவையிலும்

கூட விரிவாக பேசியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால், பேசுகிற
போது சொன்னார்கள். திருச்செந்தூர் தேர்தலுக்கு போவ
தற்கு முன்னால் தமிழகத்தில் பசியால் வாடுகிற மக்களுக்கு அரி
சியை கொடுத்துவிட்டுத்தான் செல்வேன் என்றும் சொன்னார்
கள். இந்த நிலைக்கு மாறாக திருச்செந்தூர் தேர்தலுக்கு அவர்
சென்றிருக்கிறார் என்ற கூற்றையும் இங்கே வைத்தார்கள்.
புரட்சித் தலைவர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்துவிட்டு, டெல்
லிக்குச் சென்று பேச்சுவார்த்தைகள் நடத்தியதில் மத்தியில் இருப்
பவர்கள் அரிசி ஒதுக்கீடு செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.
அந்த வாக்குறுதியை நம்பித்தான் அவர்கள் திருச்செந்தூருக்குச்
சென்றார்களே தவிர, அதற்கு முன்னால் அவர்கள் திருச்செந்
தூருக்குச் செல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, நான் கேட்க விரும்புவது அரிசி பிரச்னை தீரும் வரை
என்று சொல்லியிருக்கிறது ; உண்ணாவிரதம் இருந்து மத்திய
சர்க்கார் சொன்னவுடன் அதை நம்பி அவர் போனார் என்பதற்
கும் அரிசி பிரச்சினை தீரும் வரை என்பதற்கும் வித்தியாசம்
இல்லையா ?

**திரு. இரா. சண்முகம் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
மத்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தைகள் நடத்துகிறபோது முத
லமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று பேசியிருக்கிறார்கள்,
மத்திய சர்க்கார் சொல்லும் கூற்றுக்கு மரியாதை கொடுக்கத்
தான் வேண்டுமே தவிர, அதற்கு அவர்களிடத்திலே பட்டயமாக
எழுதி வாங்கிக் கொண்டுதான் செல்லவேண்டுமென்ற நியதி இருக்
குமானால் அதற்கு பிறகு மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்
காருக்கும் சுமூகமான உறவுகள் இருக்காது என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

அது மட்டுமல்லாமல், ஏதோ ஒட்டல் முதலாளிகள் எல்லாம்
ஒன்று திரண்டு ஒரு மாநாடு நடத்தி, அந்த மாநாட்டிலே புரட்சித்
தலைவரை அழைத்து, அவரிடம் சத்துணவுத் திட்டத்திற்குப்
10 இலட்சம் ரூபாய் கொடுத்தார்கள். அதனால், அவர்களை
வெகுவாகப் பாராட்டி, ஓட்டல்களில் விற்கின்ற பொருள்களின்
விலைகளையெல்லாம் நீங்கள் எவ்வளவு கூட்டி விற்றாலும் பர
வாயில்லை என்று அனுமதி வழங்குகின்ற தோரணையில் நடந்து
கொண்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே பேசி
னார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர், இதய தெய்
வம் அவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கிற மக்
களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற வகையில், நீங்கள் எனக்குச்
செய்கிற நல்ல காரியங்கள் என்ன வென்றால், நீங்கள் விற்கிற
பொருள்களின் விலைகள் ஒரு கட்டுக் கடங்கியதாக, சாதாரண
பாமர மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கிற மக்கள்





வாங்குகின்ற அளவுக்கு நீங்கள் விலைகளைக் குறைத்துத் தாருங்
கள் என்று அந்த நேரத்திலே பேசியதோடு மட்டுமல்லாமல்,
எப்படி கிராமப் பகுதியிலே நியாயவிலைக் கடைகள் அதிகமாகத்
திறந்து, தனியார்கள் தாங்கள் விற்கின்ற பொருள்களின் விலை
யை அதிகமாகக் கூட்டி விற்று, கொள்ளை அடிக்கின்ற நிலையில்,
பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கின்ற அளவுக்குச்
செய்ய, கூட்டுறவு நியாய விலைக் கடைகளைக் கிராமப் பகுதி
களிலே தோற்றுவித்தார்களோ, அதைப் போலவே, தமிழக அரசு
இந்த ஓட்டல் பண்டங்களின் விலையைச் சரியான, நியாயமான
விலையில் விற்பதற்காக, விதவைத் தாய்மார்களுக்கு அரசு மூல
மாகக் கடன் உதவி செய்து, அங்கே தோசை, இட்டிலி போன்ற
வகைகளை வெகு குறைவான விலையிலே விற்பார்களா
னால், அதைப் பயன்படுத்தி, ஓட்டல் வியாபாரிகள், அதற்குத்
தகுந்தாற்போல், தாங்கள் விற்கும் பொருள்களின் விலையை
நிர்ணயிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற வகையிலே, தமிழகத்
திலே நாங்கள் இப்படி ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்
கிறோம் என்பதை அந்த மாநாட்டின் வாயிலாக, புரட்சித்
தலைவர் இதய தெய்வம் அவர்கள், தன்னுடைய கருத்தையும்
எண்ணத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான்
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கு இரண்டு ஆண்டுக்காலமாக,
தமிழகம் வறட்சியிலே வாடிக்கொண்டிருக்கிறது. தமிழக அரசு
வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்கிறது. மத்திய ஆட்சியி
லிருந்து வருகின்ற குழு வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு,
பரிந்துரை செய்ய வேண்டும். இந்நிலையில், எதற்கெடுத்தாலும்
மத்திய ஆட்சியை நம்பிக்கொண்டிருக்கிறீர்களே என்ற கூற்றைப்
பல பேர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், மாநில அரசு
வறட்சி வருவதற்கு முன்னாலேயே வறட்சி செலவிற்காக முன்
அனுமதியோடு ரூபாய் 45.63 கோடி ஒதுக்கியிருக்கிறது. ஆனால்
இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் சொன்
னார்கள், நீங்கள் காலந்தாழ்ந்து, வறட்சிப் பணிக்காக மத்திய
அரசைப் பணம் கேட்டீர்கள். அதனால்தான் அவர்கள் ஒன்றும்
அளிக்கவில்லையென்ற கூற்றை இங்கே எடுத்து விளக்கிப் பேசிய
உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மாநில அரசிற்குத்
தான் வறட்சி நிவாரணப் பணியைச் செய்வதற்கும் காரியங்
களைச் செய்வதற்கும் கடமை இருக்கிறது என்று நினைப்பார்க
ளானால், மத்திய ஆட்சியிலே மாநிலம் ஒரு அங்கம் என்பதை
மத்திய அரசு மறந்துவிடக் கூடாது என்பதை நான் நினைவு கூற
கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி மக்களை விடுவிப்பதற்கு,
வறட்சிப் பணிக்காக எவ்வளவு பணம் வேண்டுமென்ற விவர
அறிக்கையை அனுப்புவதற்குக் காலதாமதமாகியிருந்தாலும் மத்
தியிலே இருக்கிற அரசு—மரியாதைக்குரிய பாரதப் பிரதமர்,
இந்திரா காந்தி அம்மையார், முன்னோடியாக எப்படி மாநில
அரசு ரூபாய் 45.63 கோடியை ஒதுக்கியிருக்கிறதோ அதுபோல்,
மத்திய அரசு, தான் வழங்க இருக்கிற உதவித் தொகையிலே

பகுதி நேர கைத்திறப் பணி பயிற்சி ஆசிரியர் பதவி 100 ஆகிய பதவிகள் 1983–84 ஆம் ஆண்டில் முழுநேரப் பதவிகளாகக்கப்பட இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லி, இந்த வரவு–செலவுத் திட்டத்தை வரவேற்று அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

*திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக உங்கள் முன்னால் என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு விழைகின்றேன். குறிப்பாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. திருத்தணி சண்முகம் அவர்கள், கல்விக்காக எந்த அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லி, குறிப்பாக ஆசிரியர்களுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தொடர்ச்சியாக நிதி நிலை அறிக்கையிலிருந்து 23 சதவீதம், 24 சதவீதம்தான் கல்வித் துறைக்காக ஒதுக்குகின்ற நிலைமை வழக்கமாகவே இதுவரையில் இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு பார்க்கின்றபொழுது 20 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கல்வி மானியத்திற்கு மேலும் ஒதுக்கினால்தான் ஆசிரியர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். கடந்த ஆண்டே கூடச் சொன்னார்கள், இதேபோல ஆசிரியர்களைப் போடவிருக்கிறோம் என்று சொல்லி இறுதியாக போட்டதாகவே தெரியாமல் அந்த அளவிற்கு இந்த நிதியாண்டும் முடிவு பெற்றிருக்கிறது. இந்த நிலையில் இன்றைக்கிருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் பெறுவது கழிப்பிடம். தாய்மார்களுக்குக் கழிப்பிடம் என்ற அடிப்படையில் ரூ. 22.56 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 16,000 வருவாய்த் துறை கிராமங்களில், ஒவ்வொரு வருவாய்த் துறை கிராமத்திற்கு ஒன்று என்று சொல்லும் நேரத்தில் ஐந்து அல்லது ஆறு கிராமங்கள் என்று இருக்கின்ற நிலையில் ஏறத்தாழ 14,000 ரூபாயில் அந்தக் கழிப்பிடங்களைக் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அது நிரந்தரமாக, செம்மையாக செயல்பட ஏதுவாக அமையுமா என்றால், ஊராட்சி ஒன்றியங்களில் பார்க்கிறோம். சிமெண்ட் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தாலே, அதைச் சுண்ணாம்பு மூலமாகக் கட்டி, அதன் மேலே பூசுகிறபொழுது தான் சிமெண்டாலே பூசப்படுவதாகச் சொல்லப்படுகின்றன (குறுக்கீடு)........

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் சிமெண்ட் தட்டுப்பாடு இல்லை. ஏனென்று சொன்னால், போதிய அளவு சிமெண்ட் விநியோகம் செய்ய-





கிறோம். ஆகவே தன்னிறைவுத் திட்டங்களுக்கு வேண்டியவை
களுக்கெல்லாம் இப்பொழுது சிமெண்ட் கொடுக்கப்படுகிறது.
ஆகவே கலம் மார்ட்டர் என்று சொல்லக்கூடிய அளவுக்கு
சுண்ணாம்புக் கற்களை வைத்துக் கட்ட வேண்டிய அவசியம்
இல்லை.

திரு. து. இராசரத்தினம் : அப்படி ஏற்கனவே தட்டுப்பாடு
இருக்கிற சூழ்நிலையில் என்னுடைய பகுதியில் சுண்ணாம்பிலே
கட்டி, சிமெண்ட்டிலே பூசவேண்டுமென்ற டெண்டர் கால்பார்
செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல இந்தக்
கழிப்பிடத்தை எப்படி நாம் பராமரிக்கப்போகிறோம் என்கிற
நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். இந்தக் கழிப்பிடம்
ஏதோ ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்று வைத்து
விட்டு, அதன் மூலம் ஏனையோரை திருப்தி செய்துவிட முடியாத
இந்த நிலையிலே, அங்கே தண்ணீர் இருக்கிறதா என்றால்,
இல்லை. மாறாக. ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் 5 நாட்
களுக்கு ஒரு முறை தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்பதை
காலையில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை நாம் அறிவோம்.
இப்படிப்பட்ட நிலையில் இன்னும் தண்ணீர் இல்லாத சூழ்நிலை
இருந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்திலே நிபுணர் குழு
வீராணம் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்கிற நேரத்
திலே அந்த வீராணம் திட்டம் சிறப்பாக இருக்கிறது என்று
சொல்லியதற்குப்பிறகும், 1977-ல் ஜூன் 30-லே பொறுப்
பேற்றவர்கள் இதுவரை இந்த வீராணம் திட்டத்தைப் பற்றி
யும், எதைப்பற்றியும் கவலைப்படவேயில்லை. அது
மட்டுமல்ல, மாற்றாகக் கட்டளைக் கால்வாய்த் திட்டம் என்று
சொன்னார்கள். அதற்குப் பின்னாலே இந்தக் கிருஷ்ணா
நதித் திட்டம் என்று சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்க்
கிறோம். கிருஷ்ணா நதித்திட்டத்தை எடுக்கின்ற முறையிலே
மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் விஜய பாஸ்கர
ரெட்டி அவர்கள் இந்தக் கிருஷ்ணா நதித் திட்டத்தில் நான்
கையெழுத்திட இருக்கிறேன்; —அவர்களே மீண்டும் நான்
கையெழுத்திட இருக்கிறேன் என்று அவர்கள் சொன்னார்களே
தவிர, இங்கே இருக்கிற முதலமைச்சர் இந்தக் கிருஷ்ணா நதி
நீர்த் திட்டத்திற்கு நான் வேகமாக நடவடிக்கை எடுத்து
வருகிறேன் என்று இதுவரையில் சொல்லவில்லை. இன்றைக்கு
சென்னையிலே குடிதண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது
என்றால்—ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கின்ற
நிலை இருக்கின்றது என்றால்—இந்த நிலையில் நடவடிக்கை
எடுக்கப்படவில்லை—தண்ணீருக்குக் கஷ்டப்படுகின்ற இந்த
நிலையிலே கழிவறைகளை எப்படிப் பராமரிக்கப் போகிறோம்
என்று நினைத்துப் பார்க்கிறபொழுது—ஊராட்சி ஒன்றியங்களைப்

[திரு இரா சண்முகம்] [1983 மார்ச் 10

ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாக ஒதுக்கிவைத்துவிட்டு,
அதற்குப் பின்னாலே, மாநில அரசு அனுப்புகின்ற விரிவான
அறிக்கையை வைத்து, ஏற்கெனவே அளித்த தொகையைக் கழித்
துக்கொண்டு, பின்னாலே ஏன் எஞ்சிய தொகையை அனுப்பக்
கூடாது? அவர்களுக்கு அந்த எண்ணம் இல்லையா? ஏன்
கொடுக்கக்கூடாது என்று இந்த நேரத்திலே நான் கேட்கக் கட
மைப்பட்டிருக்கிறேன். எதற்கெடுத்தாலும் மாநில அரசு மத்
திய அரசைக் கைகாட்டிக் கொண்டிருக்கிறது என்ற கூற்றைச்
சொன்ன மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒன்று சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன். எதை, எதை, கேட்க, மாநில அரசு,
மத்திய அரசை, சட்டபூர்வமாக, அதிகாரபூர்வமாக அணுகவேண்
டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்களோ, அதற்குத்தான் மாநில
அரசு, மத்திய அரசை அணுகிக் கொண்டிருக்கிறது என்பதை
இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், வறட்சிப் பகுதியைப் பார்வையிடுவதற்கு
வந்திருந்த மத்தியகுழுவோடு, இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய
பொறுப்பு வாய்ந்த தலைவர் ஒருவர் சென்றார்கள், என்று செய்
தித்தாள்களில் செய்தி வந்தது. ஆனால், அந்தக் குழுவினிடத்
திலே, உண்மையிலே அவர்கள் சொல்லியிருக்க வேண்டியது, தமி
ழகம் கேட்டிருக்கிற முழுத் தொகையையும் அளிக்க பரிந்துரைக்க
வேண்டும். உண்மையிலே தமிழகம் அதிக வறட்சியால் பாதிக்
கப்பட்டிருக்கிறது என்பது உண்மை என்று கூறி, மத்திய அரசிட
மிருந்து அதிகமான தொகையைப் பெற்றுத் தர முன் வந்திருக்க
வேண்டுமேயொழிய, அப்படிச் செய்யாமல் வேறு ஒன்று கூறி
யிருக்கிறார்கள். இங்கே வறட்சிப் பணிகள் எப்படி செய்யப்படு
கின்றன என்றால் நாமினேஷனிலேதான் கொடுக்கப்படுகிறது.
அப்படியிருக்கக்கூடாது. டெண்டர் முறை வேண்டுமென்ற
முறையை அங்கே சொல்லியிருக்கிறார்கள் என்றால் பணி நடக்க
வேண்டுமென்ற எண்ணம் இருப்பதைவிட காண்ட்ராக்ட் ஒப்பந்த
காரர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற எண்ணம்தான்
அவர்களிடத்திலே மேலோங்கி இருக்கிறது.

(பிற்பகல் 12-40)

வளர்ச்சிப் பணிகளுக்காக பல பகுதிகளாகத் தமிழக
அரசு பிரித்திருக்கிறது. சுற்றுலா வாரியத்தின் மூலம் திருத்
தணி தொகுதிக்கு சாலை—இடைவழி விடுதி என்று சொல்லப்
படும் மோட்டல் ஒன்றைக் கட்டுவதற்கான அனுமதியைத்
தந்ததற்காக நான் இந்த மாமன்றத்தின் மூலம் புரட்சித்
தலைவர் அவர்களுக்கும், அந்தத் துறையை ஏற்றிருக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் திரு. ஆ. எம். வீ. அவர்களுக்கும்
நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1983 மார்ச் 10] [திரு. இரா. சண்முகம்]

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மொத்தத்தில்
கணக்குப் பார்த்தால் ஒன்பதாவது ஸ்தானத்தில் இருக்கிறது
என்று குறை கூறிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்
களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.
திருத்தணி தொகுதிக்காக, நீண்ட நாட்களாக, சுமார் 25
ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கின்ற திருத்தணி
கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, இன்றைக்கு அகில இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பை ஏற்றதற்குப்
பிறகு, புரட்சித் தலைவர் அவர்கள் இரண்டு தடவைகள்
முதலமைச்சராக ஆனதற்குப் பிறகு மத்திய அரசிடம் பல
முறை நேரடியாகவும், கடிதப் போக்குவரத்துக்களின் வாயி
லாகவும் வற்புறுத்தியதற்குப் பிறகு, அந்தக் கூட்டுறவு
சர்க்கரை ஆலைக்கான அனுமதியினைப் பெற்று இன்றைக்கு
நல்லமுறையில் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவரவர்களுக்கும், நமது மாண்புமிகு
தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு
அவர்களுக்கும் என்னுடைய சார்பாகவும், திருத்தணி தொகுதி
மக்களின் சார்பாகவும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மிகவும் மேன்மையாக
நினைக்கக்கூடிய விஷயங்கள், மின்சாரத்திற்காகவும், கல்விக்
காகவும் நாம் செலவழிப்பது, மொத்தத் தொகையில் 30
சதவீதத்தை இந்த இரண்டு விஷயங்களுக்காகவும் ஒதுக்கி
யிருக்கிறோம். வருங்கால மக்களின் நல்வாழ்வுக்காக, தொலை
நோக்கோடு கருதி இந்தத் திட்டங்களுக்கு முக்கியத்துவம்
கொடுத்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்
கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்
திரு. துரைமுருகன் அவர்கள் 6 வயது முதல் 14 வயது வரை
உள்ள குழந்தைகள் 2.63 இலட்சம் பேர் பள்ளிக்கூடங்
களிலே சேர்ந்திருக்கிறார்கள் என்றும், ஆனால் அவர்களுக்குப்
போதுமான ஆசிரியர்களைச் சேர்க்காமல், குழந்தைகளை
மட்டும் அதிகமாகச் சேர்த்திருக்கிறார்கள் என்றும், ஒரு
தவறான புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்றும்
அவர்கள் கூறினார்கள். ஆனால் இதுபற்றி கல்வி என்ற
தலைப்பிலே ஆசிரியர்கள் நியமனங்களைப் பற்றிக் குறிப்
பிட்டிருப்பதை அவர்கள் பார்க்கவில்லை என்றே நான்
நினைக்கிறேன். உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் 1,250
பேர்களையும், தமிழ்ப் பண்டிதர்கள் 150 பேர்களையும்,
நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும்
உடற்பயிற்சி ஆசிரியர்கள் 100 பேர்களையும் மற்றும் மேல்
நிலைப் பள்ளிகளில் பி.எட். ஆசிரியர் பதவிகள் 200, உடற்
பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் 50, நடுநிலைப் பள்ளிகளில்

அதேபோல் சப்-ரிஜிஸ்டரார் அலுவலகத்தைப் பார்க்கிறோம். இங்கே பார்த்தால் நிறைய பெண்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு கழிப்பிடங்கள் இல்லை. தாய்மார்களுக்கு எல்லாம் செய்யப்படுகின்றன என்று சொல்கிறார்கள். ஆனால் கழிப்பிடங்கள் இல்லை. நீதிமன்றங்களுக்காக எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை. ஆகவே இப்படி இருக்கின்ற சூழ்நிலைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த நிதி ஆண்டில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை 40 இலட்ச ரூபாய் செலவில் சத்திய மங்கலத்தில் கட்டப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் உள்ளது. ஆனால் 1980-ஆம் ஆண்டு முதல் நான் கேட்டும், அரசினுடைய கவனத்தை ஈர்த்தும் இதுவரையில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஆவடியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை உருவாக்காமல், அங்கே ஒரு மருத்துவமனைகூட இல்லாமல் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆரம்ப சுகாதார நிலையம் உண்டா? பூவிருந்தவல்லிக்கு என்றால் அதுவும் கிடையாது. அமைச்சர் ஹண்டே அவர்கள் ஒரு கூட்டத்திற்கு வந்தபோது, அடுத்த ஆண்டு நிச்சயமாக இங்கே ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவப்படும் என்று சொல்லி, இதுவரையிலும் நிறுவப்படாத சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே அடுத்த நிதி ஆண்டிலாவது என்னுடைய தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், மருத்துவமனை ஒன்றும், ஏற்படுத்த திட்டங்களை நிதிநிலை அறிக்கையில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன்.

அடுத்து, வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்று சொல்கிறார்கள். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையோ 15 கோடி. இந்த 15 கோடியை எந்த அடிப்படையிலே கொடுக்கப்போகிறார்கள் பணமாக கொடுக்கப்போகிறார்களா? அல்லது தொழில் செய்வதற்கு கடனாகக் கொடுக்கப்போகிறார்களா? என்ன செய்யப் போகிறார்கள் என்று தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. ஆக இந்த 15 கோடி ரூபாயில் எவ்வளவு குடும்பங்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பு கொடுக்கமுடியும். ஆனால் விளம்பரத்திற்காக வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையாக இது இருக்கின்றதே தவிர இந்த 15 கோடி ரூபாய் மூலமாக நிச்சயமாக வேலை கொடுக்க முடியுமா என்பதை நிதி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



அதேபோல் மோட்டார் வாகன வரி. இந்த மோட்டார் வாகன வரி காலாண்டுக்கு ஒரு முறை உயர்த்தப்பட்டு உள்ளது. டயர், டியூப் பிளாப்களுக்கு வரி குறைக்கப்பட்டிருந்தாலும், அது பெரிதாக குறைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை இல்லை. மோட்டார் வாகன வரி அதிக அளவில் வாங்குகிற நிலையைத்தான் உருவாக்கும்.

அடுத்து பார்ப்போமானால் இன்றைக்கு டீசலும் பெட்ரோலும், எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் விஸ்வநாதன் அவர்கள் இரட்டை விலை என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் மத்திய சர்க்கார் கடந்த மாதம் 20 காசு ஒரு லிட்டருக்கு உயர்த்தியிருக்கிறது.

பெட்ரோல் பங்கில் இப்போது டீசல் போன்ற பொருள்களுக்கு 22 காசு வாங்கி வருகிறார்கள். ஆனால் நீங்கள் போட்டு இருக்கும் வரி மூலமாக அந்த நகரத்திலே வாங்கவேண்டுமானால் பெட்ரோல் ஒரு லிட்டருக்கு 12 காசு கூடுதலாகும். டீசல் ஒரு லிட்டருக்கு 6 காசு கூடுதலாகும். ஆகவே, இப்போது போட்டிருக்கின்ற இந்த இரட்டை வரி காரணமாக அது வியாபாரிகள் தலையில் போய் சேராது, வாங்குவோரைத்தான் போய்ச் சேரும் என்ற அடிப்படையில், இங்கே சொல்லப்பட்டு இருக்கும் இந்தக் கருத்தைக் கண்டித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு அவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு எனது நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் 83-84-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்கிறது என்று சொன்னால், கண்ணைப் பிடுங்கிவிட்டு, கண்ணாடி வைத்து அனுப்பியதுபோல் இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது 26 கோடி ரூபாய் அளவிற்குப் புதிய வரிகளைப் போட்டு விட்டு அதன் மூலமாக ஏழை எளிய மக்கள், உழைக்கின்ற விவசாய மக்கள், அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கும் உழைப்பாளர்கள் ஆகியோரின் கண்ணைப் பிடுங்கி கண்ணாடி வைத்ததுபோல் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பொறுத்த வரையில் 50 ரூபாய் ஊதியம் கொடுத்து தண்ணீரை கொண்டு வந்து சுத்தம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன என்று சொல்லப்படுகின்றது. அப்படியென்றால் அந்த 50 ரூபாயை யார் கொடுப்பது, ஊராட்சியா?—ஊராட்சி ஒன்றியமா?—அல்லது அரசா? கழிப்பிடத்தைக் கட்டி முடித் தற்குப் பின்னால் ஏற்கனவே வரியை வசூலிக்க முடியாத நிலையில் இருக்கக் கூடிய வி.ஏ.ஓ.—வீட்டு வரியை வசூலிக்க முடியாத நிலையில் ஊராட்சி மன்றங்கள் இருந்து கொண்டிருக் கின்றன. ஆகவே சிறப்பாக செம்மையாக செயல்படுத்த முடியுமா என்று அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். அதற்கு மாறாக எளியோர்கள் மத்தியிலே குறிப்பிட்ட மானியமாக அவர்களுக்கு ஒதுக்கி கழிப்பிடங்களை சிறப்பாக அமைக்கக் கூடாதா? அவ்வாறு இல்லாமல் 22.56 கோடி ரூபாயைப் பாழாக்க வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சொல்லுகின்றபொழுது எதைப் பேசி னாலும், எப்படிப் பேசினாலும், நிச்சயமாகப் பின்னாலே வரியைக் குறைப்பதாக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்பொழுது டயர், டியூப், பிளாஃப் இந்த மூன்றுக்கும் ஏற்கனவே 10 சதவீத வரி இருந்தன. அந்தப் 10 சதவிகித வரி 12 சத விகிதமாக்கப் பட்டு, இன்றைக்கு டயரும், டியூபும், பிளாப்பும் வாங்க முடியாத நிலை ஏற்பட்டதற்குப் பின்னர், அண்டை மாநிலங்களுக்கு விற்பனை வரி போய்விடுகிறது என்ற நிலைக்குப் பின்னாலே தான் இன்றைக்கு இந்த சர்க்கார் 12 சதவிகிதத்தை 9 சதவிகிதமாக குறைக்க முன் வந்திருக் கிறார்கள். ரூபாய் ஒரு கோடிக்கு குறைத்துவிட்டோம் என்ற கூற்றிலே—இதிலே 90 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது அது மட்டுமல்ல குறைப்பதன் மூலமாக—ஏற்கனவே தமிழக அரசுக்கு ரூபாய் 5 கோடி வருமானம் வரும். மகிழ்ச்சிக் குரிய காரியம்தான். கடந்த ஆண்டிலிருந்தே 12-லிருந்து 10-ஆக ஆக்கப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது இந்த ஆண்டிலிருந்து 12-லிருந்து 9-ஆக ஆக்கப்பட்டு வந்திருக்கிறதா? இதை நான் மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதற்கேற்றவாறு ஏனைய வரிகளை பின்னாலே பார்ப்போம். ஏனைய வரிகள் என்று சொல்லுகின்ற பொழுது தியேட்டர் சிலேடுகள் போடுவதற்கு வரி—இதை எப்படி வசூலிக்கப்போகிறோம்? அதற்கான முறை என்ன? என்று பார்க்கின்ற நிலையிலே—30 காசு 90 காசு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், இந்த நிலை அவசியம் தானா என்றும், அதைக் கைவிடும்படியும்—அதுவும் குறிப்பாக காம்பௌண்டிங் டேக்ஸ் என்கின்ற நிலைமையில் புதுக்கோட்டை மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலும், அதுவும் நீலகிரி மாவட்டத்தில் மூடுகின்ற விழாவாக, தியேட்டர் எல்லாம் மூடிய பிறகு,





சீட்டைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலையிலே சிலைடுக்கு வரி என்று சொல்லப் பட்டிருக்கிறது. சிலைடு கேன்வாஸ் செய்வதற்காக ஒரு நபரைப் போட்டாலும் ரூ. 10 கிடைப்பதற்குக் கடினமாக இருக்கக் கூடிய சூழ்நிலையில், 90 காசு வரி, 30 காசு வரி என்று சொல்வது முறைதானா என்றும், அதை மாற்றி அமைக்க வேண்டும்—அல்லது அதை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

(பிற்பகல் 12–50)

இன்றைக்கு நடுத்தர குடும்பங்கள் என்று எடுத்துக்கொண்டால் ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்கள் அரிசி வாங்கக்கூடாது. ரேஷன்கடையில் அரிசி கொடுக்கப்படமாட்டாது, மண்ணெண்ணெய் கொடுக்கப்படமாட்டாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். நீங்கள் என். ஜி. ஓக்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க மாட்டீர்கள். அதேநேரத்தில் நடுத்தர குடும்பமும் பாதிக்கப்பட வேண்டும். ஆகவே இருக்கிற சூழ்நிலைகளைப் பார்த்து ஆயிரம் ரூபாய் ஊதியம் பெற்றாலும் அரிசி கொடுக்கவேண்டும். ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றபோது நிச்சயமாக அவர்களும் வெளி மார்க்கெட்டிலே வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட நேரத்திலே வெளிமார்க்கெட்டிலே விலை அதிகமாக உயர்ந்துவிடாமல் பார்த் துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் நீதிமன்றங்களைப் பார்க்கிறோம். இங்கே இருக்கக்கூடிய ஏறத்தாழ ஆறு அமைச்சர் கள் சட்டம் பயின்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு என் பெயராலே போடப்பட்டிருக்கிற வழக்கு, அதிலே குறிப்பாக பூவிருந்தவல்லியில் இருக்கிற நான் திருவொற்றி யூரில் பஸ்ஸைக் கொளுத்தி, பொன்னேரி நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற நான், அங்கே சென்று பார்த்தால் அது நீதிமன்றம்தானா? அல்லது அது குகையா என்று தெரியாத நிலையில் இருந்துகொண்டு இருக்கிறது. நீதிபதிகளை உயர்த்தியிருக்கிறோம், கோர்ட்டுக் களை அதிகமாக உருவாக்கியிருக்கிறோம் என்று சொல்கிறீர் கள். ஆனால் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் உண்டா என்றால், இதுவரையிலே கட்டிடங்களே இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக இதுவரை நிதி ஒதுக்க பட்டிருக்கிறதா என்றால் அறவே இல்லாத சூழ்நிலை இருக்கி றது என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீதி மன்றங்களுக்குப் பக்கத்திலே கழிப்பிடங்கள் இருக்கவேண்டும்.

[திரு. ஏ. டி. கருப்பையா] [1983 மார்ச் 10

இந்த அறிக்கையில் 26 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டு விட்டு சில சலுகைகளைக் கொடுத்து இருக்கிறீர்கள். அது எப்படி இருக்கிறது என்றால் மலையைக் கிள்ளி எலியைப் பிடித்தது போல் இருக்கிறது. வரிச்சலுகை எதற்கு தரவேண்டும் என்று தேடிப்பிடித்துப் பார்த்து மண்ணெண்ணெய் விளக்குக்குப் போடும் திரிக்கு வரிச்சலுகை கொடுத்திருக்கிறீர்கள். இதுதான் மலையைக் கிள்ளி எலியைப் பிடித்தது போல் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் இன்றுள்ள வறட்சி சூழ்நிலையில் கங்கை காவிரிகூட காய்ந்து கொண்டு இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வரி உயர்த்தி இருப்பது யாருக்குச் சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறேன் என்றால் கள்ளப் பணக்கா ரர்கள், கருப்புப் பணக்காரர்கள், வர்த்தகச் சூதாடிகள் ஆகியோ ருக்குத்தான் என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இந்த வரிவிதிப்பை நான் ஆரம்பத்திலேயே எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான வால்பாறையின் பரப்பளவு கிட்டத்தட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதியில் 80,000 ஏக்கர் பாசனப் பரப்பைக் கொண்டதாகும். அது பூராவும் இன்றைக்குக் கருகி, செத்துக் கிடக்கின்றன. மலைகளில் பெய்கின்ற மழை கூட இந்த ஆண்டில் பெய்யவில்லை. அதைப்போலவே தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சை மாவட்டத்திலும் பெரும்பாலும் நீர் எல்லா இடங்களிலும் வற்றிவிட்ட காரணத்தால், அங்கேயும் வறண்டு இருக்கும் நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1—00.)

அதைப்போன்று தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் கிராமங் களிலும் பட்டித்தொட்டிகளிலும் மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். பைப்பிலே தண்ணீர் வரவில்லை. இரவு பகல் என்று பாராமல் தாய்மார்கள் குடத்தை எடுத்துக் கொண்டுபோய் தண்ணீர் தொட்டிகளோடு போராடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் என்ன காரணம்? இந்த அரசாங்கம் காலாகாலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்காமல் மெத்தனப்போக்கோடு இருந்த காரணத்தால்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் சரியான நேரத்தில் நட வடிக்கை எடுத்திருந்தால் இன்றைக்கு வறட்சி வந்திருக்காது. பற்றாக்குறை வந்திருக்காது; விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக் காது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.



1983 மார்ச் 10] [திரு. ஏ. டி. கருப்பையா]

அதுமட்டுமல்லாமல் இப்போது பல இடங்களில் காலரா நோய் ஏற்பட்டிருக்கிறது. வறட்சியோடு காலரா நோயும் சேர்ந்துகொண்டது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் என்ன சொன்னார் என்றால் பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை எடுத்து ஜனங்கள் குடிப்பதற்கும் பயன்படுத்திய தால்தான் இந்த காலரா நோய் வருவதற்கு காரணம் என்று சொன்னார். பேப்பரில் பார்த்தால், கிட்டத்தட்ட 200 பேர்கள் காலரா நோயால் செத்துப்போனார்கள் என்று செய்தி வருகிறது. பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை குடித்தால் இப்படி வரும் என்று அமைச்சர் முன்னாலே சொல்லியிருக்கக் கூடாதா? சொல்லியிருந்தால் இந்த நிலை வந்திருக்குமா?

அதைப்போன்றுதான் பருவமழை தவறிவிட்டது. பருவ மழை தவறியதன் மூலம் தமிழ்நாட்டிலே வறட்சி ஏற்படும்; தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் மக்கள் கஷ்டப்படுவார்கள் என்ற உண்மையைத் தெரிந்து, அதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாதா? நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டீர்கள். அதனால் மக்களுக்கு இன்றைக்கு இந்த கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உணவு நெருக்கடியால் ஏற்பட்டிருக்கிற நிலைமையை சுருக்கமாக சொல்கிறேன். எங்கள் மாவட்டத் தில் பொள்ளாச்சியில் ஆயிரக்கணக்கான நெல் அரிசி மூட்டை களை கேரளாவுக்கு கடத்திச் சென்றார்கள். பொள்ளாச்சியில் இருக்கிற ஆர்.டி.ஓ. அவர்கள் அந்த அரிசி மூட்டைகளை ஏற்றிச்சென்ற லாரிகளை மடக்கிப் பிடித்து, ஒரு வாரத்திற்கு மேல் லாரிகளை அங்கே நிறுத்தி வைத்து நடவடிக்கை எடுத்தார். ஆனால் அவரால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அவரை நடவடிக்கை எடுக்கவிடாமல் அரசியல் நோக்கத்தோடு தடுத்துவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போன்று இன்றைக்கும் என்னுடைய தொகுதி வழியாக அரிசி கடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். அதிகாரிகள் கண்காணிப்பாக இருந்து, உஷாராக இருந்து, இந்த வறட்சியால் ஜனங்களை பட்டினிப் போடாமல் காப்பாற்ற வேண்டும். ஜனங்கள் பட்டினியால் சாகக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அரிசியை மற்ற மாநிலங் களுக்குக் கடத்துவதை கண்காணிப்பாக இருந்து தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு ஏ. டி. கருப்பையா] [1983 மார்ச் 10

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 2.5 இலட்சம் காப்பி தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போனஸ் வேண்டும், சம்பள உயர்வு வேண்டும், இன்செண்டிவ் வேண்டும் என்று கழிந்த 2, 3 மாதங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து இந்த பேச்சுவார்த்தை நீடிக்காமல், நீங்கள் உடனடியாக தலையிட்டு, கிட்டத்தட்ட 2.5 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் போனஸ் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஜாயிண்ட் கமிஷனர் பேச்சு வார்த்தை நடத்தி 3 ஆலோசனைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். விரைவிலே உத்தரவு வந்த பிறகு, இந்தப் பிரச்சினை தீர்ந்து விடும்என்று கருதுகிறேன். இவர்கள் 1—11—1982லேயிருந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேலும் தற்போது கார்ப்பொரேஷனாக வேறு மாற்றியிருக்கிறார்கள். எனவே இனிமேல் சுமூகமாக முடிய முடியும் என்று கருதுகிறேன். 2,500 தொழிலாளர்கள் இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட வரையில் அந்த இடத்திலே இருப்பதாகக் கருதுகிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சனை கடந்த நவம்பர் மாதம் முதற் கொண்டு ஏற்பட்டு அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.....(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு எம். எஸ். மாணிக்கம்) அதைத் தாங்கள் பேசும்போது கேட்டுக் கொள்ளலாம். இப்போது குறுக்கிட வேண்டாம். நேரம் இல்லை.

திரு ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் நான்கேட்டதற்கு பதில்சொல்லி, இந்தப் பிரச்னையில் வெகு வேகமாக முடிவு எடுக்கப்படும் என்று இந்த அவையிலே கூறியதற்கு என்னுடைய உளம் கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் (மணியடிக்கப்பெற்றது) 2500 தோட்டத் தொழிலாளர்கள் என்று சொன்னார்கள். அது



1983 மார்ச் 10] [திரு. ஏ. டி. கருப்பையா]

சரியான கணக்கு அல்ல. தமிழ்நாடு முழுவதும் உள்ள, தனியார்களின் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக் கூடிய தொழிலலளார்கள் கிட்டத்தட்ட 2½ இலட்சம் தோட்டத் தொழிமலாளர்கல் பிரச்னை இது. இந்த அமைச்சர் அவர்கள் நன்றாக அறிந்திருப்பார் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக இந்த சத்துணவு திட்டத்தின் கீழ்-அதாவது அதன் மூலமாக, வீட்டுக்கு ஒரு ஆளுக்கு வேலை கொடுப்போம் என்று இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். இந்த சத்துணவு திட்டத்தின் மூலமாக பணியாளர்கள் தேர்ந்தெடுப்பதில் பாரபட்சம் நடந்திருக்கிறதே—அப்படி நடந்திருக்கிறது என்று என்னால் நிச்சயமாக சொல்லிக்கொள்ள முடியும்—இந்தச் சூழ்நிலையில் இப்படி வீட்டுக்கு ஒருவர், குடும்பத்திற்கு ஒருவர் என்ற கணக்கு எப்படி சரியாக வரும். இந்த சத்துணவு திட்டத்தில் பணியாற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டதில், வேண்டியவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள், வேண்டாதவர்களுக்கு, அவர்களுக்கு என்னதான் திறமை இருந்தபோதிலும் கூட, அவர்கள் அந்தப் பதவி கிடைப்பதிலிருந்து நிராகரிப்பக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே, இது குறித்து சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு பரிசீலித்து, தகுதி உள்ளவர்களுக்கு அந்த தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய லட்சக்கணக்கான படித்த மாணவர்கள், இளைஞர்கள், பட்டம் பெற்றவர்கள், பெற்ற பட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டு தெருத் தெருவாக அலைந்து கொண்டிருக்கிறார்களே—அவர்களுடைய நிலை என்ன—ஆனால் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்போம் என்று இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள்.... (மணியடிக்கப் பெற்று அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பெற்றது.)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மீது என்னைப் பேச அனுமதித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமக்குள்ள சிறிய நிதி ஆதாரங்களைக் கொண்டு மக்களின் பல்வேறு அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வரும் தமிழக அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலையும, நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி, இன்றைக்கு மக்களுடைய அத்தியாவசிய அவசியத் தேவைகளை அவசரமாக நல்ல முறையில் பூர்த்தி செய்கிற ஒரு அரசாக இருந்துக் கொண்டு, மக்களுடைய நலத்திலே அக்கறை கொண்டு பல்வேறு

நல்ல திட்டங்களை தொலை நோக்கோடு செயலாற்றிக்
கொண்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு தொலை நோக்கோடு
தான். இன்றைக்கு சத்துணவுத் திட்டத்தை தீட்டி, தமிழக மக்க
ளின் எதிர்கால வளத்தைக் கருத்திலே கொண்டு செயலாற்றி
வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

கணித மேதையாக விளங்கிய 'ஜியோமிதி' அவர்கள் கணிதத்
தில் ஜியாமிண்டரி முறையை அறிமுகம் செய்த தருணத்தில்,
அதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அப்
போதிருந்த எல்லோரும் பேராசிரியர்களும் மற்றவர்களும் எதிர்த்
கள். இது என்ன கணிதத்தில் புதுமையைச் செய்து விடப் போகி
றது என்று சொல்லி அதனை மறுத்தார்கள். ஆனால் அவர்
மனம் தளராமல், அந்த முறையை எப்படியும் நாட்டில் அறிமுகம்
செய்தே ஆகவேண்டும் என்பதற்காக, ஏழை மாணவர்களை தன்
னுடைய விட்டிலேயே அழைத்து வைத்துக் கொண்டு, அவர்களுக்கு
மிட்டார்கள் போன்றவற்றைக் கொடுத்து, அந்தக் குழந்தை
களுக்கு அந்தப் பாடமுறையை கற்பித்தார். இப்படி 5 ஆண்டு
களும் அவர் கற்றுக் கொடுத்ததற்குப் பிறகு, தன்னுடைய
சொத்தை எல்லாம் இழந்து வறிய நிலைக்கு ஆளாகியபோது,
அந்தச் சுற்றுப் புறத்தில் உள்ள மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து,
அவரைப் பார்த்து, நீங்கள் மீண்டும் அந்தக் கணித முறையை
எங்களுக்கு கற்றுத் தாருங்கள், அதற்கு எவ்வளவு செலவானா
லும் நாங்கள் உங்களுக்குத் தருகிறோம் என்று சொன்னார்கள்.
அந்த அளவில் அவருடைய உழைப்பு இருந்தது. அதற்குப் பிறகு
உலகம் முழுவதும் ஒரு மாற்றம் ஏற்பட்டு கணித முறையிலே
அது ஏற்றுக்கொள்ள பெற்று, அதனால் இன்றைக்கு உலகத்திலே
விஞ்ஞான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால்
அது மிகையாகாது. அதேபோல இன்றைக்கு சத்துணவுத்
திட்டத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால்,
கல்வியிலே அது ஒரு மிகப் பெரிய மாற்றத்தைத்தான் கொண்டு
வந்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர்.

(பிற்பகல் 1-10.)

அதன் மூலமாக சென்ற ஆண்டு சுமார் 2½ இலட்சத்திற்கும்
அதிகமான ஏழை எளிய மாணவர்கள் கல்வி கற்க வந்திருக்கி
றார்கள் எனவே இதன் பலன் எந்த அளவுக்கு இருக்கும் என்பதை
நான் இதன் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். இன்றைக்குத
தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு
நல்ல திட்டங்களைக் கூறி இருக்கிறார்கள். இன்றைக்குத் தன்
னிறைவுத் திட்டம் என்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்து
தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும
அந்தத் திட்டத்தை நல்ல முறையில் மேம்படுத்தி மக்களின் அடிப
படைத் தேவைகளை பூர்த்தி செய்ததற்காக நான் பாராட்டினைத
தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து இன்றைக்குத் தமிழகம் இதுவரையில் காணாத வகை
யில் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. வறட்சி நிவார
ணம் அளிக்க வேண்டும் என்பதற்காகவும் மக்களுக்கு வேலை
வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் இன்றைக்கு 190
கோடி ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டும் என்று திட்டம்
தீட்டி இருக்கிறார்கள். அதற்காக இன்றைக்கு நிதியாதாரங்
களைப் பொறுத்தவரையில் 45 கோடி ரூபாய் வரையில் செலவு
செய்து கொண்டு வருகிறார்கள். இப்படி மக்களுக்கு நிவாரணம்
அளிக்க வேணடும் என்பதற்காக பல்வேறு காரியங்களைத் தமிழக
அரசு செய்திருக்கின்றது என்பதைப் பராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

முன்பு 1974 ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது அன்றைக்கு
வறட்சி நிவாரணப்பணி எப்படி நடந்தது என்பதை இப்போது
நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை, அன்றைக்குப் படி
அரிசி ரூபாய் 10 என்று இருந்ததை நாம் சந்தித்திருக்கிறோம்.
அந்தசூழ்நிலை இன்றைக்கு வரக்கூடாது என்பதற்காகத் தமிழக
முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்கள் தமிழகத்திலே உள்ள
குடும்பங்கள் வாடிவிடக்கூடாது என்பதற்காக, அரிசி வேண்டும்
என்பதற்காகசென்ற மாதம்உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த
உண்ணாவிரதம் இருந்தபோது அவர்கள் ஆணித்தரமாகச் சொன்
னார்கள், திருச்செந்தூர் தேர்தலைப் பற்றி எனக்குக் கவலை
இல்லை என்று, திருச்செந்தூர் தேர்தலை விட இந்த நாட்டு
மக்களுக்கு அரிசி வேண்டும் என்பதற்காக டெல்லிக்குத்தான் செல்
வேன் என்று கூறினார். எனவே திருச்செந்தூருக்கு பாரா
முகத்தைக் காட்டிவிட்டு டெல்லிக்குச் செல்வதுதான் கடமை
என்று டெல்லிக்குச் சென்றார்கள். அப்படிச் சென்று அங்கே
மத்திய அரசு உறுதி மொழி கொடுத்ததற்குப் பிறகுதான் திருச்
செந்தூருக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்றார்கள் என்பது
நாடறிந்த உண்மையாகும்.

இன்றைக்கு வறட்சி நிவாரண வேலைகள் நன்றாக நடந்து
வருகின்றன. வறட்சி நிலவுகின்ற இந்த நேரத்தில் ஒன்றை
மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்குக் காலரா
நோய் அதிகமாகப் பரவி வருவதால் அதற்கான மருந்துகளை
கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று ஏரிகளை ஆழப்
படுத்தி தூர் வாருவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும். குறிப்பாக மதுராந்தகம் வானம் பார்த்த பூமி.
அங்கே எந்தவிதமான நதியும் செல்லவில்லை. அந்த நிலைமை
யிலே அங்கே இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு உதவுகின்ற வகை
...அங்கே இருக்கின்ற ஏரிகளைத் தூர் வாருவதற்கு வேண்டிய

(திரு எஸ். டி. உகம்சந்த்) [1983 மார்ச் 10

இன்றைக்கு மத்திய அரசு அறிவித்து இருக்கிற ஐ.ஆர். டி.பி. ஸ்கீம் பற்றி ஒன்றை சொல்லவிரும்புகிறேன் என்னுடைய மதுராந்தகம் அநேகமாக பெரும் விவசாயத்தை நம்பியிருக்கிற தாலுக்காவாகும். இந்த தாலுக்காவில் எந்த ஒரு தொழிற்சாலையும் சரியாக இல்லை. அதனால் அங்கு இருக்கின்ற விவசாயிகள் எல்லாம் விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகம் நகரத்தில் வாழ்கின்ற அந்த ஏழை விவசாய தொழிலாளிகளுக்கு இன்றைக்கு எந்த மானியமும் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு மானியம் கிடைக்க வழிசெய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மத்திய கூட்டுறவு வங்கிகள் எல்லாம் இன்றைக்கு கடன் கொடுப்பதை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகையால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடன் கொடுப்பதற்கு மத்திய அரசு வழிவகைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு மதுராந்தகத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற அந்த காகித ஆலையை விரைவில் துவக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

THIRU T. VENKATA REDDI : Hon'ble Chairman, we are now discussing about the budget at a time when our State is faced with a severe famine condition. I am surprised to see that the entire of Tamil Nadu are suffering for want of very necessary things. The treasury benches are vacant. I am afraid the treasury is also famine stricken which is conspicuous by their absence. They are not also interested in hearing the good points which the members put forth in this Assembly. They are not serious about solving the problems.

In the month of October I have presented a memorandum to the District Collector and also to the Chief Minister that Hosur taluk and also the Dharmapuri district are faced with a drought situation. The Government must take steps to solve the drought condition. That is the condition I am sure this condition was prevailing throughout Tamil Nadu, even in the month of October . But what are the steps the Government have taken when the people are faced with such a situation. They have kept quiet. The Chief Minister said that rain will come. We were waiting and we are sure that rain will come and famine will go out. Rain have failed. But whether rain come or not, for the last three years we have been facing the situation. Are the Government serious about it ? No, they are not. Even in 1981 budget I have also spoken that unless the Govern-



1983 மார்ச் 10] (திரு. டி. வெங்கடரெட்டி)

ment take permanent steps to solve this water problem, Tamil Nadu will face very serious situation. We are now facing very serious situation. I am surprised to hear that in Madurai City, the people are getting water once in four days. Can you image such a situation even after 35 years of our rule ?

(பிற்பகல் 1-20)

Who is responsible for this? How can you go on blaming the Central Government? Even if the RainGod fails can you blame the Centre? Certainly it is not correct. What work had you done for alleviating the situation. I have also submitted a Memorandum to Sri Pasupathi, who is Drought Commissioner, to increase the ground water level for the entire Tamil Nadu. We have to repair the tanks. We have got 35,000 tanks. These are minor irrigation tanks. These tanks had been constructed many years back. Some of them had been constructed about 300 years back. Some others had been constructed about 50 years back. Most of the tanks have to be silted. Bunds had been broken in many of them. These tanks had been constructed for storing water. These were dug to increase the ground water level, to have the perculation and to have irrigation facilities.

If you take 20 acres per tank, we can irrigate about 75 lakhs of acres throughout Minor Irrigation Tanks. But what is the present position ? Is the Agriculture Minister or the Food Minister in a position to place before the Assembly as to what is the acreage covered by these minor irrigation tanks now? I am afraid the figure will be only less than 1 lakh acres.

In my district most of the tanks had been constructed about 200 years back. They need repairs. Nothing had been done so far. We know that when the drought situation came some 7 or 8 years ago, open wells were sunk to the depth of about 50 feet. Those wells have now become dried. Even during rainy season these wells do not have water.

Even in 1981, when the bore wells were put, they were put at a depth of about 100 to 150 feet. Even these bore wells have been dried up now. As a next step we have to get Rigs from the Arab Countries which are used to drill the ground to the depth of thousandsof feet. SuchRigs have to be used in Tamil Nadu. Why this condition ? This is because of the helplessness and apathy of the Government. Had the Government taken steps to have the tanks repaired in time we would not have faced such a situation. Therefore, I request the Hon'ble Minister who is responsible for this branch, to take necessary steps immediately on a war-footing to repair the tanks. Then only you can solve the problem ; you can mitigate the problem. Otherwise we will be nowhere.

(திரு எஸ். டி. உகம்சந்த்) [1983 மார்ச் 10

நடவடிக்கைகளை எடுக்க நிதி ஒதுக்க வேண்டும். குறிப்பாக மதுராந்தகம் பெரிய ஏரியில் தூர் வாருவதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும். வறட்சி நிவாரணத்தின் கீழ் அந்த ஏரியினை ஆழப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை யினைஎடுக்க வேண்டும்.

அடுத்து இன்றைக்கு போக்குவரத்தைப் பொறுத்த வரையில் முதலமைச்சர் அவர்களின் அரசு நல்ல காரியங்களைச் செய்து வருகின்றது, எங்களுடைய மாவட்டமான செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரியார் போக்குவரத்துக் கழகம் என்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் என்றும் மாற்றி இருக்கிறார்கள். ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தி அண்ணா பெயரால் அந்தப் போக்குவரத்துக் கழகத்தை தின ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று கேட்டுக் கழகத் கிறேன். கொள்

அடுத்து கிராமப்புறங்களிலே பேருந்துகள் செல்கின்ற இடங் களிலே அரசின் சார்பாக ஹோட்டல்கள் கட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழக அரசு இன்றைக்கு தன்னுடைய நிதி வசதி யினைப் பெருக்கிக் கொள்கின்ற வகையில் நுழைவு வரியினை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இவ்வாறு அறிமுகப்படுத்த வேண்டிய கட்டாயமான சூழ்நிலை ஏற்பட்டாலும் அத்தியா வசியப் பொருட்களான துணி வகைகள், மருந்துப் பொருட்கள், மின்சாரம் ஆகியவற்றிற்கு இதிலிருந்து விலக்களிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

துணி ரகங்களுக்கு இன்றைக்கு நம்முடைய தமிழகத்திற்கு ஒரு சிறப்பான பெயர் இருக்கிறது. இந்த வியாபாரம் மிக நல்ல முறையில் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த துறையில் தென்னகத்திற்கே வழிகாட்டியாக சென்னை நகரம் இருக்கிறது. சென்னை நகரத்தை அடிப்படையாக வைத்து மற்ற மாநிலத்தில் இருப்பவர்கள் துணியை பெற்றுக் கொண்டிருக் கிறார்கள். இந்த நுழைவு வரியினால் அந்த வியாபாரம் பாதிக் கப்பட்டு, தற்போது அதற்குள்ள பெருமை பாதிக்கக் கூடிய ஒரு அபாயம் இருக்கிறது. அதோடு மட்டும் அல்ல இங்கே இந்த நுழைவு வரி போடுவதன் காரணமாக பல்வேறு மாநிலங் களில் இருப்பவர்கள் அந்த வியாபரத்தை தாங்களே ஆரம்பித்து விட்டால் தமிழகத்திலுள்ள துணி வியாபாரிகள் பாதிக்கப்படுவார் கள். இதனால் அந்தத் துறையில் வேலை செய்கின்ற ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய நிலைமை இருக் கிறது. ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.



1983 மார்ச் 10] (திரு. எஸ். டி. உகம்சந்த்)

கேட்டுக் கொள்கிறேன். இந்த நுழைவு வரிக்குப் பதிலாக நிதியை பெறுவதற்கு வேறு வழிகளை கையாளலாம். உதாரணமாக அவர்களுக்கு லைசன்ஸ் கட்டணத்தை அதிகப்படுத்தி அதன் மூல மாக நிதி பெருக்கத்திற்கு வழிவகைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பால் உற்பத்திக்காக இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு அதற்காக திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டு தலை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உற்பத்தியாகும் பாலை அதனுடைய தலைவர்கள் அதிகமான விலைக்கு விற்கவேண்டும் என்று தனியாருக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை தடுக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தில் சரியானபடி வழிவகைகள் இல்லை. அவர்கள் தனியாருக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாக பல தவறுகள் ஏற்படுகிறது. பண முடக்கங்கள் அதிகமாக வருகிறது. அந்த தலைவர்கள் செய்யும் தவறுகளை தடுப்பதற்கு அந்த பாலை அரசு நேரடியாக கொள்முதல் செய்வதற்குவேண்டிய வழிவகைகளை செய்யவேண்டும். அப்படி தவறு செய்பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சென்னையிலிருந்து திண்டுக்கல் செல்கின்ற சாலைக்கு மாற்றுவழி சாலையாக வீராணம் திட்டத்தில் போடப்பட்ட சாலையை இணைத்து மேம்பட்ட சாலையாக மாற்று வழி சாலையை ஏற்படுத்தி விபத்தை தவிர்ப்பதற்கு வேண்டிய முறைகளை செய்யவேண்டும்.

இதுபோன்று சென்னையிலிருந்து விழுப்புரம் செல்கின்ற வழியில் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. காலை நேரத்தில் லாரிகள் சென்னையை நோக்கி வருவதால் அந்த விபத்துகள் அதிகமாக ஏற்படுகிறது. அதை தடுப்பதற்கு அந்த விபத்தின் மூலமாக ஏற்படும் சாவுகளை குறைப்பதற்கு அதற்கு வேண்டிய மொபைல் பார்ட்டியை ஏற்படுத்தி மதுராந்தகத்தில் எமர்ஜென்ஸி வார்டு ஒன்றை துவங்க வேண்டும். அதற்காக தனியாக ஒரு மொபைல் வேன் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து விழுப்புரத்திற்கு அதிகமாக போக்கு வரத்து இருப்பதால் மத்திய அரசு தனியாக ஒரு ஆவின் ரயில் போன்று ரயில் ஒன்றை விடவேண்டும், சென்னைக்கும் பம்பாய்க்கும் உள்ள ட்ரெயின் மாதிரி விடவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Under the Chief Minister's Nutritious Meals Programme we are feeding lakhs of children. I am afraid, within five years we have to feed every citizen, in Tamil Nadu Everybody will have to go Dharmasala and Chatram for food. That will be the situation within five years. Therefore I request our Hon'ble Finance Minister to look at this aspect very seriously.

The other aspect I would like to mention is about the drought condition in Tamil Nadu. Every one of the Member in this Assembly including the Ruling Party Members have spoken about the serious situation. This situation has arisen even from October. The Government has not tackled the problem properly. They have not declared even a single Taluk or District as "Drought affected area". Why this laps? Are they not serious about the drought? The Government has proposed to spend about 134 crores of rupees for Mid-day meals. Why have they not allocated any amount for the relief works in the drought-prone area. Government should look into this problem on priority basis. This is a serious situation. Priority must be given to this problem and adequate amount should have been allotted to fulfil the needs of the people. But nothing has been said about this in this Budget.

There is another aspects about which I am very curious to know. The Finance Minister has announced that Rs. 15 crores has been earmarked for giving jobs to every householder. As my friends has rightly pointed out, no scheme have been stated under which this programme will be implemented. We know that there is un-employment and under-employment also. Both these problems exist in Tamil Nadu.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

In the Agriculture Sector there are many agricultural labourers who get work only for about 3 months in a year. Can you call them as employed? Or will you call them as un-employed?

Again there is another factor to be looked into. As is commonly prevailing in every Hindu Family, in a Joint Family, if there are 4 sons and one of the sons is earning but not contributing any amount to the family, will you deny job to any other sons of that family under the pretext that your brother is in employment? These things had to be worked out before the Finance Minister announced the scheme. I am afraid that this scheme and various other schemes announced by this Government are palatable for reading, but will not deliver the goods. I am saying this because for the last three years I am seeing in the Budget that the per-capita income of a common man in Tamil Nadu has not increased. A State's progress is judged by the percapita income of each end. But we are seeing in 'Economic Reviews' that the percapita income in





Tamil Nadu has come down. When the Nation's average is 48 per cent below the poverty line, our State's average is 53 per cent, during the last three years. We are going on increasing our poverty line. That is our achievement. That can be said as the Government's achievment. But that is not the people's verdict given to you. People are expecting that they should increase more percapita income. They should get a better treatment. They must get atleast a square meal a day. What the Government is doing for these? Nothing has been done.

In the Budget nothing is said about this. Nothingelse has been spoken or details given except saying that we are having nutrious meals programme.

As regards Nutritious Meals Scheme, we want all our children school going children to be fed. But what is happening. We see that the pupil's percentage has increased. Yes, it has increased for taking food and not for reading.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

THIRU T. VENKATA REDDI: We have opened schools to impart education. But now what is happening? We have opened schools to distribute food and not education. Even in the educational institutions, it has become crowded and the teachers are finding it difficult to teach them. There is lack of staff. Even in the Budget, the elementary school teachers strength has not been increased. That is the basic education. That is the foundation for our boys. If the foundation is not strong, how can you expect our boys to compete in the higher and competitive examinations? Certainly not. We are seeing every day strike in Colleges. That will be the nacked truth every day in our Colleges. If you do not strengthen the foundation at the school level, how can you improve the educational system? The basic foundation is at the elementary level. The basic education should be good at the elementary level.

The elementary schools are located in sheds in our area. I have seen this in my area. Each shed has got 200 boys with a single teacher. Can he teach all these boys? I have been requesting the Education Minister and the concerned Department also to increase the strength of the teachers for the last three years, but nothing has been done in this direction.

(திரு. டி. வெங்கடரெட்டி) [1983 மார்ச் 10

The other aspect is you are blaming the Centre for all these things. In Telugu there is a saying :

" Egiri Adani Lanje, Maddilaneecha Patindhi "

Please pardon me for saying this. Suppose, a dancer is not able to dance prope ly, she will only be blaming the accomplicements. Like that, if you are not able to deliver goods and if you are not able to do things properly, you are blaming the Centre and you are only fooling the people. common man innocent people who do not know anything whether the Centre has g.ven you anything or not what you have done. What is that you have done except blaming the Centre ?.

So far as drought situation is concerned, you have submitted your report only on 24th February 1983 and immediately the Centre has sent a team. But you are blaming the Centre for the last two months stating that the Centre has not come to our aid. When you have not represented your case properly, you cannot blame the Centre, but you have to blame yourself for not representing properly.

Even in the industrial side, I know, many of the projects which you have submitted to the Centre has been rejected because you have not submitted proper data. We know, there are SIDCO and TIDCO in our State. Many applications have come from the private enterpreneurs. They have not been given loans or industrial licence because each application will have to be scrutinised by a known expert. You must give a proper data, proper memorandum about the viability of the project. If you do not give data with regard to projects, you cannot blame the centre for rejecting them. Are you prepeared to place all the details of the applications which Government of India has rejected ? Even though you have got good cases, you are not prepared to place such documents. Without placing those documents, there is no use of blaming the Centre. Therefore, instead of blaming the Centre and escaping your inefficiency, or incapability, I only request the Government to have a workable understanding between the Government and the Centre. Then only you can get things done. Therefore, I only request the Government to have all these in mind to give proper adminsitrative set up and increase the per capita income.

I also submitted a proposal to declare Hosur taluk as a drought prone area. But nothing has been done to alleviate the sufferings of the people.

With regard to the cattle population, I would like to say that I have submitted a memorandum in 1981 and also in October that cattle fodder has to be supplied and the Cattle Fodder Banks have not anything to be



1983 மார்ச் 10] (திரு டி வெங்கடரெட்டி)

increased. As we are interested in humanbeings, we should also be interested in dumb animals. What we have anything done for the all not eviation of sufferings of the animals ? Nothing has been done. Therefore, I equest that the Government has to come forward with concrete proposal to mitigate the sufferings of the common man and of the animals.

MR. SPEAKER : Alright. We will do it. He is pleading for the cattle.

இன்றைக்கு சபை முடிவதற்கு முன்னாலே ஒரு அறிவிப்
பைச் செய்ய வேண்டும். நாளையதினம் காலையிலும்,
மாலையிலும் ஆக இரண்டு வேளைகளிலும் சபை உண்டு.
நாளை காலையில், கட்சித்தலைவர்களில் ஒருசிலராவது
பேசிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லோரும்
சனிக்கிழமைதான் பேசுவது என்றால் நேரம் கிடைக்காது.
அதற்காகக் கட்சித் தலைவர்கள் வருத்தப்படக் கூடாது.
எனவே நாளைக்கு சிலபேர்களாவது முன்வந்து பேசிவிட்டால்
நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று
11—3—1983-ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும்
கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான் விதிகளும் ஆணைகளும்.

171. ஸ்ரீ இராமகிருஷ்ணா மடத்திற்கு 'ஸ்டாண்டர்டு 20
டிசல் டி. எல். ஆம்புலன்ஸ், வண்டி ஒன்றை விற்பனை செய்
வதன் மீது, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை
வரிச் சட்டத்தின் கீழ் விதிக்கத்தக்க விற்பனை வரியிலிருந்து
விலக்களிப்பது சம்பந்தமாக, வணிக வரிகள்-சமய அக்கட்டளை
கள் துறையின் 25—8—1982-ஆம் தேதியிடப்பெற்ற 995-
ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்
நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்
(தமிழ்நாடு சட்டம் 1-1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன்
வைக்கப்பெற்றது].

172. குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டத்தின் கீழ்,
'சிட்கோ' நிறுவனத்தால் கிராமப்புற குழந்தைகளுக்கு
இலவசமாக வழங்குகிற பற்பொடிக்கு வரிவிலக்களிப்பது
சம்மந்தமாக வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின்

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
Palaniappa Bros., Tiruchirappalli-2.
S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

---

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 15TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

[1983 மார்ச் 10

1—10—1982-ஆம் தேதியிடப்பெற்ற 1112-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1-1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

173. தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அகதிகளால் விற்பனை செய்யப்படுகிறது பொருள்களின் விற்பனையின் மீது செலுத்தத்தக்க திற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது; திருச்சிராப்பள்ளி சிங்காரத்தோப்பில் கட்டப்படுகிறது விற்பனை மையம் முடிகிறவரையில் மேற்கொண்டும் ஆறுமாத காலத்திற்கு முறையீடு செய்வதிலிருந்து விலக்ளிப்பது சம்மந்தமாக, வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 17—8—1982-ஆம் தேதியிடப்பெற்ற 951-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1-1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்க பெற்றது).

174. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்து சாகுபடி யாளர் கூட்டமைப்பு நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கிய சுத்திகரிக்கப்பட்ட சோயாபீன் எண்ணெயின் விற்பனையின் மீது தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை சட்டத்தின் கீழ் விற்பனை வரி விதிப்பதிலிருந்து விலக்களிப்பது சம்மந்தமாக, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 28—8—1982-ஆம் தேதியிடப்பெற்ற 1006-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1-1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

175. வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 9—10—1974-ஆம் தேதியிடப்பெற்ற II-1-1258-1974-ஆம் எண் அறிவிப்பை ரத்து செய்வது சம்பந்தமாக, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 31—7—1982-ஆம் தேதி-யிடப்பெற்ற 896-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1-1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கபெற்றது].

176. 1982—83-ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயங்களுக்கு, குதிரைப்பந்தயப் பணயத்தொகை பங்கீட்டு சாதன வரி, பந்தயப் பணயம் பிடிப்போர் வரி இவற்றின் குறைந்த வரி வீதத்தை நீட்டிப்பது சம்பந்தமாக,. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 5-11-1982—ஆம் தேதியிட்டப் பெற்ற



1983 மார்ச் 10]

1227—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1935—ஆம் ஆண்டு பந்தயவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

177. தமிழ்நாடு சரக்குப் போக்குவரத்து நிறுவனத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956—ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (நிறுவனங்கள் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை.

135991
சென்னை-600 009